# னஷ்டையின் கதைகள்

இரண்டாம் புத்தகம்

1371

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

புத்தக நிலையம்
தெப்பக்குளம் : திருச்சி

ரூ. 3/8

*Grants Commission.*

முதற் பதிப்பு, மே-1946.

உரிமை பதிவு.

1465

PRINTED AT THE PAPA PRESS. RAYAVARAM. PUDUKKOTAH S

# நன்றியுரை

இந்தப் புத்தகத்திலுள்ள கதைகளில், சில ஆனந்த விகடனிலும், சில கலைமகளிலும், சில இதரப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளவை. இவற்றை வெளியிட்டுதவி, ஊக்கமளித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கொனஷ்டை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | துப்பறிவு ... | 1 |
| 2. | இல்வாழ்க்கை ... | 16 |
| 3. | அரைகுறைக் கதைகள்–1 ... | 34 |
| 4. | நக்ஷத்திர பூஜை ... | 54 |
| 5. | அதிகப் பிரசங்கி ... | 69 |
| 6. | வனமாலா ... | 91 |
| 7. | ஊர்வசி ... | 105 |
| 8. | மந்திர சக்தி ... | 125 |
| 9. | குற்றாலம் ... | 139 |
| 10. | அரைகுறைக் கதைகள்-2 ... | 150 |
| 11. | என் கதைகளின் வரலாறு ... | 175 |
| 12. | ஊர்வசியின் சாபம் ... | 188 |
| 13. | உங்களுக்கு என்ன தோன்றுகிறது? | 210 |

UNIVERSITY ... MADURAI

# 1

## துப்பறிவு

ஸஸ ரிரி கக மம
பப தத நிநி ஸஸ

என்று ஜண்டை வரிசை நீண்டுகொண்டே இருந்தது. என்னல் பொறுக்க முடியவில்லை.

"லலிதா! லலிதே! லலிதா! தே! தா! தே!" என்று கூப்பிட்டேன்.

"வந்துவிட்டேன்! டேன்! டேன்! டேன்!" என்று அவள் பதிலுக்குக் கத்திஞள். ஒரு நிமிஷத்திற்குள் நேரே வந்து நின்ருள்.

"பாட்டுப் படித்தது போதும். வீணை வாத்தியாரை அனுப்பிவிடு. உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டும்."

"அவரை நான் அனுப்ப வேண்டாம். உங்களுடைய குரலின் சுருதியைக் கேட்டவுடன் அவர் தாளுகவே எழுந்து போய்விட்டார். என்ன சமாசாரம், சொல்லுங்கள்."

"வேறென்றுமில்லை. தெருக்கோடியில் ரோஜா வர்ணத்தில் ஒரு வீடு கட்டி யிருக்கிருர்களே, அந்த வீட்டில் நேற்று ராத்திரி திருட்டுப் போய்விட்டதாம்...."

"அங்கேயா! இதற்குள் அந்த வீட்டிற்கு யார் குடி வந்தார்கள்? இன்னும் கட்டி முடிய வில்லை என்றல்லவா எண்ணியிருந்தேன்?"

"அது அப்பவே முடிந்துவிட்டதே! குடி வந்து ஒருவாரந்தான் ஆகிறது. அதற்குள் ஒரு திருட்டு: பாவம்! நல்ல கமல மோதிரமாம்."

"பாவந்தான். ஆனால் அந்த விஷயத்தை இவ்வளவு ஆவலுடன் என்னிடம் சொல்லுவானேன்? நான் ஒரு கமல மோதிரம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேனே, இப்பொழுது இந்த மாதிரி திருட்டுக்குப் பயந்து அந்த ஆசையை விட்டு விடுவதற்காகவா?"

"நன்றாயிருக்கிறது! நகைப் பைத்தியத்தை அவ்வளவு சுலபத்தில் மாற்ற முடியுமா? அதற்காக அல்ல."

"எனக்கு ஒன்றும் நகைப் பைத்தியம் கிடையாது. வீணை வாசிக்கிற விரலில் ஒரு மோதிரம் இட்டால் அழகா யிருக்குமே என்று கேட்டேன்...."

"வீணை வாசிக்கிற விரல் அல்ல, வீணை வாசிக் கப்போவதாக நீ எண்ணுகிற விரல். இன்னும் ஜண்டை வரிசையில்தான் அது சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறது. ஒரு கீர்த்தனையைப் பிடிப்ப தற்கு முன்னே, நல்ல வேளையாய், எனக்கு வயது நிரம்பிக் காது மந்தமாய்ப் போய்விடும். அப்புறம் எனக்குக் கவலையில்லை."

"அதிசயந்தான்! அது இருக்கட்டும். அந்த வீட்டுக்காரருடைய பெயர் என்ன?"

"பெயரா? ராமசந்திர சாஸ்திரிகள் என்று யாரோ சொல்லிக் கேட்ட மாதிரி இருக்கிறது."

"வக்கீல்தானே?"

"இருக்கலாம். ஏனென்றால் வாசலில் ஒரு 'போர்டு' பார்த்த ஞாபகமா யிருக்கிறது."

"அப்படியானல் அவருடைய சம்சாரத்தின் பெயர் சீதாலக்ஷ்மி யல்லவா?"

இந்தக் குறுக்குக் கேள்விகளை யெல்லாம் நான் எதிர்பார்க்கவில்லை. தயாராக இல்லை. "இதெல்லாம் எனக்கு என்னமாகத் தெரியும்? எதற்காகக் கேட்கிருய்?" என்றேன்.

"அவர்களா யிருந்தால் எனக்கு நல்ல அறிமுகம் உண்டு. என்னுடைய பாட்டி வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். பால்யம் முதல் எனக்குத் தெரியும்."

"அதற்காக என்ன செய்யப்போகிருய்?"

"என்ன செய்வது? நமக்கு வேண்டியவர்களுடைய வீட்டில் ஒரு திருட்டு நடந்தால், அதைப் பற்றி அவர்களிடம் போய் விசாரிக்கவேண்டியது ஒரு மரியாதையல்லவா?"

"ஏதடா, இது! நீ போய்த் திடீரென்று எவர் வீட்டிற்குள்ளேயோ நுழைந்த பிறகு, அவர்கள்,

நீ முன்பின் பாராத வேற்று மனிதர்களா யிருக்கப்போகிறார்கள். நீ எங்கே வந்தாய் என்று கேட்டால், பதில் சொல்ல முடியாமல் விழிக்க வேண்டியிருக்கும்."

"ஒன்றும் விழிக்க மாட்டேன். முதலிலேயே அங்கே போவேனா? அந்த வீட்டிற்கு எதிர்த்த கட்டிடந்தானே எங்களுடைய லேடீஸ் கிளப். அங்கேயிருந்து வேலைக்காரப் பையனைப்போய் ஜாடையாய் விசாரித்துவரச் சொல்லிவிட்டு, நான் பிறகுதான் போவேன். நீங்கள்ஒன்றும்கவலைப்படவேண்டாம்."

கவலைப்பட வேண்டாமாவது! நான் வேறு என்ன செய்கிறது? லலிதா ஒன்றைப் பிடித்து விட்டால், என்ன சொல்லியும் உபயோகமில்லை என்று எனக்குத் தெரியும். ஆகையால், ஆனது ஆகட்டுமென்று அத்துடன் விட்டுவிட்டேன்.

அன்று சாயங்காலம் அவள் கிளப்பிலிருந்து திரும்பி வருவதை நான் சற்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். என்ன நடந்ததோ, என்ன சொல்லப் போகிறாளோ என்று யோசனை. சந்தோஷத்துடன் கையைக் கொட்டிக்கொண்டு வந்தாள்.

"நான் விசாரித்தது நல்லதாய்ப் போய்விட்டது.அந்த அம்மாள்தான் என் பாட்டியின் சிநேகிதி சீதாலக்ஷ்மி. அவளை இன்றைக்குக் கிளப்பில் மெம்பராகச் சேர்த்துவிட்டேன்."

"அது போகட்டும். திருட்டைப் பற்றி என்ன சொன்னள்?"

"என்ன சொன்னளா? என்ன சொல்லவில்லை? உங்களுக்குப் பாதி விஷயந்தான் தெரியும் போலிருக்கிறது. பூராவாக அந்த அம்மாள் என்னிடம் சொல்லிவிட்டாள். ஆனல் போலீசாரிடம் இன்னும் ஒன்றும் தெரிவிக்கவில்லையாம். என்னைப் போக வேண்டாமென்றீர்களே! போனதனல் தானே சுவாரசியமான முழு சமாசாரமும் தெரிய வந்தது?"

"முழு சமாசாரம் என்ன? எனக்குத் தெரிந்த பாதி சமாசாரம் என்ன?"

"பெட்டியிலிருந்து கமல மோதிரம் திருட்டுப் போனதைத்தானே நீங்கள் கேள்விப்பட்டீர்கள்? ஆனல் அது வைத்திருந்த இடத்தில் எதைக் கண்டார்கள் தெரியுமா? அதற்குப் பதிலாக, திருடன் ஒரு பச்சை மோதிரத்தை வைத்துவிட்டுப்போயிருக்கிருனம். அது உங்களுக்குத் தெரியாதே? அவன் ஏன் அப்படிச் செய்தானே; மறதியோ, கைப்பிசகோ, அல்லது வேண்டுமென்று செய்த காரியமோ, பகவானுக்குத்தான் வெளிச்சம்."

இதை யெல்லாம் கேட்கக் கேட்க, எனக்கு உண்டான ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது. "பச்சையாவது, மோதிரமாவது, வைத்துவிட்டுப் போகவாவது! நல்ல பச்சையானல் கமலத்தைக் காட்டிலும் கிராக்கியாச்சே!" என்றேன்.

"தன்னுடைய கல்லைப்போல் இதற்கு இரண்டு பங்காவது விலை இருக்குமென்று அந்த அம்மாள் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிருள்."

"அப்படியானல் அதை உடனே போலீசாரிடம் தெரிவிக்க வேண்டாமா?"

"எதற்காகவாம்? ஒரு நஷ்டம் ஏற்பட்டால் போலீசாருடைய துணையைத் தேட வேண்டியதுதான். ஒரு லாபம் கிடைத்தால் அதைத் தமுக்குப் போடுவானேன்? தைரியம் இருந்தால் அந்தத் திருடன் வந்து தன் மோதிரத்தைக் கேட்கட்டுமே!"

"ரொம்ப நன்ருயிருக்கிறது உன்னுடைய வாதம்! திருடன் வைத்துவிட்டுப் போனதும் ஒரு திருட்டுச் சொத்தாகத்தானே இருக்கும்? அதை நாமே எடுத்துக்கொள்வதா? சொந்தக்காரனைக் கண்டுபிடிக்க வேண்டாமா?"

"இந்த மாதிரிதான் அவளுடைய புருஷனும் சட்டம் பேசினராம். ஆகையால், வேறென்றும் செய்யவேண்டாம், சொந்தக்காரனையும் திருடனையும் நான் கண்டுபிடித்துவிடுகிறேன் என்று அந்த அம்மாளிடம் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறேன்."

"நீயா?" என்று ஆச்சரியப்பட்டேன்.

லலிதா பதில் சொல்லாமல், கண்ணுடிக்கு எதிராக உட்கார்ந்துகொண்டு, தன்னுடைய கோணல் வகிட்டைத் தொட்டுத் தொட்டுப் பிரியத்துடன்

தடவிக்கொடுத்து இன்னும் சற்றுக் கோணலாக்கிப் பார்த்தாள்.

"வகிட்டின் காரியத்தைக் கொஞ்சம் நிறுத்தி, இதை எனக்குத் தெளிவாகச் சற்றுச் சொல்லு. நீ ஏற்றுக்கொள்ளவாவது? நீ வீடுவீடாய்ப் போய் விசாரிக்கப்போகிறாயா, அல்லது இருந்த இடத்திலிருந்து மனோ சக்தியைச் செலுத்தப் போகிறாயா?" என்று பரிகசித்தேன்.

"அது எப்படியோ! துப்பு அறிவதில் மற்றவர்களுக்குத் தெரிந்தது எனக்குத் தெரிகிறதா, இல்லையா, பாருங்களேன். வேறொன்றுமில்லாத போனாலும், உங்களுடைய சிநேகிதர், இன்ஸ்பெக்டர் மௌளிக்கு உள்ள சாமர்த்தியம் எனக்கு இல்லாமல் போகிறதா, பார்க்கலாம்."

"ஏனென்றால் சில துப்பறியும் கதைகளை நீ படித்துவிட்டதிலிருந்தோ?"

"சில கதைகளா? இந்த ஐந்தாறு வருஷமாய், மூன்று பாஷைகளிலும் வெளிவருகிற கதை ஒன்று விடாமல் படித்துக்கொண்டு வந்திருக்கிறேனே?"

"மூன்று பாஷைகளா? உனக்கு மூன்று பாஷைகள் என்ன தெரியும்?"

"ஆமாம். தமிழ் ஒன்று, இங்கிலீஷ் ஒன்று. இதைத் தவிர, சில பேர்கள் – சில பேரென்றால்,

நீங்களில்லை, உங்களைச் சொல்லுவேனா? – வேறு சில பேர்கள் தாங்கள் அசல் தமிழ் எழுதுவதாக நம்பிக்கொண்டு எழுதுகிற பாஷை இருக்கிறதே, அது ஒன்று. ஆக மூன்று.''

நான் சற்றுக் கண்டித்துப் பேசினேன். ''இதோ பார், லலிதா! இது ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள் செய்யக்கூடிய காரியமில்லை. விளையாட்டுத் தனமாய், நீ தலையிட்டுக்கொள்ளாதே. நாளைக்குக் காலையில் நான் போய் விசாரித்துவிட்டு வருகிறேன்.''

''உங்களிடம் அவர்களுக்குப் பரிச்சயம் இல்லையே. நீங்கள் கேட்டால் சொல்லுவார்களா? நானும் கூட வருகிறேன்.''

''வேண்டாம். மௌளியிடமிருந்து ஒரு இன்ஸ்பெக்டர் யூனிபாரத்தைக் கடன் வாங்கிப் போட்டுக்கொண்டு, போலீஸ் தோரணையில் போய்க் கேட்கிறேன். அப்பொழுது ஒன்றையும் மறைக்கமாட்டார்கள்'' என்று சொல்லி, மேல் பேச்சை நிறுத்தினேன்.

மறுநாள் காலையில் நான் கிளம்பிப்போய் விசாரித்துவிட்டு வருவதற்குமுன் மணி பதினொன்று ஆகிவிட்டது. இன்னும் போஜனம் செய்யாமல் நான் சொல்லப்போவதைக் கேட்பதற்காக லலிதா ஆசையுடன் காத்திருந்தாள்.

''நான் அப்பொழுதே சொன்னேனே, இது ஒரு ஸ்திரீ ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியமில்லை

என்று? அந்த வீட்டுப் புருஷரை மடக்கி வெருட்டிக் கேட்டபோதுதான் முழு உண்மையும் வெளிப் பட்டது. அவர்கள் பெட்டியில் என்ன இருந்தது தெரியுமோ, அந்தப் பச்சை மோதிரத்தையும் தவிர? ஜாடாவாக அடிக் கணுவில் வெட்டப்பட்ட யாருடைய மோதிர விரலோ ஒன்று இருந்ததாம்! ஆகையால்தான் அவர்கள் பயந்துகொண்டு உடனே போலீசாரிடம் சொல்லவில்லை. கமலமோதிரம் கெட்டுப்போனதைப் போலீஸ்காரர் நம்பாமல், தாங்கள்தான் நகைக்கு ஆசைப்பட்டு மற்றொருவருடைய விரலை வெட்டினதாகத் தங்கள்மேல் குற்றம் சுமத்திவிட்டால் என்ன செய்கிறது என்கிற அச்சந்தான்'' என்று நான் கேள்விப்பட்டதையும், ஊகிப்பதையும் சொன்னேன்.

"வெட்டின விரலா? ஐயோ! பெட்டியெல்லாம் ரத்தம் கொட்டி யிருக்குமே? நல்ல வேளை, நான் பெட்டியைப் பார்க்கவில்லை'' என்று சொல்லி லலிதா, தேகம் முழுவதும் சிலிர்த்தாள்.

"அது நிஜம். இனிமேலாவது இந்த விஷயத்தை விட்டுவிடு. நமக்கு என்னத்திற்கு இது? வா, நேரமாகிவிட்டது, சாப்பிடப் போகலாம்'' என்று அழைத்துக்கொண்டு போனேன்.

இருந்தாலும் அன்று சாயங்காலம் லலிதா என்ன செய்யப்போகிறளோ என்று எனக்குக் கவலைதான். ஆனல் பல விதம் எண்ணினேனே

ஒழிய யதார்த்தத்தில் அன்று நடக்கப் போவதை நான் எதிர்பார்க்கவில்லை.

தீபம் ஏற்றுகிற வேளையாக இருக்கும். லலிதா கண்களைப் பிசைந்துகொண்டு, மூச்சுத் திணற மாடிப்படி ஏறிவந்து, "ஐயோ! அந்தப் பாவியிடம் உங்களைக் காட்டிக்கொடுத்து விட்டேனே! இனி நாம் ஒரு க்ஷணம் இங்கே தாமதிக்கக் கூடாது. எங்கேயாவது ஓடிப்போக வேண்டும். புறப்படுங்கள். சீக்கிரம் புறப்படுங்கள்" என்று வாய் குழற மன்றாடினாள்.

நான் திடுக்கிட்டு, "என்ன சமாசாரம்?" என்று கேட்டேன்.

"அந்த சீதாலக்ஷ்மியிடம், இந்த மாதிரி 'என்னுடைய அகத்துக்காரரல்லவா இன்று காலையில் இன்ஸ்பெக்டர் வேஷம் போட்டுக்கொண்டு உங்களை வெருட்டி உண்மையைக் கண்டுபிடித்தார்?' என்று என்னுடைய பெருமையை வெளியிட்டேன். அப்பொழுது அந்தப் பாவி என்ன செய்தாள், தெரியுமோ? இதுதான் தாங்கள் தப்பித்துக் கொள்வதற்கு வழி என்று தீர்மானித்து, உடனே கிளப்பில் எல்லாரையும் வைத்துக்கொண்டு ஒரு பெரும் புளுகாய்ப் புளுகிவிட்டாள்: திருட்டுப் போன பெட்டியில் முதலில் அவர்கள் ஒன்றையும் காணவில்லையாம். ஆனால் இன்று காலையில் நீங்கள் வந்து பெட்டியைப் பரிசோதித்துவிட்டுப் போன

பிறகு, அவள் தற்செயலாகப் பெட்டியைத் திறந்து பார்த்தாளாம். அப்பொழுதுதான் ஒரு வெட்டுப் பட்ட மோதிர விரல் மாத்திரம் அதில் இருந்ததாம். ஆகையால் நீங்கள்தான் அதைக் கொண்டு வந்து பெட்டியில் வைத்திருக்க வேண்டுமாம். நகைக்கு ஆசைப்பட்டோ, க்ஷாத்திரத்தினாலேயோ நீங்கள் குற்றம் செய்துவிட்டு, பிறகு நீங்கள் தப்பித்துக் கொண்டு அவர்கள் மேல் குற்றத்தைச் சாட்டு வதற்கு நல்ல வழி கிடைத்தது என்று எண்ணி, ஒரு போலீஸ்காரன் அவர்கள் வீட்டுத் திருட்டை விசாரிக்க வருகிற மாதிரி பாவனை பண்ணி நீங்கள் இவ்வளவையும் செய்திருக்க வேண்டுமாம். இல்லாத போனால் நீங்கள் வேஷம் போட்டுக் கொள் வானேன்? அவர்கள் வீட்டுக்குப் போவானேன்? நீங்கள் போலீஸ்காரனில்லை என்று இப்பொழுது தெரிந்ததன் பேரில்தான் அவளுக்கு இருந்த திகில் நீங்கியதாம். இப்பவே இதெல்லாம் நிஜப் போலீஸ் காரர்களிடம் சொல்லப்போகிறார்களாம். ஐயோ! இப்படிப் பேசிக்கொண்டு பொழுதைப் போக்கி விடுகிறேனே! சீக்கிரம் புறப்படுங்கள். உங்களுக்கு அவசியமான சாமானை எடுத்து இந்தப் பெட்டியில் வைக்கிறேன். எத்தனை வேஷ்டிகள் வேண்டும்? எத்தனை ஷர்ட்டுகள் வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டு, அலமாரியைத் திறந்து, அதி லுள்ள உருப்படிகளை எடுத்துக் கன்னா பின்னா வென்று, ஒரு பெட்டியில் திணிக்கத் தொடங் கினாள்.

நான் ஒரு க்ஷணமே ஆலோசித்தேன். ஏனென்றால் ஒரு க்ஷணத்திற்குள் தீர்மானித்து முடிவுக்கு வர வேண்டிய காரியமாக இருந்தது. அவ் விதமே தீர்மானித்து, லலிதாவின் கைகளைப் பிடித்து நிறுத்தினேன்.

"இதோ பார், லலிதா! இதுவரையில் உன்னுடைய கற்பனா சக்தியையும் நடிப்புத் திறமையையும் பூராவாக ரஸித்தேன். ஆனால் நீ இப்படி என்னுடைய சலவை செய்த பட்டு ஷர்ட்டுகளைக் கசக்குகிறது என்றால்,...அதை என்னால் பார்த்துச் சகிக்க முடியாது. இந்தக் கஷ்டத்தைக் காட்டிலும் நான் உண்மையை ஒப்புக்கொண்டுவிடுகிறேன். அந்த ராமசுப்பா தீக்ஷிதரை நான் இதுவரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை—"

"அது யார், ராமசுப்பா தீக்ஷிதர்? ரோஜா வீட்டிற்குக் குடி வந்ததாக நீங்கள் முன்பு சொன்ன மனிதனைக் குறிக்கிறீர்களோ? அவருடைய பெயர் ராமசந்திர சாஸ்திரிகள் என்றல்லவா சொன்னீர்கள்?"

"அவரும் அவருடைய பெயரும் அடிமாண்டு போகட்டும். எந்தப் பெயராயிருந்தால் எனக்கென்ன? அந்த மாதிரி ஒரு மனிதன் இருந்தால் தானே? வீடே இன்னும் கட்டி முடியவில்லை. ஒருவரும் குடி வரவில்லை. திருட்டும் நேரவில்லை. என்னுடைய ஷர்ட்டுகளைக் கசக்காமல் கொடுத்து விடு."

"அப்படியானல், அவரே கிடையாது என்று நீங்கள் சொல்லிவிட்டால், அவருக்கு சீதாலக்ஷ்மி என்று சம்சாரம் கிடையாது. அவர்களை என் பாட்டிக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. பரோபகாரியாக ஒரு திருடனும் பச்சை மோதிரத்தை வைத்துவிட்டுப் போகவில்லை என்று நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தாருங்கள், உங்களுடைய ஷர்ட்டுகளை அரவணைத்து மடித்து வையுங்கள். ஆனல் அநியாயமாய் ஒரு விரலை அறுத்து அதைப் பெட்டியில் கொண்டு வந்து வைத்தீர்களே, அந்தப் பாவத்திற்கு என்ன செய்கிறது? அதை நினைத்தால் தான் எனக்கு பரிதாபமா யிருக்கிறது."

"அதுவா, அது இஷ்டப்படி செய்யட்டும். சொந்தக் கையை விட்டுப் பிரிந்து வந்த மாதிரியிலே, திரும்பிப்போய் ஒட்டிக்கொள்ளட்டும். அதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. உன்னுடைய சுபாவத்தைப் பற்றி நினைத்தால்தான் எனக்குத் திகிலா யிருக்கிறது. நீ ஜண்டை வரிசையை ஓயாமல் வாசித்ததை நிறுத்துவதற்காக உன்னை நான் கூப்பிட்டு, சாதாரணமாய் நடக்கக்கூடிய ஒரு திருட்டைக் கற்பனைசெய்து ஒரு வார்த்தை சொன்னல், நீ அதற்குமேல் எவ்வளவோ சிருஷ்டித்து அண்டப் புளுகுகளாய் ஜோடித்துவிட்டாயே......."

"பர்த்தாவை அனுசரித்துப் போவது ஓர் உத்தம ஸ்திரீயின் கடமை. வேண்டுமானல் என்னுடைய பாட்டியைக் கேட்டுப் பாருங்கள். அவள் எத்த

ஊயோ தடவை இப்படி என்னிடம் புத்திமதி சொல்லியிருக்கிருள்.''

"நல்ல கடமை! அவசியத்தின்மேல் நான், ஒரு புருஷன், ஒரு சின்னப் பொய்யைச் சொன்ஞல், நீ போட்டி போட்டிக்கொண்டு பொய் பேசலாமா? நீ, ஸ்திரீயாய், லக்ஷணமாய்...."

"என்னுடைய லக்ஷணத்திற்கு என்ன குறைவாம்?" என்று நிலேக்கண்ணுடியை அதிகப் பிரசங்கித்தனமாய் அவள் கேட்டாள். "இருந்தாலும் ஒரு குறையை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இந்த விரலில் ஒரு மோதிரம் இல்லாதது ஒரு மூளிதான்" என்று காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டாள்.

ஆஞல் அதற்குத் தக்கபடி பதில் சொல்ல எனக்குத் தெரியும். "இதோ பார், நீ இவ்வளவு துப்பு கண்டுபிடித்தாயே, உனக்காக வாங்கி, இங்கே ஒரு வேஷ்டிக்கு அடியில் நான் ஒளித்து வைத்திருந்த இந்த மோதிரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லேயே?'' என்றேன்.

"அது இருக்கும் இடத்தை நான் இன்னும் தேடத் தொடங்கவில்லேயே ஒழிய அது வரப்போகிறது என்று எனக்கு அப்பொழுதே தெரியுமே.''

"என்னமாய்த் தெரியுமாம்?"

"நாலாவது நாள் ராத்திரி நான் தூங்கிக் கொண்டிருக்கையில் என் விரலுடைய அளவை

எடுத்தீர்களே, அப்பொழுதே எனக்குத் தெரிந்து விட்டது.''

இது ஓர் அபாண்டப் புளுகு. நான் அளவு எடுக்கவே இல்லை. கண் திட்டமாகத்தான் மோதிரத்தைப் பொறுக்கிவாங்கினேன் என்று வாஸ்தவமாய்ச் சொல்லுகிறேன். ஆனல் நான் என்ன சத்தியம் செய்தால் என்ன? அவள் சொன்னதையே சாதித்துக்கொண்டு அதற்காக இன்னும் ஒரு நாடகத்தை நடிக்கப் போகிருள். நான் தோற்றுப் போய்விட்டேன் என்று ஒப்புக் கொள்வதே நல்லது.

# 2

## இல் வாழ்க்கை

“தேகத்தில் வியாதி என்று சொல்லும்படியாக ஒன்றுமில்லை” என்றார் டாக்டர். “வெறும் ஹிஸ்டீரியா என்றே நினைக்கிறேன். அது மனசைச் சேர்ந்த உபத்திரவம் என்று உங்களுக்குத் தெரியுமே! ஆகையால் மனசுக்குக் கிளர்ச்சி, ஆயாசம் ஒன்றுமில்லாமல் அமைதியாய் வைத்திருந்தால், எட்டு நாளில் தானாகவே சுவஸ்தமாய்விடும்.”

அச்சமயத்தில் நோயாளியின் பர்த்தாவாகிய வேங்கடராமையர் ஓர் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டவே, மூன்று ரூபாய் மட்டில் எதிர்பார்த்திருந்த டாக்டர், மறுபடியும் புத்திமதி கொடுக்க ஆரம்பித்தார்:

“எதற்கும் நான் ஒரு ‘டானிக்’கின் பெயரை எழுதிக் கொடுக்கிறேன். என்னுடைய கம்பவுண்டரிடம் கிடைக்கும். வேளைக்கு ஒரு அவுன்ஸாகத் தினம் மூன்று வேளை உபயோகித்து வந்தால், நாலு நாட்களிலே குணமுண்டாகும். இன்றைக்குப் புதன்கிழமைதானே?” என்று கேட்டுக்கொண்டே ஒரு கடிதத்தை எடுத்துச் சில எழுத்துக்களைக் கிறுக்கினார். கடிதமும் நோட்டும் கைமாறின. இரு கக்ஷியாலும் வந்தனங்கள் முணுமுணுக்கப்பட்டன. டாக்டர் கிளம்பிப் போனார்.

"இருக்கே" என்று வேங்கடராமையர் தம் மனைவியிடம் ஆரம்பித்தார். "இருக்கே, எல்லா டானிக் மருந்துகளின் பெயரும் எனக்குத் தெரியும். இதென்னவோ, தெரியவில்லை. எப்படி வாசித்தாலும் 'புதன்கிழமை' என்றுதான் எழுதியிருக்கிறாப் போலிருக்கிறது. அப்படி ஒரு பெயர் இருக்குமோ, ஒரு மருந்துக்கு? இருக்கே, நான் போய் இதை வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி வேங்கடராமையரும் கிளம்பிச் சென்றார்.

டாக்டர் மிகவும் அனுபவப்பட்டவர். டானிக் என்று சொல்லி ஏதாவது ஒன்றைக் கொடுத்தால் மட்டுமே, நோயாளிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் திருப்தி அடைகிறார்கள் என்பதை அவர் நன்கு அறிந்தவர். ஆனால் கடைகளில் கிடைக்கும் ஆயிரத்தெட்டு டானிக்குகளின் மத்தியில், குணத்திலோ, குண ஹீனத்திலோ, ஒன்றுக்கொன்று அரிசி இடை வித்தியாசங்கூட இருப்பதாக அவர் கண்டதில்லை. ஆகையால், அவைகளுக்குள், செய்வதற்குச் செலவு மட்டானவையும், எறும்புக்குக் கூடக் கெடுதி செய்யாதவையுமாக ஏழு மருந்துகளைப் பொறுக்கி, அவைகளை ஜாடி ஜாடியாகச் செய்து, அவர் தம்முடைய வீட்டில் வைத்திருந்தார். அவைகளுக்கு ஞாயிறு முதல் சனி ஈறாக ஏழு பெயர்களை அவர் இட்டிருந்தார் என்றால் அதன் அந்தரங்கத்தை நாமே ஊகித்துக்கொள்ளலாம். வியாதி

எதுவாயிருந்தாலும் சிந்தனைக்கு அவசியமில்லாமல், மருந்தை அன்றன்றூடம் எழுதிக்கொடுப்பதில் டாக்டருக்குச் சௌகரியம். அதை எடுத்துக் கொடுப்பதில் கம்பவுண்டருக்குச் சௌகரியம். மேலும் அவருடைய மருந்துச் சீட்டை, எந்தக் கடைகளிலாவது கொண்டுபோய்க் கொடுத்து மருந்தை வாங்கிவிட முடியாது. ஆகவே, மருந்தினுல் ஏற்படும் லாபம் சரியான விலாசத்தையே அடையும் என்பது நிச்சயம். 'புதன்கிழமை' என்கிற மருந்தின் கூட்டுச் சரக்குகள் எலுமிச்சம் பழ ரசம், கொய்னுப் பொடி, குழாய் ஜலம் இம் மூன்றே. செலவு அடக்கம், புட்டியின் கிரயம் உள்பட, இரண்டேகாலணு. சாதாரண விற்பனை விலை ரூ. 1-12-0. யுத்தத்தினுல் தற்கால விலை ரூ. 2-7-9.

இந்த விவரங்கள் ஒன்றையும் அறியாத வேங்கடராமையர், சீட்டைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண்டே டாக்டருடைய வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தார்.

அச் சமயம் வேங்கடராமையருடைய பார்யை அம்மாளு அம்மாள் தலையை இரு கரங்களாலும் பிடித்துக்கொண்டு, தெய்வமே என்று அறையின் மூலையில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். ஒரு வருஷத்திற்கு முன்பே அவளுக்கு விவாகம் ஆயிற்று. இந்தச் சொற்ப காலத்திற்குள் அவள் இந்த ஸ்திதியை அடைய நேரிடும் என்று

பந்தலில் இருந்த ஒருவரும் எண்ணியிருக்கமாட்டார்கள். ஏனென்றால் வதூவரர் இருவருமே குலம், கோத்திரம், நடை, அந்தஸ்து, சௌந்தர்யம் ஆக எல்லா விதத்திலும் நல்ல பொருத்தம் வாய்த்தவர்கள். அவருக்குப் போதுமான சொத்து உண்டு. இவளோ, இலக்கணம், பாக சாஸ்திரம், ஸங்கீதம், இவைகளில் நல்ல தேர்ச்சி பெற்றவளாதலால், குடும்பத்தை நல்ல மாதிரியில் நடத்திவரத் தக்க சாமர்த்தியமுள்ளவள்.

இவ்விதம் ஓர் அபூர்வ தாம்பத்தியத்தை எதிர்பார்க்க வேண்டியதாயிருக்க, இவளுக்கு ஹிஸ்டீரியா ஏற்படுவானேன் என்று கேட்டால் என்ன பதில் சொல்லலாம்? எல்லாம் ஈசுவரன் செயல் அல்லது விதியின் கொடுமை என்றுதான் கூறவேண்டும். இவைகளின் வல்லமையால் அல்லவா ஒருசிறு துரும்பும் கொடிய வாளாக மாறுகிறது? நாம் எதை விசேஷ நன்மையாக எண்ணுகிறோமோ அதுவே விபரீதமாக முடிகிறது!

'இருக்கே' என்கிற ஒரு வார்த்தையை எடுத்துக்கொள்ளுங்கள். நமக்குத் தெரிந்தவர்களில் எத்தனையோ மனிதர்கள் – கிருகஸ்தர்கள் - விவேகிகள்–தாங்கள் பேசும் பொழுதெல்லாம் 'இருக்கே' என்று தொடங்குவதில்லையா? "இருக்கே, நேற்றைய தினம் நல்ல மழை", "இருக்கே, தெருவில் மலைப்பழம் விற்கிறான்" இம்மாதிரி பேச்சைக் கேட்பது நமக்குச் சாதாரணமாகத்தானே இருக்

கிறது? ஆனல் அம்மாளு அம்மாள் மாதிரி நாமும் இலக்கணத்தில் முதல் வகுப்பில் தேறியிருந்தால், ஒரு வேளை வேறு விதமாக எண்ண நேரலாம். தன்னுடைய கணவன் ஒவ்வொரு வாக்கியத்தையும் 'இருக்கே' என்று சொல்லி ஆரம்பிக்கும் பொழுது, முதலில் சில தினங்கள் அவளுக்குச் சிரிப்பு உண்டாயிற்று. சுமார் எட்டாவது நாளாக இருக்கலாம்: அவளுடைய இலக்கண ஞானம் தலை எடுத்துக் குறுக்கே வர ஆரம்பித்தது.

"'இருக்கே' 'இருக்கே' என்று என்ன வார்த்தை இது? எழுவாயா, பயனிலையா? பெயர்ச் சொல்லா, வினைச் சொல்லா? அர்த்தமுமில்லாமல், உபயோகமுமில்லாமல் ஒரு வார்த்தையை எதற்காகப் பேசவேண்டும்?" என்று எண்ணலானள். பதினைந்தாவது நாளில், எத்தனை தடவைதான் தினம் அவர் 'இருக்கே' என்று சொல்லுகிருர் என்று கணக்கிடத் தொடங்கினள். முப்பத்தேழு— நாற்பத்திரண்டு— ஐம்பது! அன்று வள்ளிசாக ஐம்பது தடவை அந்த மந்திரத்தை அவர் உச்சாடனம் செய்யக் கேட்டாள். அது முதல் அவளுடைய மனசின் சாந்தத்தை இழந்தாள். ஏனென்ருல், அதன் பிறகு, ஒவ்வொரு நாளும் காலை முதல் படுக்கப் போகும் வரை அவளுக்கு ஒரே எண்ணம் ஓங்கி நிற்கலாயிற்று. 'இன்றைய தினம் அந்த ஐம்பதைப் பிடிப்பாரா, அதற்கு மேலே ஏறி, தம்மையே ஜயிப்பாரா, அல்லது தோல்வி யடைவாரா?' இம்

மாதிரி எண்ணம் குடிகொண்ட மனசில் மற்ற விஷயங்களெல்லாம் கவனத்தில் பின் வாங்கித்தான் நிற்கவேண்டிவரும். இவர் தம்மிலுள்ள சம்பாஷணையைச் சற்றுக் கவனிப்போம்.

"இருக்கே, கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வா."

அவள் (மனசிற்குள்) :— முப்பத்தெட்டு. (வெளியிட்டு) என்ன கேட்கிறீர்கள்? ஷர்பத்தா? அங்கவஸ்திரமா?

அவர்:— இருக்கே, இன்றைக்கு சினிமாவுக்குப் போகலாமா? போய் ரொம்ப நாளாய்விட்டதல்லவா?

அவள்:— (மனசிற்குள்):— முப்பத்தொன்பது. (வெளியிட்டு) ஆமாம், நாற்பது நாள் இருக்கும்.

அவர்:— நாற்பது நாளா? இருக்கே, போன வெள்ளிக்கிழமைதானே போனோம்!

அவள்:— ஆமாம். இப்பொழுதுதான் நாற்பதாச்சு. அதாவது, இன்னிக்குத்தான் ஏழு நாளாச்சுது.

இம்மாதிரி அவளுடைய பேச்சும் கணக்கும் தட்டுக்கெட்டுப் போயின.

இதோடு நிற்கவில்லை. அவருடைய பெற்றோர்களுக்கு வேங்கடராமையர் ஒரே குழந்தை. ஆகையால் செல்லப்பிள்ளையாய் வளர்ந்தவர். சில சமயம்

பாலர்கள் பேசுகிற மாதிரி ககர பாஷையில் பேசு வார். மேஜை என்று சொல்ல வேண்டுமானுல் 'கமே-கஜை' என்பார். தவிர, தாம் எண்ணுவதே எப்போதும் சரி என்று, உலகத்தில் நூற்றில் நூறு பேருக்குள்ள அபிப்பிராயம் அவருக்கும் உண்டு. ஆகவே பாக சாஸ்திரத்தில் முதல் வகுப்பில் பட்டம் பெற்ற அம்மாளு அம்மாள் தயார் செய்த விருந்தை அருந்தும்பொழுது அவர், "இருக்கே, புடலங்காய் கூட்டில் கமு-கங்-கதி-கரி-கப்-கப-கரு-கப்-கபு-போட் டால்தான் ருசியா யிருக்கும்" என்று சட்டம் கூறு வார். இம்மாதிரி சமையலின் கண்டனத்தை மாத்திர மாவது ககர பாஷையை மாத்திரமாவது அவள் சகித்திருப்பாள். இரண்டும் சேர்ந்து வீசும்பொழுது அவளால் பொறுக்க முடியவில்லை.

சில மனைவிகளைப்போல் தன்னுடைய புருஷ னிடத்தில் அவள் அசட்டையாயிருந்தால், அவரு டைய தோஷங்களைக் குறித்தும் அசட்டையாய் இருக்க இயலும். அவளுக்கோ அவரிடத்தில் பூர்ண பிரேமையும் பக்தியும். அவரிட த்திலே குற்றம் கண்டு பிடிக்கிற மாதிரியில் நேரிட்டுப் பேசுவதற்கு அவளு க்கு நாவெழவில்லை. பிறரிடம் தெரிவிப்பதற்கு வெட் கம். நீராவி மாதிரி அடக்கி வைப்பதனுலேயே அவ ளுடைய சங்கடத்தின் வீர்யம் ஏறலாயிற்று.

இந்த ஸ்திதியில், ஒரு நாள் ஒரு பாட்டுக் கச்சே ரியில், 'ஜய ஜய கோகுல பால' என்கிற பாட்டைக் கேட்டுவிட்டு வந்த வேங்கடராமையர் அது முதல்

வீட்டில் அந்தப் பாட்டை அடிக்கடி பாடத் தொட ங்கிவிட்டார். ஸங்கீத ஞானமுள்ள அம்மாளுவுக்கு இவ்வுலகத்திலேயே நரகமும் கலந்துகொண்டால் போல் தோன்றிற்று. இது வரையில் ஒருவரும் கேட்டிராத ஸ்வரங்களை அவர் அமைத்துப் பாடினார் என்பது மாத்திரமல்ல. அழுத்தம் திருத்தமாக,

'சய சய்யக்கோ — க்குலப்பாலா'

என்று நீட்டுவார். ஒரு நாள் தைர்யத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, "'ஜய ஜய' என்றல்லவா வார்த்தைகள்?" என்று தன்னுடைய சந்தே கத்தை நிவர்த்திக்கிற மாதிரியில் அம்மாளு கேட் டாள்.

"ஆமாம். அதனால் என்ன? நான் இப்பொழுது ஏதாவது ஹோமத்திற்கு மந்திரம் சொல்லுகிறேனா, ஸம்ஸ்கிருதத்தில் உச்சரிக்க? தமிழில்தானே பாடு கிறேன்? தமிழ்ப்பாடையிலுள்ள சத்தங்கள் எனக் குக் கபோ–கது –கம்" என்று சொல்லி, சாணைக் காரன் அரிவாள்மணையைச் சாணை பிடிக்கையில் உண்டாக்கும் சப்தத்திற்கொப்பான குரலில் அவர் மறுபடியும் "பாட"த் தொடங்கிவிட்டார். ஈசுவரன் தன்னைத் திடீரென்று ஒரு செவிடியாக மாற்ற மாட் டானா என்று வேண்டிக்கொண்டு அம்மாளு பெரு மூச்சு விட்டாள்.

அவருடைய வழக்கம் அவளுடைய அருகில் நின்று புறப்படும் பொழுது,

" சயச்சய்யக்கோ—"

என்று கத்திவிட்டு, பிறகு இரண்டு அறைகள் கடந்து சென்ற பின்பே,

"—க்குலப்பாலா" என்று முடிப்பது.

ஆரம்ப வார்த்தைகளைக் கேட்டவுடன் அம்மாளுவுக்குக் குற்றுயிராய் விடும். சங்கதி முடிந்த பிறகுதான் இனி பயமில்லை என்று மூச்சு வரும். ஒரு நாள் உலையில் கொதிக்கும் அன்னத்தை அவள் வடிக்கப்போகும் சமயத்தில், "பாட்டின்" ஆரம்பம் அவளுடைய காதில் விழவே, வழக்கப்படி ஸ்தம்பித்துப் போய்விட்டாள். பிறகு சிறிது நேரம் சென்றும் மிகுதிப் "பாட்டை"க் கேளாதபடியால், அதை எப்படியாவது முடியக்கேட்டு விமோசனமடையவேண்டிய கவலையுடன் கணவனைத் தேடி வாசல் பக்கம் வந்து பார்த்து, அவர் அதை முடிக்காமலே எங்கேயோ வெளியில் புறப்பட்டுப் போய்விட்டதை அறிந்துகொண்டாள். பிறகு அவள் குறைத் தூக்கத்தில் விழித்தவளைப் போலச் சமயலறைக்குச் சென்று இதற்குள் அளிந்து போய்விட்ட அன்னத்தை வடித்துச் சமையலைப் பூர்த்தி செய்தாள். அன்றைய போஜனத்தின்போது வேங்கடராமையர் பிரியத்துடன், 'அம்மாளு! இன்று சாதம் கொஞ்சம் கஅ-களி-கங்-கது போய்விட்டாற் போலிருக்கிறதே? அதற்குக் ககா - கர - கண - கம் - என்னவோ?" என்று கேட்கவே, ஒட்டகத்திற்குக்

கடைசியான துரும்புதான் முதுகை முறிக்கு மென்று சொல்லுவார்களே, அந்த மாதிரியில் இந் தச் சிறிய கொஞ்சுதலைப் பொறுக்க முடியாமல் அம்மாளு பாத்திரத்தைத் தொப்பென்று கீழே நழுவவிட்டுத் தானும் விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள். வேகத்தில் டாக்டரைக் கூப்பி டப் போகும்படி நேரிட்டது.

டாக்டர் வீட்டிலிருந்து 'புதன்கிழமை' மருந்தை வாங்கிக்கொண்டு வந்த வேங்கடராமையர் அம்மாளு விடம் என்ன சொன்னுரென்று நான் ஒரு பந்தயப் போட்டி வைக்கப் போவதில்லை. ஏனென்றால் இது வரை பொறுமையுடன் படித்து வந்த ஒவ்வொரு வரும் எளிதில் பந்தயத்தை ஜயித்துவிடுவார்கள்! "அம்மாளு, கம — கரு — கந் — கதை வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்" என்று சொல்லிப் பிரியத்துடன் அவளுடைய மோவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு, வாய் கொண்ட அளவு வார்த் தார். எதை? முன் சொல்லியபடி எலுமிச்சம் பழ ரசம், குழாய் ஜலம், கொயினப்பொடி இம் மூன்றும் அடங்கிய ரசாயனத்தை. மூன்ருவது சரக்கைக் கம்பவுண்டர் கைத்திட்டமாகக் கலந்ததில் தாராள மாகவே சேர்த்திருந்தான். (தற்கால விலையாகிய ரூ. 2-7-9ஐ உத்தேசித்து, இதைப்போல் ஐம்பது மடங்கு கொயினவைக் கலந்திருந்தாலுமே டாக்ட ருக்கு லாபம் மிஞ்சுமல்லவா?) அம்மாளுவின் தொண்டையில் ரசாயனம் இறங்கி நாராசம் போல்

பிடித்தது. இதுவரையில் ஓர் எலியைச் 'சூ' வென்று வெருட்டத் தைரியம் படைக்காத அம்மாளு, அப்படியே மருந்து சீசாவைப் படீர் என்று அடித்துத் தள்ளிவிட்டு, "நான் இப்பொழுதே எங்கம்மா ஆத்துக்குப் போகவேண்டும்" என்று சொல்லி மறுபடியும் அழத் தொடங்கினாள். 'ஹிஸ்டீரியா' என்ற வார்த்தையைக் கேட்டது முதல் திகிலடைந்த வேங்கடராமையர் மறுபேச்சுச் சொல்லாமல் ஒரு வண்டியை அமர்த்தி அவளைத் தாயார் வீட்டிற்குக் கொண்டுபோய் இறக்கிவிட்டு, மறுபடியும் டாக்டரிடம் கவலையுடன் சென்றார்.

டாக்டர் தைரியம் கூறினார். "நான்தான் அப்பொழுதே சொன்னேனே! அது ஒரு ஹிஸ்டீரியா கேசு. வியாதி உண்டாவதற்குக் காரணம் சொல்லி முடியாது. ஆனால் சிகிச்சா மார்க்கம் நிச்சயம். நீங்கள் ஒன்றும் எதிர்த்துப் பேசாதேயுங்கள். வற்புறுத்தாதேயுங்கள். கடிதங்கூட எழுத வேண்டாம். தானாகவே இஷ்டப்பட்டு உங்களுடைய வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுவாள். அது வரையில் பொறுமையாய் இருங்கள்."

ஃ ஃ ஃ

அம்மாளுவின் பெற்றோர் வீட்டில் அவளுக்கு இம்மாதிரி தைரியம் சொல்லுகிறவர் கிடையாது. 'ஏதோ தம்பதிகளுக்குள் மனஸ்தாபம். இது எல்லாருக்குமே நேருவதுண்டு. இதைப் போய் நாம் கிண்டிக் கிளறினால் அற்ப சமாசாரம் பெரியதாய் வளரும். தானாகவே அடங்கிப் போகட்டும்' என்று

எண்ணி இக்காலத்திய நாகரிகம் வாய்ந்த தாயும் தந்தையும், விசேஷம் ஒன்றுமே இல்லைபோல் நடந்துகொண்டார்கள்.

இதனால் அம்மாளுவின் சங்கடம் அதிக மாயிற்று. கலந்து பேசிப் புத்திமதியளிப்பவரில்லாத சிறுமியின் மனசு எதற்குச் சமானம்? சுக்கானில் லாத ஓர் படகுதான். முதல் நாள் முழுவதும் தன் பர்த்தாவின் சிறு தோஷங்களை மலைகளாக எண்ணி அழுகையில் போக்கினாள். மறுநாள் காற்று மாறிவிட்டது. தன் மேல் இவ்வளவு பிரியம், இவ்வளவு காதல் உள்ள பர்த்தாவிடத்தில், சில அற்ப, மிக அற்ப, தோஷங்கள் இருந்தால் அதைப் பொறுத்துக்கொள்ளாத தான் எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சுக்காரப் பாதகியாக இருக்க வேண்டும்? இவ் விதம் எண்ண எண்ணத் தன்னுடைய குற்றத்திற் கேற்ற தண்டனை விதிப்பது அவசியமாயிற்று. முன் காலங்களில் காளி சன்னிதியில் சிலர் தம்முடைய கழுத்தைத் தாமே அறுத்துப் பலி கொடுத்ததில் லையா? தீபம் வைப்பதற்குள் தீர்மானம் செய்தாள்.

“என் ஆருயிர்க் காதலனே” என்று எழுதி னாள். (அந்த நீண்ட வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று என்னைக் கேட்காதேயுங்கள். எனக்குத் தெரியாது. எழுதியது அம்மாளு அம்மாள்.) “என் ஆருயிர்க் காதலனே, நான் கல்நெஞ்சு படைத்த கொடிய பாதகி. உங்களுக்கு நான் அருகதை அல்ல. என்னை மறந்துவிட்டு, நீங்கள் எப்படியா

வது சுகமாய் வாழ வேண்டுமென்பதுதான் தெய்வத்தினிடத்தில் என்னுடைய தீராப் பிரார்த்தனை.''

கடிதத்தை ஒட்டி, ஒருவரும் அறியாதபடி, தபால் பெட்டியில் போடும்படி தன்னுடைய சிறிய தம்பியின் கையில் கொடுத்தாள்.

மறு நாள் காலையில் அவளுடைய முகம் மலர்ந்தே இருந்தது. ஆனல் சாயங்காலம் வரையில் யாதொரு பதிலும் கிடைக்காமல் இருக்கவே, மறுபடியும் கலக்கமடைந்தது. நாளாக நாளாகத் தன்னுடைய வேண்டுகோளுக்குத் தன் பர்த்தா இணங்கிவிட்டாரோ என்கிற திகில் அவளைப் பிடித்துவிட்டது. ஒன்றும் பேசமாட்டாள். ஆனல் கண்களில் தாரை பெருகிக்கொண்டே இருக்கும். என்ன செய்வது என்று தகப்பனருக்கு விளங்கவில்லை. ஏழாம் நாள், இதுவாவது இவளுடைய மனசைச் சற்று மாற்றட்டும் என்று விரும்பி, அன்று வெளிவந்த ''மலய மாருத''த்தின் மலரை அவளுடைய கையில் வைத்தார்.

''மலய மாருத''ப் பத்திரிகையை அறியாதவர் தமிழ் நாட்டில் இல்லை. எழுத்துக் கூட்டியாவது படிக்கக் கூடியவர் எல்லோரும் அதைப் படிக்கிறார்கள். அதுகூடத் தெரியாதவர்கள் அதிலுள்ள சித்திரப் படங்களைக் கண்டு களிக்கிறார்கள்.

ஆனல் வேங்கடரமணையரைச் சிலரே அறிவர். வேங்கடராமையரின் வீட்டிற்கு இரண்டு வீடு தள்ளி

வசிப்பவர், இவர். ஆனால் தொழிலில் மிகவும் 'ஹீன ஜாதி'. அதை வெளியிடுவதற்கு என்னுடைய பேனா கூசுகிறது. என்றாலும் வெளியிட்டுத்தான் ஆக வேண்டும். அவருடைய விருத்தி கதை எழுதல்.

இந்தக் கூட்டத்தாரை நீங்கள் நன்றாய் அறிவீர்கள். கேட்ட கேள்விக்குச் சரியாய்ப் பதிலளிக்கார். ஏனென்றால் அவருடைய ஞாபகமெல்லாம் தாம் அடுத்தபடி எழுதவேண்டிய கதையின்மேல் நிற்கும். சற்று இடம்கொடுத்தால் தாம் கடைசியாக எழுதிய கதையின் மகிமைகளை விஸ்தாரமாய் எடுத்துரைப்பார். கதாநாயகி தற்கொலை செய்துகொள்ளும்படி நேர்ந்தாலும் கதையைச் சுவாரசியமாக முடித்து விட்டதை எண்ணி ஆனந்திப்பார். ஆகையால் அவளுக்காகத் தம்முடைய இடது கண் கலங்கி நிற்க, தம்முடைய சாதுர்யத்தைக் குறித்து வலது கண்ணில் ஒளி வீசும். இவருக்கு மற்றொரு பொதுக் குணம் உண்டு. ஏரிகரை உடைப்பு எடுக்கிற மாதிரி, ஒரு கதையைக் கொஞ்ச தூரம் எழுத ஆரம்பித்து விட்டால், பிற்பாடு கனவேகந்தான். ஆனால் ஆரம்பிக்கிறதுதான் மிகப் பிரயாசை. எதைக் குறித்து எழுதலாம் என்று ஒரு யோசனையும் தோன்றாமல் வேதனைப்படும் சமயத்தில், அழகாய் வாரியிருக்கும் தலையைக் கலைத்துக்கொண்டு, சித்தப் பிரமையுள்ளவராய்க் காணுவார். இப்பேர்ப்பட்ட ஒரு சமயத்தில் வேங்கடரமணையருடைய கையில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

அதன் மேல் எழுதியிருந்த விலாசம் வேங்கட ராமையர், நம்பர் 21/2. இவருடைய விலாசமோ வேங்கடரமணையர் நம்பர், 22/1. ராத்திரி முழுவதும் பல் முளைப்பதற்காக அழுத குழந்தையுடன் சேர்ந்து கண் விழித்திருந்த தபால்காரன், விலாசத்தைச் சரியாய்க் கவனியாமல் தடுமாறிப்போய் அந்தக் கடிதத்தை இவரிடத்தில் கொடுத்ததைக் குறித்துக் கடிந்து பேசுவது நியாயமில்லை. வேங்கடரமண ஐயரை, அதைத் தமக்கே எடுத்துக்கொண்டதற்காக நிந்தித்துப் பிரயோஜனமில்லை. ஏனென்றால், மேலே கூறியபடி இவர் மிகவும் 'ஹீன ஜாதி' மனிதர்.

கடிதத்தைப் பிரித்து வாசித்து, "ஹா!" என்று சொல்லி, சந்தோஷத்துடன் தம்முடைய தலைமயிரை மறுபடியும் படியவைத்தார். சந்தோஷத்திற்குக் காரணம் என்னவென்றால், அதிலுள்ள வாக்கியங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஒரு கதை எழுதுவதற்கு, 'ப்ளாட்' என்கிற கதாம்சம் இவருடைய மூளையில் உடனே உதயமாயிற்று. அந்தக் கடிதம் யார் யாருக்கு எழுதியது என்கிற கவலை இவருக்கு இல்லை. இவர் படும் பாட்டில், மற்றவருடைய துயரங்களைக் குறித்த எண்ணங்களுக்கு இடமில்லை. ஆகையால், கூசாமல் தம்முடைய கதையின் ஆரம்பமாக அந்தக் கடிதத்தையே காபி செய்தார். மேல் எழுதிக் கண்டபடி 'என் ஆருயிர்க் காதலனே' என்று தொடங்கி, 'தெய்வத்தினிடத்தில் என்னு

டைய தீராப் பிரார்த்தனை' என்று முடிய அப்ப டியே தம்முடைய கவனமாக உபயோகித்துக் கொண்டார். அதன் மேல் அவருடைய பேனா வெகு விரைவில் ஓடிற்று. அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட காதலனையும், அதை எழுதிய காதலியையும் அவர் என்ன ஆட்டம் ஆட்டி வைத்தார், கதையை எவ் விதம் முடித்தார் என்பதை யெல்லாம் நீங்களே 'மலய மாருத'த்தில் படித்திருப்பீர்கள்.

ஆனால், பாவம்! அம்மாளு அம்மாள் அந்தக் கதையைப் படிக்கவில்லை. முதல் ஐந்து வரிகளை மாத்திரமே வாசித்தாள். பெரிய 'பைகா' அக்ஷரத் தில் அச்சிடப்பட்டிருந்த தன்னுடைய கடிதத் தையே பத்திரிகையில் பார்த்துப் பிரமித்தாள். அதற்குக் கீழ் அவளுடைய பார்வை போகவில்லை. அவளுடைய ஹிருதயம் பொங்கிற்று. தான் எவ்வ ளவோ துயரத்துடனும் பிரியத்துடனும் எழுதி அனுப்பிய கடிதத்திற்குப் பதில் எழுதாமலிருந்தது போக, அந்தக் கடிதத்தை எவனுக்கோ கொடுத்து, அதை ஒரு கதைக்கு அஸ்திவாரமாக உபயோகிக் கச் செய்யவா? அவளுடைய ஹிருதயம் கொதித்தது என்றுதான் மறுபடியும் சொல்ல வேண்டும்.

உஷ்ணத்தில் முறைப்படி காய்ச்சப்பட்ட இரும்பு, தன்னுடைய வளையும் சக்தியை இழந்து, வளையாத எஃகாக மாறும் அல்லவா? அந்த ஐந்து நிமிஷத் துயரத்தில் அம்மாளு அம்மாள் எஃகின் குணத்தைச் சம்பாதித்தாள்.

" அப்பா, நான் எங்காத்துக்காரரிடம் போகிறேன் " என்ருள். இந்த வார்த்தையைக் கேட்கக் கோரிக்கொண்டிருந்த தந்தை உடனே வண்டியைத் தயார் செய்தார்.

வழியில், "ஒருவர் எப்பொழுதும் 'ஜய ஜய கோகுல பால' என்று பாடினுல் என்ன செய்யலாம்?" என்று கேட்டாள்.

அவருக்கு இந்தப் புதிர் புரியவில்லை. கிண்டிக் கேட்பதற்கும் பயம். ஆகையால், "வேறு என்ன செய்யலாம்? 'க்ஷீர ஸாகரசயனு'வைப் பதிலுக்குப் பாட வேண்டியதுதான் " என்று பாதிப் பரிகாசமாய் விடை கொடுத்தார்.

சற்று நேரம் கழித்து, "எல்லாத்திற்கும் அப்படித்தானே ?" என்ருள்.

இதுவும் அவருக்கு விளங்கவில்லை. " அப்படித்தான் " என்று சொல்லுவதே உசிதமென்று எண்ணி, அவ்விதமே பதில் சொன்னுர்.

* * *

" அம்மாளு ! உனக்கு உடம்பு சௌக்கியமாய்விட்டதா ?" என்று வேங்கடராமையர் கட்டியணைத்துக்கொண்டார். அவளுடைய நெஞ்சு இளகிற்று.

" இருக்கே, நீ ஏன் எனக்குக் கடிதமே எழுதவில்லை? " என்று கேட்டார்.

அவள் பிரமித்தாள். பேசத் தொடங்கினாள். உடனே தன்னை நிறுத்திக்கொண்டு, இரண்டு தடவை மென்று முழுங்கிவிட்டு, "வந்து, வந்து, நான்தான் உங்களுக்கு அன்னிக்கே எழுதினேனே!" என்றாள்.

"கள—கன்—கனி—கக்—-ககு?"

"பச—பனி—பக்—பகி—பழ—பமை."

இந்தத் தடவை வேங்கடராமையர் சற்றுப் பிரமித்தார். "தபால்காரனைக் கேட்க வேண்டும்" என்றார். பிறகு புன்னகை செய்துவிட்டு,

"சய சய்யக்கோ—க்குலப்பாலா" என்று கதறினார்.

உடனே, அம்மாளு தெருவில் கேட்கும் விதமாக,

"ச்சீரச் சாக்கரச் சயனு" என்று பாடத் தொடங்கினாள்.

இது நடந்தது சென்ற ஆவணி மாதத்தில். சமீபத்தில் தீபாவளிக்காகப் பெண் மாப்பிள்ளைக்குப் புடைவை வேஷ்டியுடன் அம்மாளுவின் தாய் தந்தையர் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்கள். அம்மாளுவுக்கு இப்பொழுது ஹிஸ்டீரியா இல்லை. முகத்தில் சதா சந்தோஷக் களை. ஆகையால் அவளைக் காட்டிலும் பாக்கியசாலி யாரும் இருக்கமாட்டார்கள் என்று அவர்களுடைய அந்தரங்க அபிப்பிராயம்.

# 3

# அரைகுறைக் கதைகள்-1

சிநேகிதன் பலராமன்: அரை குறைக் கதைகளா? யாருக்கு என்ன உபயோகம்?

கோனஷ்டை: இப்பொழுது அரைகுறையாய் இல்லை. புராணங்களில் சரியாய் விவரிக்காமலும் முடிக்காமலும் விட்டுவிட்டார்கள். அவைகளை—

பலராமன்: அவைகளை நீ புராணத்திற்குச் சமானமாகப் பூர்த்தி செய்துவிட்டாய் போலும்!

கோனஷ்டை: போயும் போயும் புராணத்திற்குச் சமானமாய்த்தானா இருக்கவேண்டும்? அதற்கு மேலாகவே—

பலராமன்: என்ன விநயம்!

கோனஷ்டை: நவீனத்திற்கே சமானமாக இருக்கும். வாசித்துப் பார்த்தால் தெரிகிறது.

*        *        *

## தேவயானி

அசுரர்களின் குரு சுக்கிராசார்யர். அவருடைய மகள் தேவயானி. சில விஷயங்களில் தகப்பனைக் கொண்டவள். முதலில் அழகிலே. அவருக்கு வயசு காலத்தில், ஏதோ ஓர் ஆபத்தினால் ஒரு கண்

பொட்டையாக நேரிட்டதேயொழியப் பிறவியில் ஒப்பற்ற அழகு வாய்ந்தவர். அக்காலத்திலேயே அவர் ஒரு 'நக்ஷத்திர'மாகக் கொண்டாடப்பட்டவர். அவருடைய நிகரற்ற சோபையை நாம் வான மண்டலத்தில் தினம் காண்கிறோம். லாவண்யத்தில் அவருக்கு ஏற்ற பெண் தேவயானி. சுக்கிராசார்யருக்கு எப்பொழுதாவது கோபாவேசம் வந்துவிடும். வந்துவிட்டால் கோபத்தை அடக்குகிற எண்ணத்தையே அவர் அறியார். "பிடி சாபத்தை!" என்றுதான் வீரிடுவார். இவ்விஷயத்திலும் பெண் தகப்பனாரைக் கொண்டவள்.

தேவயானிக்கு, 'தினம் ஒரு சினம்' என்றே சம்பிரதாயமாயிருந்தது. சில சமயம், தகப்பனார் மாதிரி சபிக்கவும் சபிப்பாள்.

இளம் பருவத்தில் அவருடைய சிஷ்யனான கசனிடத்தில் காதல் கொண்டாள். தன்னுடைய சௌந்தர்யத்தில் பூர்ண நம்பிக்கை உள்ளவளாதலால், தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி அவனைக் கேட்க மனம் துணிந்தாள். அவனோ, "நீ என்னுடைய குருவின் புத்திரியாகையால் என் சகோதரிக்குச் சமானம். உன்னை நான் மணக்கமாட்டேன்" என்று மறுத்துவிட்டான். இவ்விதம் தன் வேண்டுகோளைத் தட்டித் தன்னை அவமதித்ததற்காக, தேவயானி அவனை உடனே சபித்தாள். அவனும் சுக்கிர வீக்ஷண்யமுள்ளவனாதலால், பதிலுக்கு அவளைச் சபித்தான். "நீ ஒரு பிராமணப் பெண்ணாயிருந்தும்

இவ்வளவு அகங்காரம் பாராட்டுகிறபடியால், ஒரு க்ஷத்திரியனையே புருஷனாக அடைவாய்" என்று சபித்தான்.

அன்று முதல், தேவயானிக்குக் கோவிலில் பூஜைமாதிரி, தினம் மூன்று தடவை கோபத்தீ கிளம்புவது வழக்கமாயிருந்தது.

அசுரர்களுக்குக் குருவல்லவா சுக்கிராசார்யர்? அவர்களுக்கு அரசன் ஒருவன் உண்டே, அவனுடைய பெயர் வ்ருஷபர்வன். அவனுடைய மகள் சர்மிஷ்டை. அவள் தேவயானியின் வயசு உடையவள். அழகிலும் கோபத்திலும் மேற்படி மேற்படியே. பார்வைக்கு இவ்விருவரும் சிநேகிதிகளாயிருந்தார்கள்.

தேவர்கள் எந்தச் சமயத்திலும் எங்கேயும் போகக்கூடுமல்லவா? வாயு பகவான் ஒரு நாள் இவ்விருவரும் ஸ்நானம் செய்து கொண்டிருக்கையில், நதிக்கரைக்குச் சென்று, அவர்கள் தனித்தனியே கழற்றி வைத்திருந்த ஆடைகளைச் சிதறச்செய்து, சிலவற்றை இடம்மாற்றி வைத்துவிட்டார். கேவலம் ஒரு மனிதன் இம்மாதிரிக் காரியம் செய்தால், அதற்குச் சரியானபடி பழி சாட்டப்பட்டு, அதற்குத் தக்க பலனும் அவனுக்குக் கிடைக்கும். ஒரு தேவர் செய்தாலோ,—ஆனால் அதை ஏன் நான் சொல்லவேண்டும்? நாளைக்கு என் தலைமேல் 'தற்செயலாய்' ஒரு தென்னைமரத்தை விழச் செய்யும் சக்தியுள்ளவர் வாயு பகவான். ஏதோ, அவருடைய 'கிரீடை', விளை

யாட்டு, இம்மாதிரி நடந்தது என்று மாத்திரம் வணக்கமாய்ச் சொல்லுகிறேன்.

இவ்விளையாட்டின் பலன் என்னவென்றால், கரை ஏறினவுடன், சர்மிஷ்டை தவறுதலாகத் தேவயானியின் ஆடையைத் தனதென்று எண்ணி அணிய எடுத்தாள். உடனே தேவயானியின் கோபாக்கினி கிளம்பிவிட்டது. சர்மிஷ்டையைக் கடிந்து பேசினாள். சர்மிஷ்டை பதிலுக்குக் கடிந்தாள். ஒருவருக்கொருவர் வரம்பு கடந்து பேசினார்கள். அநேக விஷயங்களில் சர்மிஷ்டை தேவயானிக்கு ஒப்பானவள் என்றாலும் ஒருவிதத்தில் உயர்ந்தவள். தேகவன்மை அதிகம். தேவயானிக்குப் பால்யத்திலேயே சுக்கிராசார்யர் செய்திருக்க வேண்டிய கடமையை அன்று சர்மிஷ்டை செலுத்தினாள். கன்னத்தில் ஓங்கி அறை வைத்தாள். அதோடு நிறுத்தவில்லை. அங்கே இருந்த ஒரு கிணற்றில் அவளைக் குண்டுக்கட்டாகக் கட்டித் தள்ளிவிட்டாள்.

நல்ல வேளையாக, கிணற்றில் இடுப்பு மட்டு ஆழமே தண்ணீர் இருந்தது. கிணற்றுக்குள்ளே இருந்து தேவயானி கூக்குரலிட்டாள். அதற்குத் துணையாகச் சர்மிஷ்டை வெளியே நின்றபடி அவயமிட்டாள். "ஹே தாத, ஹே தாத!" (அப்பா அப்பா) என்று தேவயானி கத்தினாள். "ரே ரே பாந்த" (ஓ வழிப்போக்கரே) என்று சர்மிஷ்டை வீரிட்டாள். இருவரில் சர்மிஷ்டைதான் உரக்கக் கத்தினாள். அதுதான் பலன் பெற்றது.

சந்திரவம்சத்து அரசர்களில் ஐந்தாம் மன்ன ஞன யயாதி மகாராஜா, விதிவசமாக அருகில் வேட்டையாடிக்கொண்டிருந்தவர், இவ்வரவத்தைக் கேட்டு ஓடிவந்தார். க்ஷணத்தில் விஷயத்தை அறிந்துகொண்டார். நல்ல யௌவனம், பலவான். கிணற்றிற்குள் கையை நீட்டித் தேவயானியைத் தூக்கி வெளியேற்றினர்.

இக்காலத்து 'நக்ஷத்திர' மாயிருந்தால் தேவ யானி அவர்மேல் சாய்ந்துவிழுந்து மூர்ச்சை அடைந் திருப்பாள். நாடக மேடையின் ராணியாயிருந்தால், அவள் மூர்ச்சை யடையாமல் பக்கத்தில் நிற்கும் தோழியிடம், "இவர் யாரோ, எந்த ஊரோ, என்ன பேரோ?" என்று பதம் பாடிக் கேட்டிருப்பாள். தேவயானி இரண்டும் செய்யவில்லை. யயாதியை நோக்கி, " நான் ஓர் அன்னிய ஸ்திரீ. நீ எவ்வாறு மனம் துணிந்து என்னைத் தொட்டு இழுத்தாய்?" என்று சீறினள். அந்த அற்புதக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல், கையைப் பிசைந்து கொண்டும் 'பேந்தப் பேந்த' விழித்துக்கொண்டும் யயாதி நின்றார்.

சிறிது நேரத்திற்குள் கூட்டம் கூடிவிட்டது. சுக்கிராசார்யர், வ்ருஷபர்வன், மந்திரிமார்கள் எல் லோரும் சேர்ந்தார்கள். நியாயம் பேசித் தீர்மானித் தார்கள். தேவயானியைச் சமாதானம் செய்தார் கள். அவளை யயாதியே விவாகம் செய்துகொ[illegible]வது என்று நிச்சயித்தார்கள். இவ்விதம் கசன் அளித்த

சாபம் நிறைவேறியது. சர்மிஷ்டை செய்த குற்றத்திற்குத் தண்டனையாக, அவள் சிறிது காலம் தேவயானியின் அடிமையாக வேலை செய்யவேண்டியது என்றும் விதித்தார்கள். யயாதி தம்முடைய குதிரையின்மேல் தேவயானியைத் தூக்கிவைத்துச் சுக்கிராசார்யரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு தம்முடைய நாட்டுக்குச் சென்றார். மற்றொரு குதிரையின்மேல் சர்மிஷ்டை பின்சென்றாள்.

சுக்கிராசார்யர் தம்முடைய ஆசிரமத்திற்குத் திரும்பினார். 'தேவயானி இல்லாமல் ஆசிரமம் முழுதும் எவ்வளவு சூன்யமாயிருக்கிறது!' என்று அவருடைய மனத்தின் ஒரு பாகத்தில் தோன்றும் போதே, 'இப்பொழுதுதான் ஒரு புயற்காற்று அடித்து ஓய்ந்தபிறகு இருக்கிற மாதிரி அமைதியாயிருக்கிறது' என்று மனத்தில் மற்றொரு பாகத்தில் எண்ணம் உண்டாகும். இவ்விதமான சச்சரவை உள்ளத்தினின்று விரட்டுவதற்காகவே, கடுந்தவம் செய்ய உட்கார்ந்தார்.

தேவயானி யயாதியின் பட்டமகிஷியாய் விளங்கினாள். ராஜ்யத்தில் (அரசன் உட்பட) யாவருக்குமே, அவளிடத்தில் கொஞ்சம் பீதி. இனி, கிணற்றில் விழுந்தவர்களை ஆட்களை விட்டு எடுக்கச் செய்வதே ஒழிய, தாம் நேரில் காப்பாற்றுவதில்லை என்று யயாதி தினம் ஒரு தடவையாவது மனத்திற்குள் சபதம் செய்துகொள்வார்.

பெரியோர்களின் தீர்ப்புப் பிரகாரம், குறிப்பிட்ட காலத்திற்குச் சர்மிஷ்டை அடிமை வேலை செய்துவந்தாள். அழகில் அவள் தேவயானிக்கு ஒப்பானவள் என்று முன்பே நாம் சொல்லியிருக்கிறோமல்லவா? இவ்வுண்மையை யயாதியும் ஒரு நாள் உணர்ந்தார். அவளுடைய தண்டனையின் காலம் கழியவே, சர்மிஷ்டையை ரகசியமாய் மணம் புரிந்து, வெகு தூரத்தில் தாம் வேட்டையாடப் போகும் ஒரு காட்டின் மத்தியில், நந்தவனத்தை ஏற்படுத்தி, அதிலுள்ள ஒரு லதாகிருகத்தில் அவளை வசிக்கச் செய்தார்.

நாளடைவில் தேவயானிக்கு இரண்டு குழந்தைகளும், சர்மிஷ்டைக்கு மூன்று குழந்தைகளும் பிறந்தன. ஐந்தும் ஆண் பிள்ளைகள்.

பல நாள் கள்ளன் ஒரு நாள் அகப்பட்டுக் கொள்ளுவான் என்பது பொய்யாகுமா? ஒரு தடவை வேட்டைக்குப் போன அரசனைத் தேவயானி பின் தொடர்ந்து சென்றாள். மிருகங்கள் கொல்லப்படும் வேடிக்கையைக் கவனிக்காமல், பிடிவாதமாய் அந்த நந்தவனத்தில் பூப் பறிக்க வேண்டுமென்று சென்றாள். சர்மிஷ்டையின் மூன்று பிள்ளைகளையும் கண்டாள். முகத்தோற்றத்திலிருந்தே சந்தேகம் தோன்றிவிட்டது. "நீங்கள் யார்?" என்று வினவினாள். "நாங்கள் யயாதி மகாராஜாவின் இரண்டாவது பார்யையாகிய சர்மிஷ்டையின் பிள்ளைகள். பட்டமகிஷியாகிய தேவ

பானி என்பவள் மிகவும் பொல்லாதவளாம். ஆகை யால் எங்களுடைய க்ஷேமத்திற்காக இங்கே தனி யாக வைக்கப்பட்டிருக்கிறோம்'' என்று சொல்லி அவளுடைய சந்தேகத்தைத் தெளிவாக்கினார்கள்.

தேவயானியின் மனத்தில் உண்டான கலக் கத்தை நாமே ஊகித்துக்கொள்ளலாம். தகப்ப னாரைத் தேடி ஓடினாள். அவள் ஓட, இந்த விஷ யத்தை அறிந்த அரசன் அவளைத் தொடர்ந்து ஓட, இருவரும் ஏக காலத்தில் சுக்கிராசார்யரின் ஆசிரமத்தை அடைந்தார்கள்.

தன் பர்த்தாவின் நடத்தை, சர்மிஷ்டையின் பொல்லாத்தனம், தன்னுடைய துக்கம், இவற்றைத் தேவயானி தன் தகப்பனாரிடம் சாங்கோபாங்க மாய்த் தெரிவித்தாள். சுக்கிராசார்யர் தயக்க முற்றார்.

ஓர் அரசன் இரண்டு மூன்று பத்தினிகளை மணந்துகொள்வது உலகத்தில் சர்வ சாதாரணம். அவ்விதம் யயாதி செய்ததை எங்ஙனம் குற்றமாகப் பாராட்டுவது? தவிர, 'சர்மிஷ்டையைச் சில காலம் அடிமையாய்ப் போகும்படி தாங்கள் முன்பே விதித் தது அதிகக் கடூரமான தண்டனையல்லவா?' என்று மகரிஷியின் மனச்சாக்ஷி சில சமயம் அவரைத் துன்பப்படுத்தியதுண்டு. அவள் இந்தமட்டும் யயாதி யால் கௌரவப்படுத்தப்பட்டுச் சௌக்கியம் அடைந் தாள் என்று கேட்பதில் அவருடைய மனத்திற்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டதே ஒழியக் கோபம் உண்டாகவில்லை. 'சர்மிஷ்டையின் மேல் கோபிப்

பதில் என்ன நியாயம்? அக்கட்டழகியைத் தாங்கள் தாமே அரசனிடத்திற்கு அனுப்பியது!' இவ்வித மெல்லாம் எண்ணினர். ஆனல் தம் புதல்வியின் சுபாவத்தை நன்குணர்ந்தவராகையால், இந்தத் தர்மங்களையெல்லாம் அவள் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்பது அவருக்கு நிச்சயம். அவளுக்கு என்ன பதில் சொல்லுவது என்று அறியாமல் தம் தாடியை உருவிக்கொண்டே நிற்கையில், அவள் புதியதாய் எடுத்துச் சொன்ன ஒரு வாதம் அவருடைய காதில் விழுந்தது. இதைப் பௌராணிகர் குறிப்பிட்டு எழுதியிருக்கிறர். ஏனென்றல், அது முதல் தர வாதம், ரிஷிகள் ஒப்புக்கொள்ளக்கூடியது.

"அவருடைய பக்ஷபாதத்தைப் பார், அப்பா! எனக்கு மாத்திரம் இரண்டே பிள்ளைகள். சர்மிஷ்டைக்கு மூன்று பிள்ளைகள்!"

'ஹா! பக்ஷபாதமா! மனைவிகளின் மத்தியில் புருஷன் வித்தியாசம் பாராட்டலாமா? என்ன துர் நடத்தை! இந்த யயாதியின் மூதாதையான சந்திரன் தன்னுடைய இருபத்தேழு பத்தினிகளின் மத்தியில் ரோகிணியிடத்தில் பக்ஷபாதம் காண்பித்து அவனுடைய மாமனரால் சபிக்கப்பட்டானல்லவா? அவர் என்ன சாபம் இட்டார்? "நாளுக்கு நாள், நீ க்ஷயரோகத்தால் பீடிக்கப்படுவாய்" என்றல்லவா? அது முதல்தானே தினம் பூர்ண சந்திரனயிருந்தவனுக்குத் தேய்பிறை தொடங்கியது? இந்தப் பக்ஷபாதமாகிற துர்நடத்தை இந்த வம்சத்தி

லேயே ஒரு சகஜ குணம்போல் இருக்கிறது. இதை வருடன் நீக்கவேண்டும்'—இவ்விதம் எல்லாம் எண்ணி முனிபுங்கவர் உடனே தீர்மானித்தார். "யயாதி!" என்றார். "பிடி சாபத்தை! கொழுப்பினு லல்லவா இவ்விதம் செய்யத் துணிந்தாய்? இன்னும் அறுபது நாழிகைக்குள், உன் வயசு இரட்டித்து நீ ஒரு தொண்டு கிழமாய்ப் போவாயாக!" என்று சபித்தார்.

சொந்தப் பெண்ணின் பர்த்தாவை ஒரு தொண்டு கிழமாக மாற்றுவதில் யாருக்கு என்ன லாபமென்று எனக்குப் புரியவில்லை. மத்ஸ்ய புராணக்காரரும் இதைத் தெளிவாக்கவில்லை. அது எப்படியிருந்தால் என்ன? சாபம் பலிக்கப் போவது நிச்சயம் என்று அறிந்த யயாதி மாமனுருடைய காலில் விழுந்தார். மன்னிக்கவேண்டுமென்று கெஞ்சினர். தவிர, இம்மாதிரியான சாபத்தின் பேதைமையைக் குறித்து நமக்குத் தோன்றுகிற சந்தேகம் ஒருகால் அச்சமயம் அந்த மாமனுருக்கும் தோன்றியதோ என்னவோ, அவருடைய மனம் இளகிற்று. "என் வாக்குப் பொய்யாகாது. ஆனல் அதற்கு விமோசனமாக ஒரு வரம் அளிக்கிறேன். வேறு யாராவது தன்னுடைய யௌவனத்தை உனக்குக் கொடுக்கச் சம்மதித்தால், நீ உன்னுடைய கிழத்தனத்தை அவருக்குக் கொடுத்து அவருடைய யௌவனத்தை நீ அடையலாம். இது சம்மதமா என்று உன்னுடைய பிள்ளைகளையே கேட்

டுப் பார்" என்று சொல்லிவிட்டு, தேவயானி பேர் வார்த்தை பேசுவதற்கு முன் ஆசிரமத்தினுள்ளே பிரவேசித்துக் கதவைப் படீர் என்று சாத்திக் கொண்டார்.

யயாதியும் தேவயானியும் அரண்மனையைத் திரும்பி அடைந்தார்கள். ரகசியம் வெளிப்பட்ட பிறகும் தோட்டத்தில் வசிப்பானேன் என்று சர்மிஷ்டையும் இங்கு வந்து சேர்ந்தாள்.

யயாதி தம்முடைய ஐந்து புதல்வர்களையும் வருவித்து, தம்மைப் பீடிக்கப்போகும் கிழத்தனத்தையும் அவர்களுடைய யௌவனத்தையும் ஈடு செய்துகொள்ளும்படி அவர்களை ஒவ்வொருவராகக் கேட்டார். முதல் நான்கு பிள்ளைகளும் தலைக்கு ஒரு விதமாய்ப் பதில் சொல்லி மறுத்தார்கள்.

"என்னைக் காட்டிலும் மற்றவர்கள்தாமே உனக்குச் செல்வப் பிள்ளைகள்? அவர்களைக் கேட்டுக்கொள்" என்றான் ஒருவன். "கிழவனாய்விட்டால் பிறகு உலகத்தில் என்ன சுகம் உண்டு? அதை நீயே சொல்லு" என்றான் மற்றொருவன். "முதலில், குதிரை ஏற வேண்டுமென்றால் ஏற முடியுமா?" என்று கேட்டான் மூன்றாவது பிள்ளை. "ஆகாரந்தான் வேண்டியிருக்குமா?" என்றான் நான்காம் பையன்.

இவ்விதம் மறுத்துப் பேசினதுமல்லாமல், தகப்பனுருடைய விபரீத வாஞ்சையைத் தங்க

ளுடைய தாய்மாரிடம் தெரிவிக்கப் போய்விட்டார் தில். கெடு வைக்கப்பட்ட அறுபது நாழிகை தீரும் சமயமாய் விட்டது. ஏக்கமடைந்த யயாதி தம் முடைய ஐந்தாம் குமாரன் (சர்மிஷ்டையின் மூன் ரும் புதல்வன்) ஆகிய புருவை அங்கலாய்ப்புடன் பிரார்த்தித்தார். அவன், "அப்பாவின் இஷ்டப் படி மாற்றிக்கொள்ள எனக்குச் சம்மதம்" என் ருன். இவ்விதம் சொல்லி வாய் மூடியவுடன் அவன் தொண்ணூற்றெட்டு வயது நிரம்பி, முதுகு கூனி, கண் பஞ்சடைந்து, வாய் குழறிய ஒரு கிழவனுகக் காணப்பட்டான். சுக்கிர சாபம் அவனைப் பிடித் தது. யயாதியோ, தம்முடைய சரியான நாற்பத் தொன்பது வயதை இழந்து பதினெட்டு வயதுள்ள யுவனுகச் சோபித்தார்; அதுதான் புருவின் வயது.

இதற்கு மேல் நடந்த விஷயத்தை மத்ஸ்யபுரா ணக்காரர் வெகு சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிருர். "இதன் பிறகு யயாதி ஆயிரம் வருஷகாலம் யௌவனத்தைஅநுபவித்து, ஒரு க்ஷணம் போல் கழித்துவிட்டு, மறுபடியும் பரிவர்த்தனை செய்து கொண்டு கிழத்தனத்தை வகித்து, புருவுக்கே பட் டம் கட்டிக்கொடுத்து, தாம் வனவாசம் செய்யப் போனுர்" என்று முடித்துவிடுகிருர்.

ஆயிர வருஷகாலமாவது! யௌவனமாவது! இதற்கு யார் வரம் கொடுத்தார்? பரிவர்த்தனை ஒன்றுக்குத்தானே வரம்? ஆயிர வருஷம் ஜீவித் திருக்க, யயாதிக்காவது புருவுக்காவது வரம் ஏது?

அது போகட்டும். இரண்டாம் தடவை யுவனுகப் போன யயாதிக்கும், எல்லோருக்கும் உள்ளபடி நாளுக்கு நாள் வயசு வர்த்தித்துச் சுபாவமான கிழத்தனம் வராதபடி தடுத்தது யார்?

இக்கேள்விகளுக்கு விடை தேடியவர்களில் ஒருவராகிய, ஒஹையோ சர்வகலாசாலையில் ஸம்ஸ்க்ருத பண்டிதர் அலோயா என். பிம்பிள் என்பவருடைய அபிப்பிராயத்தில், மத்ஸ்ய புராண சுலோகத்தின் தாத்பர்யம், "யயாதி யௌவனத்தை அடைந்து ஆயிர வருஷகாலத்தை ஒரு க்ஷணம் போல் கழித்தார்" என்பதல்ல; "யௌவனத்தை அடைந்த யயாதிக்கு ஒரு க்ஷணத்தைக் கழிப்பது ஓர் ஆயிர வருஷம் போலிருந்தது" என்பதே. யயாதி அவ்வளவு சங்கடப்பட்டார் என்பதுதான் கருத்து.

இதென்ன விபரீதம்! நவயௌவனம், ஒரு ராஜ்யம், இரண்டு களத்திரம், ஐந்து பிள்ளைகள்—இவற்றைப் படைத்த பாக்கியவானுக்கு, ஆயுட்காலத்தை உல்லாசமாய்ப் போக்குவதில் தடை என்ன? இதன் மர்மத்தை அறியவேண்டுமானல், விசித்திர தீபிகை என்கிற கிரந்தத்தின் இருபத்தேழாம் அத்தியாயத்தை வாசித்துப் பாருங்கள் என்று ஒஹையோ வித்துவான் சொல்லுகிறார். அதைப் படிக்க இரண்டே நிமிஷம் வேண்டியிருக்கும். ஆனல் கிரந்தம் கிடைப்பது வெகு பிரயாசையாகையால், அந்த அத்தியாயத்தைக் கீழே எடுத்து

எழுதியிருக்கிறேன். ஓர் எச்சரிக்கை. அதில் பாத்திரங்களின் பெயர்கள் வேண்டுமென்று மாற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது, யயாதிக்குப் பதிலாக யவனேந்திரனென்றும், தேவயானிக்குத் தைவமணி என்றும், இவ்விதமே மற்றவர்க்குரிய அடையாளங்களையும் அது மறைத்திருக்கிறது. இதற்குக் காரணம சரியான பெயர்களை வெளியிட்டால், அக்காலத்தில் ஆண்டுவந்த சந்திரவம்சத்தரசனுக்குக் கோபம் நேர்ந்து கிரந்தகர்த்தா தன் காது, மூக்கு இவைகளை இழக்க நேரும் என்கிற பயமாயிருக்கவேண்டும். நமக்கு இக்காலத்தில் அவ்விதமான பயம் இல்லையாகையால் நான் அந்தப் பொய்ப் பெயர்களை உடைத்துச் சரியான நாமங்களையே எழுதியிருக்கிறேன். இனித் தயைசெய்து வாசியுங்கள்:

## விசித்திர தீபிகை

### இருபத்தேழாம் அத்தியாயம்

### யயாதிர் யுவா பவதி (யயாதி யுவனாகிறார்)

[காட்சி: யயாதியின் அரண்மனையில் பூஜைக் கூடம். தேவயானியும் சர்மிஷ்டையும் ஓடி வருகிறார்கள். யயாதியையும் புருவையும் கண்டு பிரமிக்கிறார்கள்.]

தேவயானி: (கர்வமான குரலில்) உங்களை யார் இங்கே வரவிட்டார்கள்? மகாராஜா எங்கே?

யயாதி: நான்தான் இதோ இருக்கிறேனே?

தேவயானி: (கர்வம் மேலிட) நீ எங்கே இருக்கி ருய் என்று நான் கவலைப்படவில்லை. மகாராஜ எங்கே?

யயாதி: நான்தான் யயாதி. நான் சொல் வதைக் கேள்—

சர்மிஷ்டை: இவனைப் பார்த்தால் என் பிள்ளை புருவின் சாயலாயிருக்கிறது. ஆனால் புரு அல்ல.

தேவயானி: (வெடுக்கென்று) யாரோ ஒரு பைத்தியக்கார வாலிபன் நான்தான் மகாராஜா என்கிருன். அவனைப் பார்த்தால் உன் பிள்ளை சாயலாய் இருக்கிறதா? ஒருவேளை எல்லாப் பைத்தியக்காரர்களும் உன் பிள்ளைகளின் சாயலா கத்தான் இருப்பார்களோ!

யயாதி: இதோ பார், தேவயானி—

தேவயானி: என்ன? தைர்யம் மீறிப் போகி றதோ? என்னுடைய பெயரைச் சொல்லி அழைக் கிருயா?

புரு: (சர்மிஷ்டையை நோக்கி) அம்மா, நான் தான் உன்னுடைய பிள்ளை புரு. இவர்தாம்—

சர்மிஷ்டை: நூறு வயசில் எனக்குப் பிள்ளை இல்லை. இது என்ன ஆச்சர்யம்! துணை சேர்ந்து இரண்டு பைத்தியக்காரர்கள் வந்துவிட்டார்களே!

யயாதி: (தேவயானியை நோக்கி) நீ என்னை நம்பவில்லையா? நம் இருவருக்கு மாத்திரம் தெரிந்த

ரகசியம் ஒன்றை உன் காதில் சொல்லுகிறேன். இப்பொழுதாவது நான் யயாதி என்று நம்புவாயா? (அவளுடைய அருகில் செல்லுகிறான்.)

தேவயானி: அதிகப் பிரசங்கி! கிட்டே வராதே!

புரு: (சர்மிஷ்டையை நோக்கி) அம்மா, நான் எல்லாம் தெளிவாய்ச் சொல்லுகிறேன். (படபடப் பாய் அவளிடம் போக எத்தனிக்கிறான். விருத்தாப் பியத்தினல் கால் தடுமாறிக் கீழே விழுகிறான்.)

[இச்சமயம் நாரதர் பிரவேசிக்கிறார்.]

தேவயானியும் சர்மிஷ்டையும்: (ஏககாலத்தில்) வாருங்கள் மகரிஷியே. (ஒருவரை ஒருவர் நோக்கி) இரண்டு விநாடி வாயைப் பொத்திக்கொண்டு இரேன். (நாரதரை நோக்கி, ஏககாலத்தில்) இந்த இரண்டு பைத்தியக்காரர்களையும் பாருங்கள்.

நாரதர்: பைத்தியக்காரர்களாவது? இவன் யயாதி, இவன் புரு.

தேவயானியும் சர்மிஷ்டையும்: (ஏககாலத்தில்) என்ன சொல்லுகிறீர்கள்!

நாரதர்: (தேவயானியை நோக்கி) உனக்குக் கூடத் தெரியாதா? நீதான் கூடவே இருந்தாயே? முதலில் நீ முறையிட்டதன் மேல், உன் தகப்பனர் யயாதியை இரட்டித்த வயதுள்ள கிழவனகப் போகும்படி சபித்தாரே.

சர்மிஷ்டை: அப்பாவிடம் போய்க் கோள் சொன்னளா? கேட்பானேன்? குடும்பத்திற்கு

அனர்த்தம் வருவிக்க வேண்டுமென்றால், அப்பா வைக் கூப்பிட்டுச் சபிக்கச் சொல்வதற்கு அ பொழுதும் தயார்!

தேவயானி: எல்லாம் கிடக்க, நீ என்ன சொல்லு கிறது, என் புருஷனைத் திருடிவிட்டு?

யயாதி: ஐயோ, போனது போகட்டும்; சண்டை போடாதேயுங்களேன்!

சர்மிஷ்டை: நான் ஒரு புருஷனையும் திருட வில்லை. எதற்காகத் திருடவேண்டும்? உன் மாதி ரியா? மற்றவர்களுடைய ஆக்கினைக்குப் பயந்து எவனாவது கல்யாணம் செய்துகொண்டால்தான் உண்டு என்று இருந்தேனா? அவராக என்னை வலுவில் தேடிவந்தார். உண்டோ, இல்லையோ, கேட்டுப் பாரேன்!

யயாதி: ஐயோ, சண்டை பிடிக்கா—

நாரதர்: (தேவயானியை நோக்கி) பிறகு உன் தகப்பனார் சாபவிமோசனம் கொடுத்தார்—

தேவயானி: அப்படியானால் இவர் தம்முடைய சொந்த வயசை அடையாமல் இப்படி ஒரு பைய னாகப் போவானேன்?

நாரதர்: என்ன செய்யலாம்? அவசரத்தில் சுக் கிராசார்யர் கொடுத்த வரம், மற்றொருவனோடு வயசைப் பரிவர்த்தனை செய்துகொள்வதற்குத் தான். அதற்குப் புரு மாத்திரமே சம்மதித்தான். அவனுடைய பதினெட்டு வயசு இவருக்கு வந்து

விட்டது! இவருடைய சாப வயசான தொண்ணூற்றெட்டு அவனுக்குப் போய்விட்டது!

சர்மிஷ்டை: சபிக்கிறதற்கு அவளுடைய அப்பா; சாபத்தை அநுபவிப்பதற்கு என்னுடைய பிள்ளை! ஐயோ! என் புருவுக்கு இனிமேல் யார் பெண் கொடுப்பார்கள்?

தேவயானி: இனிமேல் மகாராஜாவுடன் பட்ட மகிஷியாகிய நான் ஊர்வலம் போனல், எல்லோரும் பார்க்க, அவருக்குப் பதினெட்டு வயசும் எனக்கு முப்பத்தெட்டு வயசுமாகவா இருக்கும்? அவரை எனக்குத் தம்பி என்று எல்லோரும் சொல்லுவார்களே!

சர்மிஷ்டை: தம்பி என்று சொல்லுவானேன்? பிள்ளை என்றே சொல்லுவார்கள். அவரை மடியில் வைத்துக்கொண்டு ஊர்வலம் போய் வாயேன்!

யயாதி: ஐயோ! சண்டை பிடிக்காதேயுங்களேன்!

தேவயானி: அவள் என்ன வேண்டுமானலும் சொல்லட்டும்! என் பிள்ளைக்குத் தொண்ணூற்றெட்டு வயசு ஆகிவிடவில்லையே! நான் அவ்வளவு கிழவி அல்லவே!

சர்மிஷ்டை: அவள் சொல்லுவதைக் கேளுங்கள்! இந்த ஆச்சர்யத்தை! இப்பொழுதுதான் தனக்கு முப்பத்தெட்டு வயசாம்! போன ஆடிக்குச் சரியாய் நாற்பத்துமூன்று வயசு நிறைந்துவிட்டது.

ஆடிக்குத் தை, எனக்கு ஆறு மாதம் மூத்தவள்; எனக்குத் தெரியாதோ?

தேவயானி: இந்தாடீ! நீ இனிமேல் என் பேச்சை எடுத்தாயானால் தெரியுமா?

யயாதி: ஐயோ! சண்டை பிடிக்கா—

சர்மிஷ்டை: என்ன தெரியும்? கசனைச் சபித்தாற் போல் என்னையும் சபித்துவிடுவாயோ?

யயாதி: ஐயோ! சண்டை—

சர்மிஷ்டை: கசனை எதற்காக இவள் சபித்தாள் என்று உங்களுடைய பட்ட மகிஷியைச் சற்றுக் கேளுங்களேன். (யயாதியும் நாரதரும் தனியே பேசிக் கொள்ளுகிறார்கள்.) என்னைக் கல்யாணம் செய்துகொள் என்று யாரையாவது நான் கெஞ்சினேனா? மாட்டேனென்று யாராவது என்னைத் தள்ளினார்களா?

தேவயானி: உன்னை ஒருவர் தள்ளுவானேன்? நீதான் மற்றவர்களைக் கிணற்றில் தள்ளுவதில் கெட்டிக்காரியாச்சுதே!

[சர்மிஷ்டையும் தேவயானியும் ஒருவரை ஒருவர் நோக்கிப் பல்லை நெறித்துக்கொள்ளுகிறார்கள்.]

யயாதி: (புருவை நோக்கி) புரு, இங்கே வா. நாம் மறுபடியும் வயசை மாற்றிக்கொள்ளுவோம்.

புரு: அப்படியே.

[புரு முன் போல யுவனாகிறான். யயாதி தொண்ணூற்றெட்டு வயசுள்ள கிழவனாகிறான்.]

யயாதி: போதும், இந்தச் சொற்ப காலம் யுவ இருந்த எனக்கு ஒவ்வொரு க்ஷணமும் ஓர் ஆயிரம் வருஷம் போல் இருந்தது. எனக்கு ராஜ்யமும் வேண்டாம், யௌவனமும் வேண்டாம். ஒரு களத்திரம் உள்ளவனுக்கு யௌவனம் வேண்டும். இரண்டு களத்திரம் படைத்தவனுக்கு வெறும் வனமே நல்லது. நாரத ரிஷியே, நீங்கள் இருந்து புருவுக்கே பட்டம் சூட்டிவைக்க வேண்டும். நான் வனவாசம் செய்யப் போகிறேன். யாராவது எனக்கு ஒரு கைத்தடி கொடுங்கள்.

தேவயானியும் சர்மிஷ்டையும்: (ஒருவரையொருவர் நோக்கி, ஏககாலத்தில்) எல்லாம் உன்னாலேதான்.

[எல்லோரும் கலைகிறார்கள்.]

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

இதைப் படித்த பிறகு, புராண சுலோகத்திற்கு ஒஹையோ நிபுணர் கூறும் அன்வயமே சரி என்று எனக்குத் தோன்றுகிறது. உங்களுடைய அபிப்பிராயம் எப்படியோ?

# 4

## நக்ஷத்திர பூஜை

அகோரமையர் துணியைப் பொறுக்கிவிட்டார். பிறகும் தயங்கினர். இருபது ரூபாய் கொடுத்து, அந்த உத்தரீயத்தை வாங்குவது சரியா என்று அவருக்குச் சந்தேகம். முடிவில் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, ஒரு பெருமூச்சையும்விட்டு, "இதையே எடுத்துக்கொள்ளுகிறேன்" என்ருர். 'சரி' என்று சொல்லி, கடை வேலைக்காரர், அந்த வஸ்திரத்தை ஒரு காகிதப் பையில் செருகிக் கட்டினர்.

கையில் ஐம்பது ரூபாயுடன் அகோரமையர் சென்னைப்பட்டினத்திற்கு, அந்தக் கிறிஸ்ட்மஸ் விடுமுறைக்கு வந்தவர். இது வெகுநாளாக அவருக்கு இருந்த ஓர் ஆசை. அவருக்கு இருப்பிடம் திருவாரூர். கச்சேரி குமாஸ்தா வேலை. பரம சாது என்றே பெயர். அவருடைய பத்தினி ஒரு விவேகி. இறுக்கின ஞாண் கயிற்றைத் தளர விடாமலே இருந்து விட்டால், வில்லின் சக்தி போய்விடும் என்று அறிந்தவள். "உங்கள் இஷ்டப்படி சென்னைப்பட்டினம் போய், பத்து நாளாவது கவலையற்று இருந்து விட்டு வாருங்கள்" என்று சொன்னள்.

அதன்மேல் அவர் ஒரு நீள லகோடாவை எடுத்து, 'சென்னை யாத்திரை பண்டு' என்று அதற்கு நாமகரணம் செய்து, அதில் சிறுகச்

...யக, கையில் தங்கும் சில்லறைக் காசுகளையே ...போட்டு, சுமார் மூன்று வருஷத்தில் அறுபது ரூபாயைச் சேர்த்துவிட்டார். போகவர, ரெயில் சார்ஜுக்குப் பத்து ரூபாய்க்குமேல் பிடிக்காது. அவருடன்கூட வேலை பார்க்கும் விசுவநாதையர், சென்னையில் தம்முடைய தம்பி நரசிம்மையரின் வீட்டில், செலவில்லாமல் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். ஆகையால் அகோரமையருக்கு வெகு சந்தோஷம். நாற்பத்தைந்து வயதுக்குள்ள உலக அனுபவமும், பதினெட்டு வயதுக்குள்ள உல்லாசமும் சேர்ந்த வண்ணமாய் விடுமுறையைக் கழித்தார்.

இஷ்டப்பட்ட காட்சிகளையெல்லாம் கண்டார். விதம் விதமான ஹோட்டல்களின் தயாரிப்புகளைப் பரீக்ஷை செய்தார். கணக்கில்லாமல் நடந்துகொண்டிருந்த பாட்டுக் கச்சேரிகளுக்குள் பொறுக்கி, முதல்தரமான சங்கீதத்தை அனுபவித்தார். ஆனால், விசேஷமாக, சினிமாக்களிலே பொழுதைச் செலுத்தினர். 'புருஷோத்தமையா' நடித்த படங்கள் எந்த எந்தத் தியேட்டர்களில் காண்பிக்கிறார்கள் என்று கண்டுபிடித்து, ஒரு படம் விடாமல் பார்த்து, தம்முடைய வெகு நாளைய மனோரதத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

'நக்ஷத்திரம்' என்பது புருஷோத்தமையா ஒருவருக்குத்தான் தகும் என்பது அவருடைய அபிப்பிராயம். புருஷோத்தமையாவைக் குறிப்பிட

அதைக்காட்டிலும் உயர்ந்த வார்த்தை இல்லையே' என்று குறைப்படுவார். அவருடைய மனைவி, சில சமயம், பிரியமாய்ப் பரிகாசம் செய்வது உண்டு. "இதென்ன பக்தி இது! தேசபக்தி ஜனங்களுக்கு நல்லது. ராஜபக்தி இகலோகத்தில் பலனைக் கொடுக்கும். தெய்வ பக்தி இரு லோகத்திற்கும் நல்லது. அதெல்லாம் விட்டுவிட்டு, ஒரு நக்ஷத்திர பக்தி உங்களுக்கு ஏற்பட்டு, அர்த்தங்கூடப் பாதி புரியாத தெலுங்குப் படங்களுக்கு உங்களை இழுக்கிறதே!" என்று. "வெறுமனே சொல்லாதே! வார்த்தைகளுக்கு அர்த்தம் ஒன்று விடாமல் புரியவேணும் என்று அவசியமா? அவர் நடிப்பதே போராதா? சன்னியாசியாய் வரட்டும். ராஜாவாக நடிக்கட்டும். அவருடைய சாமர்த்தியமும், கம்பீரமும், சாந்தியும், உயர்ந்த குணமும் வேறு யாருக்கு வரும்? ஒவ்வொரு தடவை அவருடைய படத்தைப் பார்த்துவிட்டு வரும்போதும், கோவிலுக்குப் போய் வந்த மாதிரி இருக்கிறது என் மனசு" என்று அவர் பதில் சொல்லுவார். அத்துடன் அந்த அம்மாள் பரிகாசத்தை நிறுத்தி விடுவாள்.

விடுமுறையின் கடைசித்தினம், அகோரமையர், எஸ்ப்ளனேடில் நடந்துகொண்டிருந்தவர், ஒரு துணிக் கடையின் முன்பு நிற்கலானார். அதன் வாசலில் கட்டித் தொங்கவிட்டிருந்த பலகையில், ஓர் அடி உயரமுள்ள அக்ஷரங்களால், 'பொங்கலுக்குப் பரிசு வாங்கிக் கொடுங்கள்' என்று புத்திமதி அளிக்கப்பட்டிருந்தது. 'அதுவும் சரிதான். வீட்டிற்குத்

திரும்பும்போது, வெறும்கையாகப் போவானேன்?' என்று எண்ணி, கடைக்குள் நுழைந்தார். நுழைந்தவர், சற்றுத் தயங்கிக்கொண்டு, ஏதோ ஓர் இடத்தில் நிற்கவே, அங்கிருந்த கடை வேலைக்காரர், உத்ஸாஹத்துடன், "வாருங்கோ! ஜரிகை உத்தரீயமா பார்க்கிறீங்கோ? இதோ இருக்கு, 'லேடஸ்ட் பாஷன்.' நேத்திக்குத்தான் புது 'ஸ்டாக்கு' வந்தது. 'புருஷோத்தமையா உத்தரீயம்' என்று இதுக்குப் பெயர். ரொம்பப் பேர் வாங்கிண்டு போறாங்க' என்று சொல்லி, அவருக்கு எதிரே இருந்த பீரோவிலிருந்து பல உத்தரீயங்களை எடுத்து மேஜை மேல் குவித்துவிட்டார்.

அவை ஒரு விநோதத் தினுசாகத்தான் இருந்தன. கரைகளில் சாதா ஜரிகைக்குப் பதிலாக, தக்க எழுத்துக்களால், புருஷோத்தமையாவின் பெயர் மாத்திரமல்ல, அவர் நடித்துள்ள பல படங்களின் பெயர்களும், மாற்றி மாற்றி நெய்யப்பட்டிருந்தன. அவற்றைக் காணும்பொழுது, தெய்வமே தன்னை அவ்விடத்திற்குக் கைபிடித்து அழைத்து வந்ததாக அகோரமையருக்குத் தோன்றிற்று. ஓர் உத்தரீயத்தைப் பொறுக்கினர். விலை இருபது ரூபாய். அந்தப் பணம் அவர் கையில் பாக்கியிருந்தது. ஆனல் அந்த வஸ்திரத்தை வாங்கினல், வீட்டிலுள்ளவர்களுக்கு வாங்கப் பணம் கிடையாது. பக்தி ஒரு பக்கமும், குடும்ப வாஞ்சை ஒரு பக்கமும் அவரை இழுத்தன.

முடிவில், 'இன்று ஒரு நாள் போக, பாக்கி ஆயுசு முழுவதும் குடும்பத்திற்காகவே உழைக்கிறேனல்லவா? இந்த ஒரு தடவை மாத்திரம் என் ஒருவனுடைய சந்தோஷத்திற்காக இதை வாங்கி, புருஷோத்தமையாவிடம் நேரில் சென்று இதைச் சமர்ப்பித்துவிட்டு, அவர் மூலமாக நான் இதுவரை அனுபவித்திருக்கும் ஒப்பற்ற ஆனந்தத்திற்கேற்ற என்னுடைய நன்றியறிவைத் தெரிவித்தால், இதன் ஞாபகமே எனக்கு என்றென்றைக்கும் போதும்.' இவ்விதமெல்லாம் எண்ணி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, நாம் முதலில் கண்டபடி, அந்த வஸ்திரத்தையே வாங்கினர்.

வாங்கினபிறகு, ஞாபகம் வரவே, 'புருஷோத்தமையாவின் வீடு எங்கே இருக்கிறது, தெரியுமோ?' என்று கடை வேலைக்காரரைச் சிறிது சங்கோசத்துடனே கேட்டார். தன்னுடைய எண்ணத்தை அவர் ஊகித்துவிடுவாரோ என்று பயம்!

"அது ராயபுரத்திலிருக்கு. ஏன்? அங்கே போகணமா?"

அகோரமையர் தலையை அசைத்தார். அதற்கு மேல் தைரியமில்லை.

"இங்கிருந்தபடி இடத்தைச் சொல்றதுகஷ்டம். ஆனா அது ஒன்றும் வேண்டாம். நீங்க இங்கே சத்தே இருங்கோ. அவர் வீட்டுக்கு இந்தச் சாமானை அனுப்பப்போறேன். அவர் ஆர்டர்படி நெச பொடவை இது. 'பாக்' பண்ணி, தயாரா

யிருக்கு. அவருடைய வேலைக்காரப் பையன், எதிர்க்கே இருக்கிற கார்ப்பரேஷன் மார்க்கட்டிலே பழம் வாங்கப் போயிருக்கான். அஞ்சு நிமிஷத்தில் வந்துடுவன், இதை வாங்கிண்டு போக. அவனோடே நீங்க டிராமில்கூடப் போயிடலாம்'' என்று வேலைக்காரர் சொன்னார்.

அந்த ஏற்பாட்டின் பிரகாரமே, கால் மணி நேரத்திற்குள் அகோரமையர் புருஷோத்தமையாவின் வீடு போய்ச் சேர்ந்தார். டிராம் வண்டியிலிருந்து இறங்குவதற்கு முன், பையன் பழக்கூடையையும் பொட்டலத்தையும் எடுத்துக்கொண்டு, ஒரு விஷயம் சொன்னான். "நீங்க என்னோடு கூடவே நுழையாதேங்க. ஐயா ஏதாவது சொல்லுவார். நான் மொதல்லே உள்ளே போயிடறேன்'' என்றான்.

அப்படியே அவன் செய்ய, இரண்டு நிமிஷம் பொறுத்துவிட்டு, அகோரமையர் வாசற் கதவைத் தட்டினார். அத்தருணத்தில் வீட்டிற்குள் ஒரு கூக்குரல் கேட்டது. பையன் அழுகிறதும், ஒரு பெரிய மனிதன் அவனைப் பளார் பளார் என்று அடித்துக் கொண்டே திட்டுகிறதுமாயிருந்தது. "காமாட்டிப் பயலே, டவுனுக்குப் போய் இரண்டு சாமான் வாங்கிண்டு வரதுன்னு, ரண்டு மணி நேரமா அதுக்கு? ஒன் பல்லைப் பிடிங்கூடறேன், பாரு!'' இன்னும் பூசைகள்; இன்னும் சில திட்டல்கள்.

அகோரமையர் திடுக்கிட்டு நின்றார். 'இவ்வளவு குரூரமான மனிதனுக்கு, புருஷோத்தமையா தன்

1465



031:3 N00 H6
UNIVERSITY EXTENSION LIBRA

னுடைய வீட்டில் இருக்க, என்னமாய் இடங் கொடுத்தார்?' என்றே அவர் வியந்தார். அச்சமயத் தில் வாசற்கதவு திறக்கப்பட்டு, ஒரு மனிதர் வெளியே வந்தார். அகோரமையரின் திடுக்கம் பன்மடங்கா யிற்று. அந்த மனிதரைப் பார்த்தால், புருஷோத் தமையா மாதிரியும் இருந்தது, ஆனால் அவரல்ல போலவும் தோன்றிற்று. அதே உயரம், அதே உருவம், அதே தோற்றம். ஆனால் அகோரமையர் மனசுக்குள் பதிந்துள்ள ஒரு மனோகரமான, சாந்தி ஸ்வரூபமான வதனத்திற்குப் பதிலாக, அம்மைத் தழும்புகள் பெருகிய தடித்த தோலுடன், கோபத் தினால் கோணலாக இழுக்கப்பட்ட இந்திரியங்களைப் படைத்த ஒரு முகத்தைக் கண்டார். இருந்தாலும், அவருக்கு அதுவும் ஏதோ ஒருவிதத்தில் புருஷோத் தமையாவின் முகத்தையே ஞாபகப்படுத்தியது.

"யார்? நீ எங்கே வந்தாய்?" என்று அந்த மனி தர், ஒரு தெலுங்கர் பேசும் தமிழில் சீறினார். அகோரமையருக்குத் தெற்றல் கண்டுவிட்டது.

"நா ஆ ஆன் திதிதிதிருவாலூர். உங்களைக் கண்டு கொண்டு போகலாம் என்று வந்தேன்......."

"ஒன்றும் காணவேண்டாம். நான் ஒன்றும் பிச்சை போடப் போறதில்லே......."

"இல் லேல் லேல் லே......."

"பின்னே எதுக்காக வந்தாயாம்? இந்த வித் தையெல்லாம் தெரியும். ஒன்னைப்போல், நூறு

பேரைப் பார்த்திருக்கேன். மொதல்லே அப்படி இப்படீன்னு பேசறது. கடேசிலே முடியறது யாசகத்திலே........"

"நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்........"

"சரித்தான்னா, எனக்கு ஒன்னோடே வாயாடச் சாவகாசமில்லே. போன்னா, மரியாதையாய்ப் போறயா, இல்லெயா?....யார்ரா அங்கே, அந்த நாயை அவுத்துவிடு......"

அகோரமையர் துக்கத்துடன் திரும்பினார். பாவம்! அவர் மனம் பட்ட பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? அன்றிரவு, ரயில்வண்டியில் கஷ்டப் படாமல், வீட்டில் சுவஸ்தமாகச் சயனித்திருந் தாலுங்கூட, அவருக்கு ஒருபொட்டுத் தூக்கமும் வந் திராது. 'இவரா நான் இதுவரை பூஜித்து வந்த மகான்?' என்று நினைக்கும்போதெல்லாம் தம்மு டைய அறிவீனத்தைக் குறித்து உண்டாகும் அவமா னம் போதாதென்று, இதுவரை புருஷோத்தமை யாவின் படங்களைக் காணும் பொழுதெல்லாம் தாம் உட்கொண்ட ஆனந்தத்தையெல்லாம், திரும் பக் கக்குகிறமாதிரியே கஷ்டப்பட்டார். கோவிலில் தெய்வத்திற்கு அர்ச்சனை செய்துகொண்டிருக்கை யில், நம்முடைய கண்ணெதிரில் அது ஒரு பிசாசாக மாறினால் எப்படி இருக்கும்?

தம்முடைய சம்சாரத்தினிடத்தில் இதையெல் லாம் எப்படிச் சொல்லுகிறது? அவருடைய 'பக்தி' யைக் குறித்து அந்த அம்மாள் இதற்குமுன் பரிகா

சம் பண்ணுவது அகோரமையருக்கு ஒரு விளையாட்டு மாதிரி களிப்பாகவே இருக்கும். ஆனால் இது ஒரு பரிகாச விஷயமல்ல, விளையாட்டுச் சமாசாரமல்ல. நினைத்தால் துக்கத்தைப் பொங்கச் செய்யும் காரியம். தனக்குப் பட்ட புண்ணை, கட்டை அவிழ்த்து அவளிடம் காட்ட இஷ்டமில்லை. நடந்ததை ஒருவரிடமும் ஒன்றும் சொல்லுவதில்லை என்றே தீர்மானித்தார்.

மறுநாள் காலையில் வீடுபோய்ச் சேர்ந்தவுடன், அவளுடைய கேள்விகளுக்குச் சுருக்கமாகவே பதில் சொல்லிவிட்டு, பல் விளக்கவேண்டியதைச் சாக்கிட்டு, தப்பித்துக்கொண்டு போனார். அந்த அம்மாள் அவர் கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்துச் சாமான்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினாள். பட்டினத்துத் துணிக்கடையின் பொட்டலம் அவளுடைய கண்ணிற்படவே, முதலில் அதையே பிரித்தாள். பிரித்ததும் அவளுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. அச்சமயம் அகோரமையர் அவ்விடத்திற்குத் திரும்பி வரவே, அவரை ஒரு தடவை இறுகக் கட்டிக்கொண்டுவிட்டு, அவருக்குச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தாள். "இந்த மாதிரிப் புடைவை வேண்டுமென்றுதான் இரண்டு வருஷங்களாக ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு அதை யார் சொன்னது? விலையோ, தற்கால விலையாக 175 ரூபாய் போட்டிருக்கிறதே, உங்களுக்குப் பணம் எது?" என்று பிரியமும் சந்தோஷமும் போட்டி போடுகிற குரலில் கேட்டாள்.

அகோரமையர் ஒரு விநாடி தயங்கினர். அவ ளுடைய ஆனந்தத்தில், அதை அவள் கவனிக்க வில்லை. அவளுடைய கண் அந்தப் புடைவையின் மேலே—. அந்த ஒரு விநாடியில் அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. 'நேற்றைக்கு டிராம் வண்டியில் போகும்போது, அந்தப் பையன் கொண்டுபோன பொட்டலமும் என் பொட்டலமும் ஒன்றுக்கு ஒன்று மாறிப் போயிருக்கவேண்டும். இரண்டுக் கும் கடைப்பெயர் போட்ட ஒரே மாதிரிப் பை. துணியும், பட்டுப்புடைவையும் ஒரே கனம், ஒரே பருமன். அதனல்தான் இரண்டு பேரும் ஏமாந்து போனது. அதெல்லாம் இருக்கட்டும். இப்பொழுது இவள், புடைவை கிடைத்ததென்று இவ் வளவு சந்தோஷப்பட்ட பிறகு, அது ஒரு தவறு, புடைவை கிடையாது என்று சொல்லி இவளுடைய மனசை என்னமாய்ப் புண்படுத்துகிறது? ஒரு பொய்யைத்தான் பேசவேண்டும்' என்று தீர்மா னித்தார்.

(இம்மாதிரி நல்ல எண்ணத்துடன் சொல்லும் பொய்களை, யமதர்மராஜனும் சித்திரகுப்தனும் ஒருவருடைய பெயரிலும் பற்று எழுதுகிறதில்லை, ஓர் அநாமத்துப் புஸ்தகத்தில் பதிகிறன் என்றே கேள்வி. கேள்வியை எழுதிவிட்டேன். ஆனல் இவ்விஷயத்தின் யதார்த்தத்தை அறியவேண்டு மானல், பொய் சொல்லுகிறவர்களிடமே கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.)

அவ்விதம் தீர்மானித்த அகோரமையர், தமக்கு முதலில் தோன்றின பொய்யைச் சொல்லிவைத்தார். "பணமா? நான் இந்தப் புடைவைக்கு விலை கொடுக்கவில்லை. ஒரு லாட்டரியில் ஒரு ரூபாய் டிக்கட்டு ஒன்று வாங்கினேன். இது கிடைத்தது" என்றார். இவ்விதம் சொற்பச் செலவுக்கு, இவ்வளவு உயர்ந்த புடைவை கிடைத்ததற்காக அந்த அம்மாள் இரு மடங்கு சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கையில், தாம் விசுவநாதையரிடம் சென்று, உண்மையைத் தெரிவித்து, தம் மனசில் உள்ள பளுவை நீக்கி, மேல் யோசனையைக் கேட்கவேண்டுமென்று தீர்மானித்தார். அவ்விதமே, அவரிடம் சாங்கோபாங்கமாக நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு, "நான் இப்பொழுது என்ன செய்கிறது? சொல்லு" என்று கவலையுடன் கேட்டார்.

விசுவநாதையருக்கோ, ஒருவிதமான கவலைக்கும் அவசியம் தென்படவில்லை. "அடேயப்பா! பார்த்தால் பூனை மாதிரி இருக்கிறாய். ஆனால் என்ன காரியம் செய்துவிடுகிறாய்! அவன் வேண்டாம், வேண்டாம் என்றால்கூட, உன் இஷ்டப்படியே, நீ பொறுக்கின 'ப்ரெஸன்டை'யே அவன் கையில் சேர்த்துவிட்டு, பதிலுக்கு 175 ரூபாய்க்கு ஒரு புடைவையைத் தட்டிக்கொண்டு வந்துவிட்டாயே! அடுத்த தடவை பட்டினம் போகிறபோது, என் வீட்டுக்காரிக்கும் ஒரு புடைவை சம்பாதித்துக் கொண்டுவா, அப்பா!" என்றார்.

"பரிகாசம் இருக்கட்டும். வாஸ்தவத்தில், நான் இப்பொழுது என்ன செய்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதைச் சொல்லேன்!" என்று கெஞ்சினர்.

"நீ செய்யவாவது! பகவான்தான் உன் கண்ணைத் திறந்தார். நக்ஷத்திரமாவது நக்ஷத்திரம்! முகத்தில் பூசிய பவுடர் பாதி, எத்தனையோ டைரெக்டர்கள் தங்கள் பிராணன்போக, அவனுக்கு உருப்போட்டுக்கொடுத்த வார்த்தைகள் பாதி, இவைகளை வைத்துக்கொண்டு ஒரு சோதாப்பயல் மினுக்கிக்கொண்டு, ஒரு பேய் பிடிக்கிறமாதிரி, உன் மனசைப் பிடித்துக்கொண் டிருந்தான், இத்தனை நாளாக. அவன் எந்த மாதிரி ஆசாமி என்று இப்போது உனக்குத் தெரிந்துபோய்விட்டது. நீயாகச் சிருஷ்டித்திருந்த மனிதன் செத்தான் என்று ஒரு முழுக்குப் போட்டுவிடு. இந்தப் பைத்தியமும் தொலையட்டும், ரெயில் வண்டிக் கரியும் தொலையட்டும்" என்று சந்தோஷமாய்ப் புத்திமதியளித்தார்.

"சரி, நீ சொல்லுகிற மாதிரியே, அவனைக் குறித்து ஒரு ஸ்நானம் செய்துவிடுகிறேன். ஆனல் புடைவை விஷயத்தில் என்ன செய்கிறது? உத்தரீயத்தின் விலையைக் கழித்தாலும், அவனுக்கு 150 ரூபாய்க்குமேல் நஷ்டமாய்ப் போயிருக்கிறதே, கடைக்காரனைத் தொல்லைப்படுத்தப் போகிருனே, எல்லாம் வெளியாய்விடுமே?"

"ஒன்றும் அப்படியில்லை. நடந்ததை ஒருவராலும் ஊகிக்க முடியாது. உன் பெயர்கூட ஒருவருக்கும் தெரியாது. அந்தக் கடைக்காரரை நான் நன்ருய் அறிவேன். மூன்று புருஷோத்தமையாக்களுக்குப் பதில் சொல்லக்கூடியவர். அனுப்பின புடைவையைப் பெற்றுக்கொண்டு, அவன்தான் பொய் சொல்லுகிருன் என்று எந்தக் கோர்ட்டிலும் சாதிக்கக் கூடியவர். நீ அவருக்காக விசாரப் படவேண்டாம்."

"அப்படியானுல் நியாயப்படி புருஷோத்தமையாவுக்கு 155 ரூபாயை நான் அனுப்பவேண்டாமா, கடன் வாங்கியாவது? வேறென்றும் எழுதாமல் மொட்டையாய் ஒருமணி ஆர்டர் செய்துவிட்டால்...."

"இதோ பார்! அகோரம், இந்தமாதிரி தெய்வமே கைகலந்து, ஒரு காரியத்தை முடிக்கும் போது, நீ குறுக்கே வந்து உன் நியாயத்தைப் பேசினுயானுல், தெரியுமா செய்தி? நடந்ததெல்லாம் உன் அகமுடையாளிடம் போய்ச் சொல்லி விடுவேன். இனிமேல், உன் ஆயுசுக்கு, நீ சொல்லுவதொன்றையும் நம்பமாட்டாள்!" என்று பயமுறுத்திவிட்டு, திடீரென்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு, 'ஓஹோ ஹோ!' என்று அடக்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினுர்.

"உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று சற்றுக் கோபமாகவே அகோரமையர் கேட்டார்.

"பைத்தியம் ஒன்றுமில்லையப்பா" என்று விசுவநாதையர் தம்முடைய கண்களைத் துடைத்துக் கொண்டு விவரித்தார். "இதுதான் சமாசாரம். அந்தச் சோதா மனிதன், வேலைக்காரப் பையனைக் காலதாமசம் செய்ததற்காகத் திட்டி அடித்ததற்கும், உன்னைப் பேசக்கூட விடாமல், வெருட்டி ஓட்டினதற்கும் காரணம் புரிந்ததா? அவன் உன்னுடைய பொட்டலத்தை எடுத்துக்கொண்டு ஓட்டமாய் ஓடிப்போனது யாரோ ஒரு ஸ்திரீயுடன் பிரிய வார்த்தைகள் பேசிவிட்டு, அதை ஆடம்பரமாய்க் கொடுப்பதற்குத்தான். அவளும் அதை ஆவலுடன் திறந்திருப்பாள். அப்பொழுது அதில் 'ஸ்பெஷல் ஆர்டர்' ஆன பட்டுப்புடைவைக்குப் பதிலாக ஒரு வெள்ளைத் துணி, அவனுக்கு மாத்திரம் புகழ்ச்சியாக இருக்கிற ஒரு வெள்ளைத் துணியைக் காணும் பொழுது, அவனை அவள் என்ன என்ன சொல்லியிருப்பாள்? அவள் ஒன்றும் அவனுக்குச் சளைத்தவளாக இருக்கமாட்டாளே! இந்தக் காட்சியை ஒரு 'ஸ்டுடியோ'வும் எடுக்காமல் போய்விட்டதே!" என்று மறுபடியும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர்.

அந்த வைபவத்தைத் தன் மனசில் கல்பிக்கும் பொழுது, அகோரமையருக்கும் தடுக்கமுடியாமல் சிரிப்புப் பெருகி, மனச்சாந்தியுடன் மனைவியிடம் திரும்பினர். 'நக்ஷத்திர பக்தியால் யாருக்கு என்ன லாபம்?' என்று அவள் அடிக்கடி கேட்பதுண்டே,

'இதோ பார்! அதனால்தான் உனக்கு இந்தப் புடைவை கிடைத்தது!' என்று சொல்லிக்காட்டி ஞல் எவ்வளவு திருப்தியாக இருக்கும்! நிஜத்தைச சொல்ல முடியாதபடி, ஒரு பொய்யைச் சொல்லி யாய்விட்டதே என்கிற ஒரு குறைதான் அவருக்கு.

# 5

# அதிகப் பிரசங்கி

என்னுடைய பெயர் வேங்கடரமண ஐயர். விலாஸம் 22/1, சகாராம் தெரு, முத்தியால் பேட்டை, மதராஸ். தொழில், கதை எழுதுவது. புனைபெயர் உபயோகிப்பதில்லை. மற்றவர் என்ன செய்தாலும் செய்யட்டும், என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டால், ஒரு கதையை எழுதிவிட்டு, பிறகு புனை பெயருக்குப் பின்னால் ஒருவன் ஒளிந்துகொள்வது ஒருவிதமான பயங்கொள்ளித்தனம் தவிர வேறில்லை. ஸ்பஷ்டமாக என்னுடைய நாமதேயத்தின் கீழாகவே, 'மலயமாருத'ப் பத்திரிகையில் என் கதைகளை நீங்கள் அடிக்கடி வாசித்திருப்பீர்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை இதழில்கூட ஒரு கதை வெளிவந்திருக்கிறது. 'கொச்சி மெயில் கொலை' என்று அதற்குப் பெயர்.

சுமார் நாலு மாதங்களுக்கு முன்பாக, ஒரு ராத்திரி, பங்களூரிலிருந்து சென்னைக்கு வரும் மெயில் வண்டியில் ஒரு கொலை நடந்து அமர்க்களப் பட்டது உங்களுக்கு ஞாபகத்திற்கு வரும்.

வெகு தனவானான ஒரு சேட்டு, முதல் கிளாஸ் வண்டியில் ராத்திரி பங்களூரில் ஏறினார். காலையில் மதராஸில் வண்டியைத் திறந்து பார்த்த பொழுது

அவருடைய கழுத்து துண்டாக வெட்டப்பட்டுக் கிடந்தது. அவருடைய பெட்டிப்பூட்டு உடைந்து திறந்து இருந்தது. அதிலுள்ள சாமான்கள் அநேகமாய்த் தரையில் சிதறிக் கிடந்தன. ஏதாவது திருட்டுப் போய்விட்டதோ இல்லையோ என்று சொல்ல முடியவில்லை. ஆனால் சேட்டின் கைவிரலில் அணிந்திருந்த ஒரு விலையுயர்ந்த மோதிரம் அப்படியே இருந்தது. என்ன முயற்சி செய்தும் போலீஸாரால் கொலைகாரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவ் விஷயங்களையே அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு, பெயர்களை மாத்திரம் மாற்றிவிட்டு, என்னுடைய 'கொச்சி மெயில் கொலை'க் கதையை எழுதினேன். என்னுடைய 'துப்புப் புலி துமாளராவ்' என்பவரைக் கதையில் நுழைத்தேன். இரண்டே நாட்களில் குற்றவாளியின் பிடரியின் மேல் கையை வைத்துவிட்டார் அவர் என்பதை என்னுடைய இதர கதைகளைப் படித்திருக்கும் நண்பர்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்த அபாரமான திறமை அவருக்கு மாத்திரம் எப்படி லபித்தது என்று கேட்டால், அவர் அடிக்கடி விநயத்துடன் சொல்லுகிற மாதிரி, இரண்டே வார்த்தைகளில் அடக்கி விடலாம். முதல் வார்த்தை, ஊகம். இரண்டாவது, ஊக்கம். அவருடைய அநுமானத்தின் வழியைப் படிப் படியாகக் காண்பிக்கிறேன்.

பெட்டி திறக்கப்பட்டுச் சாமான்கள் சிதறிக் கிடந்தபடியால், அதில் இருந்த சாமான் ஏதோ ஒன்றுக்காகக் குற்றவாளி தேடியிருக்க வேண்டும். அதற்காகவாவது வண்டியின் விளக்கை 'ஸ்விட்சு' செய்திருக்க வேண்டும். அப்பொழுது ஸேட்டின் கை மோதிரம் அவனுடைய கண்ணில் நன்ருகத் தென்பட்டிருக்க வேண்டும். இருந்தும் அவன் அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் அவனுடைய கருத்து சாதாரணத் திருட்டல்ல. அப்படியாளுல், பெட்டியிலிருந்து திருடியது, அதாவது ஒரு கொலை செய்தாவது திருடியே ஆக வேண்டியிருந்தது, என்னவாக இருக்கக் கூடும்? ஒரு முக்கியமான தஸ்தாவேஜி! அதாவது வேருெரு மனிதனை ஆபத்தில் மாட்டிய ஒரு தஸ்தாவேஜி, இந்தச் ஸேட்டின் கையில் சிக்கியிருந்தால் மாத்திரமே, அதை அபகரிக்கும் பொருட்டு அம் மனிதன் ஒரு கொலைக்குத் துணிந்திருப்பான். ஆனல் இந்தக் காரியத்தை முடிப்பதற்கு ஒரு வேலைக்காரனை அல்லது கூலி ஆளை அனுப்ப மாட்டான். ஏனென்றல், ஸேட்டின் கையினின்றும் தப்பிவிட்டு, அதற்குப் பதிலாக வேலைக்காரன் கையில் தஸ்தாவேஜியும் தானும் சிக்கிக்கொள்ளுவதில் என்ன லாபம்? ஆகையால் அக்கறைப்பட்டவன், ஒன்று தானே வந்திருக்க வேண்டும், அல்லது, ஆப்த சிநேகிதனை அல்லது மகனை அந்த மெயிலில் அனுப்பியிருக்க வேண்டும். அந்தச் ஸேட்டின் விரோதிகளில் எவன் அந்த மெயிலில் பிரயாணம் செய்தான்? அல்லது,

எவனுடைய மகன் அல்லது ஆப்த சிநேகிதன் அவ்விதம் போனான்? இதைத்தானே கண்டுபிடிக்க வேண்டியது?

இது வரையில் துப்புப் புலி துமாளராவின் ஊகம். இதற்கு மேல் அவருடைய ஊக்கம். எவ்வளவு ஊக்கத்துடன் இரண்டே நாளில் ஆளைக் கண்டுபிடித்து, கோர்ட்டில் வேண்டியிருக்கும் சாக்ஷி அத்தாட்சியுடன் போலீஸார் வசம் ஒப்பித்தார் என்பதை 'மலய மாருத'த்தில் நீங்கள் படிக்கலாம். ஆகையால் இங்கே சொல்லி, அதன் பிரதிகள் விலை போவதை நான் கெடுக்க வேண்டாம்.

ஆனால் இந்தக் காரியத்தையெல்லாம் ஏன் போலீஸாரே விவேகத்துடன் செய்யக்கூடாது என்றாவது, இப்பேர்ப்பட்டவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகவென்று நாம் ஏன் வரி செலுத்த வேண்டும் என்றாவது எனக்கு விளங்கவில்லை. உங்களுக்கும் அவ்விதமென்றே எண்ணுகிறேன். இந்தச் சரித்திரத்தை முழுவதும் படியுங்கள், உங்களுடைய ஆச்சரியம் இன்னும் பன்மடங்காகுமென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

வெள்ளிக்கிழமை உறங்கப் போவதற்கு முன்பாக, 'மலய மாருத' ஆபீசிலிருந்து எனக்குக் கிடைத்த அன்பளிப்புப் பிரதியில் என்னுடைய கதையைக் கவனத்துடன் படித்தேன். சில சமயம் ஏதாவது அச்சுப்பிழை நேருவதுஉண்டு. சொன்னால்

நம்ப மாட்டீர்கள்: ஒரு தடவை 'துப்புப்புலி துமாளராவ்' என்பதற்குப் பதிலாக 'உப்புபுளி இன்னுர்' என்றே அச்சிட்டு விளம்பரம் செய்திருந் தார்கள். இந்தத் தடவை ஒரு பிழையும் இல்லை. சந் தோஷத்துடன் உறங்கப்போனேன். சனிக் கிழமை காலையில் சந்தோஷத்துடன் கண் விழித் தேன். அன்று காலை வெளி வந்த 'சூரியோதயம்' என்ற தினசரிப் பத்திரிகைப் பிரதி வழக்கம் போல் ஜன்னலின் வழியாய் உள்ளே போடப்பட் டிருந்தது. படுக்கையில் படுத்தபடியே, கை நீட்டி அதை எடுத்துச் சந்தோஷத்துடன் பக்கங்களைப் புரட்டினேன். நண்பர்களே! அச்சமயம் பின் வரு மாறு ஒரு செய்தியைப் படித்தபொழுது எனக்கு உண்டான ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் நீங்களே ஊகித்துக்கொள்ள வேண்டும். என்னுல் வர்ணிக்க முடியாது.

"மரணம். நேற்று இரவு ஒன்பது மணிக்கு அவருடைய வாசமாகிய முத்தியால்பேட்டை, சகா ராம் தெரு, 22/1 நம்பர் வீட்டில், ஹிருதயக் கோளாறினுல் ஸ்ரீ வி. வேங்கடரமண ஐயர் திடீ ரென்று மரித்ததைக் கேட்க நாம் வருத்தப்படுகி ருேம். (வருத்தப்படவாவது! பத்திராதிபர் தலை யில் இடி விழ! நான்தான் இன்னும் கொட்டாப் புளி மாதிரி உயிரோடு இருக்கும்பொழுது, இம்மாதிரி சனிக்கிழமையும் காலை வேளையுமாய் அபசகுன மான ஒரு செய்தியைப் படித்தால், எனக்கு உண்

டாகும் வருத்தத்திற்கு அவருடைய வருத்தம் எந்த மூலே?) அவருக்கு மனைவி சந்ததி கிடையாது. ஆனால் அவருடைய மரணத்தினால் எழுத்தாளர் உலகத்திற்கே ஒரு பெரும் நஷ்டம் நேர்ந்துவிட்டதென்று சொல்லவேண்டும்.''

போகிறது! இந்த மட்டுமாவது சொன்னாரே! நானும் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன். ஒன்றிலாவது எவரும் தம்முடைய மரண விளம்பரத்தைத் தாமே படித்ததில்லை.

இந்த அபத்தத்தை உடனே திருத்துவதற்காக, ஒரு ஷர்ட்டை மாட்டிக்கொண்டு, வீட்டைப் பூட்டிவிட்டு, பத்திரிகையும் கையுமாகச் 'சூரியோதய'த்தின் ஆபீசுக்குச் சென்றேன்.

அங்கு இருந்த காவற்காரன் தான் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையிலிருந்து கண்களை நிமிர்த்தி என்னை நோக்கி, "என்ன பேர் என்று சொல்வது?'' என்று கேட்டான்.

"வி. வேங்கடரமண ஐயர்'' என்றேன்.

"நீங்கதானா நேத்தி ராத்திரி செத்துப் போனது?'' என்று கேட்டான்.

"காமாட்டிப் பயலே! நேத்திக்குச் செத்திருந்தால் இன்னிக்கு உன்கிட்டவா வருவேன்?'' என்று கத்தினேன். அவன் பதில் சொல்லாமல் உள்ளே போனான். அங்கே என்ன நடந்ததோ, வெளியே

வந்து பேசாமல் என்னை உள்ளே அழைத்துப் போனான்.

பத்திராதிபரிடம் வெகு படபடப்பாய்ப் பேசினேன். அவர் நிதானமாக மூக்குக் கண்ணாடியைத் துடைத்தார். "த்ஸொ, த்ஸொ, மன்னிக்க வேண்டும். ஆனால் இதுவரை எங்கள் பேபரில் இம்மாதிரி ஒரு தப்பு நேர்ந்த வழக்கமே இல்லை" என்றார்.

"எனக்கு மாத்திரம் வழக்கமா—முந்தின நாள் செத்துப்போய்விட்டு மறுநாள் உங்களிடம் வந்து ஆக்ஷேபிப்பது?" என்று கேட்டேன்.

"கோபித்துக்கொள்ளாதேயுங்கள்" என்று அவர் சாந்தப்படுத்தினார். "இந்தச் செய்தி எங்களுக்கு எழுத்து மூலமாகக் கிடைத்திராது போனால் இதைப் பேபரில் போட்டிருக்கவே மாட்டோம். இந்தத் தவறுதலைத் திருத்தி நாளைக்கே பிரசுரம் செய்துவிடுகிறோம். மிகுந்த சந்தோஷத்துடன் செய்துவிடுகிறோம். ஆனால் எவனோ உங்களுடைய விரோதிதானே இம்மாதிரி எங்களுக்கு எழுதியனுப்பியிருக்க வேண்டும். அவனைக் கண்டுபிடித்துச் சிக்ஷை செய்ய வேண்டாமா?" என்று கேட்டார்.

"அவசியம் செய்ய வேண்டும். இங்கிருந்து நேராகப் போலீசு ஸ்டேஷனுக்குத்தான் போகப் போகிறேன்" என்றேன்.

“போலீஸில் விசாரிக்கப் போவதானால் எல்லாம் ஒழுங்காகச் செய்ய வேண்டும். இல்லாது போனால் ஏதாவது காரணத்தைச் சொல்லி உங்களுடைய கேசைத் தட்டிக் கழித்து விடுவார்கள். ஆகையால் அந்தப் பொய்க் கடிதத்தை என்னுடைய குமாஸ்தா மூலம் அனுப்புகிறேன். அவர் உங்களுடன் சென்று, அதை இன்ஸ்பெக்டர் கையில் தந்து, அது எங்களுக்குக் கிடைத்ததைப் பற்றி வாக்குமூலம் கொடுப்பார்” என்றார்.

“ரொம்ப வந்தனம். நானும் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன். என்னுடைய ‘சாமுண்டீசுவரி’ என்கிற கதையில்—”

“அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் சீக்கிரம் போகாத போனால், இன்ஸ்பெக்டர் அகப்பட மாட்டான்” என்று எங்களிருவரையும் மெல்ல வெளியே தள்ளினார்.

குமாஸ்தாவும் நானும் அடுத்து உள்ள போலீசு ஸ்டேஷனுக்குச் சென்றோம். நல்ல வேளையாக இன்ஸ்பெக்டர் அங்கே இருந்தார். “இவரை எனக்குத் தெரியும். இவருடைய பெயர் சந்திரமௌளீசுவர ஐயர். மௌளி என்று சொல்லுவார்கள். மிகவும் கெட்டிக்காரர்” என்று குமாஸ்தா என் காதோடு சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டரிடம், விஷயத்தையும் ஆபீசில் நடந்த சம்பாஷணையையும் எடுத்துரைத்தார்.

அவர் முடிப்பதற்குச் சற்று முந்தியே, இன்ஸ்பெக்டர் தம்முடைய கைக்குட்டையை எடுத்து வாயை மூடிக்கொண்டு, வெகு வேகமாய் அடுத்த அறைக்குச் சென்று அங்கே சற்று இருமிவிட்டு இரண்டு நிமிஷம் கழித்தே திரும்பி வந்தார். கவனிக்க வேண்டிய விஷயம் இவ்வளவு முக்கியமானதாக இல்லாத போனல், அவர் தம்முடைய சிரிப்பை அடக்குவதற்காகச் சென்ருர் என்றே எண்ணியிருப்பேன். ஆனல் அம்மாதிரியான சந்தேகத்தை அவருடைய வார்த்தைகள் நீக்கின.

"ஸார், இது ஒரு ஹாஸ்யம் என்று எண்ணி எவனுவது செய்திருந்தால், அவன் நெஞ்சில் ஈரமில்லாதவன். அதற்காகவே அவனைத் தண்டிக்கவேண்டும். அல்லது நீங்கள் அறியாமல் உங்களுக்கு ஒரு கொடிய விரோதி ஏற்பட்டிருக்கிருன்; உங்களுக்கு ஏதோ தீங்கு செய்யப் பார்க்கிருன். ஆகையால் இதை அவசியம் விசாரித்தே தீரவேண்டும். நீங்கள் சற்று இங்கே தங்கியிருங்கள். உங்களுக்கு வழக்கமாய் ஸப்ளை செய்யும் ஹோட்டலிலிருந்து முதலில் காப்பி தருவிக்கிறேன்" என்ருர்.

"எந்த ஹோட்டலில் சாப்பிடுகிறேன் என்பது கூட உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆச்சரியப்பட்டேன்.

"உங்களைப் போன்ற எழுத்தாள ச்ரேஷ்டரைக் குறித்து எல்லா விஷயமும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியது போலீசாருடைய கடமை

அல்லவா?" என்று சொல்லிவிட்டு, வராந்தாவுக்குச் சென்று இரண்டு மூன்று கான்ஸ்டேபிள்களிடம் ஏதோ சொல்லி வெளியே அனுப்பினர்.

சுமார் பத்து மணி இருக்கும்; ஒரு கான்ஸ்டேபிள் திரும்பி வந்து சலாம் செய்துவிட்டு, "இப்பொழுதுதான் 'மலய மாருத'த்தின் ஆபீசு திறந்தார்கள்" என்று சொல்லி ஏதோ ஒரு கடிதக் கட்டை அவரிடம் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர் அதன் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தார். பிறகு குமாஸ்தா கொடுத்த பொய்க் கடிதத்துடன் ஒத்து நோக்கினர். என்னிடம் வந்தார்.

"இது என்ன, சொல்லுங்கள்" என்ருர்.

"இது நான் 'மலய மாருத'த்திற்கு அனுப்பின 'கொச்சி மெயில் கொலை' என்கிற கதை" என்றேன்.

"கை எழுத்து யாருடையது?"

"முழுவதும் என்னுடையது."

"'சூரியோதய'த்திற்குக் கிடைத்த மரண ரிபோர்ட்டுக் கடிதத்தைச் சற்றுப் பாருங்கள்" என்று நீட்டினர்.

என்னுடைய ஆச்சரியத்தை என்ன சொல்லுவேன்! அதுவும் என்னுடைய கை எழுத்தாகவே இருந்தது. "இது ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

என்னைக் குறித்து நானே அவ்விதக் கடிதம் எழுதினேன் என்று சொல்லுகிறீர்களா?'' என்று கோபத்துடன் கேட்டேன்.

"நான் ஒன்றும் அப்படி நிச்சயமாய்த் தெரிந்தது போலச் சொல்லவில்லை. ஆனால் இதுமாத்திரம் சொல்லுவேன்: ஏதோ சுய லாபத்திற்காகவோ, பிறருக்குக் கெடுதலை உத்தேசித்தோ, மனிதர்கள் தங்களுடைய மரணம் நேர்ந்துவிட்டதாகத் தாங்களே பேபர்களுக்கு ரிபோர்ட்டு செய்ததற்குத் திருஷ்டாந்தங்களைப் புஸ்தகங்களில் படிக்கிறோம்.''

"ஆகையினாலே?''

"ஆகையினாலே, வேறொன்றும் இல்லை. இந்தச் சந்தேகத்தை நீக்கிவிடலாமென்று 'மலய மாருத' ஆபீசிலிருந்து உங்களுடைய கை எழுத்தை வெறுமனே மேல் அதிகாரிகளுக்குக் காண்பிப்பதற்காக வரவழைத்தேன். அது இப்படி இருப்பதும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது.''

"போதும்! எவனோ எனக்கு விரோதி செய்த காரியத்தை விசாரிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொண்டால், நான் ஒரு பைத்தியக்காரனென்று நிரூபிக்கப் பார்க்கிறீர்களா? நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று புறப்பட்டேன்.

"சற்றுப் பொறுங்கள்'' என்று அவர் தடுத்தார். "ஒருவேளை நீங்களே இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் அதனுடைய உள்வயணத்தை விசா

ரிக்க வேண்டியதும் என்னுடைய கடமை அல்லவா? ஆகையால் விசாரணை முடிகிற வரையில் நீங்க இங்கேதான் இருக்க வேண்டும்'' என்ருர்.

''என்னை அரெஸ்டா செய்கிறீர்கள்? அவ்வளவு துணிச்சலா? என்றைக்காவது ஒரு நாள் இதற்கெல்லாம் நீங்கள் உத்தரவாதம் செய்ய வேண்டியிருக்கும் என்று ஞாபகம் இருக்கிறதா?'' என்று சீறினேன்.

''என்னுடைய காரியங்களுக்கு நான் எப்பொழுதும் உத்தரவாதம். ஆனல் அரெஸ்ட் என்று பெரிய வார்த்தையை உபயோகிப்பானேன்? தற்காலம் என்னுடைய அதிதியாக நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். அவ்வளவுதானே?''

''என்னுடைய கதைகளில்—'' என்று ஆரம்பித்தேன்.

''ஆமாம்! ஆனல் அவைகளை இப்பொழுது சொல்லாதேயுங்கள். நான் சீக்கிரம் போய் ஹோட்டல்காரனை உங்களுக்கு ஆகாரம் அனுப்பச் சொல்ல வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே வெளியே போய் விட்டார்.

'சிவனே!' என்று அங்கே இருந்தேன். மத்தியான்

னம் சுமார் ஒரு மணிக்கு, என்னுடைய வீட்டுக்குத் தபால் கொடுக்கும் தபால்காரனுடன் அவர் திரும்பி வந்தார். எனக்கு ஒரு ரெஜிஸ்டர் பார்சல் வந்திருந்தது. ரசீதில் ஒப்பமிட்டேன்.

அவர் பார்சலைப் பிரித்தார். அதற்குள் ஒரு கடிதமும், ஒரு சம்புடத்தில் பாதம் ஹல்வாவும் இருந்தன. எவரோ ஒருவர், என்னுடைய 'கொச்சி மெயில் கொலை'க் கதையைப் படித்துவிட்டு, அளவிலா ஆனந்த மடைந்தவர், தம்முடைய நன்றியைத் தெரிவித்து எனக்கும் சிறிதாவது ஆனந்தமுண்டாகும் பொருட்டு ஹல்வாவை அனுப்பியதாகக் கடிதத்தில் கண்டிருந்ததையும் என்னவோ ஒரு ஜடாவல்லபர் என்று கையொப்பம் இட்டிருந்ததையும் அவர் படித்தார்.

"இங்கே கொடுங்கள் ஹல்வாவை" என்று கை நீட்டினேன்.

"அதற்கு முன் இந்த வேடிக்கையைப் பாருங்கள். இந்தக் கடிதமும் இந்தப் பார்சலின் மேல் விலாசமுங்கூட உங்களுடைய கை எழுத்தில் இருக்கின்றன. கவனித்துப் பாருங்கள்" என்றார்.

அவர் சொன்னது சரியாகத்தான் இருந்தது. வாஸ்தவத்தைச் சொல்லுகிறேன், எனக்குத் தலை சுழல ஆரம்பித்தது. ஒரு நாளைக்குள் எத்தனை விபத்தையும் ஆச்சரியத்தையும் ஒரு மனிதனால் தாங்க முடியும்? அன்று பொழுது விடிந்து நான் திடுக்கிட்டது இது மூன்றும் தடவை.

"என்னுடைய கதை 'மாஹேந்திரன்' என்பதில்—" என்று ஆரம்பித்தேன்.

"அதை இப்பொழுது சொல்லிவிடாதேயுங்கள். அக் கதையை நான் என்றைக்காவது ஒரு நாள் உட்கார்ந்து படித்து முடிப்பதாகத் தீர்மானித்திருக்கிறேன். இப்பொழுதே எதையாவது நீங்கள் சொல்லிவிட்டால் எனக்கு ஸ்வாரஸ்யம் போய் விடும்" என்று சொல்லிப் பேச்சுப் பராக்கில் ஹல்வாவையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

இந்த அழகுக்கு நான் அவருடைய அதிதியாம்! அதிதி! என்னை ஒரு வார்த்தை பேச விடுவதில்லை. எனக்கு வந்த ஹல்வாவும் அவரைச் சேர்ந்தது. நல்ல அதிதி பூஜை!

இதெல்லாம் நடந்தது முந்தாநாள் சனிக்கிழமையன்று. இன்று காலைவரை போலீசு ஸ்டேஷனிலேயே இருந்தேன். ஆறு மணிக்கு என்னைத் தட்டி எழுப்பி, இன்ஸ்பெக்டர் தம்முடைய மோட்டார் சைகிளில் ஏற்றி என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டார். வழியில் ஒன்றும் பேச முடியவில்லை.

வீடு வந்து சேர்ந்தவுடன், "நானும் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன்" என்று ஆரம்பித்தேன்.

"நானும் அவைகளைப் பற்றித்தான் பேசப் போகிறேன். முக்கியமாய், 'கொச்சி மெயில் கொலை'யைப் பற்றி" என்றார்.

“பேசுங்கள்.”

“அதில் உங்களுடைய தூக்குப்புளி துமாள ராவ் என்ன செய்திருக்கிறார், தெரியுமோ?”

“அவருடைய பெயர் துப்புப் புலி துமாளராவ்” என்று திருத்தினேன்.

“எனக்கு என்னவோ, நான் சொன்ன பெயர் தான் அழகாயும் பொருத்தமாயும் தோன்றுகிறது. அப்புறம் உங்கள் இஷ்டம். அவர் இந்தத் தடவை குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த மாதிரி குற்ற வாளியைக் கண்டுபிடித்துவிட்டார்.”

“மன்னிக்க வேண்டும். இது ஒன்றும் அவருக் குப் புதிதல்ல. என்னுடைய துப்பறியும் கதை ஒவ் வொன்றிலும் அவர் வருவார். ஒவ்வொன்றிலும் குற்றவாளியைத் தவறாமல் கண்டுபிடிப்பார். என் னுடைய ‘வீணுலகம்’ என்கிற கதையில்—”

“ஆமாமாம். ஆனால் ஒவ்வொரு கதையையும் இது மாதிரி நீங்கள் வாஸ்தவ சம்பவங்களை அஸ்தி வாரமாக வைத்துக்கொண்டு எழுதவில்லையே?”

“இல்லை. என்னுடைய—”

“ஒவ்வொரு கதைக்குப் பின்னலேயும் ஒரு நிஜக் குற்றவாளி ஒளிந்துகொண்டு தன்னைக் கண்டுபிடிக்கிறவர் பேரில் பாய்வதற்குத் தயாராக இல்லையே?”

"இல்லை. ஆனால் நான் எழுதிய—"

"இந்தத் தடவை, உங்களுடைய போதாத காலம், உங்களுடைய புலி கொண்ட ஒவ்வோர் ஊகமும் சரி, எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் சரி, செய்த ஒவ்வொரு விசாரணையும் சரி. உள் விவரம் தெரிந்தவர்களுக்கு, பங்களூர் மெயிலில் கொலை செய்தவனுடைய பெயரும் விலாசமும் புஸ்தகத்தின் கவரின் மேல் பெரிய எழுத்தில் அச்சிட்ட மாதிரியே இருக்கிறது."

"அப்படியானால் அவன் யார் என்று உங்களுக்கு ஏற்கனவே தெரியும் போலிருக்கிறதே?"

"நன்றாகத் தெரியும். நாங்களும் தூங்கவில்லை. ஆனால் உங்களுடைய வேங்கை மாதிரி ஒரு புஸ்தகத்தின் ஏடுகளுக்குள்ளே மாத்திரம் சஞ்சாரம் செய்தால் எங்களுக்குக் காரியம் கூடிவிடுகிறதா? மூட்டையைக் கட்டிக்கொண்டு ஆயிரம் மைல் போய், பம்பாயிலும் குஜராத்திலும், கொல்லப்பட்ட சேட்டின் சிநேகிதர்களையும் விரோதிகளையும் டஜன் கணக்காய் விசாரித்த பிறகே, குற்றவாளி யார் என்று வேண்டிய அத்தாட்சியுடன் நிர்ணயிக்க முடிந்தது. இதற்கு நாலு மாதம் பிடித்துவிட்டது."

"சரி, தெரிந்தவுடனே அவனை அரஸ்டு செய்வதற்கென்ன?"

"அவன் இப்போது ஒரு மாதமாய், பலத்த ரோகத்துடன் படுத்த படுக்கையாய்க் கிடந்தான். பிழைப்பது அரிது என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். ஆகையால் என்ன செய்வது என்று மேல் அதிகாரிகள் ஆலோசித்துக்கொண்டு இருக்கையிலே உங்களுடைய கதை வெள்ளிக்கிழமை காலை 'மலய மாருத'த்தில் வெளிவந்து எல்லாவற்றையும் கோளாறுக்கிவிட்டது."

"அது எப்படி? என்ன கோளாறு?"

"முதலில் அந்தக் கொலை செய்தவன் என்ன நினைப்பான், சொல்லுங்கள். 'இந்தப் போலீசுக் காரர்கள் ஒன்றும் தெரியாமல் இருட்டில் தடமாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில், இவர் யார், வேங்கடரமண ஐயராம், அவர்களுக்குத் தீவட்டி பிடித்து வழி காட்டுகிறார்! முதலில் இவரைத் தீர்த்துவிட வேண்டும்' என்றுதானே?"

"ஓ! கதை எழுதுவதில் இப்படி ஓர் ஆபத்தா! இப்பொழுது தெரிகிறது, நீங்கள் சொன்ன பிறகு. அதற்காக?"

"அதற்காகத்தான் உங்களுடைய மரணம் தானுகவே நேர்ந்து விட்டதாகச் 'சூரியோதய'க் காரரைப் பிரசுரம் செய்யச் சொன்னேன்."

"அதற்கு நான் சும்மா இருப்பேனு?"

"சும்மா இருப்பீர்கள் என்று கனவிலும் எண்ணவில்லை. நீங்கள் அவரிடம் வருவீர்கள், வந்தவுடனே உங்களை என்னிடம் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்றும், அதுவரை இன்னார் இன்னார் இன்ன இன்ன சொல்லுவது என்றும் ஒவ்வொருவருக்கும் சிக்ஷை செய்திருந்தேன்: பத்திராதிபருக்கு, குமாஸ்தாவுக்கு, காவல்காரனுக்குக் கூடத்தான். என்ன தொழில், போங்கள்!"

"தொழில் பிடிக்காத போனல் ராஜீநாமாச் செய்துவிடுகிறதுதானே?"

"இதற்குள்ளே பாருங்கள்! அவன் வெள்ளிக்கிழமை மத்தியானமே உங்களுக்காக ஹல்வாவைத் தபாலில் சேர்த்து விட்டான். சனிக்கிழமை கிடைத்தது. அதையும் எதிர்பார்த்துக்கொண்டு தான் இருந்தேன்."

"அப்படியா? நீங்கள் எதிர்பார்த்ததன் பலன், ஹல்வா எனக்குக் கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை."

"வாய்க்கு எட்டியிருந்தால் தெரியும், பங்களூர் மெயில் கொலைக்கு உபகதையாகச் சகாராம் தெருக் கொலை நடந்திருக்கும். ஆனல் 'மலய மாருத'த்தின் சந்தாதார்கள் படிக்கும்படி ஸ்வாரஸ்யமாய் அதை எழுதுவதற்கு நீங்கள் இருக்க மாட்டீர்களே என்கிற குறைதான்."

எனக்கு உடம்பு சிலிர்த்தது. "ஹல்வாவில் விஷம் கலந்திருந்தது என்று சொல்லுகிறீர்கள்?"

"அதைப் பரீக்ஷை செய்து சர்க்கார் கெமிஸ்ட்டு கொடுத்த ரிபோர்ட்டைக் காண்பிக்கிறேன். நிர்ப்பந்தித்தால் ஹல்வாவிலே கொஞ்சம் கொடுக்கிறேன்."

"நீங்களே சாப்பிடுங்கள்; இதிலே ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. 'சூரியோதய'க்காரருக்கு என்னைக் குறித்து யார் எழுதினர்?"

"நான்தான். பேபரில் போடுவதற்கு அவர் கொஞ்சத்தில் சம்மதித்தாரா? எழுத்து மூலமாய்க் கொடுத்தால்தான் போடுவேன் என்றார். எவ்வளவு கஷ்டப்பட்டேனென்று எண்ணுகிறீர்கள்?"

"அதில் என் கை எழுத்தை 'போர்ஜ்' செய்வானேன்?"

"முந்தா நாள் தினம் நான் செய்த மாதிரி செய்வதற்காகத்தான். 'இதனால் உங்கள் பேரிலேயே சந்தேகம் ஏற்படுகிறது. விசாரித்து முடிகிற வரையில் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருக்க வேண்டும் என்று சொல்லி, உங்களுடைய பாது காப்புக்காக உங்களை எங்கள் கண் பார்வையில் வைத்திருப்பதற்காகத்தான்."

"உங்களுக்குச் சாமர்த்தியமாய் 'போர்ஜ்' செய்யக் கூடத் தெரியும் போல இருக்கிறதே?"

"வீண் ஸ்தோத்திரம் செய்யாதேயுங்கள்! எனக்கு அவ்வளவு தெரியாது. ஆனால் பல தடவை ஜெயிலுக்குப் போய் வந்து இப்பொழுது தொழிலிலிருந்து 'ரிடையர்' ஆகியிருக்கிற ஒரு போர்ஜரி பண்டிதனை எனக்குத் தெரியும். அவனுக்குத் தாண்டவராயன் என்று செல்லப் பெயர். அவனைக் கொண்டு எழுதச் சொன்னேன். மாதிரிக் கையெழுத்து 'மலய மாருத' ஆபீசில் கட்டு கட்டாய்க் கிடைத்தது — ஞாபகம் இருக்கும் பொழுதே சொல்லி விடுகிறேன் — தாண்டவராயனுக்குப் பத்து ரூபாய் கூலி கொடுத்தேன். உங்களுக்குச் சௌகரியப்பட்ட பொழுது அதை எனக்குத் திருப்பிக் கொடுத்தால் போதும்."

"இது வேறயா! நீங்கள் கண்டுபிடிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் பொழுது நான் சாமர்த்தியமாய்த் துப்பறிந்து கதை எழுதினதற்கு லாபம், இரண்டு நாள் போலீசு லாக்காப்பில் இருந்தது போதாது என்று பத்து ரூபாய் அபராதம் வேறயா? ஹல்வா பார்சலில் வைத்திருந்த கடிதத்திற்காக எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும்?"

"அது எனனமாய் என்னுடைய கை வரிசையாய் இருக்க முடியும்? அதெல்லாம் உங்களையும் கொலை செய்ய எத்தனித்த தனவானுடைய செலவு. அவனுக்கும் தாண்டவராயனைத் தெரியுமாம். சந்

தேகம் தன்மேல் திரும்பாமல் இருக்கும் பொருட்டுத் தாண்டவராயனை விட்டு எழுதச் சொல்லியிருக்கிருன்.''

"மாதிரிக்குக் கையெழுத்து ஏது?"

"நீங்கள் அந்தத் தனவானுடைய அறுபதாம் வயதுத் திருவிழாவுக்காக ஒரு வாழ்த்துக் கடிதம் எழுதியிருந்தீர்களாம். அது இப்பொழுது உபயோகப்பட்டது.''

"சரி. இனி என் ஆயுசு உள்ளவரையில் ஒருவருக்கும் வாழ்த்துக் கடிதம் எழுதப் போவதில்லை. அவரை வாழ்த்தினுல் என்னுடைய ஆயுசுக்கு அல்லவா மோசமாக இருக்கிறது!''

"நல்ல தீர்மானம்!''

"இருக்கட்டும். இன்னிக்கு ஏன் என்னை வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டீர்கள்? ஹல்வாவுக்குப் பிறகு துப்பாக்கி கிளம்பினுல்?''

"இனிப் பயமில்லை. நேற்று ராத்திரி அந்தக் கொலைகாரன், வியாதி முற்றிப் போய் இறந்துவிட்டான். அதனுல்தான் தாண்டவராயனும் தன்னுடைய பங்கை ஒப்புக்கொண்டுவிட்டான்."

"அடேயப்பா! நானும் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன்—''

"அதெல்லாம் அப்படியே இருக்கட்டும். அதொன்றையும் கிளப்பவேண்டாம். இப்பொழுது நடந்ததை ஒரு கதையாக எழுதுங்கள். வந்தது வரட்டுமென்று நானும் அதை எப்படியாவது வாசித்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

'வந்தது வரட்டு'மாவது! என் கதையை வாசிப்பது ஒருமனிதனுக்கு அவ்வளவு அபாயமா? 'டபார்!' என்று வெடித்தா போவான்? இது சுத்த அதிகப் பிரசங்கித்தனம்! இருந்தாலும் அவர் சொன்னபடி, ஒரு 'ப்ளாட்'டைத் தேடாமல் தயாராக இருக்கும் வாஸ்தவத்தையே ஒரு கதையாய் எழுதினல் அதற்காகக் கிடைக்கும் பணத்திலிருந்து அவருக்குப் பத்து ரூபாயைக் கொடுத்துத் தொலைத்துவிட்டு மீதத்திற்கு ஹல்வா வாங்கிக் கவலையற்றுச் சாப்பிடலாம் அல்லவா? அப்படியே செய்கிறேன். அவருக்கு ஹல்வாவில் பங்கு கிடையாது. சுத்த அதிகப் பிரசங்கி!

# 6

## வனமாலா

டிராம் வண்டியில் போய்க்கொண் டிருந்தேன். என்னுடைய பக்கத்தில் உட்கார்ந்திருந்தவன் தன்னுடைய முழங்கையால் அவனுக்குப் பக்கத்தில் இருப்பவனை மெள்ள இடித்து, "அதோ பார், அந்த மூலையில் இருக்கிறரே, வெற்றிலையை மென்றுகொண்டு, அந்தக் கிழவர் எவ்வளவு அதிருஷ்டசாலி, தெரியுமா? அவர்தான் ஒரு பெயர் பெற்ற ஸ்திரீக்கு இங்கிலீஷில் மேற்படிப்புச் சொல்லிக் கொடுக்கிறராம். அதனல் அவளுடன் தினம் ஒரு மணிநேரம் பேசுகிற பாக்கியம் இந்தக் கட்டுப் பெட்டிக்குக் கிடைத்திருக்கிறது" என்றான்.

"அந்த ஸ்திரீ யார்?"

"வனமாலா."

"சினிமா நக்ஷத்திரம் வனமாலாவா?"

"வேறே யாராக இருந்தால் இதை ஒரு விஷயமாக உன்னிடம் சொல்லப் போகிறேன்? அது இருக்கட்டும். எதற்காக ஹாலிவுட் பாஷையில் நக்ஷத்திரம் என்று சொல்லவேண்டுமாம்? உனக்

குக் காது இல்லையா? அவள் பாடுகிறதைக் கேட்டால், கந்தர்வ ஸ்திரீ என்று சொல்லலாம் என்று உனக்குத் தோன்றவில்லையா?"

"அப்படிப் பார்க்கப் போனால், உனக்குக் கண் இல்லையா? அவளுடைய உருவத்தையும் நடனத்தையும் பார்த்தால் ஏன் அப்ஸரஸ்திரீ என்று சொல்லக் கூடாதாம்?"

இதற்குள் வண்டி நிற்கவே, அவர்கள் இருவரும் இறங்கிச் சிரித்துப் பேசிக்கொண்டு போனார்கள். நானும் இறங்கி வீடு சென்றேன். வழி முழுவதும் இந்தச் சம்பாஷணையே என் மனத்தில் வேலை செய்துகொண்டிருந்தது. வீட்டை அடைவதற்குள் ஒரு விதமாக என் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டேன். வனமாலாவுடன் எனக்குப் பரிசயம் இல்லாது போனாலும், இவ்விதம் அவளுக்கு ஒரு கடிதம் எழுதத் துணிந்தேன்:

ஸ்ரீமதி வனமாலா அவர்களுக்கு, கோனஷ்டை உபயகுசலோபரி, வெகு ஆவலுடன் எழுதியது. உங்களுக்கு இங்கிலீஷில் மேற்படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக ஓர் ஆசான் தேவை என்று அறியலானேன். அது வாஸ்தவமானால் என்னையே டியூடராக நியமிக்கும்படி கோருகிறேன்.

இங்கிலீஷில் ஆகட்டும், இதரக் கல்விகளில் ஆகட்டும், எனக்கு உள்ள பாண்டித்தியத்தைக்

குறித்து அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் எனக்கு வலுவில் கிடைத்திருக்கின்றன. அவற்றிலிருந்து நானுகப் பொறுக்காமல், கண்களே மூடிக்கொண்டு தொட்டெடுத்துச் சிலவற்றை மட்டும் இதனடியில் சேர்த்திருக்கிறேன். இவற்றை நீங்கள் படித்தவுடனே என்னேயே திட்டம் செய்வீர்களென்று எனக்குப் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. அநுகூலமான பதிலே மறு தபாலில் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன். அவ்விதம் கிடைக்காவிட்டால், இன்னும் சில சர்ட்டிபிகேட்டுகளே நான் அனுப்பவும், நீங்கள் படிக்கவும் அவசியம் நேரிடும்.

இப்படிக்கு
கோனஷ்டை.

அடக்கம், நற்சாட்சிப் பத்திரங்கள்.

(1) ஓ! கொனஷ்டை மாமாவுக்கு நன்ருய் இங்கிலீஷ் தெரியுமே! லலிதா அம்மாமியோடு, தாட்டு பூட்டுன்னு பேசுவாரே! (ஒப்பம்) விநோதினி, பரிமள ரங்கன் (அடுத்த வீட்டுக் குழந்தைகள்.)

(2) மலயமாருதம் ஆபீஸ—:—கொனஷ்டைக்கு இங்கிலீஷ் நன்ருய்த் தெரியும். எங்களுக்கு அவர் சில தமிழ்க் கதைகளே அனுப்பியிருக்கிருர். அவைகளிலிருந்து அவருக்கு என்னவோ, தமிழ் சுத்தமாய்த் தெரியாது என்பது பிரத்தியக்ஷமாக இருக்கிறது. ஆகையால் வேறே ஒரு பாஷையாவது நன்ருய்த் தெரியாமற் போனல் அவர் இத்தனே

நாளாக எப்படி வயிறு வளர்த்திருக்கக்கூடும்? அதுவும் இந்தக் காலத்திலே! ஆகையால் அவருக்கு இங்கிலீஷ் தெரிந்துதான் இருக்கவேண்டும். (ஒப்பம்) மார்க்கண்டேயர், மலய மாருதப் பத்திராசிரியர்.

(3) திருப்பல்லாணி: கொனஷ்டையை எனக்கு நேரில் தெரியாது. ஆனால் அவருடைய ஜாதகத்தைப் பார்வையிட்டிருக்கிறேன். அவருக்கு வாக்கு ஸ்தானத்தில் அசுர குருவாகிய சுக்கிரன் இருக்கிறபடியால், நீசபாஷையாகிய இங்கிலீஷைப் படிப்புச் சொல்லிக்கொடுக்கக் கூடியவர் என்றே தோன்றுகிறது.

அதற்கு மேலாக உறுதியாய்க் கேட்டால் அது அவரிடம் படிப்புச் சொல்லிக் கொள்ளுகிறவர்களுடைய அதிருஷ்டத்தைப் பொருந்தி இருக்கிறது. வேண்டுமானால் அவர்களுடைய ஜாதகத்தைப் பார்க்கிறேன். ஜாதகம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றே. நாலு கேள்விகளுக்கு உத்தரம் அளிக்க, அணு 6. தபால் சார்ஜ் பிரத்தியேகம். (ஒப்பம்) பராசரஜோஸியர், சுக்ரீவோபாஸனை, ஜ்யோதிர் நிலயம், திருப்பல்லாணி.

(4) என் சிநேகிதன் கொனஷ்டையைப் பார்க்கும் பொழுதெல்லாம், 'நீறு பூத்த நெருப்பு' என்று சொல்லுவார்களே, அந்த வசனம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. வெளிக்குப் பார்த்தால்

சாம்பல்மாதிரி இருப்பான். ஆனால் அவனிடத்தில் வஞ்சனை இல்லை. உள்ளேயும் அதே சாம்பல் தான். (ஒப்பம்) பலராமன்.

(5) உங்களுடைய சாமர்த்தியத்தைக் குறித்து என் கைப்பட ஒரு நற்சாட்சிப் பத்திரம் இப்பொழுதே வேணுமா? நிஜமாகவா? அப்படியானால் வாஸ்தவத்தை எழுதிவிடுவேன்! எழுதட்டுமா? (ஒப்பம்) லலிதா.

வனமாலா சென்னையிலேயே நுங்கம்பாக்கத்தில் வசிப்பதாக அறிந்தேன். அவளுடைய விலாசத்தை டெலிபோன் புஸ்தகத்திலிருந்து கண்டுபிடித்து இந்தக் கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டுப் பொறுமையுடன் காத்திருந்தேன். மூன்றாம் நாள் பதில் கிடைத்தது.

"உங்களுடைய கடிதம் அதிகப்பிரசங்கித்தனமா, சாமர்த்தியமா என்று எனக்கு இன்னும் நிச்சயம் ஏற்படவில்லை. அதைத் தீர்மானிப்பதற்காகவே, உங்களைப் பார்க்கச் சம்மதிக்கிறேன். அடுத்த சனிக்கிழமை சாயங்காலம் ஐந்து மணிக்கு உங்களைக் காண்பதற்கு எனக்குச் செளகரியப்படும்" என்று கண்டிருந்தது.

இதைப் பெருமையுடன் பலராமனிடம் காண்பித்தேன். "நானும் வருகிறேன்" என்றான். "சரி" என்றேன். நாங்கள் இருவரும் குறிப்பிட்ட

மணிக்கு வனமாலாவின் வீட்டை அடைந்தோம். அவளுடைய தாய் எங்களை வரவேற்று, ஹாலில் உட்காரச் செய்துவிட்டு, உள்ளே போய் விட்டாள்.

ஐந்து நிமிஷம் சென்றன. பத்து நிமிஷம் சென்றன. கால் மணி கழிந்தது. வனமாலாவின் நிழலைக்கூடக் காணவில்லை. "நீ வந்தால் ஒரு காரியமும் கைகூடாதா?" என்று பலராமனைக் கேட்டேன். "உன் ஜாதகத்தை மறுபடியும் பராசர ஜோஸியருக்கு அனுப்பிக் கேளு" என்று அவன் யுக்தி சொன்னான்.

ஐந்தரை மணி அடித்தது. "நாம் பேசாமல் புறப்பட்டுப் போய்விடலாம்" என்றேன்.

"அதுதான் சரி" என்றான் பலராமன்.

"ஆனால்,நாம் திருடர்கள் மாதிரி இப்படி நழுவி விட்டால், பிற்பாடு வீட்டிலிருந்து ஏதாவது சாமான் காணமற் போனால் நம்முடைய பேரில்தானே சந்தேகம் விழும்?"

"'நம்முடைய பேரில்' என்று எதற்காக இரட்டைப்படியாகப் பேசுகிறாய்? நீதான் இவளுக்கு எழுதியது. உன்மேல்தான் சந்தேகம் ஏற்படும். உன் விலாசம் இவளுக்குத் தெரியும். உன் வீட்டில் தான் சோதனை போடுவார்கள். எனக்கு ஒரு பயமும் இல்லை. ஆகையால் மேஜை மேல்

இருக்கிறதே இவளுடைய படம். இதை நான் எடுத்துக்கொண்டு போகப் போகிறேன்'' என்று பலராமன் வெட்கமில்லாமல் கையை நீட்டினன்.

"அட! சும்மா இரு! இதை உன் வீட்டுக்குக் கொண்டுபோனல் சந்திரமதி என்ன நினைப்பாள்? என்னிடம் கொடு, நான் கொண்டுபோகிறேன்.''

"உனக்கு மாத்திரம் பரவாயில்லையோ? லலிதா என்ன சொல்லுவாள்?''

அவன் எடுத்துக் காட்டினது சரிதான். சந்திரமதி என்ன நினைப்பாள், லலிதா என்ன சொல்லுவாள்; இரண்டைக் குறித்தும் ஆலோசிக்க வேண்டியதுதான். முடிவில் படத்தை யோக்கியமாய் மேஜை மேலேயே வைத்துவிட்டோம்.

மணி ஐந்தே முக்கால் ஆயிற்று. கடைசியாய், ஐந்து நாற்பத்தேழுக்கு, ஒரு செக்கண்டுகூடப் பிசகாமல் வனமாலா உள்ளே நுழைந்தாள். டிராம் வண்டிப் பிரயாணிகள் இருவர் சொன்னதும் சரிதான் என்று தோன்றிற்று.

''உங்களை அதிக நேரம் காத்திருக்கச் செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்ருள்.

''சாதாரண மனிதர்கள் மாதிரி நீங்களும் மன்னிப்புக் கேட்டுப் போதாது. ஏனென்ருல் உங்களையொத்தவர்களுக்காகக் காப்பதானல் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம் மாதிரி அல்லவா தோன்றுகிறது?'' என்றேன்.

இதற்குள் பலராமன் தன்னுடைய சாதுர்யத்தைக் காண்பிக்கத் தொடங்கினான். "நாங்கள் காத்துத் தவித்தது என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் எல்லாம் உங்களைக் கண்டவுடன் பறந்து போய்விட்டது என்றான். அவள் முறுவலித்தாள்."

நான் பலராமனைக் கடிந்து நோக்கினேன். என்னோடு போட்டியாய்ப் பேசுவதற்கா அவனை அழைத்து வந்தேன்? "அவன் சும்மா சொல்லுகிறான். நாங்கள் ஒன்றும் தவிக்கவில்லை. நாங்களே இப்பொழுதுதான் வந்தோம். நீங்கள் வருவதற்கு இரண்டு விநாடி முன்புதான் வந்தோம். நாற்காலியில் இன்னும் உட்காரக்கூட இல்லை, பாருங்கள்" என்றேன்.

"அப்படியா! நீங்கள் ஐந்து மணிக்கு வந்ததாக எங்கம்மா என்னிடம் சொன்னாளே?"

"அப்படிச் சொன்னாளா என்ன? இந்த நாளைத் தாயார்களுக்கே என்ன சொல்லலாம், என்ன சொல்லக் கூடாது என்று தெரிகிறதில்லை. குழந்தைகள் தாயார்களைச் சரியாய் வளர்க்காத குற்றம்" என்றேன். இதைக் கேட்டுக்கொண்டே அவளுடைய தாய் யசோதா அம்மாள் உள்ளே நுழைந்தபடியால், "இந்தப் பேச்சை மாற்றுவதற்கு இது சரியான சமயம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று நான் விளம்பினேன். அவர்கள் சிரித்தார்கள்.

"உங்கள் இருவர்க்குள் எவர் கொனஷ்டை என்று ஊகிக்க முடிகிறது. மற்றவர் யாரோ, தெரியவில்லையே?" என்று யசோதா கேட்டாள்.

நான் பலராமனை 'இன்ட்ரொடியூஸ்' செய்தேன். அவனுடைய பெயரைக் கேட்டவுடன், "கொனஷ்டைக்கு அந்த ஸர்ட்டிபிகேட்டு கொடுத்தவரா? உங்களைப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் ஆவல் பட்டோம். வந்தது வெகு சந்தோஷம்" என்றாள்.

வேலைக்காரன் தின்பண்டங்களைக் கொண்டு வந்தான். யசோதா அம்மாளுக்குச் சங்கீத ஞானமும் உயர்ந்த அநுபவத்தால் மட்டும் கிடைக்கக் கூடிய பேச்சுச் சாமர்த்தியமும் ஏராளமாக உண்டு. மேஜையைச் சுற்றி உட்கார்ந்து, நாலு பேர் மத்தியில் சம்பாஷணை பொதுப்படையாக நடக்கையில், காலம் வெகு விரைவாகக் கழிந்தது. எழுந்து விடைபெற வேண்டிய சமயம் நெருங்கியது.

"எனக்கு இங்கிலீஷ் வாத்தியார் தேவை என்று உங்களுக்கு யார் சொன்னது?" என்று வனமாலா கேட்டாள். டிராம் வண்டியில் என் காதில் பட்ட சம்பாஷணையை விவரித்தேன்.

"ஆமாம், அந்தக் கிழவரைத்தான் திட்டம் செய்தாகிவிட்டது என்று உங்களுக்குத் தெரிந்து விட்டதே. அதற்கு மேல் எனக்கு அப்ளிகேஷன் அனுப்புவானேன்?" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது? வம்புக்காக எழுதினேன் என்று ஒப்புக்கொள்வதா? தவிர இந்தத் தத்துவத்தை இதற்குள்ளே அவள் உணர்ந்திருக்க மாட்டாளா? ஆகையால் அவள் எதிர்பார்க்கிற பதிலையும் மன்னிப்புக் கோரிக்கையையும் சொல்லவாவது என்று எண்ணி, அதற்குப் பதிலாக நாக்கில் முதலில் வந்ததைச் சொல்லிவைத்தேன்.

"உங்களுக்குத்தான் ஏற்கனவே இங்கிலீஷ் தெரிந்திருக்கையில் இனிமேலும் அதைப் படிப்பதென்றால் என்ன அர்த்தம்? ஒருவேளை ஆங்கிலப் படங்களில் நடிப்பதாக உங்களுக்கு உத்தேசம் இருக்கலாம் என்று ஊகித்தேன். அப்படி இருந்தால் அதற்கு வேண்டிய இங்கிலீஷும் பொதுக் கல்வியும் புகட்டுவதற்கு அந்தக் 'கட்டுப் பெட்டி'க்குத் தெரியுமா? இதற்கெல்லாம் என்னைப்போல் ஓர் ஆனர்ஸ் பீ. ஏ., அல்லவா வேண்டியது—?"

"என்னுடைய மனோரதத்தை எப்படியோ கண்டு பிடித்து விட்டீர்களே!" என்று பிரமித்தாள். அது வாஸ்தவமோ, நடிக்கும் சக்தியோ, அவளுடைய விஷயத்தில் சொல்ல முடியாது. பிரமித்த மாதிரியே இருந்தது. அதற்குமேலே சொன்னாள்: "காரியந்தான் உங்களுக்குத் தெரிந்து விட்டது. இது சம்பந்தமாக உங்களுடைய புத்தி

மதியை ஏன் கேட்டுக் கொள்ளக் கூடாது என்று யோசிக்கிறேன்."

"அடேயப்பா! எனக்கு அவ்வளவு கௌரதை கிடைக்கப் போகிறதா! ஆகவேண்டியது என்ன? சொல்லுங்கள்."

"இங்கிலீஷில் படம் தயார் செய்கிறவர்களுக்கு எழுதலாமா என்று உத்தேசிக்கிறேன். ஆனால் என்னைப்பற்றி நானே என்னமாய்ப் புகழ்ந்து எழுதுகிறது?"

"இதுதானா கஷ்டம்! உங்களைக் குறித்துப் பல பத்திரிகைகளில் எத்தனையோ குறிப்புகளும் பிரசுரங்களும் வந்திருக்குமே, அவைகளை அனுப்பினால் போதுமே?"

"அந்த யோசனை எனக்கும் தோன்றிற்று. ஆனால் அத்தனையுமா அனுப்புகிறது? அவைகளுக்குள் எவை 'முதல் கிளாஸோ', எவற்றை ஓர் இங்கிலீஷ் 'ப்ரொடியூசர்' ரஸிப்பானோ அவற்றை மாத்திரம் உங்களைப் போல் விஷயம் தெரிந்தவர் ஒருவர் பார்த்துப் பொறுக்கிக் கொடுத்தால் உபகாரமாக இருக்கும். இதுவரைக்கும் வெளிவந்த குறிப்புக்கள் எல்லாவற்றையும் கத்தரித்து ஒரு நோட்டு புக்கில் ஒட்டி வைத்திருக்கிறேன்—."

"இதுதானா பிரமாதம்! அந்த நோட்டுபுக்கு எங்கே?"

"அதோ அந்த மேஜையின் மேல் இருக்கிறதே, அதுதான்" என்று காட்டினாள்.

"அதுவா?" என்று மலைத்தேன். அகலமும் நீளமுமாய் அது ஒரு பிடி உயரம் இருந்தது.

"ஆமாம். உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுக்கிறேன்" என்று சொல்லி, 'குந்தல விருஷ்யர்' படத்தில் அந்த என்னவோ ஒரு பெயருள்ள ரிஷியை மயக்குகிற கட்டத்தில், எத்தனையோ ஆயிரம் ஜனங்கள் கண்டு களிக்கும்படி இவள் உபயோகித்த பார்வையையும் குரலையும், தற்சமயம் என்னுடைய தனிப்பிரயோசனத்திற்காக உபயோகித்தாள்.

அதற்கு மேல் கேட்பானேன்! "சிரமமாவது கிரமமாவது! ஒரு சிரமமும் இல்லை" என்று சொல்லிவிட்டு, கஷ்டத்துடன் அந்தப் புஸ்தகத்தை வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போனேன்.

இரவு போஜனம் செய்தவுடன் குறிப்புக்களைப் படிக்க உட்கார்ந்தேன். ஐந்தாறைப் புரட்டிப் பார்த்துவிட்டு, லலிதா தூங்கப்போய்விட்டாள். சரியாகப் பன்னிரண்டு மணி அடித்தது, கடைசிப் பக்கத்திற்கு நான் வந்து சேர்ந்தபொழுது. இது வரை முதல் தரமாக ஆறு குறிப்புக்களே கிடைத்திருந்தன. அந்தப் பக்கத்தின் அடியில் நாலு விரல் அகலமுள்ள இடத்தின்மேல் ஒரு துண்டுக் கடிதத்தைத் தவறிப்போய், எழுத்துக்கள் உள்பக்கம் அகப்பட்டுக்கொண்ட விதத்தில், அதாவது கவிழ்த்து ஒட்டியிருப்பதைக் கண்டேன். இவ்வளவு

வேலை செய்த பிறகு இந்த அல்பத்தைப் பாக்கியில் வைப்பானேன் என்று எண்ணி, ஜாக்கிரதையாக ஜலத்தைச் சொட்டவிட்டு, ஊற வைத்து அந்தத் துண்டுக் கடிதத்தைப் பிரித்து எடுத்துப் படித்தேன். அதில் இவ்விதம் எழுதியிருந்தது:

“உங்களுடைய ஐந்து நற்சாட்சிப் பத்திரங்களை என்னைப் படிக்கும்படி செய்தீர்கள். அதற்குப் பழியாக என்னுடைய நற்சாட்சிப்பத்திரங்கள் ஐம்பதுக்குக் குறையாமல் உங்களைப் படிக்கும்படி செய்துவிட்டேன். இப்பொழுது நம் இருவருடைய கணக்கு நேர் என்று எனக்குத் தோன்றுகிறது. உங்களுடைய அபிப்பிராயம் எப்படியோ? அதை அடுத்த சனிக்கிழமை சாயங்காலம் ஐந்து மணிக்கு நேரில் கேட்க அவாக் கொண்டிருக்கிறேன்— வனமாலா.”

ஓகோ! அப்படியா சமாசாரம்! எனக்கு அப்பொழுதே தெரியும். ஆனால் அது இப்பொழுது தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஸ்திரீ, அவ்வளவு நயமாய்த் தேனொழுகும் குரலில் பேசினால், அவள் சொல்வதை நம்பவே கூடாது. ஆனால் அதை இப்பொழுது நினைத்துக்கொண்டு என்ன பிரயோசனம்? இருக்கட்டும்! எப்படியாவது பழிக்குப் பழி வாங்கும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இன்னொரு சமாசாரம். அன்று அவள் எங்களைக் காக்கவைத்தாள் அல்லவா? தான் ஒரு சினிமா நக்ஷத்திரம் என்கிற காரணத்தைக்

கொண்டுதானே? சினிமா உலகத்துடன் ஏதோ சுவல்ப சம்பந்தம் எனக்கும் இப்பொழுது ஏற்பட்டு விட்டதல்லவா? ஆகையால் குறிப்பிட்ட காலம் தப்பி 'லேட்'டாக வருவதற்குச் சிறிது உரிமை எனக்கும் உண்டே? சனிக்கிழமை ஐந்து மணிக்கு வரச்சொல்லியிருக்கிருள். நான் சரியாக ஐந்து நாற்பத்தெட்டுக்குத்தான் போய்ச் சேரப் போகிறேன்.

இதைப் பலராமனிடம் சொன்னேன். "சே! சே! 'லேட்'டாக வருகிற உரிமை ஸ்திரீகளுக்கு மாத்திரம் உண்டு. அவர்கள் அலங்காரம் செய்து முடிவதற்குள் காலம் ஓடிவிடுகிறது. உனக்கு என்ன அலங்காரம் உண்டாம்? புருஷர்கள், ஒப்புக்கொண்ட காலத்திற்கு முந்தியேதான் தயாராக இருக்க வேண்டும்" என்ருன்.

அவனும் பிடிவாதமாய்ப் பேசினுன். நானும் பிடிவாதம் பிடித்தேன். கடைசியில் இருவருக்கும் மத்தியஸ்தமாக லலிதா சொன்னபடி, சனிக்கிழமை ஐந்து மணிக்குப் பதிலாக, வெள்ளிக்கிழமை ஐந்து நாற்பத்தெட்டுக்கு நாங்கள் போவது என்று தீர்மானித்தோம். அப்படியே வனமாலாவுக்கு எழுதிவிட்டேன்.

எனக்குத் தோன்றுகிறது: நடந்ததையெல்லாம் எழுதி வனமாலாவின் பொல்லாத்தனத்தை உலகத்தார் அறியும்படிச் செய்வதே சரியான பழிக்குப் பழியாகும் என்று. ஆகையால் அவ்விதமே செய்துவிடுகிறேன்.

# 7

## ஊர்வசி

பெயர்பெற்ற தூபான் மெயிலில் டில்லியிலிருந்து காசிக்குப் போய்க்கொண் டிருந்தேன். வண் டியில் வழக்கத்திற்கு அதிகமாகவே கூட்டம். ஆஞ லும் அத்தனை பிரயாணிகளின் மத்தியில், ஒருவரே என்னுடைய கவனத்தை வசப்படுத்தினர். அவ ருக்குச் சுமார் முப்பத்தைந்து வயது இருக்கலாம். தேக சக்தியும் மனேசக்தியும் சேர்ந்து வாய்ந்த உருவம். அவர் ஒரு ராஜபுத்திரர் என்று பிறகு அறிந்தேன். அவருடைய முகத்தில் புன்சிரிப்பு எப்பொழுதும் தயாராகக் காத்துக்கொண்டிருந் தது. உலகத்தை வெறுத்தவர் அல்ல. எந்தச் சந் தோஷத்திலும் கலந்துகொள்ளும் சுபாவம். இருந் தாலும் அவருடைய தோற்றத்திலே, கம்பீரமும் பெருந்தன்மையும் மாத்திரமல்ல, ஒன்றுக்கும் அசையாத ஒருமன உறுதியும் விளங்கிற்று. "இந் தக் காரியமா? இது என்னுடைய கடமை. என்ன நேர்ந்தாலும் இதைச் செய்துதான் முடிப்பேன். இந்தக் காரியமா? சே! இது இளப்பம்.......என்ன லாபம் கிடைத்தாலும் இதை நான் செய்ய மாட் டேன்" என்கிற நிச்சயம் பிரகாசித்த மாதிரி இருந்தது.

நீடித்த பிரயாணத்தின் ஆயாசத்தை ஓட்டுகிற பாவனையில் அவருடன் கொஞ்சம் கொஞ்சமாகப்

பேசத் தொடங்கினேன். இங்கிலீஷ் பாஷையில் அவருக்குச் சொல்பந்தான் பரிசயம். என்னுடைய ஹிந்தி ஞானமோ அதிலும் குறைந்தது. இருந்தாலும் அவருடைய ஸரஸ குணமும் என்னுடைய ஆவலும் சேர்ந்து செய்த உதவியினுல், பேச்சும் பிரயாணமும் ஆனந்தமாக இருந்தன. வழியில் தென்படும் ஊர்களைக் குறித்து, புஸ்தகங்களில் கிடைக்காத விநோதமான சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார். பிரயாக் (அல்லஹாபாத்) ஸ்டேஷனில் வண்டி நின்றது.

"பிரயாகைக்குள் போயிருக்கிறீர்களோ?" என்று கேட்டார்.

"போயிருக்கிறேன். திரிவேணியில் நெடு நேரம் ஸ்நானம் செய்துமிருக்கிறேன். ஆனுல் அக்கரைக்குச் சென்று அங்கே சுற்றிப் பார்க்கவில்லையே என்றுதான் என்னுடைய குறை" என்றேன்.

"அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

அவருக்குத் தெரியாத ஸ்தலபுராணம் எனக்குத் தெரிந்திருந்ததில் எனக்குப் பெருமை. "அங்கேதான் 'பிரதிஷ்டான' நகரம் இருந்ததாகச் சமீபத்தில் படித்து அறிந்தேன். புரூரவஸ் முதலான சந்திரவம்சத்து அரசர்கள் அரசாண்ட இடம். அப்பேர்ப்பட்ட இடமே ஒரு புண்ணிய பூமி என்று நான் நினைக்கிறேன்" என்றேன்.

அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவருடைய முகம் மாத்திரம் சற்று மாறிற்று. அது முதல் அவருடைய புன்னகைகள் முன் போல் அடிக்கடி வரவில்லை. வர வரப் பேச்சும் சுருங்கிற்று. கடைசியில், ஏதோ சிந்தனையில் மூழ்கினவராக, மௌனமாகவே இருந்துவிட்டார். எனக்கு வருத்தம் மேலிட்டது. அவருக்கு விசனகரமான ஞாபகத்தைக் கிளப்பிவிட்டேனே என்று நொந்துகொண்டேன். மொகல்ஸராய் ஸ்டேஷனை அடைந்தோம். நான் இறங்கிக் காசிக்குப் போவதற்கு வண்டி மாற்ற வேண்டிய இடம் அது. அவருடன் விடை பெறுமல் போய்விடுவது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. மிருதுவாக அவரைத் தட்டினேன்.

"நான் இங்கே பிரிந்து போகவேண்டியிருக்கிறது. உங்களுடைய சம்பாஷணையை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். ஆனல் நான் அலௌகிகமாக ஏதோ பேசி, உங்களுக்கு வருத்தம் உண்டாக்கியதை மாத்திரம் நீங்கள் மறந்துவிட வேண்டும்" என்றேன்.

"நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. எல்லாம் என்னுடைய கர்ம வினை" என்று பெருமூச்சுவிட்டார்.

நான் மீண்டும் மன்னிப்புக் கோரினேன்.

"நான் தான் உங்களுடைய மன்னிப்பைக் கேட்க வேண்டும்" என்ருர். "சற்று நேரமாக உங்களுடைய வார்த்தைகளைக்கூட நான் சரியாகக்

கவனிக்கவில்லையோ என்று பயப்படுகிறேன். ஒரு வருஷமாக, எனக்குச் சில சமயங்களில் இம்மாதிரி மனத் தடுமாறுதல் உண்டாகிறது. உங்களுடைய மேல் விலாசத்தைக் கொடுங்கள். எல்லா விவரத்தையும் உங்களுக்கு எழுதுகிறேன். பிறகு உங்களுடைய அபிப்பிராயத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பேன்'' என்றார்.

சொன்ன மாதிரியே, சில தினங்களுக்கெல்லாம், அவரிடமிருந்து ஹிந்தியில் ஒரு நீண்ட கடிதம் கிடைத்தது. விஷயத்தைத் தமிழில் வெளிப்படுத்தலாமா என்று எழுதிக் கேட்டேன். தம்முடைய ஊரையும் பெயரையும் வெளியிடாத வரைக்கும், தமக்கு ஆக்ஷேபம் இல்லையென்று தெரிவித்தார். இப்பொழுது ஒரு ஹிந்தி - தமிழ் அகராதியை வைத்துக்கொண்டு, கூடிய மட்டும் சரியாக, அவர் எழுதினபடியே மொழிபெயர்த்திருக்கிறேன். இனி, "நான்" என்று வழங்குவது அந்த ராஜபுத்திரர்.

சித்திரை மாஸம் அக்கினி நக்ஷத்திரத்தின் ஆட்சிக்காலம். ஸ்தல யாத்திரையில் எனக்கு நம்பிக்கை இல்லாத போனாலும், என்னுடைய தாயின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஏதோ பீடா பரிகார்த்தமாக ஸேது ஸ்நானம் செய்துவிட்டு, அன்று கல்கத்தா மெயிலில் திரும்பி வந்துகொண்டிருந்தேன். மத்தியானத்துக் கடும் வெயிலில், வண்டியில் எங்கே தொட்டாலும், பட்டாலும்,

உஷ்ணமாக இருந்தது. மேலே சுழலும் விசிறியின் காற்றும் சூடாகவே வந்தது. வண்டி நின்று கொண்டிருந்த ஸ்டேஷனுக்குப் பெயர் கர்க்கப்பூர். இங்கிருந்து பத்து மணிக்கே புறப்பட்டிருக்க வேண்டியது. ஆனால் இன்னும் கிளம்புகிற மாதிரியாகத் தோன்றவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர் இந்த மெயிலை அடியோடு மறந்துவிட்ட மாதிரி இருந்தது. விடியற்காலை முதல் சாயங்காலம் சுமார் நாலு மணிக்குக் கல்கத்தாவில் என்னுடைய சிநேகிதரின் வீடு போய்ச் சேருகிறவரையில், வழியில் ஒரு ராஜ புத்திரனுக்குத் தகுந்த ஒருவித உணவும் கிடைக்காது. ஆகையால் பசிக்காக ஏற்பட்ட நாடோடியான வைத்திய முறையின் பிரகாரம், இடுப்பின் பெல்ட்டை இறுக்கிக் கட்டிக்கொண்டேன். இந்தப் பிரதேசங்களில் பிரயாணிகள் இறங்கினார்களே ஒழிய, புதிதாய் ஏறவில்லை. ஆகையால் தற்சமயம் வண்டியில் என் அறையில் நான் ஒருவனே இருந்தேன். கால்களை நீட்டிக்கொண்டு உறங்க முயன்றேன். ஆனால் கடும் பசியும் கொடிய வெயிலும் சேர்ந்து உண்டாக்கிய வேதனையால் சரியான தூக்கமும் வரவில்லை. நல்ல விழிப்பிலும் சேராமல் நல்ல நித்திரையிலும் சேராமல், ஒரு மத்திய அவஸ்தை உண்டல்லவா? அந்த நிலைமையில் கண்ணை மூடிக்கொண்டே நேரத்தைக் கழிக்கலானேன்.

அவ்விதம் இருந்தவன், ஆச்சரியத்துடன் கண்ணைத் திறந்தேன். அதற்குக் காரணம், ஒரு

நந்தவனத்தின் மத்தியில் வீசும் வாசனையைப் போன்ற ஒரு செழிப்புள்ள பரிமளமானது அந்த அறை முழுவதும் பரவி, அங்குள்ள உஷ்ணத்தைக் கூடத் தணித்த மாதிரி தோன்றிற்று. எதிர்ப் பக்கத்தின் மூலையில் கூந்தலை ஆற்றிக்கொண்டு ஒரு யுவதி உட்கார்ந்திருந்ததை அப்பொழுதுதான் அறிந்தேன். யுவதி என்றால் உடனே வர்ணிக்கத் தொடங்குவது உலகம் முழுவதும் அனுசரிக்கும் வழக்கம். அவளுடைய நிகரற்ற லாவண்யத்தை என்னால் வர்ணிக்க முடியாது. ஆனால் வர்ணிக்க அவசியமும் இல்லை. ஓர் அப்ஸரக் கன்னிகையின் உருவமும் சௌந்தரியமும் எவ்விதம் இருக்குமென்று நம்மில் ஒவ்வொருவருக்கும் மனசுக்குள்ளே ஓர் அபிப்பிராயம் இருக்குமல்லவா? அதை நீங்கள் நினைத்துக்கொண்டால் போதும். அம்மாதிரி எனக்கும் உள்ள அபிப்பிராயத்தையே ஒரு பதுமையாக வார்த்து, உயிர் கொடுத்து, அங்கே உட்காரச் செய்திருந்த மாதிரி எனக்குத் தோன்றினாள்.

நம்மை மூர்ச்சிக்கச் செய்யும்படி அழகு வாய்ந்த ஒரு ஸ்திரீயைக் கண்டால் இப்பேர்ப்பட்டவள் ஒரு தேவலோக ஸ்திரீயாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் எண்ணலாம். ஆனால் அவ்விதம் எண்ணத் தொடங்கும் பொழுதே நம்முடைய உலக அனுபவம் குறுக்கே வந்து தடுக்கிறது. தேவலோகக் கன்னிகைகள் நம்முடைய கண்ணில் தென்படுகிறதில்லையே என்று ஞாபகம் வந்துவிடுகிறது.

அதன் மேல் அந்த எண்ணத்தை விடவேண்டி யிருக்கிறது.

ஆனால், இவளோ, வண்டியில் ஏறுவதற்காகக் கதவைத் திறக்கிற ஓசையும், அதை அடைக்கிற ஓசையும், காலடிச் சப்தமும் இல்லாமலே அறைக்குள் பிரசன்னமாக இருப்பது, இவ்வளவு அழகு பெற்ற ஒரு யுவதி, புருஷத் துணை இல்லாமல் தனியாக வந்திருப்பது, என்ற இரண்டு விஷயங்களை யும் ஆலோசித்தால், அம்மாதிரி 'எண்ணாத எண்ண'த்தைச் சீராட்டுவதற்குக்கூட அநுகூலமாகவே இருந்தது.

நாம் வெளியிட்டுப் பேசும் வார்த்தைகளுக்குத் தானே ஒருவிதக் கண்டிப்பும் கட்டுப்பாடும் உண்டு. வெளிவராமல் மனசுக்குள்ளே சஞ்சரிக்கும் எண்ணங்களோ, ஒன்றுக்கும் கட்டுப்படாமல், இஷ்டப்படி தட்டாமாலையும் கண் பொத்தியும் ஆடலாமல்லவா? ஆகவே, என் மனத்தில் விதம் விதமான எண்ணங்கள் தோன்றித் திரிந்தன.

"இந்த 1945-ஆம் வருஷத்தில் வாஸ்தவமாகவே, தேவலோகத்திலிருந்து ஓர் அப்ஸர ஸ்திரீ பூலோகத்திற்கு வந்தால், எவ்வளவு அற்புத ஆனந்தமாக இருக்கும்! இவளுடைய பெயர் என்னவாக இருக்கலாம்? அதைக் கேட்கலாமா, கூடாதா? அவசியம் ஏற்பட்டாலொழிய, பரிசயமில்லாத ஸ்திரீயுடன் ஒரு புருஷன் பேச்சைத் துவக்கக் கூடாது என்று ஒரு மரியாதை நமக்குள்

இருக்கிறதே! அப்ஸர லோகத்திலும் அதே 'ரூல்' தானு? மரியாதைகளைக் கவனிப்பதானுல் நான் இப்படிக் காலை நீட்டிக்கொண்டு படுத்திருப்பது சரியா?

"ஆனுல், நான் தூங்கிக்கொண்டிருக்கிறேன் என்று நம்பி இப்பொழுது இங்கே இருக்கிருள். நான் எழுந்து உட்கார்ந்து அவளுடன் பேசவும் ஆரம்பித்தால், அடுத்த ஸ்டேஷனில் இறங்கி வேறு அறைக்குப் போய் விடுவாளோ, என்னவோ?

"நான் இப்பொழுது நன்ருய் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இது ஒரு கனவு அல்ல சந்தேகமே இல்லை. ஆனுல் இவள் தேவலோகக் கன்னிகை என்பதற்கும் சந்தேகம் இல்லை. ஐம்புல னுக்கும் மேலான ஓர் ஆரும் புலன் அதை எனக் குத் தெரிவிக்கிறது. ஆனுல் கேவலம் ஒரு மனித னுடைய கண்ணில் இவள் தென்படும் காரணம் என்ன?

"ஆனுல் நான் காண்பது ஒரு கனவாக இருந் தால், என்ன செய்வேன்? இவ்வளவு மனேகர மான ஒரு விஷயத்தை அப்படியே நீடித்து அநுப விப்பதற்குப் பதிலாக, வீணுய்ப் பேசத் தொடங்கி அதனுல் கண் விழித்துப் போய், அத்துடன் கனவு காண்பதைக் கெடுத்துக்கொள்வேனு? ஆகையால், எவ்விதத்திலும் மௌனமே உசிதம்."

இவ்விதமெல்லாம் நான் எண்ணிக்கொண்டிருக்கையில், வண்டி ஒரு குலுக்குக் குலுக்கி விட்டுத் திடீரென்று நின்றுவிட்டது. இது வரையில் ஜன்னலின் வெளியே பார்த்துக்கொண்டிருந்தவள், அப்பொழுதுதான் என் பக்கம் நோக்கினள். நாங்கள் இருந்த வண்டியோ, சாவகாசமாய் ஒரு நுனி கீழே தாழவும், அதற்கடுத்தபடி மற்றொரு நுனி மேலே உயரவும், முடிவில் ஒரு கடிகாரத்தின் முள் சுமார் இரண்டு மணியைக் காட்டுவதானல், எவ்விதம் சாய்ந்து காண்பிக்குமோ அவ்விதம் சாய்ந்து நின்றது. தவிர, பக்கவாட்டத்தில், ஒரு பக்கமாகச் சற்றுப் புரளவும் செய்தது. நாங்கள் இருவரும் எழுந்தோம்-நான் பதறிக்கொண்டும், அவள் சாவதானமாய்க் கூந்தலை முடி போட்டுக்கொண்டும். ஒரு பக்கத்துக் கதவு கீழே இருந்த மண்ணின் குவியலால் தடைபட்டு இருக்க, மேற்புறத்திலிருந்த மற்றொரு கதவு திறக்கக்கூடியதாக இருந்தது. அதை வெகு சிரமத்துடன் திறந்தேன். அதன் மூலம் வெளியடைந்தோம். வண்டியை விட்டு நான் கீழே குதித்து, பிறகு அவள் இறங்கியும் நழுவியும் பத்திரமாகக் கீழே சேரும்படி, அவளுடைய கையைப் பிடித்து உதவி செய்தேன்.

என்ன நேர்ந்திருக்க வேண்டுமென்று சுற்றிப் பார்க்கையில் விளங்கிற்று. அந்த ஸ்தலத்தில் பழுது பார்த்துக்கொண்டிருந்த ஒரு பாகத்தில், முந்தின ராத்திரி அடித்த கோடை மழையின்

ஜலப் பெருக்கினால் இன்னும் இறுகாமலிருந்த மண் கரைந்து போனதால், பாதை பலஹீனப்பட்டிருந்தது. மெயில் வண்டியின் கனத்த என்ஜினைத் தாங்க முடியாமல் பல இடங்களில் பாதை அமுங்கவே, முடிவில் என்ஜினும் நின்று போய், பிரயாணி வண்டிகளும் தாறுமாறாய்ச் சாய்ந்துவிட்டன. நல்ல வேளை, உயிர்ச் சேதமில்லை. இருந்தாலும் எங்கும் கிளம்பிய ஆரவாரத்திற்கு அளவில்லை.

"அதோ, கால் மைல் தூரத்தில் ஒரு ஸ்டேஷன் தெரிகிறதே, அங்கே என்ன ஊரோ?" என்று ஒருவரையும் குறிப்பிடாமல் பொதுவில் கேட்கிற மாதிரியில் கேட்டேன்.

"அது ராம்ராஜ்ய ஸ்தலா. அங்கிருந்து நாலு மைல் தூரத்தில் இருக்கிறது, கல்கத்தாவில் என்னுடைய வீடு" என்று அவளே சொன்னாள்.

அவளுடைய குரலின் இனிமையையும் குணத்தையும் நான் உங்களுக்கு எவ்விதம் விளங்கச் செய்வேன்! உருவத்தைப் பார்த்த போது அவளுடைய உற்பத்தியைக் குறித்து எந்த எண்ணம் உதித்ததோ அதையே அவளுடைய குரலும் உறுதி செய்தது. தவிர அதனுடைய மகிமையால், என்னுடைய சுபாவத்திலில்லாத தைரியத்துடனும் சுலபத்துடனும் பேசலானேன்.

"நாம் இருவரும் முந்திக்கொண்டு அந்த ஸ்டேஷனுக்குப் போய்விடுவோம். ஏனென்றால்,

இங்குள்ள நானூறு பிரயாணிகளும் அங்கேதான் வந்து சேரவேண்டும். பிறகு நமக்கு ஒரு வாடகை வண்டியும் அகப்படாது'' என்றேன்.

அவள் "சரி'' என்று தலையை அசைத்தாள். மற்றவர்களுக்கும் இந்த யுக்தி தோன்றிற்றோ இல்லையோ, நாங்கள் போவதை அவர்கள் கவனித்தார்களோ இல்லையோ, தெரியாது. நாங்கள் இருவரும் திரும்பிப் பாராமல், சற்று வேகமாகவே நடந்து போய், ஸ்டேஷனை அடைந்தோம். எங்களுடைய அதிருஷ்டம், ஒரு டாக்ஸி வண்டி இருந்தது. முன் ஸீட்டில் தூங்கிக்கொண்டிருந்த டாக்ஸி டிரைவரை எழுப்பிவிட்டு, வண்டியில் உட்கார்ந்தோம். அவளுடைய வீட்டின் விலாசத்தைத் தெரிவித்தாள். டாக்ஸி புறப்பட்டுவிட்டது.

"இனிமேலாவது என்னுடைய கையை விடலாம் அல்லவா?'' என்று அவள் புன்னகையுடன் கேட்டாள்.

இது வரையில் என் கால்கள் பூமியில் பரவாமல், ஆகாயத்தின்மீது நடந்துவந்த மாதிரி எனக்கு ஒரு குதூகலம் இருந்ததே ஒழிய, முன்பு அவளைக் கீழே இறக்கிவிடுவதற்காக அவளுடைய கையைப் பிடித்தவன் இது வரையில் அதை விடவில்லை என்றும், அதுதான் அந்தக் குதூகலத்திற்குக் காரணமென்றும் இப்பொழுது தான் உணர்ந்தேன். உணர்ந்த பிறகு இதைப்

பறி கொடுப்பேனு? நானும் அவளுடைய கையை விடவில்லை, குதூகலமும் என்னை விடவில்லை. மேல் மேலே பேசுவது வெகு சுலபமாக இருந்தது. ஆலோசிக்கும் சிரமம் இல்லாமலே, வார்த்தைகள் என் வாயிலிருந்து குதித்தன.

"கையை விடுதலை செய்தால், அப்புறம் நீங்கள் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாலோ?" என்று நியாயம் பேசினேன்.

"ஒரு டாக்ஸி வண்டிக்குள்ளே, எங்கே போய் விட முடியும்? கையை விட்டுப் பார்க்கலாமே!" என்று அவள் முறுவலித்தாள்.

"அப்ஸர ஸ்திரீகள் எல்லாரும் முதலில் அப்படித்தான் சொல்லுகிற வழக்கம். ஆனல் அவர்களுடைய வார்த்தையை நம்பினல், பிறகு அந்தர்த்தானமாய்ப் போய்விடுவார்கள்" என்றேன்.

"அப்படியா! அவர்களுடைய வழக்கம் உங்களுக்கு என்னமாய்த் தெரியும்?"

"முன் ஒரு ஜன்மத்தில் நீங்கள் என்னை ஏமாற்றினதிலிருந்துதான் நான் அறிந்துகொண்டேன். வேறே எப்படி?"

"உங்களை நான் ஏமாற்றினேனு! அது எவ்விதம்? உங்களுடைய பெயர் என்ன?"

"அந்த ஜன்மத்தில் என்னுடைய பெயர் புரூரவஸ். இது கூட ஞாபகமில்லை போலக் கேட்கிறீர்களே!"

"அப்படியானல் நான் ஊர்வசியோ?"

"'நாதா! உன்னை விட்டுப் பிரியேன்' என்று வாக்களித்தீர்கள். அளித்துவிட்டும் பிரிந்து போனீர்கள். ஆனல் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். நீங்கள் எனக்கு இரண்டு நிபந்தனைகள் இட்டீர்கள். நான் அவற்றில் தவறிவிட்டேன். இந்திரனுடைய வஞ்சனையால் தவறினேன். அந்தப் பாவி...."

"என்ன நிபந்தனைகள்?"

"நீங்கள் இரண்டு சிறிய ஆட்டுக்குட்டிகளை மிகச் செல்வமாக வளர்த்து வந்தீர்கள். அவை கெட்டுப் போகாமல் நான் பாதுகாக்க வேண்டுமென்று பேசியிருந்தீர்கள். ஜாக்கிரதையாகத்தான் இருந்தேன். ஆனல் உங்களுடன் நான் சல்லாபமாய் இருக்கும் சமயத்தில், இந்திரன் சில கந்தர்வர்களை அனுப்பி, அவற்றைத் திருடிக்கொண்டு போய்விட்டான். நான் என்ன செய்ய முடியும்? உங்களுடன் இருக்கும்பொழுது, ஒரு புருஷனுக்கு ஆட்டுக்குட்டியின் மேலாவது, வேறு எதன் மேலாவது ஞாபகம் போகுமா? நீங்களே சொல்லுங்கள்—"

"இரண்டாவது நிபந்தனை என்ன?"

"அதுவா? அதைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம், எனக்குத் துக்கம் அடைத்துக்கொண்டு

போகிறது. இரவில் உங்களுடைய பூரண அழகை நான் பார்க்கக் கூடாதென்று சொல்லியிருந்தீர்கள். இதற்காக அந்தப்புரத்தில், உங்களுடைய வசதியில் நான் இருக்கும் பொழுதெல்லாம், விளக்கு ஏற்றுவதே இல்லை. அதனால் என்ன? உங்களுடைய கண்களே எனக்கு நக்ஷத்திரங்களாக இருந்தன. அப்படி இருக்கையில், ஒரு நாள், அன்றைக்குப் புதிதாய் அமர்ந்த வேலைக்காரி—பிற்பாடு நடந்ததிலிருந்து எனக்கு இப்பொழுது நிச்சயமாய்த் தெரிகிறது: அவளை இந்திரன்தான் அனுப்பியிருக்க வேண்டும், வேலைக்காரி வேஷம் போட்டுக்கொண்டு என்னிடம் போகும்படி சொல்லி—அவள் உங்களுடைய அறையின் ஜன்னல் கதவைச் சாத்தாமல் திறந்தபடியே வைத்துவிட்டாள். அன்று பௌர்ணமி. பாதி ராத்திரியில் விழித்துக்கொண்டேன். உள் முழுவதும் நிலா வெளிச்சம். பூர்ண சந்திரனையும் தோற்கடிக்கச் செய்யும் தேஜசுடன் நீங்கள் சயனித்துக்கொண்டிருந்தீர்கள். அந்தக் காட்சியால் எனக்கு உண்டான பேரானந்தத்தில் உங்களை எழுப்பிவிட்டேன். நான் உங்களுடைய பூர்ண அழகையும் பார்த்துவிட்டேன் என்று உங்களுக்குத் தெரிந்து போனதும் தவிர, அதைக் குறித்து இந்திரனிடம் கோள் சொல்லுவதற்குத் தயாராக, சந்திரனும் தெரிந்துகொண்டுவிட்டான். இவ்விதம் அந்த நிபந்தனை விஷயத்திலும் ஏமாந்து போய்த் தவறிவிட்டேன்.''

"நடந்தது இப்படித்தானு? உங்களைக் குறித்துக் காளிதாசன் எழுதியிருக்கும் 'விக்கிரம - ஊர்வசீய'த்திலே—"

"நாடகத்தின் அவசியத்திற்காக, இரண்டொரு விஷயங்களைக் காளிதாஸன் சிறிது மாற்றி எழுதியிருக்கிருன். நம்முடைய விருத்தாந்தத்தை, அவனுடைய காலத்திற்கு முன்பாகவே, நடந்ததை நடந்தபடி—யஜுர் வேதத்தில் சதபதப்பிராம்மணத்தில் சொல்லியிருக்கிறதே! கடைசி நாளின் சம்பவம் மாத்திரம் அதில் கூறப்படவில்லை. உங்களை எந்த ஜன்மத்திலும் மறவாத என்னுடைய ஞாபகத்திலிருந்து அதைச் சொல்லுகிறேன்."

"வாஸ்தவத்தைச் சொல்லுங்கள்! அன்று ஜன்னல் கதவைத் திறந்தபடியே வைக்கும்படி, தாசியிடம் நீங்கள் ஆக்ஞாபிக்கவில்லையா?"

"இல்லவே இல்லை. ஆனுல் புதிதாய் வந்தவளிடம் அதை அடைக்கும்படி சொல்லத் தவறியிருக்கலாம். என்னுடைய காதலின் நிர்ப்பந்தத்தினுல், நீங்கள் சொல்லுகிற மாதிரி ஆக்ஞாபித்திருந்தாலுங்கூட, என்னுடைய குற்றம் தீராக் குற்றமா? மன்னிக்க முடியாததா? சொல்லுங்கள்."

"அன்றிரவு உங்களை விட்டுப் போனவள் மறுபடியும் உங்களிடம் வரவில்லையா?"

"இதென்ன! யாரோ இதர மனுஷியரைக் குறித்து என்னிடம் விசாரித்து, நடந்த சமாசா

ரத்தை அறிந்துகொள்ளுகிற மாதிரியே, இன்னும் கேள்வி கேட்கிறீர்களே! நடந்ததெல்லாம் உங்களுடைய சரித்திரந்தானே! உங்களுக்குத் தெரியாததா? ஒருவேளை, எனக்குத் தெரிகிறதா, நான் புரூரவஸ்தானு என்று பரீக்ஷித்துப் பார்க்கிறீர்களா? அன்றைக்குப் பிறகு, என்மேல் கருணை புரிந்து, ஐந்து தடவை வந்தீர்கள், எனக்கு ஐந்து குழந்தைகளைக் கொடுத்தீர்கள்—''

"அப்படி இருந்தும் உங்களுக்கு—"

"அப்படி இருந்தும் என்ருல், மறுபடியும் என்னை விட்டுப் போய்விட்டீர்களே, அந்த இந்திரனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு! அவன் பொழுது போக்கைத்தானே தேடுகிறவன்! அதற்கு ரம்பை இல்லையா? மேனகை திலோத்தமை இல்லையா? நீங்களும் வேண்டுமா, கிரீடத்தின் மேல் நவரத்தினப் பதக்கம் வைக்கிற மாதிரி? நீங்கள் இல்லாமல் அவனுடைய சுவர்க்கம் பாழாக இருந்ததா? என் மாதிரி அநியாயமாய்ப் புண்பட்ட ஒரு மனிதன் சபித்தால், தேவேந்திரன் மீதும் அந்தச் சாபம் பலிக்காதா? என்னை வஞ்சனை செய்து உங்களை வரவழைத்துக்கொண்டுவிட்டானே, அந்தக் கொடும் பாவி! அவனுடைய சுவர்க்க வைபவம் பாழாய்த் தான் போகட்டுமே!"

"வீணுகச் சபிக்காதேயுங்கள். மற்றவர் பேரில் ஆத்திரப்படுவதனுல், முதலில் நம்முடைய மனசு

அல்லவா சந்துஷ்டியை இழக்கிறது? மற்றவர்களை மறந்துவிடுங்கள்."

"நீங்கள் இந்திரனுக்காகப் பரிந்து பேசுகிறீர்கள்."

"இல்லவே இல்லை. எதற்காகப் பரிய வேணும்? அவன் என்னுடைய வல்லபனா? நூறு யாகம் செய்து இந்திர பதவியை அடைந்ததனாலே, எந்த ஸ்திரீயின் ஹிருதயமும் அவனுக்கு வசமாய்விடுமா? நாம் இங்கே பேசுவதுகூட அவன் காதை எட்டினாலும் எட்டும். இருந்தாலும் சத்தியமாய்ச் சொல்லுகிறேன், நம்புங்கள். தெருவில் கிளம்பும் இந்தப் புழுதியும் சரி, அவனும் சரி, என்னுடைய மனசில்."

"அப்படியானால் நீ இன்னமும் என்னுடைய சொந்த ஊர்வசிதானே?" என்று அவளுடைய மற்றக் கையையும் பிடித்துக்கொண்டேன்.

"நாதா, நான் ஒரு நாளும் மாறவில்லையே! இல்லாத போனால் நான் ஏன் இப்படி உங்களைத் தேடிக்கொண்டு வருகிறேன்! ஒவ்வொரு ஜன்மத்திலும் உங்களைத் தேடி வந்து அடைகிறேன். பிறகு உங்களுடைய கர்மத்தின் பிரகாரம் நடக்கிறது. என் ஒருத்தியின் சக்தியில் மாத்திரம் என்ன இருக்கிறது?"

"காந்தே! நீ என்னைத் தேடி வந்தாயா! நான் அவ்வளவு பாக்கியசாலியா! நான் என்ன புண்ணி

யம் செய்தால் இனி நாம் பிரியாமலிருக்கும்படி யான கர்ம பலன் எனக்குக் கிடைக்கும், சொல்லிக் கொடுக்கிருயா? இனிமேல் இந்திரனுக்காக, என்னை விட்டு ஒரு நாளும் பிரியமாட்டாயே? மாட்டேனென்று தயவுசெய்து உறுதி சொல்லு! சொல்லு!'' என்று அவளுடைய கைகளின் மேல் முத்தங்களைச் சொரிந்தேன். அவை மூலமாக, என்னுடைய பூர்வ ஜன்மத்தின் வாழ்வை, ஒரு திரையைச் சற்றுத் தூக்கின மாதிரியில், மறுபடியும் சிறிது உணர்ந்தேனே என்னவோ, நான் சொல்ல வல்லவனல்ல. ஆனந்தத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த என் செவியில் இன்பமான வீணையின் நாதம் கேட்கிற மாதிரி இருந்தது. அதன் மத்தியில், ஏதோ மாயா சக்தியினல், யாதொரு வார்த்தைகளின் உதவி இல்லாமலே, அவற்ருல் தெரிவிக்கக் கூடிய விஷயம் மாத்திரம், என் அறிவை எட்டியது. கீழ்ச் சமுத்திரத்தினின்று உதயமாகும் சந்திரன், வானத்தை எட்டுகிற மாதிரி, மெல்லெனவும் அதிர்ச்சி இல்லாமலும், ஆனல் நிச்சயத்துடனும் பிரகாசத்துடலும் என் விவேகத்தை எட்டி, அமிருதத்தை உண்டவனுடைய சரீரத்தில் அதன் குணம் பரவி ஐக்கியமாகிறது போல, என்னுடைய பிரக்ஞையுடன் ஒன்ருய்ச் சேர்ந்து கொண்டது:

'நான் ஊர்வசி. சிருஷ்டி அமைப்பில், ஸ்திரீயின் அம்சமான காருண்யம் என்பது நான்.

நானே அநுதாபம். நானே வாஞ்சை. ஆத்மாவின் அழகும் நானே.

'எவனொருவன் தன்னையே பொருள் பண்ணி, தன்னுடைய மகிழ்ச்சியையே கோருகிறானோ, என்னை ஆளுவதே எவனுடைய கருத்தோ, அவன் தேவேந்திரனானாலும் சக்கரவர்த்தி யானாலும், என்னை உண்மையில் அறிய மாட்டான். என்னுடைய அதிபதியாக இருக்கலாம். ஆனால் என்னுடைய ஹிருதயேச்வரன் அவன் அல்ல.

'எவன் தன்னை நினைக்காமல் என்னை நினைத்து எனக்காக வாடி, எனக்காகத் துடிக்கிறானோ, அவனே என்னுடைய ஹிருதயேச்வரன், என்னுடைய புரூரவஸ்—'

* * *

ஏதோ காரணத்தினால் கண் விழித்தேன். விழித்த பலன், மெயில் வண்டி சீராய்க் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து கூலியாட்கள் சாமான்களைப் புரட்டிக்கொண்டிருப்பதையும், என்னை வரவேற்க வந்த சிநேகிதர் என்னைத் தட்டி எழுப்புவதையும் அறியலானேன்.

இவ்விதம் அன்று எனக்குக் கிடைத்த அபூர்வ அநுபவம், இனி அதற்கு எதிர்காலம் என்பது இல்லாமல், ஒரு கனவைப் போல் க்ஷணத்திலே பறந்து போய்விட்டது. அவளுடைய ஞாபகமே இனி எனக்குத் துணை, எனக்குக் கதி.

'ஒரு கனவைப் போல்' என்று அவசரப் பட்டுச் சொல்லிவிட்டேனே! வாஸ்தவத்தில் அந்த அநுபவம் ஒரு கனவுதானு? வேறென்றும் இல்லையா? ஒருகால் பூர்வ ஜன்மத்தின் வாசனையாக இருக்கலாகாதா? தேகம் வருந்திய சமயத்தில் ஆத்மாவின் சக்தி வலுத்து, அந்த வாசனையை எட்டிப் பிடித்திருக்கக் கூடுமா? அல்லது பூர்வ கர்மத்தின் பலனுக இப்பொழுது கிடைத்த ஓர் உபதேசம், ஓர் எடுத்துக்காட்டு என்று எண்ணவேண்டியதா? இவ்விதம் புஸ்தக ஞானமாக, எனக்கே சில சமயங்களில் தோன்றுகிறது.

இம்மாதிரி கேள்விகளுக்குச் சரியான விடை கொடுக்கக் கூடிய பண்டிதர் எவர்? அவரை எங்கே காணலாம்? அவரைக் கண்டுபிடித்தாலும் அவர் எடுத்துரைக்கக் கூடிய தத்துவங்களைப் பொறுத்துக் கேட்க என் மனசு சம்மதிக்குமா? என்னுடைய மனசார, எனக்கு இருக்கும் விசாரமெல்லாம் இதுவே. நான் அன்று அநுபவித்தது கனவா? அல்லது, அதுதான் உண்மை, இந்தக் கல்கத்தாவும் ஸேது யாத்திரையும் கனவுகளா? இந்தக் கனவுகளிலிருந்து ஒரு நாள் விழித்தவுடன், முன் போல் அவளை எதிரே காண்பேனு?

## 8

# மந்திர சக்தி

விடியற்காலை சுமார் ஐந்து மணி இருக்கலாம்.

மிருத்யுஞ்ஜய ஐயர் தம் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த மனைவியை, 'ராதே', 'ராதே' என்று தட்டி எழுப்பினர்.

"அதைப் புதைப்பதற்கு அதற்குள்ளே நாழிகையாய்விட்டதா?" என்று அவள் குறைத் தூக்கமான குரலில் கேட்டாள்.

"ஆய்விட்டதோ இல்லையோ, அது சம்பந்தமாகத்தான், நான் இப்பொழுது கண்ட ஒரு சொப்பனத்தை உனக்குச் சொல்லப் போகிறேன். நன்ருய் விழித்துக்கொண்டு அதைக் கேளு" என்று அவர் சொன்னர்.

இந்த வார்த்தைகளுக்கு முகவுரை ஒன்று அவசியமாக இருக்குமாகையால், அந்த அம்மாள் முணுமுணுத்துக்கொண்டும், தேகத்தை நெளித்துக் கொண்டும், பூரணமாய் விழித்துக்கொள்வதற்குள் அதைச் சொல்லிவிடலாம்.

இந்த விஷயத்திற்கு ஆரம்பம் ஜோசியர் சியாமா சாஸ்திரிகளுடைய வார்த்தைகள். ஒரு நாள் அவர் மிருத்யுஞ்ஜய ஐயருடைய ஜாதகத்

தைப் பார்த்துக்கொண்டு இருக்கையில், "இந்த ஜாதகத்திற்கு மந்திரங்கள் எல்லாம் நன்ருய்ப் பலிக்குமே! சூரியனும் புதனும் ஒன்று சேர்ந்து லக்னத்தில் புதநாராயண யோகம். பன்னிரண்டில் குருவும் சுக்கிரனுமாக இரண்டு சுபர்களும் வலுத்திருக்கிருர்கள்—" என்ருர்.

"என்ன மந்திரங்கள்?"

"எல்லா மந்திரங்களுந்தான்; வசீகரணம், உத்வேஷணம், மாரணம், உச்சாடனம், ஸ்தம்பனம், மிருத்யுஞ்ஜயம் உட்பட, எல்லாந்தான். எதையும் நீங்கள் சாதகம் செய்து உபயோகிக்கலாம்."

"என்ன என்னவோ பெயர் சொல்லுகிறீர்களே, சாஸ்திரிகள்! அதற்கெல்லாம் என்ன அர்த்தம்? அந்த மந்திரங்களை உபயோகித்து என்ன லாபம்?"

இவ்விதம் ஆவலுடன் கேட்டு, அந்தச் செயல்களையும் பிரயோகங்களையும், சாஸ்திரிகளுக்குத் தெரிந்த வரையில் அறிந்துகொண்டார். சாஸ்திரிகள் எழுந்து போனவுடனே, தம்முடைய பார்யையிடம் சென்று, இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்தார்.

"அடீ! எனக்கு எந்த மந்திரமும் பலிக்குமாம், சாஸ்திரி சொல்லுகிருர். நான் இப்போது என்ன

செய்யப்போகிறேன் தெரியுமா? அந்த நரசிம்மன் மேலே நல்ல மந்திரமாய் ஒன்றை உபயோகிக்கப் போகிறேன்" என்று பெருமையுடன் தெரிவித்தார்.

நரசிம்ம ஐயர் இவருக்குப் பங்காளியும் அடுத்த வீட்டுக்காரரும். கிராமத்தில் இவர்கள் இரண்டு பேருமே பெரிய மிராசுதார்கள். இவர்களுக்குள் ஒரு போட்டி உண்டாவது கிராம வாழ்க்கையில் ஒரு சாதாரண சம்பவம். ஆனல் இவர் சாதுவாயும், நரசிம்ம ஐயர் துஷ்டராயும் இருந்ததால், கட்சிகள் சம பலமாக இல்லாமற்போய் ஒரு போட்டியின் எல்லையைத் தாண்டிவிட்டது.

கிராமத்தில் இவர் எது சொல்லட்டும், எது செய்யட்டும், அது பொது நலமானதாக இருந்தாலும், அதை நரசிம்ம ஐயர் எதிர்ப்பார். ஒருவன் ஏழை என்ற அங்கலாய்ப்பினல், அவனுக்கு இவர் உதவி செய்யத் தொடங்கினல், அவனை அழிப்பதற்கு வழியைத் தேடுவார் நரசிம்ம ஐயர். இவர் தம்முடைய தோட்டத்தில் நடமாடிக்கொண்டிருக்கிருர் என்று தெரிந்தவுடனே அவர், வேலிக்கு அடுத்தாற்போல் தம் தோட்டத்தில் நின்றுகொண்டு தம்முடைய வேலைக்காரனைத் திட்டுகிற பாவனையாக, "அடே காமாட்டிப்பயலே, அந்தப் பயலே, இந்தப் பயலே" என்றெல்லாம் சொல்லி, கடைசியில் அழுத்தமாகவும் நிச்சந்தேகமாகவும், "அடே மிருத்யு!" என்று முடிப்பார்.

ஒரு நாள் இவர் தைரியமாக, "என்னதிற்காக என் வேலிக்குப் பக்கத்திலே நின்று கொண்டு, என்னைத் திட்டுகிறாய்?" என்று கேட்டு விட்டார்.

உடனே அவர், "அடே! உன் வேலியா இது! என் வேலி உன் வேலியாய்ப் போய்விடுமோ? எப்படித்தான் போகும் என்று பார்க்கலாம்!" என்று கத்திவிட்டுத் தம் பாத்தியதையை ஸ்தாபிப்பதற்கு அத்தாட்சியாக அதிலிருந்து ஒரு மரத்தையும் வெட்டிவிட்டார். ஆகவே, அதைக் குறித்து இவர் ஒரு வியாஜ்யம் கொண்டுவரவேண்டி இருந்தது. ஆனால் நரசிம்ம ஐயர், தாராளமாகப் பணத்தைச் செலவு செய்து தம் கட்சியில் பொய்ச் சாட்சிகளைத் திட்டம் செய்ததுமன்றி இவருடைய சாட்சிகளையும் கலைத்துவிட்டுக் கோர்ட்டில் ஜயித்துவிட்டார்.

மிருத்யுஞ்ஜய ஐயரோ, பாவம்! தாம் பால்யம் முதல் நட்டு வளர்த்த ஒதியமரங்களும் பூவரச மரங்களும், பல கொடிகளும் சேர்ந்த வேலியை எதிரிக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததைத் தவிர, தாம் பொய்வழக்குக் கொண்டுவந்த ஒரு மனுஷன் என்ற ஸ்திரமான பட்டத்தையும் ஏற்கவேண்டி இருந்தது.

ஆகையால், இப்பொழுது இவர் தம்முடைய விரோதியின் மேல் மந்திரத்தையாகட்டும், வேறே

எதையாகட்டும் உபயோகிக்கப் போவதாகச் சொல்லுவதில் அந்த அம்மாளுக்கு யாதோர் ஆச் சரியமுமில்லை. ஆனால் முதலில் தனக்குள்ள சந் தேகத்தைத் தீர்த்துக்கொண்டாள்.

"மந்திரம் என்றால் என்ன மந்திரமாம்?" என்றுதான் கேட்டாள்.

"இதுகூடத் தெரியாதா, உனக்கு! மந்திரம் என்றால் வசீகரணம், மாரணம், ஸ்தம்பனம், இப் படி எல்லாம் எத்தனையோ இருக்கிறதே! நீ படித்த தில்லையா, கேட்டதுமில்லையா? இப்போது வசீ கரண மந்திரத்தை உன்மேல் உபயோகித்தேனா னல், என்ன ஆகும் தெரியுமோ? நான் என்ன சொன்னாலும், வழக்கப்படி 'சரித்தான், போங்க' 'சரித்தான், போங்க' என்று சொல்லாமல், நீ என் னிடத்தில் பூர்ண விசுவாசம் கொண்டுவிடுவாய். நான் கூப்பிடுவதற்கு முன்னே, ஓடி வந்து நிற் பாய். எப்பவும் நான் சொன்னதையே கேட்பாய். ஊரிலிருக்கிறவர்கள் எல்லோரும் திருஷ்டி போடும் படி 'அவள் எவ்வளவு நல்லவள்!' என்று பேர் எடுப்பாய்—"

"சரித்தான் போங்கோ! இப்போ நரசிம்ம ஐயரை வசியம் செய்ய ஒரு ஜபம் பண்ணப் போகி றேளாக்கும்—"

"சேச்சே! அவன் என் கிட்ட வந்தால்கூடப் பிடிக்காதே. அவனுக்குப் போய் வசீகரணத்தை உபயோகிக்கவா?—"

"அப்படியானல் மாரண ஜபம் செய்யப்போறேளா? மாரணம் என்ருல் கொல்லுகிறது இல்லே? அது பாவமாச்சே—"

"சிவசிவா! அந்த மாதிரிக் காரியம் ஒன்றிலும் நான் பிரவேசிக்க மாட்டேனென்று உனக்குத் தெரியாதா? நான் உச்சாடனந்தான் சாதகம் செய்யப் போகிறேன்—"

"அப்படீன்ஞ என்ன?"

"ஒரு சாஸ்திரிகள் பெண்ணுக்கு இதுகூடத் தெரியாதா? சொல்லுகிறேன் கேளு. உச்சாடனம் என்ருல் அவன் இருக்கிற இடத்தை விட்டு ஓடிப் போகும்படி செய்கிறது. அவ்வளவுதான். அதனல் நமக்கு ஒன்றும் பாவமில்லே. அவன் இருக்கிற இடத்திலேயே இருந்து கொண்டு அவனுடைய விதியை அனுபவிக்கிறதற்குப் பதிலாக, வேறே எங்கேயாவது போய் அதை அனுபவிக்க வேண்டியிருக்கும். அதுதான் நம்ம மந்திரத்தின் சக்தி. இது நாம் துஷ்டர்களுக்குச் செய்யவேண்டிய கடமை, ஒரு பாவமுமில்லே என்று சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. வேண்டுமானல் சுலோகங்களே ஒப்பிக்கிறேன், கேளு—"

"சரி, சரி. உங்களிஷ்டப்படி செய்யுங்கோ. நான் ஒன்றும் தடுக்கவில்லே—"

"கோபித்துக்கொள்ளாதே. அவன் கிராமத்தை விட்டுத் தொலேந்து போனவுடன், உனக்காக வசீகரண ஜபம் பண்ணுகிறேன்—"

"சரித்தான் போங்க."

இவ்விதமே, மிருத்யுஞ்ஜய ஐயர் சாதகம் செய்யத் தொடங்கினர். காஷ்மீரத்திலிருந்து புத்தகத்தைத் தருவித்து, முழுதும் புரட்டிப் பார்த்தார். (புத்தகத்தின் பெயரைச் சொல்ல வேண்டியது இல்லை. அதன் பெயரை உச்சரிப்பதானல், ஸ்நான ஜபங்களை முதலில் நான் செய்யவேண்டும். தவிர அது உங்களுக்கே தெரிந்திருக்கும்) உச்சாடனத்திற்காகக் கைதேர்ந்ததாக எழுதப்பட்டுள்ள பல 'ப்ரிஸ்கிரிப்ஷன்'களைப் படித்தார்.

ஆனல் அவற்றுக்கு வேண்டிய சாமக்கிரிகளைச் சேகரிப்பதுதான் அசாத்தியமாய்த் தோன்றிற்று. ஒன்றுக்கு, ச்மசான பூமியிலிருந்து இடது கால் பெருவிரலின் எலும்பு தேவை; மற்ருென்றுக்குக் காக்கையின் மூளை, அல்லது மாடப்புருவின் ஹிருதயம் அவசியம்; இவ்விதமெல்லாம் இருந்தன.

கடைசியாக, உள்ளதுக்குள்ளே சுலபமான ஒரு பிரயோகத்தைக் கண்டுபிடித்தார். "ஸ்வாத்யாம் ஔடும்பரம் வ்ரத்நம்" என்று ஆரம்பிக்கும் சுலோகத்தின் பிரகாரம், ஓர் அத்திமரத்தின் மேல் முளைத்திருக்கும் புல்லுருவிக் கொடியைச் சுவாதி நக்ஷத்திர தினமன்று பிடுங்கிக் கொண்டுவர வேண்டும், அவ்வளவுதான். மற்றச் சாமான்கள் எளிதில் கிடைக்கக்கூடியவையாக இருந்தன.

ஆனல் அந்தப் புல்லுருவிக்கு எங்கே போவது? அநேக அத்தி மரங்களின் மேல் தேடினர். ஒன்றிலாவது ஒரு புல்லுருவியின் தளிர்கூட இல்லை. புல்லுருவி தாராளமாய்க் கிடைத்தது. ஆனல் வேறு ஜாதி மரத்தின் மேல் படர்ந்ததாக இருந்தது. இந்தக் கஷ்டத்தில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

இக்காலத்தில் எல்லாவற்றிற்கும் விஞ்ஞானிகளின் உதவியே நமக்கு வேண்டியிருக்கிறது அல்லவா? ஜனங்களை ரக்ஷிக்கக்கூடிய 'பென்ஸில்லின்' மருந்தாகட்டும், த்வம்ஸம் செய்யக்கூடிய 'அடாமிக் வெடி' யாகட்டும், விஞ்ஞானிகளே நமக்குக் கதி.

இதை அனுசரித்து அவர், விருட்ச சாஸ்திரத்தில் நிபுணனை தன்னுடைய மருமகனைப் பிடித்தார். ஏதோ ஒரு மருந்துக்கு அந்தப் புல்லுருவி தான் அவசியமென்று அவனிடம் சாதித்து அவனுடைய அனுதாபத்தைச் சம்பாதித்தார். அதன் மேல் அவன் இவருடைய செலவில் பல தந்திரங்களை உபயோகித்து ஓர் அத்தி மரத்தின் மேல் ஒரு புல்லுருவியைப் படரச் செய்துவிட்டான். அதுவும் வேர் யாதொன்றுமில்லாமலே அந்த மரத்தில் ஓடும் ஜீவசக்தியே ஆகாரமாய் உட்கொண்டு வளர்ந்தது. அதைக் கண்ணுக்குக் கண்ணுகக் காப்பாற்றி வந்து, ஒரு சுவாதி நக்ஷத்திர தினத்தில்,

நியமித்த தூபதீபங்களுடன் ஆராதனை செய்து, பறித்தார். பிறகு சாஸ்திரோக்தமாக ஸ்வர்ணம் 10 பங்கு, தாமிரம் 12 பங்கு, வெள்ளி 16 பங்கு கூட்டி உண்டாக்கிய உலோகத்தினல் ஒரு நண்டு வாய்க்காலியின் உருவத்தில் இடுக்கு, கொடுக்கு சகிதம் செய்யப்பட்ட கவசத்தில் அடைத்து விட்டார்.

இனிமேல் எல்லாம் சுலபம். அந்த நண்டு வாய்க்காலியை, வீட்டின் பூஜை அறையில் சுவாமி சந்நிதியில் வைத்துவிட்டு, "ஓம் நமோ பகவதே, உட்டாமரேச்வராய" என்று தொடங்கி "ட: ட:" என்று முடியும் சிறிய மந்திரத்தை ஒரு லட்சம் தடவை ஜபிக்கவேண்டியதுதான். சரியாக இருபத்தாறு நாளில் ஜபித்து முடித்தார். உள்ளே அடைபட்டிருக்கும் புல்லுருவியின் வேகத்தால் கவசம் நன்ருய்க் கறுத்துவிட்டது.

இருபத்தாரும் நாள் இரவு படுக்கப் போகும் பொழுது, "ஜபம் முடிந்துவிட்டது. நாளைக்குச் சுவாதி நக்ஷத்திர மாகையால், நாளைக்கே எப்படியாவது அந்த வேலிக்குள்ளாகப் போய், அவனுடைய நிலத்தில் எங்கேயாவது ஒரு சாண் ஆழத்தில் குழி பறித்து அந்த நண்டுவாய்க்காலியைப் புதைத்துவிட்டு வர வேண்டியதுதான் பாக்கி" என்று தம் பார்யையிடம் தெரிவித்தார்.

"அவன் துஷ்டனுச்சே. பார்த்துவிட்டால், வாங்கும் பழியைப் பிரமாதமாய் வாங்கிவிடுவானே.

என்று எனக்குப் பயமாயிருக்கிறது. நீங்கள் போக வேண்டாம். தைரியசாலியான, ஒரு கெட்டிக்காரக் குடியானவனை அனுப்புங்களேன்" என்றாள் ராதையம்மாள்.

"எதற்காகப் பயம்? நான்தான் பகவான் ஸ்ரீ உட்டாமரேச்வரரை லட்சம் தடவை மந்திரம் ஜபித்து வேண்டிக்கொண்டிருக்கிறேனே. அவர் என்னைக் காப்பாற்றமாட்டாரா, என்ன?" என்று தைரியமாகப் பேசினார். இருந்தாலும் அவருடைய மனசிலும் கவலையும் குழப்பமுந்தான். அவ்விதம் உறங்கப்போனவர், நாம் ஆரம்பத்தில் பார்த்தபடி, ஒரு ஸ்வப்பனத்தைக் கண்டுவிட்டு, தம் பத்தினியை எழுப்பி, அதை அவளிடம் சொல்லத் தொடங்கினார்:

"நான் என்ன கனாக் கண்டேன், தெரியுமா? நான் பாதி ராத்திரியில் விழித்துக்கொண்டமாதிரி தோன்றிற்று. அப்போது திடீரென்று என் மனசில் ஒரு யுக்தி புலப்பட்டது. பஞ்சாங்கத்தின்படி ராத்திரி 42 நாழிகை வரைக்குந்தான் சித்திரை நக்ஷத்திரம். அதற்கு மேல் சுவாதி ஆரம்பித்துவிட்டது. ஆகையால், இப்போதே இருட்டில் போய் அந்தக்கவசத்தை அவனுடைய தோட்டத்தில் புதைத்துவிட்டு வருகிறதுதானே நல்லது? இப்படித் தோன்றியவுடன், எழுந்திருந்து கவசத்தையும் ஒரு சிறிய மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். கதவை ஓசைப்படாமல் திறந்து

கொண்டு கிளம்பினேன். தூற்றல் தூறிக்கொண்டு இருந்தது. குழி பறிப்பதற்கு அது சௌகரியமாகத் தானே இருக்கும். அமாவாசை இருட்டு. இரண்டு மரங்களின் இடுக்கு வழியாக நுழைந்து அப்புறம் சேர்ந்தேன். அவசரம் அவசரமாகக் குழி பறித்தேன். கவசத்தின் முகத்தை, நரசிம்மன் வீட்டில் அவன் தூங்கும் உள்ளைப் பார்க்கும்படியாகப் புதைத்துவிட்டு, போனது போலவே நிச்சப்தமாகத் திரும்பி வந்து படுத்துக்கொண்டு கவலையற்றுத் தூங்கிப் போய்விட்டேன். இதுதான் என்னுடைய சொப்பனம். இப்போது எனக்குத் தோன்றுகிறது என்னவென்றால், இந்தமாதிரி ஒரு கஷ்டமுமில்லாமல் செய்துவிடலாமென்று வழி காட்டுவதற்காகவே, ஸ்ரீ உட்டாமரேச்வரர் இந்தச் சொப்பனத்தைக் காணச் செய்திருக்கிறார். ஆகையால் நான் இப்படியே செய்யவேணும். இன்னும் இருட்டுக் கருக்கலாக இருக்கிறது. புறப்பட்டுவிடட்டுமா?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டுக்கொண்டே விளக்கை ஏற்றின அந்த அம்மாள், "இதென்ன! உங்கள் காலெல்லாம் சேறு பட்டமாதிரி இருக்கு! உங்கள் கையிலும் மண்ணு ஒட்டிக்கொண்டு இருக்கு! உங்கள் வேஷ்டியும் ஈரமாயிருக்கே!" என்று ஆச்சரியப்பட்டாள்.

அவருக்கோ, தம்முடைய ஆச்சரியத்தை வெளியில் சொல்லிக் காட்டுவதற்குக்கூடச் சக்தி இல்லை. பேந்தப் பேந்த விழித்தார். அந்த அம்மா

ளுக்கு ஓர் எண்ணம் தோன்றி, அடுத்த அறைக்குப் பாய்ந்து போய்த் திரும்பிவந்து, "சுவாமி சந்நிதியில் கவசத்தைக் காணேம். நீங்கள் கனுத்தான் கண்டீர் களா, அல்லது இப்போ சொன்னமாதிரி யெல் லாம், காரியத்தையே முடித்துக்கொண்டு வந்தூட் டீர்களா?" என்று கேட்டாள்.

அவர், பாவம், என்ன பதில் சொல்லுவார்! "எல்லாம் ஸ்ரீ உட்டாமரேச்வரருக்குத்தான் வெளிச்சம். அவருடைய செயல்தானே எல்லாம்!" என்ருர்.

அச்சமயத்தில் வீட்டு வாசற்கதவை வேலைக் காரன் தட்டுகிற சப்தம் கேட்டு, கதவைத் திறக்க அந்த அம்மாள் எழுந்து போனுள். அதைத் திறந்து "என்ன சமாசாரம்?" என்று விசாரித்தாள்.

"என்ன கேட்டீங்களா! அடுத்த வீட்டு ஐயா ராத்திரி உறங்காமலே படுக்கையிலே விழிச்சிக்கிட்டு இருந்தாங்களாம். அவுங்க தோட்டத்திலே யாரோ திருடன் வந்து என்னத்தையோ புதைச்சானும். நல்லாப் புதைச்சூட்டு போவட்டும் என்னு ஒன்னும் சொல்லாமலே கம்மென்னு இருந்தாங்களாம். அவன் புதைச்சூட்டு, வேலிக்குள்ளாலே நம்ம தோட்டத்தின் வழியாகத்தான் போனுனும். அப் பறம், அந்தப் புதையலைத் தான் எடுத்துக்கலாம் என்னு அந்த ஐயா ரகசியமாய்ப் போய் அதே இடத்தில் தோண்டிப் பார்த்தாங்களாம். அப்போ அந்த வேலியிலிருந்த ஒரு கறுத்த நண்டுவாக்களி

ஐயா சோத்துக் கையிலே நன்னுப் பிடுங்கிடுச்சாம்'' என்றான்.

"அப்புறம் என்ன ஆச்சு?"

"என்ன ஆவறது, மந்திரிச்சுப் பாத்தாங்களாம், மருந்து போட்டுப் பாத்தாங்களாம். கேக்கலே; அப்பறம் ஊரிலே பெரிய டாக்டர் வந்திருக்காரு, இப்போ. அவர் சொல்றாராம். இந்த மாதிரி விஷம் அவர் கண்டதேயில்லையாம். கைக்குள்ளே புரையேறிக்கிட்டே போயிடுத்து. 'கஸ்பா ஆஸ்பத்திரிக்கு இப்பவே கொண்டு போய், சோத்துக்கையை ஜாடாவா வெட்டி எடுத்துடணம். அப்புறங்கூட ஒரு வருஷத்துக்கு, நீரு, வயக்காடு, ஆத்தங்கரை இல்லாமே கட்டாந்தரையாய்க் காஞ்சு கிடக்கிற இடத்திலே போயிருந்தாத்தான் சயரோகம் இல்லாமே சௌக்கியமாய்ப் போவும்'னு சொல்றாராம். இப்போ ஐயாவை எடுத்துக்கிட்டுப் போறாங்க."

ராதையம்மாள் சற்று நேரம் பிரமித்து நின்று விட்டு, அங்கிருந்தபடியே, "சீனன் சொல்றது உங்களுக்கு எல்லாம் கேட்டுதா?" என்றாள்.

"நன்றாய்க் கேட்டது" என்றார்.

கிராமம் முழுவதும் நல்லவர் என்று பெயர் எடுத்திருந்தும், அவருடைய குரலில் கொஞ்சமாவது பச்சாத்தாபம் த்வனிக்கவில்லை.

அவர் மேலும் சொன்னார்: "சரி, இப்பொழுது உச்சாடன மந்திரம் பலிக்கிறது என்று நிச்சய மாய்ப் போய்விட்டது. அடுத்தாப்போல், வசீகரண மந்திரத்தையும் ஒரு ஆசை பார்த்துவிடலாம்; எங்கே, அந்தப் புஸ்தகத்தைக் கொண்டுவா!" என்று.

"சரித்தான், போங்கோ" என்றாள் அந்த அம்மாள்.

# 9

# குற்றாலம்

சற்று முன்புதான் குற்றாலத்தில் ஒரு சிநேகிதருடைய பங்களாவில் வந்து இறங்கினேன். காலை சுமார் எட்டு மணி இருக்கும். வெயில் கிளம்புவதற்கு முன்பாகவே அருவியைச் சேரவேண்டுமென்கிற எண்ணத்துடன், மேல்துண்டும் சோப்புப் பெட்டியுமாக ரஸ்தா வழியாக நடந்துகொண்டிருந்தேன். ரஸ்தா முடிவுக்கு வருகிற இடத்தில் கற்படிகள் உள்ள புல்முளைத்த ஒரு சிறு மேடு இருக்கிறதல்லவா; அங்கேதானே தெருவும் வந்து சேருகிறது? நான் அந்த மேடை அடையும் சமயத்தில் தெரு வழியாக நடந்துவந்த ஒரு கட்டழகியும் அங்கு வந்து சேர நேரிட்டது.

"பரிசயம் இல்லாத ஸ்திரீகளுடன் வலுவில் பேசுகிற அதிகப்பிரசங்கி என்று என்னை எண்ணிவிடக்கூடாது" என்று தொடங்கினேன். "இவ்விதம் நான் பேசத் துணிவதற்குக் காரணம் உங்களை முன்பே அறிந்திருப்பதாக ஒரு பலத்த எண்ணம் என் மனசில் ஜனிக்கிறது. இருந்தாலும் ஸ்நானத்திற்குப் போவதற்காக நான் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு வந்திருப்பதால் தைரியமாகச் சொல்லமுடியவில்லை—"

"என்ன ஆச்சரியம்!" என்று அவள் முறுவலித்தாள். "உங்களைத் தூரத்தில் கண்டவுடனே எனக்கும் உங்களைக் குறித்து அதேமாதிரி நம்பிக்கைதான் கிளம்பியது. ஆனால் இச்சமயம் உங்களுடைய பெயரைச் சொல்லி அழைக்க முடியவில்லை—" என்று இழுத்தாற்போல் சொன்னாள்.

(என்ன சாமர்த்தியம்! தன்னுடைய பெயரை வெளியிடாமலே, என்னுடைய பெயரை மாத்திரம் கிரகிக்கப் பார்க்கிறாள்! ஆகட்டும்! இந்த ஆட்டத்தில் இவளுக்கு நான் சளைக்கிறேனா, பார்க்கலாம்!)

"ஒருவருடைய பெயர் எதுவாக இருந்தால் என்ன?" என்றேன். "வாஸ்தவத்தில், இனிய ஓர் ஸ்திரீயைக் கண்டால் அவளுடைய பெயரை அறிந்து கொள்ளாமலிருக்கும்படியே நான் முயற்சி செய்பவன். ஏனென்றால் அவ்விதம் உள்ள வரைக்கும், பெற்றோர் இட்ட பெயரைக் காட்டிலும் அழகாய் அவளுக்குப் பொருந்தக்கூடிய பெயர்களாக நான் ஒவ்வொன்றாய் இட்டுப் பார்க்கலாமல்லவா? இவ்விதம் நீங்கள் தனியாகப் போய்க்கொண்டிருப்பதைக் காணும்போது இப்பொழுதுதான் நளனை விட்டுப் பிரிந்த தமயந்தியோ என்று ஆலோசித்தேன்—"

"நீங்கள் வாசித்த கதையில் தமயந்தி கொள்ளேகாலத்துச் சேலையை அணிந்து புறப்பட்டாளோ?" என்று சிரித்தாள்.

"இல்லே, ஆனுலும் நீங்கள் கணவனேடு கூட இல்லாமல் தனிமையாகப் போவதையும், என் கண்ணில் தென்பட்ட சமயம் நெற்றியைச் சிணுக்கிக்கொண்டிருந்ததையும் சேர்த்துப் பார்த்தால், பிரிந்திருக்கும் பர்த்தாவின்மேல் கோபித்திருக்கும் மற்ருெரு தமயந்தி என்று ஏன் உங்களே வர்ணிக்கக்கூடாது? நீங்கள் என்ன, அழகில் அவளுக்குக் குறைந்தவளா? அல்லது அவள் மாதிரி சாமர்த்தியமாய்ப் புருஷனேக் கண்டுபிடித்துவிடமாட்டீர்களா, சொல்லுங்கள்."

(இந்த ஆட்டம் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. கூடிய மட்டும் சாதுரியமாகத்தான் பேசிக்கொண்டு வருகிறேனென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் ஏதத்சமயம் எனக்கு ஐந்து மார்க்கு கொடுத்துக்கொள்ளுகிறேன்.)

"நான் முகவருத்தத்துடன் தனியாக வந்ததற்குக் காரணம் வேண்டுமா? இந்தக் கஷ்டத்தைக் கேளுங்கள். என் புருஷர் இரண்டு நாட்களுக்கு முன்பே என்னே இந்த ஊருக்குச் சில பந்துக்களுடன் அனுப்பினுர். தாம் அடுத்தாற்போலே, சிநேகிதர்களுடன் மோட்டார்காரில் வருவதாகச் சொன்னுர். ஆனல் இரண்டு நாளாகியும் வந்துசேரவில்லே. எனக்கு என்ன வேதனேயாயிருக்கும், நீங்களே சொல்லுங்கள். ஊருக்கு வந்ததுமுதல் நானும் தெருவையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, இன்றைக்குத்தான் அருவியில் ஸ்நானம்

செய்யலாமென்று புறப்பட்டேன். ஆனது ஆகட்டு மென்று தனியாகப் புறப்பட்டேன்."

"ஒருவேளை மோட்டார் வண்டியில் தப்பு ஏற் பட்டுத் தவக்கப்பட்டிருக்கலாம். நீங்கள் இறங்கி யிருக்கும் ஜாகை தெரியாததால், தந்தியும் அடிக்க முடியாமலிருந்து இப்பொழுது அவர் உங்களைத் தேடிக்கொண்டிருக்கலாம்."

"அதிசயந்தான்! புருஷர்களுக்குப் புருஷர் களாகப் பரிந்து பேசவேண்டாம். இந்தக் குற்று லத்திற்குள்ளே தேடுவதற்கு எத்தனை நாழிகை பிடிக்கும்? என்ன கஷ்டம்? லங்கையில் அடை பட்ட ஸீதையைக்கூட ராமர் கண்டுபிடித்துவிட வில்லையா?"

"பார்த்தீர்களா! இந்தக் காரணங்களினால் சீதாதேவி என்று இன்னொரு பெயர்கூட உங்க ளுக்கு என் மனசுக்குள் வைக்கலாம்!"

"ஏன்? முன்பின் தெரியாத ஹநுமான் வந்த வுடன் ஸீதை அவரோடு விசுவாசமாய்ப் பேசின மாதிரி நான் உங்களுடன் ஸங்கோசமில்லாமல் பேசுகிறேனே, என்று? இது ஸீதைக்காவது எனக்காவது ஒரு வழக்கமென்று எண்ணிவிடக் கூடாது."

(ஏதடா இது! இந்த ஆட்டம் கோணிக் கொண்டு போகிறதே! இவ்வளவு சுலபமாக

என்னை ஒரு ஹநுமாஞக்கிவிட்டாளே! இவளுக்குப் பதினைந்து மார்க்கு. இருந்தாலும் ஒரு கை பார்க்கலாம், முதுகில் அடிபடவில்லைபோலவே நடித்துப் பேசுகிறேன்.)

"அப்படி வழக்கமாய்த்தான் இருக்கட்டுமே! போயும் போயும் நான் ஏன் அதை நிந்திக்கப் போகிறேன்? அதனல்தானே உங்களுடைய இனிய மொழிகளைக் கேட்கும் ஆனந்தத்தை நான் அனுபவிக்கிறேன்"

(போகிறது. ஒரு ஸ்தோத்திரத்தைக் கொடுத்தாவது எப்படியோ தப்பித்துகொண்டுவிட்டேன். எனக்கு இன்னும் ஐந்து மார்க்கு. இருந்தாலும் பேச்சை மாற்றிவிடுவதே நல்லது.)

"நீங்கள் இதற்குமுன் இந்த ஊருக்கு வந்திருக்கிறீர்களோ?"

"வந்ததில்லை. சரியான காலத்தில் இங்கே வெகு இன்பமாய் இருக்குமென்று சொல்லுகிருர்களே?"

"இன்பமா? அந்த ஒரு வார்த்தைதான உங்களுக்குச் சொன்னர்கள்? இது சாதாரண ஓர் இடமா? அருவியையும் தூவானத்தையும் தேவேந்திரன் தன்னுடைய ஸ்டாக்கிலிருந்து இந்த ஊருக்காகப் பொறுக்கி அனுப்புகிருனம்."

"அப்படியா!"

"ஆமாம், இந்த இரண்டும் சம்பந்தப்பட்ட வரையில் இவ்விடத்தை இந்திரலோகத்திற்கு ஒரு ப்ராஞ்சு ஆபீஸ் என்றே சொல்லுவேன்."

"இதைக் கேட்க எனக்கு வெகு சந்தோஷமாக இருக்கிறது. அருவிக்கு இப்பொழுதே போகிறேன்—"

"அவசரப்படாதேயுங்கள். என்னை விட்டு ஓடிப்போவதற்காகவா குற்றாலத்தின் மகிமையை உங்களுக்குச் சொல்லுகிறேன்". இந்த ப்ராஞ்சில் வியாபாரம் செய்ய வேண்டுமானல் ஒரு கண்டிஷன் உண்டு."

"அதென்ன கண்டிஷன்?"

"மிகவும் கடினமானது."

"இருக்கட்டும், சொல்லுங்களேன்."

"இங்கே தனிமையாக வசிப்பதில் யாதொரு பயனுமில்லை. ஒவ்வொருவரும் தகுந்த பர்த்தாவுடனே, அல்லது ஏற்ற மனைவியுடனே இருந்தால் மட்டுமே இங்கே இன்பமாக இருக்கும்."

"—பேச்சைச் சரியான வழிக்குத் திருப்பி விட்டேன். எனக்கு இன்னும் ஐந்து மார்க்கு. ஆக இருவருக்கும் மார்க்குகள் சரி."—

"பேச்சைத் திருப்பவாவது, மார்க்காவது, எனக்கு ஒன்றும் புரியவில்லையே?"

"அது என்னவோ மனசுக்குள் பேசிக்கொள்ளுவதை அவசரத்தில் வெளிப்படையாய்ச் சொல்லி விட்டேன். அதைக் கவனிக்க வேண்டாம். சம்பாஷணையின் ரூல்படி நீங்கள் இப்பொழுது என்னைக் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்ருல் என்னுடைய அபிப்பிராயத்தில் ஒரு சரியான மனைவி எப்படி இருப்பாள் என்பதே."

"அது ஒன்றும் எனக்கு வேண்டாம். சரியான கணவன் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்பதை—"

"ஓர் உயர்ந்த மனைவியானவள் சில சமயம் தமயந்தியைப்போல் நடப்பாள்; சில சமயம் ஸீதையைப்போல் பேசுவாள். புருஷனுடைய அற்பப் பிழைகளைக் கவனிக்காமலே மன்னித்துவிடுவாள். உருவத்தில்–"

"இது எனக்கு வேண்டாம். பர்த்தாவுக்கு இருக்கவேண்டிய விசேஷங்களை வர்ணியுங்களேன். ஏன் தயங்குகிறீர்கள்? அது வெகு கஷ்டமோ?"

"ஹூம்! ஒரு கஷ்டமும் இல்லை."

"அப்படியானல் சொல்லுங்களேன்."

"ஒரு க்ஷணத்தில் சொல்லுவேன், திருஷ்டாந்தமும் காண்பித்துவிடுவேன். ஆனல் என் விநய சுபாவம் குறுக்கே கிடக்கிறது."

"ஐயோ, பாவம்! உங்களுடைய விநயத்தைத் தட்டி எழுப்பவேண்டாம். என்னுடைய வெகுளித்

தனத்தை நீங்கள் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, மனசிலுள்ளதை நானுகவே சொல்லிவிடுகிறேன். எனக்கு மாத்திரம் ஏற்கனவே விவாகம் ஆகாமலிருந்தால், நான் உங்களைத்தான் மணம் புரிவேன். போதுமா?''

"உங்களை நான் இன்றைக்குப் பார்த்தவுடன் என்ன நிச்சயம் செய்தேன், தெரியுமோ? எனக்கு மாத்திரம் ஏற்கனவே ஒரு பார்வை இல்லாது போனுல், நான் இன்றைக்கே உங்களைக் கல்யாணம் செய்துகொண்டுதான் மறுகாரியம் பார்ப்பேன்.''

"சரி. அந்யோந்ய ஸ்தோத்திர பாடமெல்லாம் திருப்தியாய் முடிந்துவிட்டதே? இனி அவரவர் காரியத்தைப் பார்க்கச் செல்லலாமல்லவா?''

"எல்லாம் முடியவாவது! அவரவர் காரியமாவது! இனிமேல்தானே நம்முடைய காரியத்தை ஆரம்பிக்கவேண்டும். நமக்கு முகூர்த்தம் பார்க்கச் சொல்லவேண்டாமா?''

''முகூர்த்தம் எதற்காக?''

"நமக்கு ஏற்கனவே பிறருடன் கல்யாணம் ஆயிராதபோனுல், ஒருவரை ஒருவர் இப்பொழுது விவாகம் செய்துகொள்ளத்தான்.''

"அழகாய் இருக்கிறது? இப்படிப் போய் ஒரு முகூர்த்தம் பார்க்க யாராவது சொல்லுவார்களா?

சொன்னுலும் ஜோசியர்கள் சிரிக்கமாட்டார்களா?''

"சிரிப்பார்களென்ரு உங்களுக்குத் தோன்றுகிறது?''

"சந்தேகமில்லை.''

"போகட்டும். அப்படியானல் அவர்களுக்கு நம்முடைய பணத்தைக் கொடுக்க வேண்டாம். நாமே முகூர்த்தம் பார்த்துக்கொள்ளலாம்.''

"நாம் எப்படிப் பார்க்கிறது? உங்களுக்கு ஜோசியம் தெரியுமா?''

"ஜோசியம் எதற்காக? நூற்றெட்டுக்குள் ஒரு தொகையைப் பொறுக்கி, பன்னிரண்டினல் வகுத்து வழக்கப்படிக் கணக்குப் போடவேண்டியதுதானே?''

"சரி, நீங்கள் ஒரு தொகையைச் சொல்லுங்கள்.''

"நூற்ருென்பது.''

"நூற்றெட்டுக்கு உள்ளே அல்லவா சொல்ல வேண்டியது?''

"ஆமாம். இருந்தாலும், ஜோசியர்களாகட்டும், சிநேகிதர்களாகட்டும், நூற்றெட்டுக்குள்ளே ஒரு தொகை சொல்லு என்று எப்பொழுது என்னைக் கேட்டாலும், நூற்ருென்பது என்றே சொல்லி அவர்களுடைய கணக்கைப் பாழாக்குவது எனக்கு

வழக்கமாய்விட்டது. இனிமேல் திடீரென்று அதை எப்படி மாற்றுகிறது?"

"இப்படி ஒரு வழக்கமா? அப்படியானால் நீங்கள்தாம் கொனஷ்டையாக இருக்கவேண்டும்! உங்களுடைய பெயரைக் கண்டுபிடித்துவிட்டேன் அல்லவா? எனக்கு எத்தனை மார்க்கு? நூற்றுக்கு நூறுதானே!"

"நான்தான் அப்பொழுதே சொல்லிவிட்டேனே, நீங்கள் தமயந்தியைக் காட்டிலும் சாமர்த்தியசாலி என்று! இப்பொழுது நீங்கள் ஒரு தொகை சொல்லுங்கள்."

"இருநூற்றுப் பதினெட்டு."

"இதுமாத்திரம் நூற்றெட்டுக்கு உள்ளே ஒரு எண்ணோ?"

"இல்லை. ஆனால் நான் எப்பொழுதும் நீங்கள் காட்டும் வழியிலேயே போவது, முடியுமானால் இரண்டு பங்கு தூரம் போவது வழக்கம்."

"அப்படியானால் நானும் கண்டுபிடித்துவிட்டேன். மூக்குக்கண்ணாடி இல்லாமலே கண்டுபிடித்துவிட்டேன். நீதான் ஏற்கனவே மேளதாளத்துடன் நான் திருமங்கல்யம் கட்டின என் பாரியை லலிதா. அடாடா! இத்தனை நாழியாக, உன்னை 'நீ' என்று ஏகவசனமாகப் பேசாமல் 'நீங்கள்' 'நீங்கள்' என்று

பேசி ஊரிலுள்ள பன்மைச் சொற்களையெல்லாம் வீணாக்கினேனே! அதற்கு என்ன செய்வது? அதை முதலில் சொல்லு!''

“அது போனால் போகட்டும். நாம் இன்னொரு தடவை கல்யாணம் செய்துகொள்ளுகிற செலவுக்கு வழிவைக்காமல் சகுந்தலையின் மோதிரம் திரும்பிக் கிடைத்த மாதிரி நாம் ஞாபகமாய் ஒருவரை ஒருவர் கண்டுபிடித்துவிட்டோம் அல்லவா? அது ஒரு லாபந்தானே!''

வாஸ்தவம். ஆகையால் அந்த லாபத்தை நினைத்துக்கொண்டு, அந்தச் சந்தோஷத்தினால் கை கோத்தபடியே அருவிக்குச் சென்றோம்.

# 10

# அரைகுறைக் கதைகள் - 2

## சுயம்வரம்

முதல் பாகம்

சென்னபட்டணத்திலிருந்து டில்லிக்குப் போகும் ரெயில் வண்டியில் இன்று காலையில் ஒருவன் கிளம்பினால் நாளைக் காலையில் வர்தாவுக்குப் போய்ச் சேரலாம். அதன்மேல் நம்முடைய பிரயாணி, "இப்பொழுது டில்லியில் அவசர காரியம் ஒன்றுமில்லை; இங்கே அருகில் உள்ள புண்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்துவிட்டு நாலு நாட்களுக்குப் பிறகு டில்லிக்குப் போனால் போதும்" என்று எண்ணுவானாகில், இப்படிச் செய்வதால் நல்ல பலன் அடைவான். வர்தாவில் வண்டி மாறி அங்கிருந்து பம்பாய்க்குப் போகும் வண்டியில் ஏறி, சுமார் 100 மைல் தூரம் மேற்கே சென்றால், ரெயில் பாதைக்குச் சுவல்ப தூரத்தில் 'பூர்ணா' என்கிற நதி கூடவே ஓடி வருவதைக் காணுவான். இந்திய பூமியில் இப்பெயருடன் மூன்று நதிகள் உண்டு. அவைகளில் இதுதான் பிரசித்தி பெற்றது. முன் காலத்தில் இதற்குப் பெயர் பயோஷ்ணி.

பஞ்சபாண்டவர்கள் வனவாச காலத்தில் இந்த நதிக்கரைக்கு வந்தார்கள். அப்பொழுது இந்நதி

யின் மாகாத்மியத்தையும் இது சம்பந்தமான ஓர் அருமையான கதையையும் அவர்களுக்கு லோமச ரிஷி, மகாபாரதத்தில் வன பர்வத்தில் 123-வது அத்தியாயத்தில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

இதன் கரையில் ச்யவனர் என்கிற ரிஷி வெகு காலம் கடுந்தபசு செய்துகொண்டிருந்தார். அவரைச் சுற்றிக் கரையான் மூடிவிட்டது. இரண்டு துவாரங்கள் மூலமாகக் கண்கள் மாத்திரம் காணப்பட்டன. ஒரு நாள், இந்நதியில் ஸ்நானம் செய்வதற்காக, சர்யாதி என்கிற அரசன் தன்னுடைய பெண் ஸுகன்யாவை அழைத்துக்கொண்டு பரிவாரங்களுடன் இங்கே வந்து சேர்ந்தான். (இந்த இடத்தில் நான் ஒரு வாக்கியத்தைச் சேர்க்க விரும்புகிறேன். லோமச ரிஷி ஸுகன்யாவின் பெயரை வெளியிடுவதற்கு முன்பே அவளுடைய புருவங்களின் அழகை வர்ணிக்கிறார்.) நதிக்கரையில் உலாவிவந்த ஸுகன்யா, பட்டுப் போய்க் கறையான் பிடித்திருக்கும் மரத்தண்டு மாதிரித் தோன்றும் ச்யவனரைக் கண்டாள். "இதென்ன! இரண்டு துவாரங்கள் மூலமாக என்னவோ தெரிகிறதே!" என்கிற ஆச்சரியத்துடன், ஒரு நீண்ட முள்ளை எடுத்து ச்யவனருடைய கண்களைக் குத்தினாள். உடனே அவருக்கு மகாகோபம் வந்துவிட்டது. அதனுடைய பலனாகச் சர்யாதி ராஜாவின் பரிஜனங்கள் எல்லோருக்கும் ஓர் அபூர்வ உதர நோய் கண்டு வயிறு உப்பிவிட்டது.

அதன்மேல் அரசன் துக்கித்து, இச்சம்பவத்தின் காரணம் என்னவென்று ஒவ்வொருவரையும் விசாரித்து வருகையில், ஸுகன்யா தான் கண்டதைச் சொல்லி, பிரகாசமாய்த் தோன்றியது மின்மினிப் பூச்சியாக இருக்குமென்று தான் எண்ணி முள்ளினுல் குத்தியதையும் வெளியிட்டாள்.

அரசன் உடனே ச்யவனரிடம் ஓடிவந்து, நடந்ததை ஒப்புக்கொண்டு, மன்னிப்பைக் கோரினுன்.

அதற்கு ச்யவனர், "சரி, ஆனுல் இந்தப் பெண் தன்னுடைய இறுமாப்பினுல் அல்லவா இவ்விதம் எனக்குத் தீங்கு செய்தாள்? இவளையே நான் விவாகம் செய்துகொண்டு, அதன்பிறகே இவளை மன்னிப்பேன்" என்று சொன்னுர்.

அரசன் அவ்விதமே சம்மதித்து, பெண்ணைத் தானம் செய்து கொடுத்துவிட்டு, முன்போல் தேக சௌக்கியத்தை அடைந்த தன்னுடைய பரிவாரங்களை அழைத்துக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

ஸுகன்யா தன்னுடைய புருஷனுடன் சந்தோஷமாய்க் காலம் கழித்து வந்தாள். ஒரு நாள் தேவலோகத்திலிருந்து இரண்டு அசுவினிதேவதைகளும் அந்த ஆச்ரமத்திற்கு வந்தார்கள். அவளுடைய ஒப்பற்ற லாவண்யத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவளுடைய சரித்திரத்தை அவளைக்கேட்டு அறிந்து

கொண்டார்கள். பிறகு அவர்கள், "உனக்கு நிகராகத் தேவலோகத்தில்கூட எவரும் இல்லையே? நீ இந்தக் கிழக் கணவனுடன் இன்பமில்லாத வாழ்வைச் சகிப்பானேன்? அவனை விட்டு விட்டு எங்களில் ஒருவரைக் கணவனாக ஏற்றுக்கொள்" என்று சொன்னார்கள்.

அதற்கு அவள், "இவ்விதம் என்னைக் குறித்து எண்ணாதேயுங்கள். நான் என் பர்த்தாவிடத்தில் பாசம் கொண்டவள்" என்று மறுத்துவிட்டாள்.

ஆனால் அவர்கள் அதனுடன் விட்டுவிடவில்லை. "அப்படிச் சொல்லிவிடாதே. உன்னுடைய பர்த்தாவை அழகு சொரியும் வாலிபனாக நாங்கள் மாற்றி விடுகிறோம். அதன் பிறகு எங்கள் மூவருக்குள் யார் இஷ்டமோ அவரைக் கணவனாகக் கொள். இதற்குச் சம்மதமா என்று அவரைக் கேள்" என்றார்கள்.

இதை அவள் ச்யவனரிடம் தெரிவிக்கவே, அவர் அப்படியே ஆகட்டுமென்று சம்மதித்தார்.

அதன்மேல் அசுவினி தேவதைகள் அவரை முதலில் இந்த நதியில ஓர் இடத்தில் முழுகி ஸ்நானம் செய்யச் சொன்னார்கள். தாங்களும் கூடவே மூழ்கினார்கள். மூவரும் ஒரேமாதிரியான, கண்களைப் பறிக்கும் உருவத்துடன் வெளிக் கிளம்பினார்கள். அப்பொழுது ஸுகன்யா தன்னுடைய மனத்தை

யும் புத்தியையும் சரியாகச் செலுத்தி ச்யவனரையே பொறுக்கி எடுத்துவிட்டாள். அதுமுதல் அந்தத் தம்பதிகள் தேவர்களைப்போல் ஆனந்தமாய் ஜீவித்தார்கள். தமக்கு வாலிபத் தன்மையைச் சம்பாதித்துக் கொடுத்ததற்காக, ச்யவனர் அசுவினி தேவதைகளிடத்தில் நன்றி பாராட்டி, அவர்களை மதிப்புக் குறைவாய் எண்ணின தேவேந்திரனையும் அவர்களைக் கண்யம் செய்யும்படி பண்ணி வைத்தார்.

இவ்விதம் இருக்கிறது, மகாபாரதத்திலுள்ள விருத்தாந்தம். ஆனல் பயோஷ்ணி நதியில் அதன் பிறகு லக்ஷக்கணக்காய் ஜனங்கள் ஸ்நானம் செய்து வருகிருர்கள். ஒருவருக்காவது யௌவனம் திரும்பிக் கிடைத்ததாகப் பிரஸ்தாவமே இல்லை. பஞ்ச பாண்டவர்களுக்குக்கூட அந்தப் பலன் கிடைத்ததாகச் சொல்லப்படவில்லை. லோமசரும் தாம் அதை அடைந்ததாகச் சொல்லிக்கொள்ளவில்லை.

ஆயுர்வேதப் புஸ்தகங்களைப் பார்த்தாலோ, அவைகளில், தேவலோக வைத்தியர்களான அசுவினி தேவதைகள் ச்யவனருக்காக ச்யவன ப்ராசம் (ப்ராசம் என்ருல் ஆகாரம்) என்கிற உணவு போன்ற ஒரு லேகியத்தைச் செய்து கொடுத்ததாகவும், அதனலேதான் அவருக்கு யௌவனம் கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. ஆனல், இந்நாட்களிலே ச்யவன ப்ராசம் என்கிற மருந்து இருமல் முதலிய வியாதிகளைச் சுவஸ்தம் செய்கிறதே

யொழிய, வீசைக்கணக்காக அதைச் சாப்பிட்டிருப்பவர்களுக்குக்கூட, ஆன வயசைக் குறைத்து விடுவதாகக் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை.

தவிர, பரோபகாரிகள் என்று பெயர்பெற்ற அசுவினி தேவதைகள், ஒரு ஸ்திரீயிடம் சென்று அவளுடைய கணவனைத் தள்ளிவிடும்படி அவ்விதம் பேரம் பேசுவது ஒத்து இருக்கிறதா? மேலும், கிழக் கணவனை நீக்கிவிட ஒரு ஸ்திரீயைச் சம்மதிக்கச் செய்வதற்கு, அவனை வாலிபனாக மாற்றித் தருவதா வழி?

ஸுகன்யாவின் விளையாட்டுப் புத்திதான் என்ன? விவாகம் ஆகக்கூடிய வயசு நிறைந்த ஒரு பெண்ணுக்கு, மின்மினிப் பூச்சியைக் கண்டால் உடனே முள்ளைத் தேடி அதைக் குத்தும்படி தோன்றுமா?

இம்மாதிரி சந்தேகங்கள் பல உண்டாகின்றன. ஆனால் புராணம் பொய்யாக இருக்காது. இதற்கெல்லாம் சரியான சமாதானம் இருக்கத்தான் இருக்கும். அது என்னவென்று தெரியாமல் நான் சங்கடப் பட்டுக்கொண்டு இருக்கையில், ஓஹையோ சர்வகலாசாலையின் ஸம்ஸ்க்ருத பண்டிதரான அலோயா. என். பிம்பிள் என்கிற வித்வான் நம் நாட்டிலுள்ள புராதன ஏடுகளைத் தேடிக்கொண்டு சென்னபட்டணம் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். இவர் ஆராய்ச்சியில் நிபுணர்.

யயாதி தேவயானி விஷயத்தில் இவர் தைரியமாய்ச் சிக்கறுத்ததை ஆராய்ச்சி உலகத்தார் எளிதில் மறக்க மாட்டார்கள். ஆகையால் எனக்கு இவருடன் பழக்கமில்லை யென்றாலும் அமெரிக்கன் சம்பிரதாயப்படி அவருக்கு டெலெபோன் செய்யத் துணிந்தேன். என்னுடைய சந்தேகங்களை விஸ்தரிக்க யத்தனித்தேன். அதற்குள் அவர், "ச்யவனருடைய விருத்தாந்தமா? அதன் உள் மர்மம் ஒரு நவீனத் துப்பறியும் கதையைக் காட்டிலும் ரஸமானது. அதற்கு ஸுகன்யாவின் பெயர்தான் திறவுகோல். அதை உபயோகித்து, "விசித்திர தீபிகா" வைப் படித்தால், எல்லாம் 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளங்கும்" என்று சொல்லி, டெலெபோனை மூடிவிட்டார்.

ஸுகன்யாவின் பெயர் எவ்விதம் ஒரு திறவு கோலாக உதவும்? ஸம்ஸ்கிருதத்தில் ஒவ்வொரு மெய்யெழுத்திற்கும் 'கடபயாதி சங்க்யை'ப் பிரகாரம் ஒரு விலை உண்டு என்பது மாத்திரம் அறிவேன். அவ்விதம், ஸு (7), க (1), ன் (0), யா (1), ஆக எல்லாம் கூட்டினால் 9; இதைப் பிடித்துக் கொண்டு 'விசித்திர தீபிகா' வின் ஒன்பதாவது அத்தியாயத்தில் தேடினேன். அதைத்தான் ஓர் எழுத்தும் விடாமல் மொழிபெயர்த்து இந்தக் கட்டுரையின் இரண்டாவது பாகமாக அடியில் எழுதியிருக்கிறேன்.

## இரண்டாவது பாகம்

# விசித்திர தீபிகா

### அத்தியாயம் 9

அன்று கார்த்திகைப் பண்டிகை தினம். வஞ்சனை யில்லாமல் பிரகாசிக்கும் பூர்ண சந்திரன் மனிதர்களுக்கு மன உல்லாசத்தைப் பொழிந்துகொண்டிருந்தான். ஆகாயம் மேகத் துண்டுகளை ஒன்று விடாமல் பெருக்கிப் போக்கடித்துவிட்டு நிர்மலமாய்க் காணப்பட்டது. அச்சமயம் கண்களைப் படைக்கப்பெற்றிருப்பதே ஓர் ஆனந்தமாக இருந்தது. அத்துடன் மிருதுவாக வீசும் மலய மாருதம் தேகத்தின்மேல் படவே, கிழவர்களுக்குக்கூட, நாடியின் வேகமும் தெம்பும் சுவல்பம் அதிகரித்துத் தாங்கள் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பாக விதியினிடமிருந்து கைக்கொண்ட வெற்றிகளை ஞாபகப்படுத்திக்கொண்டு அவைகளை மறுபடியும் அநுபவிப்பதுபோல் அவர்கள் எண்ணும் தருணம். பந்தயக் குதிரைமாதிரி துள்ளும் நாடி படைத்த வாலிபர்களையோ, அவர்கள் அறியாத ஏதோ ஓர் உணர்ச்சி கிளம்பி, இன்னதுதான் செய்யவேண்டுமென்று தெரியாமலே எதையாவது செய்யும்படி ஓட்டிக்கொண்டிருந்தது.

இவ்வேளையில் சில யுவதிகளின் மத்தியில் அவர்களுடைய தலைவியாகக் காணப்படும் ஒரு

பெண், "இந்தக் கட்டிடத்திற்குள் அடைபட்டிருப்பானேன்? நந்தவனத்திற்குப் போகலாம், வாருங்கள்" என்ருள்.

"இரவில் தோட்டத்திற்குப் போனல் மகாராஜா அவர்கள் ஒருகால்—" என்று ஒரு தோழி தயக்கத்துடன் ஆரம்பித்தாள்.

"ஒன்றும் கோபித்துக்கொள்ளமாட்டார்" என்று ராஜகுமாரி வேகமாய் முடித்தாள். "இப்பொழுதுதான் பட்டப்பகல் மாதிரி நிலாக் காய்கிறதே? அதுவுந்தவிர விசேஷ நாளாகிய கார்த்திகைத் தினத்தில் தாயில்லாப் பெண்ணை அப்பா ஒன்றும் கடிந்து பேச மாட்டார்" என்று சிரித்துக்கொண்டு தோழிகளைத் தோட்டத்தை நோக்கித் தள்ளிச் சென்ருள்.

அங்கே போய்ப் பல விதமாக விளையாடிக் களித்தார்கள். பூக்களைப் பறித்து ஒருவர் மேல் ஒருவர் விட்டெறிந்தார்கள். போட்டியில் ஓடித் தாவிக் குதித்தார்கள். கண் பொத்தி விளையாடினார்கள். ஒளிந்தவரைப் பிடித்தார்கள். இவ்விளையாட்டின் மத்தியில் ஒரு புதருக்குள்ளே ஒளியப் போன ஒரு சிறுமி ராஜகுமாரியிடம் ஓடிவந்து, "தேவி, அதோ அந்தப் புதருக்குள் ஒரு மிருகம் இருக்கிறது. கண் மாத்திரம் நிலா வெளிச்சத்தில் தெரிகிறது" என்று பதறிக்கொண்டு, இலைகளின் மத்தியில் தூரத்தில் இருந்தபடியே பளிச்

சென்று காணப்படும் இரு கண்களைக் காண்பித்தாள்.

இதைக் கேட்டவுடன் மற்றத் தோழிகள் அரண்மனையை நோக்கி ஓடிப்போக யத்தனித்தார்கள். ஆனால் ராஜபுத்திரி, "ஓடாதேயுங்கள்! நாம் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர்கள்; இவ்விதம் பயப்படலாமா? வேண்டுமானால் எனக்குப் பின்னாலே நில்லுங்கள். அனசூயே, நீ மாத்திரம் போய் ஒருவருக்கும் தெரியாமல் அப்பாவினுடைய வில்லையும் அம்பறாத்தூணியையும் சீக்கிரம் கொண்டுவா. நான் அந்தக் கண்களை உற்று நோக்கிக்கொண்டே நிற்கிறேன்" என்று தைரியமாய் ஆக்ஞாபித்தாள்.

பயமும் தைரியமும் ஒட்டுவாரொட்டி அல்லவா? தோழிகள் ஓடுவதை நிறுத்தித் துணிவைக் கைக்கொண்டோ அல்லது நடித்தோ, ராஜகுமாரிக்குப் பின் நின்றார்கள். வில்லும் அம்பும் கொண்டுவரப்பட்டன. ராஜபுத்திரி தன்னுடைய தகப்பனார் குறி பார்க்கும் விதத்தில் குறி வைத்து, சிரமத்துடன் அந்தப் பெரிய வில்லை வளைத்து ஓர் அம்பை எய்தாள். உடனே, "ஹா! அடிபட்டேன்" என்று ஒரு மனிதக்குரல் புதரினின்று கிளம்பியது. ஒருவர் கீழே விழுகிற சப்தமும் கேட்டது.

இதைக் கேட்ட அந்த யுவதிகள் அனைவரும் திடுக்கிட்டுச் சிறிது நேரம் மெய்கலங்கி நின்றார்கள்.

பிறகு ராஜபுத்திரி புதரை நோக்கி ஓட, மற்றவர் கள் பின் தொடர்ந்து ஓடினார்கள். அங்கே தரையில் சுருண்டு விழுந்து கிடக்கும் ஒரு வாலிபக் கட்டழ கரைக் கண்டார்கள். அவருடைய நெற்றியின் மத் தியிலிருந்து ரத்தம் சொட்டுவதையும் அடிபட்ட இடம் வீங்கியிருப்பதையும் நிலவு வெளிச்சத்தில் காண முடிந்தது.

பச்சாத்தாபம் மேலிட்டு ராஜகுமாரி தரையில் உட்கார்ந்து, அவருடைய தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, "ஐயோ! இவர் யாரோ! மன் மதன் மாதிரித் தோன்றுகிறாரே; இவரைக் கொன்றுவிட்டேனே" என்று புலம்பினாள். தோழி களை நோக்கி, "வில்லைக் கொண்டுவா என்று நான் ஆலோசிக்காமல் சொல்லிவிட்டாலும், நிற்பது மனிதனாய் இருக்கலாம் என்று உங்களுக்காவது தோன்றியிருக்கக் கூடாதா?" என்று பரிதபித் தாள். பல தெய்வங்களை வேண்டிக்கொண்டாள். வாலிபருடைய முகத்தைத் தன் இரு கரங்களாலும் அடிக்கடி தடவினாள். அவளுடைய பிரார்த்தனை களின் பயனோ, புஷ்பம்போல் மிருதுவான அவ ளுடைய விரல்கள் மூலம் மூர்ச்சையாய்க் கிடப்ப வருக்குப் பாய்ந்த ஒரு சஞ்சீவி சக்தியோ, இரண்டு காரணங்களும் சேர்ந்த குணமோ, அவருடைய தேகத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி காணப்பட்டது. ஒரு பெருமூச்சு வந்தது. அவர் கண்களைத் திறந் தார்.

உடனே ராஜ கன்னிகை, “நான் உங்கள் மேல் அம்பைக் குறி வைக்கும் போதாவது நீங்கள் விலகியிருக்கக் கூடாதா?” என்று பரம அநுதாபத்துடன் கேட்டாள்.

“விலகிப் போகவா! உன்னை விட்டு விலகிப் போகவா? நல்ல வார்த்தை சொன்னாய்! நீ வில்லும் கையுமாய் நிற்கும் அழகைப் பார்த்துக் களிக்காமல் நான் பயந்து ஓடிப் போயிருந்தால், இவ்விதம் உன் மடியில் தலை வைத்துப் படுக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்குமா?” என்று அவர் பதிலுக்குக் கேட்டார். அதோடு நிற்காமல் சயனித்தபடியே தம் கைகளால் அவளுடைய முகத்தைத் தம்மிடம் இழுத்து ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, அவள் கோபிக்க எண்ணுவதற்குள் மறுபடியும் மூர்ச்சையாய்ப் போனார்.

சரியாக அம்பைத் தொடுத்திருந்தால் அவருடைய உயிரே போயிருக்கவேண்டிய நிலைமையில், ராஜபுத்திரியின் கை பலக் குறைவினாலும், அம்பு விடுவதில் பழக்கமில்லாததாலுந்தான் அவருடைய ஆயுசு அன்று தப்பியிருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் சரி, காயம் பெரியதோ சிறியதோ, ஒரு தரம் மூர்ச்சை தெளிந்து மறுபடியும் மூர்ச்சையை அடைவதன் இடையில், “ஐயோ! அப்பா!” என்று தவிப்பதற்குப் பதிலாக, சிருங்கார வார்த்தைகள் பேசக்கூடியவர் உலகத்தில் லக்ஷத்தில்

ஒருவரே. வார்த்தையோடு நில்லாமல், வார்த்தைக்கு ஒரு ருஜு, ஒரு திருஷ்டாந்தம் அளிக்கும் தீரர் கோடியில் ஒருவரென்றே சொல்லலாம்.

இதற்கு முன்பு அங்கம் வங்கம் கலிங்கம் இத்தியாதி பல தேசங்களிலிருந்து அரசகுமாரர்கள் இவளைத் தேடிவந்தது உண்டு; இவளுடைய அன்பை நாடி வந்தது உண்டு. ஆனால் ஒருவராவது தம்முடைய உயிர் போனாலும் போகட்டும் என்று இவளுடைய அழகில் ஈடுபட்டு அம்புக்கு எதிரே நின்றதில்லை. ஒருவராவது இவ்வளவு அழகாயிருந்ததில்லை. இவ்விதம் பேசினதில்லை, நடித்ததில்லை. காரணங்களை விஸ்தரித்து மேலேமேலே அடுக்குவானேன்? ஒவ்வொரு காதலும் அது அதற்கு முடி போட்ட விதத்தில்தானே பிறந்து நடைபெற வேண்டும்? ஜலத்தைச் சீக்கிரத்தில் கொண்டுவரச் சொல்லி அதைத் தெளித்து அவருக்கு மறுபடியும் பிரக்ஞை வரச் செய்வதற்குள் ராஜபுத்திரி அவரிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்தாள்.

பல உபசாரங்கள் செய்து, அம்பு பட்டதனால் அவருக்கு உண்டான அதிர்ச்சியை நீக்கினாள். அவள் மடியை விட்டுத் தலையை எடுக்காமலே அவர் உபசாரங்களைப் பெற்றுக்கொண்டார். தம் ஹிருதயத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பே அவளிடம் இழந்துவிட்டதாகவும், தினந்தோறும் சாயங்காலம் அந்தப் புதருக்குள்ளே நின்றுகொண்டு, அவள்

தற்செயலாகத் தம்முடைய கண்ணில் தென்பட மாட்டாளா என்று தாம் காத்திருப்பது வழக்க மென்றும் பல பிரிய வார்த்தைகளுடன் கலந்து வெளியிட்டார்.

"உங்கள் மேல் நான் அம்பு எய்தேனே!" என்று அவள் பல தடவை நொந்துகொண்டாள்.

"அது சம்பந்தமாக எனக்கும் பெரிய குறை தான். இரண்டு மாதத்துக்கு முன்பே நீ இதைச் செய்திருந்தால், என்னுடைய பாக்கியம் அப் பொழுதே ஆரம்பித்திருக்குமே" என்று ஒரு தடவை பதில் சொன்னர். "மன்மதனுடைய பாணத்தைக் கவிகள் பாடுகிருர்களேயொழிய, ரதியின் அவதாரமாகிய நீ எய்கிற பாணத்தின் மகிமையை அந்த ஜடங்கள் அறிந்தார்களா?" என்று ஒரு தடவை மகிழ்ந்துகொண்டார்.

இன்னும் பற்பல பேச்சுக்களைப் பேசினர். அவருடைய காதலை நம்புவதற்கு ஆவல் கொண்டி ருக்கும் அவளுடைய ஹிருதயத்தில் நம்பிக்கையும் அன்பும் பெருகி ஓடின.

தோழிமார்கள் மரியாதையாகத் தூரத்தில் ஒதுங்கி நின்றுகொண் டிருந்தார்கள். சந்திரன் மாத்திரம் லௌகிக முறையைச் சட்டை செய்யாமல் ஆகாயத்தில் இருந்து இவர்களுடைய சல்லா பத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவனை ஒரு தடவை அவள் நிமிர்ந்து பார்த்தபொழுது

ஞாபகம் வந்து, "நீங்கள் சந்திர வம்சமா? சூர்ய வம்சமா? எந்தத் தேசத்து ராஜகுமாரர்?" என்று கேட்டாள்.

இதுவரையில் சந்தோஷ விமானத்தில் ஆகாய மார்க்கமாகச் சஞ்சரித்துக்கொண் டிருந்தவருக்குத் தம்மைத் திடீரென்று கீழே பூமியில் தள்ளின மாதிரி இருந்தது. "ஐயோ! நான் ராஜகுமாரனல்ல; க்ஷத்திரியனே அல்ல. பிருகு வம்சத்தில் பிறந்த ஓர் ஏழைப்பிராமணன்" என்றார்.

"அதற்காக முகம் வாடுவானேன்?" என்றாள் அந்த உத்தமி; "நீங்கள் யாராயிருந்தாலும் எனக்கு நீங்கள் நீங்களே. ஆனால் ஓர் உபத்திரவம்: ஏழைக்கு என்னை விவாகம் செய்து கொடுக்க என் தகப்பனார் ஒரு நாளும் சம்மதிக்கப் போவதில்லை."

தகப்பனாருடைய அசம்மதம் 'ஓர் உபத்திரவம்' என்று சொல்லி உதறிவிடும்படி அவ்வளவு சிறிய விஷயமாக அவருக்குத் தோன்றவில்லை. "அதற்கு என்ன செய்யலாம்?" என்று மிகுந்த கவலையுடன் கேட்டார்.

"ஏதாவது ஒரு வழி இருக்கும். நாளைக்குச் சாவகாசமாக அதைக் கண்டுபிடிக்கலாம். இன்றிரவு ஒரு கவலைக்கும் என் மனம் இனி இடங் கொடுக்கப் போவதில்லை" என்று அவள் புன்னகை செய்தாள்.

"அப்படியே ஆகட்டும். ஆனால் நாளைக்கு என்று சொல்லுவதை, இன்னும் கொஞ்சநாழிகை பேசிக்

கொண்டிருந்தால், இன்றைக்கே என்று சொல்லி விடலாம். சந்திரன் எங்கே இருக்கிறுன், பார்.''

''அவன் இருக்கும் இடம் தப்பு. அவனுக்கு ரோஹிணியிடத்தில் பக்ஷபாதமாகையால் கிருத்திகையை விட்டுவிட்டு ரோஹிணியைச் சீக்கிரம் அடைவதற்காக வெகு வேகமாய் ஓடுகிறுன். நாம் அவனைக் கவனிக்க வேண்டாம்'' என்றுள்.

''வேண்டவே வேண்டாம். ஆனல் அவன் அதற்காக ஓடவில்லை. உன் முகத்தின் அழகைப் பார்த்துத் தான் தோல்வி யடைந்ததற்காக வெட்கப்பட்டு ஓடுகிறுன். தோற்றுன்குள்ளி!''

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

* * *

மூன்றும் பாகம்

**மே**லே எழுதியிருக்கும் 'விசித்திர தீபிகா'வின் ஒன்பதாவது அத்தியாயத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். துப்புகளெல்லாம் அங்கே இருக்கின்றன என்று லேசான ஓர் எண்ணம் உண்டாயிற்றேயொழிய அவைகளைப் பகுத்தறிய முடியவில்லை. 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்று பண்டிதர் சொன்னரே? ச்யவன ப்ராசத்தில் நெல்லிக்கனி ஒரு முக்கியமான சரக்கு அல்லவா? பண்டிதர் ஒரு சிலேடையை அவிழ்த்துவிடுவதற்கு

இதுதான் தருணம், நான் தான் தகுந்த ஆள் என்று எண்ணினாரா? அல்லது உண்மையாகத்தான் பேசினாரா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எவ்வளவு நாள்தான் இதற்காகக் கஷ்டப்படுவது என்று கடைசியில் எண்ணி, தைரியத்தைக் கையில் பிடித்துக்கொண்டு அவருக்கு மறுபடியும் டெலெபோன் செய்தேன்.

அச்சமயம் எங்களிடையில் நடந்த சம்பாஷணையை ஓர் அக்ஷரம் பிசகாமல் இதனடியில் எழுதியிருக்கிறேன். அதற்கு என்னுடைய உரை தேவையில்லை. உத்தரவாதம் பயன்படாது. இவ்விஷயத்தில் நான் அவருடைய குமாஸ்தா மாதிரியே. அபிப்பிராயங்கள் யாவும் அவருடையன. பொறுப்பும் அவருடையது.

டெலெபோன் சம்பாஷணை:—

பண்டிதர்: பேசுகிறது ப்ரொபெஸ்ஸர் பிம்பிள். நீங்கள் யாரோ?

நான்: நான்தான் 'கோனஷ்டை.' உம், உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்; பத்துத் தினங்களுக்கு முன்பாக, ஸுகன்யா ச்யவனர் விஷயத்தில் உங்களைக் கொஞ்சம் தொந்தரவு செய்தேன்—

பண்டிதர்: ஸுகன்யாவின் புருவத்தை லோமச ரிஷி வர்ணிப்பதைக் கவனித்தீர்களா? அம்மாதிரி, மன்மதனுடைய வில்லைப்போன்ற புருவமுள்ள

ஸ்திரீகள் சிலரை அமெரிக்காவில் கண்டிருக்கிறேன். அடேயப்பா! என்ன புத்திசாலிகள்! என்ன மனோ தைரியம்! யுக்தியோ, புத்தியோ, எது அதிகமென்று சொல்லி முடியாது. உங்களுடைய நாட்டிலும் அதேமாதிரி தானே இருக்கும்?

நான் : அப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால் எனக்குச் சாதாரணப் புருவந்தான். யுக்தியும் புத்தியும் மிகக் குறைவு. ஆகையால் என்னுடைய சந்தேகங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

பண்டிதர் : இன்னும் தீரவில்லையா? நான்தான் உங்களை 'விசித்திர தீபிகா'வைப் படிக்கச் சொன்னேனே? கிரந்தம் என்றால் அதுதான் கிரந்தம்! கவி என்றால் அவர்தாம் கவி! வரம் பெற்றவர். ஞானதிருஷ்டி என்பது அவர் ஒருவருக்குத்தான் பூர்ணமாய் உண்டு. சகலத்தையும் கண்டுபிடித்துச் சகலத்தையும் சிக்கறுத்து எழுதியிருக்கிறார். சரியான அத்தியாயத்தைப் பார்த்தீர்கள் அல்லவா?

நான் : நீங்கள் தயவு புரிந்து அளித்த குறிப்பைப் பற்றிக்கொண்டு ஒன்பதாவது அத்தியாயத்தைப் படித்தேன்.

பண்டிதர் : ரொம்ப சரி.

நான் : ஆனால் அதில் ஒருவருடைய பெயரையும் வெளியிடாததனால், அதைப் படித்து லாபம் அடைய முடியவில்லை.

பண்டிதர்: அது அவருடைய வழக்கந்தானே! முதலில் தம் பெயரை வெளியிட்டிருக்கிறாரா? இல்லையே? அரசர்களுடைய கோபத்தையும் விரோதத்தையும் விலக்குவதற்காக அவர், ஒன்று, பெயர்களை மாற்றி எழுதுவார்; அல்லது முற்றும் விட்டுவிடுவார். அதெல்லாம் நாமே கண்டுபிடிக்க வேண்டும்.

நான்: ஆகையால் எனக்கு ஏற்கனவே உள்ள கஷ்டங்களோடு இது ஒன்று கூடச் சேர்ந்து கொள்ளுகிறது.

பண்டிதர்: இதில் கஷ்டம் வருவானேன்? ஆராய்ச்சி மார்க்கத்தில் உங்களுக்கு ஏன் அவநம்பிக்கை? எப்பொழுது ஸுகன்யாவின் பெயரைக் கொண்டு அந்த அத்தியாயத்தைக் குறிப்பிட முடிகிறதோ, அப்பொழுது அதில் காணப்படும் ராஜகுமாரத்தி ஸுகன்யா தான் என்பதில் என்ன சந்தேகம்?

நான்: ஓகோ! அப்படியானல் அவள் காதலிக்கும் பிராமண வாலிபர்?

பண்டிதர்: கேட்பானேன்? பிருகு வம்சத்தோன் என்று சொல்லிக்கொள்ளுகிறரே? பாரதத்திலும் வம்சம் சொல்லப்படுகிறதே? அவர்தாம் ச்யவனர்.

நான்: ச்யவனரா? என்ன ஆச்சரியம்! அவர் பிற்பாடு ஒரு கிழட்டு ரிஷியாகப் போகிறவரையில் ஸுகன்யா எவ்விதம் இளம் கன்னியாகவே இருந்தாள்?

பண்டிதர்: ச்யவனர் கிழவரா? யார் சொன்னது? பாரதத்தில் எங்கேயாவது அவர் கிழவர் என்று சொல்லியிருக்கிறதா?

நான்: அவர் நீண்ட காலம் தபசு செய்ததாக லோமசர் சொல்லுகிறாரே?

பண்டிதர்: அந்த மட்டும் வாஸ்தவந்தான். நதிக் கரையில் உட்கார்ந்துகொண்டு, பசி தாகத்தை அடக்கி, உங்களைக் கறையான் மூடுகிறவரையில் தியானம் செய்து பாருங்கள்! அப்பொழுது தெரிய வரும், ஒவ்வொரு நாளும் எவ்வளவு நீண்ட காலத்தைப் பிடிக்கிறது என்று.

நான்: (அவசரத்துடன்) நான் பரீக்ஷை செய்யப் போவதில்லை. நீங்கள் சொல்லுவதை அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியானால் ச்யவனர் இவ்விதம் கஷ்டப்பட்டுத் தபசு செய்தார் என்று அமெரிக்கரான நீங்கள்கூட ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

பண்டிதர்: உண்மையை ஒப்புக்கொள்ளாமல் என்ன? செய்யத்தான் செய்தார். அதனால்தான் ஸுகன்யாவை அடைந்தார். ஆனால் அவள் நல்ல பெண்; விவேகி. ஏற்கனவே கறையான் சூழ்ந்திருக்கும் இடமாகப் பார்த்து, அங்கே அவரை உட்காரச்செய்துவிட்டு, அவரை அது மூடினவுடனே, ஏதோ சாக்கைச் சொல்லித் தகப்பனாரை நதிக் கரைக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள்.

நான்: அப்படியானல், அவள் தெரியாத்தனத்தால் அவருடைய கண்ணைக் குத்தவில்லை?

பண்டிதர்: அவளா குத்துவாள்? கறையான் புத்து ச்யவனரென்று அவளுக்குத்தான் தெரியுமே?

நான்: அப்படியானல் ச்யவனருக்கு மகா கோபத்தை உண்டாக்கியதாகச் சொன்னது? அவர் சபித்தது?

பண்டிதர்: புளுகு, வெறும் புளுகு. அமெரிக்காவில் இதையெல்லாம் வாழைப்பழ எண்ணெய் (Banana oil) என்று சொல்லுவோம். நல்ல காரியத்தைச் சாதிப்பதற்காக அவள் வடிக்கட்டின வாழைப்பழ எண்ணெய் தவிர வேறில்லை.

நான்: சர்யாதியின் பரிவார ஜனங்களுக்கு உதர வியாதி வந்ததே? சாபமில்லாமலா வந்தது?

பண்டிதர்: ஒரே சமயத்தில் ஒரே சமையலைச் சாப்பிடுகிற பல ஜனங்களுக்கு ஒரே வியாதி கிளம்பினல், சமையலறையில் அல்லவா காரணத்தைத் தேடவேண்டும்? உங்கள் நாட்டிலுள்ள இந்திர ஜாலப் புஸ்தகங்களில் 'ஸித்த நாகார்ஜுன கக்ஷ புடம்' என்கிற உட்பிரிவில் படித்துப் பார்த்தால், மேற்கண்ட வியாதியை உண்டாக்கவும் சுவஸ்தம் செய்யவும் உபயோகிக்கவேண்டிய மூலிகைகளின் பெயரை அறியலாம். தானும் தகப்பனரும் முதலில்

போஜனம் செய்தபிறகு ஆகாரத்தில் வேண்டிய மூலிகையைக் கலப்பது ஸுகன்யாவுக்கு வெகு கஷ்டமா?

நான்: அடேயப்பா! இந்த மகாமாயம் எல்லாம்—

பண்டிதர்: எல்லாம் ச்யவனரை மணப்பதற்குச் சர்யாதியைச் சம்மதிக்கச் செய்வதற்காகத்தான். ச்யவனர் தபசு செய்தவர், சபிக்கும் சக்தியுள்ளவர் என்று வெளியான பிறகு விவாகத்திற்கு ஏதாவது தடை இருக்குமோ?

நான்: இதற்காகக் கறையானும் துணையா?

பண்டிதர்: சந்தேகமென்ன? அவரை அது மூடியிராது போனால் அவர் பால்யம் என்பது வெளியாய்விடும். அவரை அடையாளம் தெரிந்தவன் எவனாவது வந்து சேருவான். அந்த வயசுக்குள் ரிஷிபதவியை என்னமாய் அடைந்தார் என்று கேள்விகள் கிளம்பிவிடும்.

நான்: ஆகையால் அரசன் ஊருக்குத் திரும்பிப் போகும் வரையில்—

பண்டிதர்: அதுவரையில் கறையானே அங்கி. அதன் பிறகு பயோஷ்ணியில் ஸ்நானமும் தேக சுத்தமும். அதனால் கிழவர் யௌவனத்தை அடைந்துவிடவில்லை. பழைய குருடி கதவைத் திறடி என்கிற உங்கள் வசனப் பிரகாரம், பழைய வாலிபர்தாம் மறுபடியும் வாலிபராக விளங்கினர்.

ஆனுல் தம்பதிகள் இதை எப்படி ஒப்புக்கொள்ளு கிறது? அதற்காகத்தான் அச்சமயம் வரையில் கிழவராக இருந்ததாகவும், அப்பொழுதுதான் ஸ்நானத்திஞலும் மருந்திஞலும் பால்ய மடைந்த தாகவும் கதைகளை அவள் கிளப்பிவிட்டாள்.

நான்: உங்களுடைய அபிப்பிராயத்தில் அசுவினி தேவதைகள் அவரைப் பயோஷ்ணியில் ஸ்நானம் செய்யச் சொல்லவில்லை; அவருக்கு மருந்தும் கொடுக்கவில்லை?

பண்டிதர்: ச்யவனர் செய்த தபசின் கொடுமை யால் அவருக்கு இருமல் கண்டிருக்கலாம். அதற் காக அத்தேவதைகள் அம்மருந்தைச் செய்து கொடுத்திருக்கலாம். ஆனுல் அவருடைய காலண் டையில் ஓடும் நதியில் ஸ்நானம் செய்துகொள்ளும் படி புத்திமதி அளிப்பதற்காகத் தேவலோகத்திலி ருந்து இருவர் வரவேண்டியதில்லையே! என்னுடைய அபிப்பிராயத்தில் அந்த ஸ்தலத்தின் மாகாத்மியம் எல்லாம் ஸுகன்யாவின் மனோரதம் அங்கு நிறை வேறியது என்பதைக்கொண்டுதான்.

நான்: இந்தப் பொய்க் கதைக்குத் தேவர்கள் இருவரும் என்னவாய் உடந்தையா யிருந்தார்கள்?

பண்டிதர்: அவர்கள் எவ்விதத்தில் உடந்தை? அவர்கள் வாயால் ஒரு கதையும் வந்ததாகச் சொல்லப்படவில்லையே? அவர்களையும் சேர்த்துப் பிரஸ்தாவத்திலிருக்கும் ஒரு வதந்தியை அவர்கள்

மறுக்காமல் சும்மா இருந்துவிட்டார்கள். அவ்வளவு தானே? அந்தக் கதையினுல் யாருக்கு என்ன தீங்கு விளையக்கூடும்? அதை நம்பத் தயாராயிருப் பவர் மனத்தில் கற்பின் விசேஷத்தை ஸ்தாபிக்கத் தானே செய்யும்? தவிர, அவர்கள் ச்யவனருக்குச் சிநேகிதர்கள். மனிதர்களுக்கு உபகாரம் செய்வதி லேயே ஈடுபட்டவர்கள். ஸுகன்யா ஒரு தாயில் லாத பெண். தன் தகப்பனுருடைய பிடிவாதத்தை ஜயித்து, சுயமாய் வரித்த புருஷனை அவள் அடை வதில் அவர்கள் உதவி செய்வார்களா? அதைக் கெடுப்பார்களா? நீங்களே சொல்லுங்கள்.

நான்: அடேயப்பா! ஸுகன்யாவுக்குத்தான் என்ன பொல்லாத்தனம்!

பண்டிதர்: பொல்லாத்தனமா? அவளுடைய நடத்தை பொல்லாத்தனமாயிருந்தால், எல்லாம் அறிந்த சீதாபிராட்டியார் ராமாயணத்தில் அவளை அவ்வளவு ஸ்தோத்திரம் செய்வார்களா? அவளுக்கு என்ன சாமர்த்தியம், என்ன தைரியம், என்று சொல்லுங்கள். நானும் ஆமோதிப்பேன். நான் முன்பே சொன்னேனே, அம்மாதிரி புருவம் படைத்த ஸ்திரீகளைக் கண்டால்—

நான்: கண்டால் வெகு ஜாக்கிரதையாய் இருக் கப் போகிறேன். இதை மறக்க மாட்டேன்.

பண்டிதர்: அப்படிப் பார்த்தால், எல்லா ஸ்திரீ களிடத்திலுமே வெகு ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது. ஹா! ஹா!

நான்: உங்களுக்கு மிகவும் வந்தனம். என்னுடைய சந்தேகங்களைத் தீர்த்ததற்காகவும்—உம்—கடைசியில் கூறிய புத்திமதிக்காகவும்—

பண்டிதர்: ஹா! ஹா! ஹா! ஹா!

இத்துடன் டெலெபோன் சம்பாஷணை முடிவடைந்தது.

*   *   *

**ப்**ரொபெஸ்ஸர் பிம்பிளுடைய பாண்டித்தியத்தை அளவிட்டுச் சொல்ல நான் வல்லவனல்ல. ஆனால் இவ்விதம் புராணங்களைத் தலைகீழாகப் புரட்டிப் படிப்பவர், ஸ்திரீகளைக் குறித்து இவ்விதம் பேசுகிறவர், மகா அதிகப்பிரசங்கி என்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது. புராணங்களுக்கெல்லாம் 'ரிபேர்' செய்கிற 'விசித்திர தீபிகா'க்காரர் மற்றொரு மகா அதிகப்பிரசங்கி என்பது நிச்சயம். ஒருகால், இந்தப் பண்டிதரே முன்னொரு ஜன்மத்தில் அந்தப் புஸ்தகத்தையும் எழுதினரோ என்பது எனக்குப் பலத்த சந்தேகம். ஓர் உலகத்திற்கு இம்மாதிரி இரண்டு மனிதர்கள் வேண்டுமா?

## 11

# என் கதைகளின் வரலாறு

[இந்தத் தலைப்பின்கீழ், சில பண்டிதர்கள் தங்களுடைய மனப் போக்கின் மார்க்கங்களைக் குறித்து எழுதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லோரும் நெல்லை உலர்த்துவதைக் கண்ட எலி தன்னுடைய வாலை உலர்த்திய மாதிரி, நானும் என் கதைகளின் வரலாற்றை எழுதத் துணிந்தேன். இக்கட்டுரையில் உண்மையைத் தவிர யாதொரு குணமும் காணக் கிடைக்காது என்பதை வாசகர்களுக்கு விநயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.]

இவ்விஷயத்தை ஒரு சிறிய நாடக ரூபத்திலேயே வெளியாக்குவது சுலபமாயிருக்கும். இரண்டே பாத்திரங்கள்! ஒன்று, 'மலய மாருத' த்தின் பத்திராசிரியர்; இரண்டாவது நான். ஆனால், இங்கே, நான் என்பது வாஸ்தவத்தில் இரண்டு ஆசாமிகள்; அதாவது என் மனத்தின் வாதியும் என் மனத்தின் பிரதிவாதியும்.

அங்கம் I. காட்சி 1.

[இடம்: 'மலயமாருத' த்தின் காரியாலயம்.]

பத்திராசிரியர்: உங்களிடமிருந்து ஒரு கதை கிடைத்து வெகு நாட்களாய்விட்டன. இப்போது—

நான்: அதற்கு என்ன தடை? நாளைக்கே ஒன்று அனுப்புகிறேன். கதை வேண்டுமா? கட்டுரை வேண்டுமா?

பத்திராசிரியர்: எதுவாயிருந்தாலும் சரி.

நான்: நாளைக்கு இந்நேரத்திற்குள், இரண்டில் ஒன்றை அனுப்பிவிடுகிறேன்.

பத்திராசிரியர்: மறதியாய் இருந்துவிடக் கூடாது.

நான்: கட்டாயம் அனுப்புகிறேன். (இரு கக்ஷியும் முணுமுணுத்தல். பிரிதல்.)

அங்கம் II. காட்சி 1.

[ அதிலிருந்து மூன்றாவது நாள்.

இடம்: என்னுடைய வீடு. ]

என்னுடைய மனத்தின் வாதி: மறந்தே போய் விட்டாயே! 'மலய மாருத'த்திற்கு ஒரு கதை எழுதி அனுப்ப வேண்டாமா?

மனத்தின் பிரதிவாதி: நான் ஒன்றும் மறந்து போகவில்லை. எனக்குக் கொஞ்ச நேரமாவது ஒழிந்தால்தானே? நான் என்ன, சோம்பேறித் தனமாய்ப் பொழுதை வீண் அடிக்கிறேனா?

வாதி: அது ஏது!

அங்கம் II காட்சி 2

[ அதிலிருந்து ஐந்தாவது நாள். என்னுடைய வீடு. ]

மனத்தின் வாதி: 'மலய மாருதம்' ஞாபகத்தில் இருக்கிறதோ? அடியோடு நழுவ விட்டாயோ?

பிரதிவாதி: நழுவவிடவாவது! நான்தான் எப்பொழுதும் அதே எண்ணமாயிருக்கிறேனே! 'கதை எழுதுவதா, அல்லது கட்டுரை எழுதுவதா' என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டாமா? வெறுமனே அவசரப்பட்டால் மாத்திரம் போதுமா?

வாதி: அவசரப்படுத்துகிறேனா! போன புதன் கிழமை சரியாய் ஒரு மணிக்கு வாக்குதத்தம் செய்தது, மறுநாள் ஒரு மணிக்குள் கொடுப்பதாக—

பிரதிவாதி: புதன்கிழமை ஒரு மணிக்கா? எனக்குத் தெரியும், அதில் ஏதோ விக்கினம் உண்டென்று. ராகுகாலத்தில் ஒரு காரியத்தை ஒப்புக் கொண்டால்—

வாதி: சரி! ராகுவின்மேல் பழியைப் போடப் போகிறாயா? ஒரு பாம்பின் தலையா உன்னைத் தடுத்து நிற்கிறது?

பிரதிவாதி: நீ சொல்லுகிறது சரிதான். ராகு மாத்திரம் என்ன பொல்லாதது? கேது மாத்திரம் என்ன நல்லது? இரண்டும் சேர்ந்துதானே ஒரு

முழுப் பாம்பு? அப்படியிருக்க, ராகுவை மட்டும் பழிப்பானேன்? ஏன் கேது காலம் என்று சொல்லக் கூடாது? இதை ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரை எழுதலாம் என்று தோன்றுகிறது.

வாதி: எதைக் குறித்தாவது எழுது; வீண் பொழுது போக்காமல், காரியத்தைத் தொடங்கினால் போதும்.

அங்கம் III காட்சி I

[அதற்குப் பிறகு ஏழாவது நாள். வீட்டில் என்னுடைய 'படிப்பு அறை'.]

மனத்தின் வாதி: கோணற் சித்திரங்களை எழுதி, நல்ல காசு கொடுத்து வாங்கின கடிதங்களை வீணாக்காமல், கதையை எழுது, பார்க்கலாம்.

பிரதிவாதி: நீ சொல்வது நியாயந்தான். கடிதத்திற்கு ஏன்தான் இப்படி விஷம் ஏறுகிற மாதிரி விலை ஏறிக்கொண்டு போகிறதோ? எல்லாம் வியாபாரிகளின் கிருத்திரிமம் என்றே தோன்றுகிறது.

வாதி: அது எப்படியாவது இருக்கட்டும். கதையை எழுது.

பிரதிவாதி: யுத்தத்தினால் காகிதத்திற்கு அதிகச் செலவு ஏற்பட்டுவிட்டதா, கிராக்கி உண்டாக? எல்லாம்—

வாதி: கதை, கதை, கதையை எழுது.

பிரதிவாதி: வெறுமனே வெருட்டாதே. எதைக் குறித்து எழுதுவது என்று யுக்தி சொன்னால் உப யோகமாக இருக்கும். எந்த விஷயத்தைப் பார்த் தாலும், யாராவது அதைப்பற்றி முன்னாலேயே எழுதியிருக்கிறார்கள். எனக்குத் தோன்றுகிறது என்னவென்றால், நாம் இத்தனை நூற்றாண்டுகளுக் குப் பிறகு பிறந்தது ஒரு பெரிய தப்பு. முன்பே பிறந்திருந்தால் உலகத்தில் எல்லாம் புதிதாக இருந் திருக்கும். தாராளமாகப் 'பிளாட்டு' கள் கிடைத் திருக்கும்—

வாதி: பிறவியைக் குறித்து இப்பொழுது செய் யக் கூடிய நிவர்த்தி என்ன இருக்கிறது? ஆக வேண்டிய காரியம் ஒரு கதை எழுதல். அதைச் செய். பார்க்கலாம்.

பிரதிவாதி: நாம் மாத்திரம் காளிதாஸர், கம்பர், ஷேக்ஸ்பியர், இவர்களுக்கு முன்பே பிறந்திருந் தால் அவர்கள் எழுதியிருப்பதையெல்லாம் நாம் முன்னதாகவே எழுதியிருப்போம் எழுதுவதற்குப் புதிதாய் ஒன்றும் அகப்படாமல் தவிப்பது அவர் களுடைய பாகத்திற்குக் கிடைத்திருக்கும்.

வாதி: இதெல்லாம் தெரிந்துதானே ஒரு கதை எழுதுவதாக ஒப்புக்கொண்டாய்? ஒப்புக்கொண்ட படி முதலில் செய்துவிட்டுப் பிறகு உன் ஜன்மாந் தரப் பிரதாபங்களைச் சொல்லிக்கொள்ளேன்.

(இந்தச் சமயம், அறைக்குள் குழந்தை வரு கிறது. தான் நாடக பாத்திரங்களில் சேர்க்கப்பட

வில்லை என்பதை அறியாமலே, உள்ளே நுழைந்து பேசுகிறது.)

குழந்தை: அப்பா, இன்னிக்காவது என்னைக் கோவிலுக்குக் கூட்டிண்டு போறயா?

நான்: ஆகட்டும். இன்னும் கொஞ்ச நாழி கழிக்கட்டும். இப்போ ரொம்ப வெய்யிலாய் இருக்கிறது.

(குழந்தை அறையை விட்டுப் போகிறது.)

வாதி: பார்த்தாயா! குழந்தையின் வாயில் யக்ஷிணி பேசும் என்பார்களே; அது சரிதான்.

பிரதிவாதி: அது இப்பொழுது என்ன பேசியது?

வாதி: அது கோவில் என்று சொல்லிற்று. இந்தக் கதை ஒரு கோவிலில் நடக்கட்டும்.

பிரதிவாதி: புதிதாய் என்ன இருக்கிறது? கோவிலில் தெய்வம் பிரத்தியக்ஷமாய் வந்து பேசுவது விக்கிரமாதித்தியன் கதை முதலியவைகளில் வந்தாய்விட்டது. ஒரு மனிதன் தெய்வம்மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு பேசுவதை, கிப்ளிங் தம்முடைய 'க்ருஷ்ண மல்வேநி' என்கிற கதையில் உபயோகித்துவிட்டான்.

வாதி: கோவிலில் கர்ப்பக்கிருகம் ஒன்றுதான் இருக்கிறதா? த்வஜ ஸ்தம்பம் இல்லையா? குளம் இல்லையா?

பிரதிவாதி: த்வஜஸ்தம்பம் எதற்கு உபயோகம்? எவனாவது அதில் தூக்குப் போட்டுக்கொள்ளலாம்

ஆனால் அந்தமாதிரிக் கதை 'மலய மாருத'க்காரர் களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ?

வாதி: அட, அது வேண்டாமே; குளத்தில் விழச் செய்யேன். ஏதாவது ஒரு சம்பவம் நடந்தால் சரி. அப்பொழுது கதை ஆரம்பமாகிவிடும் அல்லவா? ஆரம்பந்தானே கஷ்டம்?

பிரதிவாதி: சரி. அதை ஒரு பொற்றாமரைக் குளமாக வைத்துக்கொள்ளுவோம்.

வாதி: எதற்காக?

பிரதிவாதி: பொற்றாமரைக் குளங்களில்தான் ஒருவிதத் தாமரையுமே இருக்கிற வழக்கம் இல்லை. அதற்குப் பதிலாக, நல்ல பச்சை வர்ணத்தில் பாசி படர்ந்திருக்கும், வழுக்கி விழுவதற்குச் சுலபமாய். கதாநாயகி அதில் வழுக்கி விழப்போகிறாள். ஏனென்றால் அவளுடைய குரும்புக்காரத் தம்பி அவளைத் தள்ளிவிடுகிறான். சற்று நில்லு; அகராதியைப் பார்க்கிறேன்.

வாதி: எதற்காக?

பிரதிவாதி: 'குரும்பு'க்கு, சின்ன 'ர'வா, பெரிய 'ற' வா, என்று அறிவதற்குத்தான். புஸ்தகத்தில் 'குறும்பு' என்று எழுதியிருக்கிறது. இனிமேல் ஞாபகம் இருக்கவேண்டும்: குறும்பு, குறும்பு, குறும்பு. 'எரும்பு'க்குத்தான் சின்ன 'ர' போல் இருக்கிறது.

வாதி: (அகராதியைப் புரட்டிவிட்டு) தப்பு. அதுவும் 'எறும்பு' என்று பெரிய 'ற' தான்.

பிரதிவாதி: அதையும் நெட்டுருச் செய்து கொள்ள வேண்டும். எறும்பு, எறும்பு, எறும்பு. குறும்புக்கார எறும்பு. எறும்புக்காரக் குறும்பு—

வாதி: வெகு அழகாயிருக்கிறது. இவ்விதம் நீ இலக்கணம் கற்றுக் கொள்ளுகிறவரைக்குமா உன் கதாநாயகி குளத்து ஜலத்தில் தத்தளித்துக்கொண்டிருப்பாள்?

பிரதிவாதி: அவசியம் இல்லை. உடனே குளத்தில் குதிப்பதற்குத் தயாராகக் கதாநாயகன் கரை மேல் இருக்கிறான். ஆனால் அவன் குதித்து அவளைக் காப்பாற்றுவதாகவும், அதன் தொடர்ச்சியாக அவர்கள் காதல் கொள்ளுவதாகவும் எழுதினால், இதில் புதிதாய் என்ன இருக்கிறது? இம்மாதிரி நூற்றெட்டுக் கதைகள் வந்தாகிவிட்டன. இது நூற்றொன்பதாவதாய் இருக்கும்.

வாதி: வாஸ்தவம். ஆனால் இதில் நூதனத்தை எப்படி நுழைக்க எண்ணுகிறாய்?

பிரதிவாதி: அவன் ஜலத்தில் குதிப்பதற்கு முன்னதாகவே, "நான் இப்பொழுது உன்னைக் காப்பாற்றுகிறேன்; ஆனால் இதைச் சாக்காக வைத்துக்கொண்டு என்னிடம் காதல் கொள்ளக் கூடாது. எனக்கு ஏற்கனவே இரண்டு மூன்று

மனைவிகள் இருக்கிறார்கள்'' என்று இரைந்து கத்த வேண்டும். அது புதிதாய் இருக்குமல்லவா?

வாதி: சந்தேகம் இல்லை. ஆனால் ஒருவன் சட்டியைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு தெருவில் போனால் அதுவும் புதிதாய்த்தான் இருக்கும்.

பிரதிவாதி: உனக்கு இஷ்டமில்லை என்றால், அது வேண்டாம். இதற்கு என்ன சொல்லுகிறாய்? நாயகன் ஒரு பட்டினவாசி. இதுதான் முதல் தடவை, அவன் கிராமத்திற்கு வந்தது. இதற்கு முன் குழாய் ஜலத்தைத் தவிர, ஒருவிதமான ஜலத்திலும் அவன் ஸ்நானம் செய்ததில்லை. ஆகையால் அவனுக்கு நீந்தத் தெரியாது. இருந்தாலும் தன்னுடைய வீரகுணத்தினால் நாயகி ஜலத்தில் விழுந்ததைக் கண்டவுடன், மறு யோசனையின்றித் தானும் குதித்துவிடுகிறான்.

வாதி: அப்புறம் நீ போய் இருவரையும் கரையில் இழுத்துப்போட்டு ஆசீர்வதிக்கப் போகிறாய் போலும்!

பிரதிவாதி: நான் கதையை எழுதுவதற்காகத் தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன். காப்பாற்றப் போகிறவள் கதாநாயகியே. அவளுடைய வீட்டுப் புழைக்கடையில் ஓடும் வாய்க்காலில் சிறுவயசு முதல் நீந்திப் பழகினவளாதலால், தன்னைக் காப்பாற்ற வந்த நாயகனை யாதொரு கஷ்டமும் இல்லாமல் அவள் காப்பாற்றி

விடுவாள். மூர்ச்சையடைந்த அவனைப் பத்திரமாய்க் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடுவாள். அது முதல் அவர்களுடைய அந்நியோன்னிய வாஞ்சை ஓங்கி வளரும்.

வாதி: இது இருக்கலாம். ஆனால் இந்தப் 'பிளாட்'டில் இரண்டு குறைகள் இருக்கின்றன.

பிரதிவாதி: என்ன குறைகள்?

வாதி: இது முழுவதும் தித்திப்பாயிருப்பதைத் தவிர வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடுகிறது. புரோகிதரும் மேளகாரனும் குளக்கரையிலேயே காத்துக்கொண்டு இருக்கிற மாதிரி தோன்றுகிறது. கொஞ்சம் தாமசம் வேண்டும்; கொஞ்சம் கைப்பு வேண்டும். குலாப் ஜாமுனுக்கு, அல்பம் கைப்புள்ள குங்குமப்பூவைச் சேர்த்தால்தான் ருசி சோபிக்கிறது. அந்தமாதிரி, கொஞ்சமாவது துக்கத்தை இந்தப் 'பிளாட்'டில் கலக்கவேண்டும்.

பிரதிவாதி: இரண்டாவது குறை என்ன?

வாதி: தேகப்பயிற்சியில் நாயகிக்கு நாயகன் சளைத்தவன்தானே என்கிற எண்ணத்தினால், நாளடைவில் அவளுடைய மனத்தில் சற்று அலக்ஷ்யமும், அவனுடைய மனத்தில் சற்றுப் பணிவும் தோன்றிவிடும். பிறகு, தம்பதிகளின் வாழ்வில் பூர்ண சந்தோஷம் இராது.

பிரதிவாதி: இந்த இரண்டு குறைகளையும் ஒரே உபாயத்தினால் நீக்கப்போகிறேன்.

வாதி: எவ்விதம்?

பிரதிவாதி: குளக்கரைப் படலத்திற்கு அடுத்த நாலைந்து நாட்களில் இருவருக்கும் சிநேகம் வளர்ந்துகொண்டு வரும் மத்தியில், அவன் திடீரென்று அவளிடம் சொல்லிக்கொள்ளாமலே கிராமத்தை விட்டுப் போய்விடுகிறான்.

வாதி: எதற்காக?

பிரதிவாதி: அதுதானே ஒரு ரகசியம்! ஊரில் யாருக்கும் விளங்கவில்லை. இரண்டு மூன்று வாரம் அவனுடைய சமாசாரமே கிடைக்கவில்லை. அவள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிப் புண்படுகிறாள். கடைசியில் ஒரு பலத்த நோய்க்கு இரையாய்ப்போகும் சமயத்தில், அவன் கையில் ஒரு பளபளப்பான கடிதத்துடன் திரும்பி வருகிறான். ரகசியம் வெளியாகிறது;— துக்கக் கலப்புப் போதுமா?

வாதி: ரகசியம் என்ன? சொல்லு.

பிரதிவாதி: நீ இரண்டாவது குறையாய்ச் சொன்ன பயந்தான் அவனுக்கும் தோன்றியிருக்கிறது. ஆனல், பாவம்! தன்னுடைய அறியாமையைக் குறித்து அவளிடம் பேசுவதற்கே அவனுக்குத் தைரியம் இல்லை; அவ்வளவு வெட்கம். ஆகையால் அவன் ஒன்றுமே சொல்லாமல் புறப்பட்டுப் போயிருக்கிறான். போய் என்ன செய்திருக்கிறான்? சென்னபட்டணத்தில் உள்ள ஒரு 'நீச்சல் கிளப்'

பில் சேர்ந்து இருபது நாள் இரவும் பகலுமாய் முயன்று, மீன்போல் நீந்தக் கற்றுணர்ந்து, கிளப்பின் அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரமும் வாங்கி வந்திருக்கிறான்.

வாதி: சபாஷ்! அந்தப் பத்திரத்தை வீசிக் கொண்டுதான் அவளிடம் ஓடிவருகிறான் போலும்!

பிரதிவாதி: ஆம். இனிமேல் அவர்கள் ஆயுசு முழுவதும் சந்தோஷமாக இருப்பார்கள் என்பதில் உனக்குச் சந்தேகமுண்டோ? இந்தப் 'பிளாட்'டுக்கு என்ன சொல்லுகிறாய்?

வாதி: தகுந்ததாய் ஒரு வார்த்தையும் சொல்ல முடியாமல் திணறுகிறேன் என்பது உனக்குத் தெரியவில்லையா? சொல்ல வேண்டியதை 'மலய மாருத'ப் பத்திரிகையின் ஆசிரியர் சொல்லிக் கொள்ளட்டும்.

பிரதிவாதி: இப்பொழுது கிடைத்த 'பிளாட்'டைச் சுற்றி வார்த்தைகளைக் குவித்துக் கதையை எழுதிவிட்டால் என்னுடைய கவலை நீங்கிவிடும்.

வாதி: செங்கல்களைச் சேகரித்தாய்விட்டது, இனிமேல் வீட்டைக் கட்ட வேண்டியதுதான் பாக்கி என்று சொல்லுகிற நிலையில் இருக்கிறாய்.

பிரதிவாதி: அது ஒரு க்ஷணத்து வேலை. நான் கதையை எழுதிக் கடிதங்களைக் கீழே போடப் போட அருகில் உட்கார்ந்துகொண்டு, அவைகளைப்

பக்கவாரியாக அடுக்கி வைப்பதற்கு யாரையாவது கூப்பிடலாம்.

வாதி: இந்த வாசாலம் இல்லாமற் போனல், சற்று முன்பு, வார்த்தைக்கு எழுத்துக் கூட்டத் தெரியாமல் இருந்தாயே, அந்த 'எறும்பு' கூட உன்னை எங்கேயாவது இழுத்துக்கொண்டு போய் விடும். கதையைக் கட்டு.

[கதை அவ்விதமே கட்டப்படுகிறது.]

# 12

## ஊர்வசியின் சாபம்

[இந்தச் சம்பவத்தைக் குறித்து மற்றவர்களுக்குத் தெரியக் கிடைக்காத சில விவரங்கள் எனக்கு எங்ஙனம் கிடைத்தன என்று தெரிவிக்க எனக்கு அதிகாரம் இல்லை. ஆனால் இதற்கு முன் வெளியிடப்பட்ட "ஊர்வசி" என்கிற சரித்திரத்தைப் படித்தவர்கள் அதிலிருந்து தங்கள் இஷ்டம்போல ஊகித்துக்கொள்வதில் எனக்கு ஆக்ஷேபம் இல்லை. கொனஷ்டை.]

### முதற் காட்சி

காலம்:— பாண்டவர்கள் வனவாசம் செய்து கொண்டிருக்கையில், கௌரவர்களுடன் இனிச் செய்யவேண்டிய யுத்தத்திற்காக உயர்ந்த அஸ்திரங்களைச் சம்பாதிக்கும் பொருட்டு, அர்ஜுனன், முதலில் ஹிமாசல சிகரத்தின்மீது சில காலம் தவம் செய்துவிட்டு, பிறகு தேவேந்திரனால் சுவர்க்க லோகத்திற்கு அழைக்கப்பட்டிருக்கும் சமயம்.

இடம்:— தேவலோகத்தில் ஓர் நந்தவனம்.

(அப்ஸரஸ்திரீகள் உலாவிப் பூப் பறித்துச்சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.)

சித்திரலேகை:— உங்களுக்கெல்லாம் எப்படி இருக்கிறதோ, அர்ஜுனன் வந்ததுதான் வந்தார், அவருக்காகவென்று நாம் நாலு நாளாக விடாமல் ஆடிப் பாடுவதில், எனக்குச் சப்த நாடிகளும் ஓய்ந்து போய்விட்டன.

வரூதினி:— இன்னும் ஒரு நாள்தான் இங்கே இருக்கப் போகிறாராம். போனால் போகிறது, அவர் இவ்வளவு அழகாய் இருக்கிறாரே, அவருக்காக நாம் கொஞ்சம் சிரமப்படக் கூடாதா?

ஸ்வயம்பிரபா:— எந்த விதத்தில் அவர் அழகு என்கிறாய்? ஸ்தம்பம் மாதிரி தோள், உடம்பெல் லாம் அம்பு பட்ட காயம், நடந்தால் தரை அதிருகி றது, பேசினால் காதைத் துளைக்கிறது!

வரூ:— ஒரு வீரர் என்றால் வேறு எப்படி இருப் பாராம்? துளிர் விடுகிற ஒரு மல்லிகைக் கொடியைப் போல், எதையாவது பிடித்துத் தொங்கிக்கொண்டு, குயில் மாதிரி கூவுவாராக்கும்!

மேனகை:— அவள் கிடக்கட்டும். ஸ்வயம்பிரபா வுக்கு எப்போதும் வழக்கந்தானே-மனசில் ஒன்றை நினைத்துக்கொண்டு, அதற்கு நேர் எதிராக வெளி யில் சொல்லுவது!

ஸ்வயம்:—ஆமாமடீ, உனக்கென்ன? விசுவா மித்திரரைக் கண்டு களித்த கண்களுக்கு எந்தப் புருஷனும் அழகாய்த்தான் இருப்பான்!

மேனகை :— விசுவாமித்திரருக்கு என்ன குறை வாம்? எனக்குச் சாவகாசம் மாத்திரம் இருந்திருந் தால், அவருடைய தாடியை நன்ருய் வாரிவிட்டு, அதில் இரண்டு புஷ்பங்களேயும் செருகியிருப் பேன். அப்போது எப்படி இருப்பார், தெரியுமா!

ரம்பை :— மன்மதனைப் போலிருப்பார். ஆனல் மன்மதனுக்குத் தாடி இல்லே. ஆகையால் விசுவா மித்திரர்தாம் அழகில் ஒரு படி உயர்த்தி, போதுமா?

மதுரஸ்வரா :— அது இருக்கட்டும். தேவேந்திர னுடைய பிள்ளேயாமே, அர்ஜுனன்? நிஜந்தான?

ரம்பை :— அப்படித்தான் எல்லாரும் சொல்லு கிருர்கள். வாஸ்தவமாக இருக்கும். ஏனென்ருல், இதற்கு முன்பும் பூலோகத்திலிருந்து வீரர்களே மாதலி அழைத்துக்கொண்டு வந்திருக்கிருன். வேறு எவரையும் இந்திரன் இம்மாதிரி, தன் ஸிம் மாஸனத்தில், கூட உட்கார வைத்ததில்லேயே?

வரூதினி :— ஸ்வயம்பிரபா என்ன வேண்டு மானுலும் சொல்லட்டும். அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்திருக்கிறபோது பார்க்க அழ காய்த்தான் இருக்கிறது!

சித் :— 'இப்போதுதான் சதுர்த்தசியாக இருக் கிறது' என்று நேற்று என் பின்னுலே நாரதர் சொல்லிக்கொண்டு போனர். பஞ்சாங்கப்படி

நேற்றுப் பஞ்சமி. எதை நினைத்துக் கொண்டு அந்தச்சாது அப்படிச் சொன்னரோ?

ரம்பை:— ஏனடீ! சதுர்த்தசி சாயங்காலத்தில் தானே, சாந்தமாய் அஸ்தமிக்கும் சூரியனையும், உதயம் செய்கிற பூர்ணமாகப் போகும் சந்திரனையும் ஒரே சமயத்தில் காணலாம்?

சித்:— அதுவா அர்த்தம்? அப்படியானல் இவர்கள் இரண்டுபேர்களுக்குள்ளே எவர் சூரியன், எவர் சந்திரன்?

ரம்பை:— இவ்வளவு சூக்ஷ்மமாய்க் கேட்டால் என்னல் பதில் சொல்ல முடியாது. ஊர்வசியைக் கேள். அவள்தான் நமக்குள் விதுஷி. நீ சொல்லு, ஊர்வசி.

ஊர் :— இதில் சந்தேகத்திற்கு இடம் உண்டா? எல்லோருக்கும் கண்குளிர, சந்திர வம்சத்திற்குப் பிரதிநிதியாக வந்திருக்கிற அர்ஜுனன்தான் சந்திரன்.

மேனகை : நன்ருய்க் கேட்டுக் கொண்டீர்களா? எல்லோருக்கும் கண்குளிர இருக்கிருராம் அவர். இனி, சூரியனை நீங்கள் யார் வேண்டுமானுலும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆனல் அந்தச் சந்திரன் கிட்டக்கூட அணுகாதேயுங்கள், ஊர்வசிக்குப் போட்டியாக.

ரம்பை:—பின்னே, போட்டியில்லையோ அது? துஷ்யந்தன் உன் பெண்ணைக் கல்யாணம் செய்து

கொண்டதனலே, நீ சந்திர வம்சத்திற்கு மாமியார் உறவுதானே ஆகும்? ஊர்வசிதான் நாட்டுப்பெண். அவளோடு போட்டி கூடாதுதான்.

சித் :—சரி, அவளுக்குப் புரூரவஸின் ஞாபகத்தைக் கிளறிவிட்டாயா? இனி ஒரு மாசத்திற்கு ஊர்வசி நம்மோடு பேச மாட்டாள்.

ஊர் :– (மனத்திற்குள்) புரூரவஸின் ஞாபகத்தை ஒருவர் எனக்கு மூட்டவும் வேண்டுமா? அதற்கும் இவர்களுடைய பேச்சுத் தேவையா? அர்ஜுனனைப் பார்க்கும்போதே பளிச்சென்று தோன்றவில்லையா? புரூரவஸின் கண்கள், அவருடைய உதடு, முகச்சாயல், நடை, தேக அமைப்பு—

வேலைக்காரி:—(பிரவேசித்து) அம்மா, உங்களைத் தேடிக்கொண்டு, வீட்டுக்குச் சித்திரசேனர் வந்திருக்கிறார்.

ஊர் :— சித்திரசேனரா? இதோ வந்துவிட்டேன். (புறப்படுகிறாள்)

ரம்பை :— நாமும் போகலாம். இருட்டிவிட்டது.

(எல்லோரும் கலைகிறார்கள்.)

## இரண்டாவது காட்சி

காலம் :— சுவல்ப நேரத்திற்குப் பிறகு.

இடம்:— ஊர்வசியின் வீடு.

(ஊர்வசியும் சித்திரசேனனும்)

ஊர்வசி :— கந்தர்வராஜரே, நமஸ்காரம். என்

னுடைய குடிசைக்குக் தாங்கள் எழுந்தருளிய காரணம் என்ன?

சித்திரசேனன் :— ஸௌபாக்யவதீ பவ. தேவேந்திரன் என்னை அனுப்பினார்.

ஊர் :— (ருசியற்ற குரலில்) அவருடைய கட்டளை என்ன?

சித் :— ஏன் அம்மா, உனக்கு இப்படி முகம் மாறிவிட்டது? உனக்கு அப்பிரியமான வார்த்தையைக்கூட இந்திரன் சொல்லவில்லையே?

ஊர் :— பிரியமோ அப்பிரியமோ, அவர் இட்ட கட்டளைப்படி நான் நடக்க வேண்டியவள்தானே? அவருடைய ஆக்ஞை என்ன?

சித்:— வேறொன்றுமில்லை. உன்னை அர்ஜுனனிடம் சென்று அவருக்கு உபசாரம் செய்யச் சொன்னார்.

ஊர் :— என்னையா? அர்ஜுனனிடமா? அவர் என்ன, ஏதாவது உக்கிரத் தவம் செய்கிறாரா, இந்திரனுடைய பதவியைப் பிடுங்கிக்கொள்ள? அப்படியிருந்தால் தவத்தைக் கெடுப்பதில் கைதேர்ந்தவர்கள் இல்லையா? மேனகை, திலோத்தமை—

சித் :— பார்த்தாயா? இப்படி நீயாக மேலும் மேலும் கல்பனை செய்துகொண்டு போகிறாயே! அது ஒன்றுமில்லை. இந்திரன் சொன்ன வார்த்தைகளையே சொல்லிவிடுகிறேன். 'நம்முடைய ஒப்பற்ற ஊர்வசியிடம் போய், அவளை அர்ஜுனனுக்குச்

சுசுரூஷை செய்யச் சொல்லு. நம்முடைய கட்டளைப் பிரகாரமே அவள் நடக்கிருள என்று அர்ஜுன னுக்கும் தெரிந்திருக்கட்டும்.' இவ்வளவுதான் அவர் சொன்னர். இதில் தவம் எங்கே, தவத்தைக் கெடுப்பது எங்கே?

ஊர் :— 'நம்முடைய ஒப்பற்ற ஊர்வசி' என்று அவர் சொன்னரா?

சித் :— அப்படியே சொன்னர். அதில் என்ன ஆச்சரியம் என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு நரநாராயண ரிஷிகள் தவம் செய்துகொண்டிருந்த இடத்திற்குத் தம்முடைய அப்ஸர ஸ்திரீகளையெல் லாம் இந்திரன் அனுப்பவில்லையா? அவர்களையெல் லாம் அழகில் தோற்கடிக்கிறேன் என்று நாராயண ரிஷி சொல்லி, உன்னைச் சிருஷ்டித்துத் தன் சப தத்தை நிறைவேற்றவில்லையா? அதெல்லாம் போகட்டும். தினம் தம் கண்ணுக்கெதிரே நிற்பவர் களுடைய தாரதம்யம் இந்திரனுக்குத் தெரியாதா? உன்னை 'ஒப்பற்ற' என்று சொல்லாமல் வேறு எப்படி வர்ணிக்கிறது?

ஊர் :— ஒரு ஸ்திரீயின் அழகை வேண்டிய மட் டும் ஸ்தோத்திரம் செய்தால், அவளை எந்தக் கசப் பையும் விழுங்கச் செய்துவிடலாம் என்கிற பொது விதிப் பிரகாரம் நீங்கள் பேசுகிருப் போலிருக் கிறது.

சித் :— இல்லவே இல்லை. நான் சொல்லுவது வாஸ்தவமென்று உனக்கே தெரியும். கையோடே

இன்னொரு விஷயம் சொல்லிவிடுகிறேன். சபை நடக்கும் போதெல்லாம், அர்ஜுனன் உன்னைத் தான் முக்கியமாகப் பார்க்கிறான். இதனாலேயே இவ்விதம் உன்னை அனுப்பும்படி இந்திரனுக்குத் தோன்றியிருக்கலாம். அர்ஜுனன் உன்னைக் கவனிக்கிறான் என்பது மாத்திரமல்ல, சில கால மாக ஒருவரையும் கண் நிமிர்ந்து பாராமல் அலக்ஷ யமாக இருக்கிற நீயும், அர்ஜுனனைக் கவனித்துப் பார்க்கிறாய் என்பது சபையில் எல்லோருக்கும் தெரி கிறது. அதையாவது ஒப்புக்கொள்ளுகிறாயா?

ஊர் :— அது இருக்கட்டும், சித்திரசேனரே, தயவு செய்து இதை எனக்குச் சொல்லுங்கள். பூலோகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் திரும்பத் திரும்பப் பிறப்பும் இறப்பும் உண்டல்லவா?

சித் :— ஆமாம்.

ஊர் :— அந்த மறு பிறப்புகளிலும் ஒருவன், தான் முன் ஜன்மத்தில் இருந்த மாதிரியே இருப் பானா? வித்தியாசம் ஏற்படுமா?

சித் :— உன்னுடைய கேள்வி எனக்குச் சரி யாகப் புரியவில்லை. தெளிவாய்ச் சொல்லு.

ஊர் :— இப்போது ஒருவன் அரசனாக இருக் கிறான். அடுத்த ஜன்மத்திலும் அவன் அரசனா கப் பிறப்பானா? மூட்டை தூக்கியாகப் பிறக்கவும்

இடமுண்டா? இந்த ஜன்மத்திலுள்ள உருவமே அடுத்த தடவையும் இருக்குமா? அல்லது மாறி விடுமா?

சித் :— இந்த மாதிரி பூலோகத்தைச் சேர்ந்த கேள்விகளுக்குச் சரியாக விடைகொடுக்க என்னல் முடியாது. தேவேந்திரனலும் முடியாது என்று நினைக்கிறேன். நாரதரைப் போன்ற தேவ ரிஷி களுக்குத்தான் இதெல்லாம் தெரியும். வேண்டு மானல் அவர்களைக் கேட்டுப் பார்க்கிறேன்.

ஊர் :— (தனக்குள்) சரிதான்; அவர்களைக் கேட்டு விட்டால், அப்புறம் நாலு நாளைக்கு உபந்நி யாசம் செய்ய உட்கார்ந்துவிடுவார்கள். அவர்களைக் கேட்பானேன்? புரூரவஸ், அர்ஜுனன் இந்த இரண்டு பேரையும் நேரில் பார்த்தவருக்குக் கண் ணுக்கு ஸ்பஷ்டமாக இருக்கிறதே! அதே வம்சம், அதே பதவி, அதே உருவம்—(வெளியிட்டு) இதற் காக நீங்கள் சிரமப்பட வேண்டாம். ஒருவரையும் கேட்க வேண்டாம். மற்ற விஷயத்தில் நீங்கள் சொன்ன பிரகாரம் செய்கிறேன். நமஸ்காரம்.

(கலைகிறார்கள்.)

## மூன்றாவது காட்சி

காலம் :— அன்றிரவு, சுமார் அர்த்த ராத்திரி.

இடம் :— அர்ஜுனனுக்கு ஏற்படுத்தியிருக்கும் மாளிகைக்கு முன்பாக.

(ஊர்வசி, ஸ்நானம் செய்து, அலங்கரித்துக்கொண்டு, பரிமளம் வீச, தெருவில் ஒய்யாரமாக நடந்து வந்து, வாசற்கதவைத் தட்டுகிருள். துவாரபாலகன் வருகிருன்.)

ஊர்வசி :—தேவேந்திரன் அனுப்பி, ஓர் அப்ஸர கன்னிகை வந்திருக்கிருள் என்று பார்த்தரிடம் சொல்லு.

(துவாரபாலகன் உள்ளே போகிருன். சற்று நேரத்தில் அர்ஜுனன், குறைத் தூக்கமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வருகிருன்.)

அர் :—இந்த நிசி வேளையில் தேவேந்திரன் அனுப்பியிருக்கிருரா? யாரை? என்ன காரியமாக?

ஊர் :—நான்தான் வந்திருக்கிறேன், குந்தீ புத்திரா, உன்னிடம் பணிவிடை செய்யும்பொருட்டு என்னை அனுப்பினர்.

அர் :—(அவளை அடையாளம் தெரிந்து கொண்டு) வா, நாரீமணி! உனக்கு அபிவாதனம் செய்கிறேன். இப்படி ராத்திரி வேளையில் உனக்கு எதற்காகச் சிரமம் கொடுத்தார்?

ஊர் :—சிரமம் என்ன? எங்களுக்கு நித்திரை அவசியமில்லையே?

அர் :—எனக்குத்தான் தேவையான பணிவிடைக்காரர்கள் ஏற்கனவே இருக்கிருர்

களே? உன்னைப்போன்ற ஸ்திரீ ரத்தினத்தை அனுப்புவானேன்?

ஊர் :—காரணம் உனக்குத் தெரியவில்லையா?

அர் :—தெரியவில்லையே!

ஊர் :—'சித்திரசேனா! ஊர்வசியை அர்ஜுனனிடம் சென்று அவனிஷ்டப்பிரகாரம் நடந்துகொள்ளச் சொல்லு' என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். இரண்டு உலகத்தில் பிரசித்தி பெற்ற நாயகனுக்கு இந்தப் புதிரை விடுவிக்க முடியாதா?

அர் :—எனக்கு எட்டாத புதிராகத்தான் இருக்கிறது. உன்னுடைய அழகின் பிரகாசத்தினால், என்னுடைய அறிவு கூசிப்போயிருக்க வேண்டும். நீயே விளங்கச் சொல்லு.

ஊர் :—(அர்ஜுனன் அநுகூலமாக இருக்கிறான் என்று எண்ணி, ஆவலுடன்) அர்ஜுனா, நான் இந்த லோகவாசி. சுயேச்சையாய்ப் பூலோகத்திற்குப் போக முடியாதவள். ஆனால் என்னைத் தேடி வந்தமாதிரியில் நீயே இங்கு வந்துவிட்டால் இனி நாம் விவாகம் செய்துகொண்டால், உனக்குப் பணி செய்யும் பாக்கியத்தை நான் சாசுவதமாய் அடைவேன் அல்லவா? அதற்காகத்தான்.

அர் :—(திடுக்கிட்டு) விவாகமா! நான் இப்பொழுது ஓர் விரதத்தில் அல்லவா இருக்கிறேன்!

ஊர் :—(புன்சிரிப்புடன்) அப்படி விரதத்தைக் கை பிடித்தவன், இந்திரனுடைய சபையில் எதற்

காக என்னை அடிக்கடி உற்று நோக்கினாய்? இதை நான் மாத்திரமல்ல, அங்குள்ள மற்றவர்களும் கவனித்திருக்கிறார்கள். இங்கிதக்ஞனான இந்திரன் அதைத் தெரிந்துகொண்டுதான், சித்திரசேனனிடம் சொல்லி அனுப்பினான், நான் உன்னிடம் போகும்படி.

அர் :—நான் உன்னை உற்று நோக்கியது வாஸ்தவந்தான். அதன் காரணத்தைச் சொல்லுகிறேன். என்னுடைய வம்சத்தின் ஆதிபுருஷனை——

ஊர் :—(அர்ஜுனன் சொல்லுவதைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே, தலை குனிந்துகொண்டு) அர்ஜுனா! இந்திரன் சொன்னதற்காக நான் வந்துவிடவில்லை. என்னுடைய இஷ்டத்தின் மேல்தான் வந்திருக்கிறேன். நம்முடைய ஸம்ஸர்க்கத்திற்கு யாதொரு தடையுமில்லை.

அர் :—(காதைப் பொத்திக்கொண்டு) ஈசுவரா! கர்ண கொடூரமாய் இருக்கிறதே உன்னுடைய வார்த்தை! என்னுடைய முன்னோரான புரூரவஸினுடைய பார்யை அல்லவா நீ? அதனாலல்லவோ உன்னைத் திரும்பத் திரும்பப் பார்த்தேன். நான் உன்னை மணப்பது மகா பாதகமல்லவா! நீ எனக்குப் பாட்டி முறையாயிற்றே!

ஊர் :—இதென்ன, சிறு குழந்தையின் வார்த்தை! கீழ் லோகத்தில் ஏற்பட்ட உறவு இங்கேயுமா வரும்? பிரதி தினமும் ஸ்வர்க்கப்ராப்தி

கிடைத்த மனிதர்கள் இங்கே வந்துகொண்டே இருக்கிறார்கள். அவரவர்கள் சேகரித்த புண்ணியத்தின் பலன் தீர்ந்தவர்கள், பிரதி தினமும், பூமியில் புனர் ஜன்மம் எடுக்கப் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். இவ்விதம் கோடானுகோடி ஜனங்கள் ஸ்வர்க்கத்திற்கு வந்து வசித்தாய்விட்டது. இவர்களுக்குள், பல பிறப்புகளிலும் இருந்திருக்கக்கூடிய உறவுகளையெல்லாம் எந்த அப்ஸர ஸ்திரீயாவது விசாரித்து நிர்ணயிக்க முடியுமா? பூலோகத்திய உறவு பூலோகத்தோடு போய்விட்டது. வேண்டுமானால் இங்கே எவரையும் கேட்டுப் பார். இது தெரியாமலா இந்திரன் என்னை உன்னிடம் அனுப்பினான்? என்னைப் பார்த்தால் உனக்குப் பாட்டி மாதிரி தோன்றுகிறதா?

அர் :—ஹே கல்யாணி! என்னுடைய மனசைக் கலக்க எண்ணாதே. இதோ, என்னுடைய சிரஸால் உன்னுடைய பாத கமலங்களைத் தொடுகிறேன்.

ஊர் :—(விலகிக்கொண்டு):— ஐயோ! வேண்டாம். நான் அல்லவா உன்னுடைய பாதத்தைப் பிடிக்கவேண்டும். இதோ பிடிக்கிறேன். என்னுடைய மனோரதம் பலிக்கும்படி நீயே ஆசீர்வாதம் செய்.

அர் :—என்னைத் தர்ம சங்கடத்தில் மாட்டிவைக்காதே. உன்னுடன் இந்த வாதத்தில் நான் ஜயித்தாலும் தோற்றாலுமே, திருப்தி இல்லை.

ஊர் :—அப்படியானல் ஏன் வாதம் செய்கிருய்? இவ்வுலகம் முழுவதும் அனுஷ்டிக்கிற ஆசாரத்தை நீயும் அனுசரிக்க வேண்டியதுதானே?

அர் :—இங்கே வழக்கம் எப்படி இருந்தாலும், நம்முடைய உறவு எனக்குத் தெரிந்திருக்கும் பொழுது, என்னுடைய மனச்சாக்ஷி சொல்லாதா?

ஊர் :— சொல்லட்டுமே! அது சொல்லுகிறது நியாயமாக இருந்தால்தானே, நீ கவனிக்கப் போகிருய். நீங்கள் ஐந்து சகோதரர்களும் பன்னிரண்டு வருஷ காலம் வனத்தில் வசிப்பதாக ஒப்பந்தம். இப்பொழுது, நீ கௌரவாதிகளிடம் ஓடிச் சென்று, 'சகோதரர்களே! உங்களுக்குத் தெரியாமல் நான் நாலு நாள் ஸ்வர்க்க லோகத்தில் வசித்துவிட்டேன். எங்களுடைய வாக்குக்குப் பங்கம் நேர்ந்து விட்டது. ஆகையால் நாங்கள் வனவாசத்தை மறுபடியும் தொடங்க வேண்டுமென்று என்னுடைய மனச்சாக்ஷி சொல்லுகிறது' என்று தெரிவிக்கப் போகிருயா, சொல்லு?

அர் :—(திடுக்கிட்டு, அவளுக்கு நேராய்ப் பதில் சொல்லத் துணியாமல், ஒரே மூச்சாக) அஷ்ட திக்குத் தேவதைகளும், நான் சொல்லுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஊர்வசி எனக்குத் தாய்மாதிரி, பாட்டி மாதிரி—

ஊர் :— அர்ஜுனு, சற்றுப்பொறுத்துக் கொள். அவசரப்பட்டுச் சத்தியம் செய்யாதே! நீயே முன்னெரு ஜன்மத்தில் புரூரவஸ்ஸாகப் பிறந்து நீயே என் பர்த்தாவாக இருந்தாய் என்று நான் சொன்னால், அப்போதும் இந்த ஆக்ஷேபம் உண்டா, சொல்லு.

அர் :— இது வீண் வார்த்தை, இதை நான் நம்ப மாட்டேன். ஸ்திரீகள் வஞ்சனைக்காரர்கள். தங்களுடைய கோரிக்கையைச் சாதிப்பதற்காக எந்தப் பொய்யையும் சொல்லுவார்கள்.

ஊர் :— கௌந்தேய! எனக்காக ஸ்திரீகளையெல்லாம் ஒருமிக்கத் தூஷிக்க வேண்டாம். பக்தியுடனும் விசுவாசத்துடனும் காமத்துடனும் உன்னிடம் வந்த என்னைத் திரஸ்கரிக்காதே. என்னுடைய அவஸ்தையைக் கண்டால் வேறு எந்தப் புருஷனும் இரக்கப்படுவான். எந்த ஸ்திரீயுங்கூட, இரக்கப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி, என்னுடைய வேதனையை அறியவாவது அறிவாள். நீ மாத்திரம், இப்படி இரண்டிலும் சேராமல்—

அர் :— அப்படியே இருக்கட்டும். நான் ஒரு ஸ்திரீயுமல்லாமல்புருஷனுமல்லாமல்; பேடியென்றே வைத்துக் கொள். உன்னுடைய மோசவலையில் சிக்கி, என்னுடைய விரதத்தைப் பங்கம் செய்து, ராஜ்யத்தை இழப்பதை விட, நான் ஓர் அலி என்று எல்லோரும் என்னை எண்ண, எனக்குச்

சம்மதம். (அவள் பிடித்திருக்கும் காலை உதறி விடுவித்துக்கொள்ளுகிறான். அந்தப் பாதம் அவளுடைய தலையின் மேல் படுகிறது.)

ஊர் :—(அவமானத்திலும் கோபத்திலும், மெய்ம்மறந்து) நானா உன்னை மோசம் செய்கிறவள்? உனக்குக் கெடுதி செய்ய எண்ணுகிறவள்? இப்படி எண்ணி, பேடி போல் பேசும் நீ ஒரு பேடியாகவே போகக் கடவாய்.

(அர்ஜுனன், தேகம் துடிக்க, மனம் பதைக்கத் திரும்பி உள்ளே போகிறான்.)

ஊர் :— ஹா, தெய்வமே! நான் என்ன செய்தேன்! என்னுடைய புரூரவஸைச் சபித்துவிட்டேனே! ஐயோ! (மூர்ச்சையாய் விழுகிறாள். சற்று நேரத்தில் நாரதர் பிரசன்னமாகிறார். பல உபசாரங்கள் செய்து அவளை மூர்ச்சை தெளியச் செய்கிறார்.)

நார :— எழுந்திரு, குழந்தாய்.

ஊர் :—(மகா துக்கத்துடன்) மஹரிஷியே! நான் என்ன காரியம் செய்துவிட்டேன்! ஒரு கொடிய பாதகத்தை அல்லவா —

நார :— வருத்தப்படாதே! அந்தச் சாபம் அர்ஜுனனுக்குப் பிரயோஜனப்பட்டு, நன்மையாகவே பலிக்கும். துர்யோதனாதிகளுடன் செய்த ஏற்பாட்டின்படி, பாண்டவர்கள் பதின்மூன்றாவது வருஷத்தில் அக்ஞாத வாசம் செய்ய வேண்டும்.

அப்பொழுது அர்ஜுனன் பேடியாக இருக்க வேண்டியது அவசியம், நீ கொடுத்த சாபம் அந்த ஒரு வருஷ காலத்திற்கு மாத்திரம் நடைபெறும்படி இந்திரன் ஆக்ஞாபிப்பான்.

ஊர் :—(ஆவலுடன்) நாரதரே! நீங்கள் சொல்லுங்கள். அர்ஜுனன்தானே முன் ஜன்மத்தில் என்னுடைய பர்த்தாவாக இருந்த புரூரவஸ்?

நார :—(வருத்தத்துடன்) இல்லையே, குழந்தாய். ஒரு வம்சத்தில் பிறந்தவர்களுக்கு உருவம் ஒரே மாதிரி இருக்கலாம். நம்முடைய ஆசை அழைக்கிறதே என்று, அந்த ஒன்றை மாத்திரம் நம்பி நடக்கலாமா? முன்பு நர நாராயணர்கள் என்று இரண்டு ரிஷிகள் இருந்தார்களே, அவர்களில் நர ரிஷிதான், இப்பொழுது சில அவசியங்களின் பொருட்டு அர்ஜுனனாகப் பிறந்திருக்கிறார்.

ஊர் :—(ஆத்திரத்துடன்) அப்படி இருக்க, இந்திரன் என்னை இவரிடம் போகச் சொல்லி அனுப்பினானே! இது குரூரமல்லவா? நான் புரூரவஸை மணந்தது முதற்கொண்டே அவன் என்னிடத்தில் மாறியிருக்கிறான்.

நார :—நீ மாத்திரம் எவ்விதம்? கட்டளையிடக் கூடிய எஜமானனாக இந்திரனை எண்ணுகிறாயே தவிர, முன்மாதிரி பக்தி வைத்திருக்கிறாயா? அர்ஜுனன் அவனுடைய பிள்ளை. அவனுக்கு இந்தச் சாபம் கிடைப்பது அவசியம். திரஸ்கரிக்கப்

பட்டவள்தான் இம்மாதிரி ஒரு சாபம் கொடுக்கக் கூடும். இதெல்லாம் உத்தேசித்து இந்திரன் உன்னை இங்கே அனுப்பியிருக்கலாம்.

ஊர் :— இவ்வளவு தூரம் முன்னதாகவே ஆலோசிக்கிற இந்திரனுக்கு, இதனால் எனக்கு அவமானமும் மன வேதனையும் நேரிடும் என்று தோன்றி இருக்காதா? தோன்றியுமல்லவா இப்படிச் செய்திருக்கிறான்!

நார :— அது அவனுடைய தப்புதான். இந்திரன் குற்றமற்றவன் என்று எவர் சொல்லுவார்? ஆனால் ஒன்று: நீயும் மற்ற அப்ஸர ஸ்திரீகள் மாதிரி தாமரை இலையின் மேல் நீர்த் துளியைப் போல், ஒருவரிடமும் ஒட்டுதலில்லாமலிருந்தால், உனக்கு ஒரு வேதனையும் இருக்காது. நீ பூலோகத்தில் ஜனித்த ஒரு தேவ கன்னிகையாகையால்தான், உனக்கு இரண்டு உலகத்திலும் பாசத்துடன், இரண்டும் கெட்ட ஸ்திதியில் இருக்கிறாய்.

ஊர் :— அதென்ன, அப்படிச் சொல்லுகிறீர்கள்?

நார :— பின்னே என்ன? பிணி, மூப்பு, சாவு இல்லாத ஒரு தேவதை இம்மூன்றும் உள்ள ஒரு மானிடன் மேல் தீராத காதலைக் கொண்டால்?

ஊர் :—(ஈன ஸ்வரத்தில்) மஹரிஷியே, புரூரவஸுக்கு நான் தேவதை அல்ல, ஒரு ஸ்திரீ. என் கண்ணில், அவர் ஒரு மானிடர் அல்ல, என் தெய்வம்.

நார:— அப்படிச் சொன்னுல், அதற்குமேல் என்ன செய்கிறது? அழிவற்ற ஆத்மாவுக்கு அழிவுள்ள தேகத்தின் மேல் வாஞ்சை ஏற்பட்ட மாதிரி அல்லவா நீ அவரிடம் பாசம் கொண்டிருப்பது! நீ பிடித்திருக்கும் வழியில், பிறருக்குக் கிடைக்காத காதலின்பத்தை நீ அநுபவிக்கிற மாதிரியே அதை ஒட்டிக்கொண்டு பிறருக்கு நேரிடாத வியோகத் துன்பமும் உனக்கு நேரிடும் அல்லவா? நீ அவரை மறந்துவிட்டு, இதர அப்ஸர ஸ்திரீகளைப் போல், நிம்மதியான மனசை அடையும்படி வரன் கொடுக்கட்டுமா?

ஊர்:— ஸ்வாமி, வேண்டாம், வேண்டாம், முக்காலும் வேண்டாம். நான் அநுபவித்திருக்கும் ஆனந்தத்தின் ஞாபகத்தைக்கூட இழக்கச் சம்மதியேன். மறுபடியும் அது கிடைக்குமா என்று சதா படும் கவலையையும் கைவிட இணங்கேன்.

நார:— அப்படியானல் என்னதான் வேண்டுமென்கிருய்?

ஊர்:— புரூரவஸுக்கு அழியாத ஆத்மா உண்டல்லவா? ஏதாவது ஜன்மம் எடுத்துக்கொண்டு தானே இருப்பார்?

நார:— ஆம், அது சரி.

ஊர்:— அவர் எந்த எந்த ஜன்மம் எடுத்திருந்தாலும் நான் பூலோகத்திற்குச் சென்று அவரை அடையும் மார்க்கத்தை மாத்திரம் உபதேசியுங்கள். நான் உங்களை நமஸ்கரிக்கிறேன்.

நார:— என்ன? இந்திரனுடைய உத்தரவு, சம்மதம் இல்லாமல், உன் இஷ்டப்பிரகாரம் போகவா?

ஊர்:— ஆம், அதுதான் வேண்டும்.

நார:— அப்படியானல் அவனைக் காட்டிலும் பெரிய இடத்திலிருந்து அல்லவா உனக்குச் சகாயம் கிடைக்க வேண்டும்?

ஊர்:— அதற்குத்தான் வழி சொல்லுங்கள். உங்களுக்குக் கோடி நமஸ்காரம்.

நார:— எனக்குத் தோன்றுகிறது, இச்சமயம் பூலோகத்தில் மகாவிஷ்ணு எடுத்திருக்கும் அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே நீ பிரார்த்திக்க வேண்டுமென்று—

ஊர்:— அப்படியே செய்கிறேன்.

நார:— எதற்காக இப்படிக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேனென்ருல், மற்ற அவதாரங்களிலெல்லாம் நரசிம்மமாகட்டும், ராமனுகட்டும் துஷ்ட நிக்கிரகமே முக்கியக் கருத்து. கிருஷ்ணனே, அப்படியல்ல. சென்ற அவதாரத்தில் கர்ப்பிணியாக இருந்த சீதையைக் காட்டுக்கு அனுப்பி, லோகாபவாதத்தைச் சம்பாதித்தது முதற்கொண்டே, மாறியிருக்கிருர். ஒருவர் நியாயமாய் நடப்பது போதாது, காருண்யத்தையும் சேர்க்க வேண்டும் என்கிற பாவனையில், இப்பொழுது, பிறருடைய கஷ்டங்களையே முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவர்களுடைய

தவறுதல்களை மன்னித்துவிட்டு, அவர்களை ரக்ஷிப்பதே எண்ணமாக இருக்கிறார்.

ஊர் :— (கை கூப்பி) கிருஷ்ணா! கிருஷ்ணா!

நார :— சூதாடிவிட்டு, பத்தினி உள்பட, எல்லாவற்றையும் இழந்த யுதிஷ்டிரரைக்கூட ஒரு வார்த்தை இளப்பமோ குற்றமோ சொல்லாமல், மேலே காப்பாற்றுவதிலேயே முனைந்திருக்கிறார். 'அவன் திருடினானா? அவன் கையை வெட்டு' என்று சொல்லும் இதர தெய்வம். கிருஷ்ணனோ, 'ஏன் அப்பா, திருடினாய்? பசியால் வருந்தியா? அடாடா! இனிமேல் அப்படிச் செய்யாதே! இந்த மாதிரியில் உழைத்துச் சம்பாதித்துப் பிழை' என்பார்.

ஊர் :— அவரல்லவா என்னைப் போன்றவரிடத்தில் இரக்கப்படுவார்! அர்ஜுனன் புரூரவஸ் தான் என்று நம்பிக்கை உண்டாவதற்கு முன்பே, அவ்வித ஆசையையே கைபிடித்துக்கொண்டு இங்கே வந்துவிட்டேன். வந்த இடத்தில் கோபத்தினால் அர்ஜுனனைச் சபித்தேன். காமோ அகார்ஷீத் மன்யுரகார்ஷீத். ஸ்ரீ கிருஷ்ண பகவான்தான் என்னை மன்னித்து ரக்ஷிக்க வேண்டும். கிருஷ்ணா! கருணாஸிந்தோ!

நார:—நீ அவரைப் பிரார்த்தித்துக்கொண்டால், புரூரவஸுக்கு, ஒவ்வொரு ஜன்மத்திலும், புண்ணியம் முற்றி, பாக்கியம் நெருங்கும் போதெல்லாம், சமயோசிதமான விதத்தில் நீ அவரை அடையும் படியும், அவர் உன்னை அறிந்துகொள்ளும்படியும்,

கிருஷ்ணன் வழிகாட்டித் தயை புரிவார். நான் போய் வருகிறேன்.

[ மறைகிறார். ]

ஊர்:— ( ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக் கொண்டு) கிருஷ்ணா! கிருஷ்ணா! தயாபயோநிதே!

# 13

## உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

நான் தான் வேங்கடரமண ஐயர். ஆமாம், இதற்கு முன்பே என்னை உங்களுக்குத் தெரியும். நன்றாகவே தெரியும். 'மலய மாருத'ப் பத்திரிகையில், என்னுடைய பெயரை அடிக்கடி பார்த்திருப்பீர்கள். தவிர, சமீபத்தில் வெளியான என்னுடைய 'அதிகப் பிரசங்கி' என்கிற உண்மையான சரித்திரத்தைப் படித்து அதிசயித்திருப்பீர்கள். ஆகையால் என்னைக் குறித்து மேலும் சொல்லிக்கொள்ள அவசியமில்லை.

நேற்றைக்கு, 'மலய மாருத'த்தின் இருபதாம் ஆண்டுவிழா. அதன் காரியாலயத்தைச் சேர்ந்த பெரிய தோட்டத்தில், ஒரு 'டீ-பார்ட்டி' நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், பெரியோர், சிறியோர், எல்லோருமே வந்திருந்தார்கள். உல்லாசப் பேச்சும் ஹாஸ்யங்களும், இருட்டில் காணும் மின்மினிப்பூச்சிகளைப்போல், மேஜைக்கு மேஜை பறந்துகொண் டிருந்தன. அப்பொழுது பத்திராசிரியர் மார்க்கண்டேயர் எழுந்து இவ்விதம் பேசினார் :

மார்க்கண்டேயர் : 'மலயமாருத'ப் பத்திரிகையை அறியாதவர் தமிழ்நாட்டில் இல்லை. எழுத்

துக் கூட்டியாவது படிக்கக் கூடியவர்கள் எல்லோ ரும் அதைப் படிக்கிறார்கள்; அதுகூடத் தெரியாத வர்கள் அதிலுள்ள சித்திரங்களைக் கண்டு களிக் கிறார்கள் என்று ஏற்கனவே ஒருவர் எழுதியிருக் கிறார். நீங்கள் இன்று இவ்விடம் கூடி, தயை புரிந் ததே, பத்திரிகையின் மகிமைக்கு ஓர் உயர்ந்த மேற் சாக்ஷி. ஆகையால் அதைக் குறித்து இந்த விழா வில் ஒருவரும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

"தவிர, எப்பொழுதும் நூதன வழிகளையே உண்டாக்கிச் சென்று, மனோராஜ்யத்தின் புது நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே 'மலய மாருத'த்தின் மாறாக் கொள்கை. ஆகையால், இதரரைப் போல், அலுப்புண்டாக்கும் வண்ணம் வெறும் ஸ்தோத்திர பாடத்தைப் படிப்பதற்குப் பதி லாக, இச் சுபதினத்தில் நாம் ஒரு நூதன விதத்தில் சிறந்த சந்தோஷத்தை அனுபவிப்போம். அதன் பொருட்டு இந்தச் சிறிய ஏற்பாட்டை செய்திருக் கிறேன்.

"இதோ, மூன்று பைகள் இருக்கின்றன. இரண்டில், இங்குள்ள அதிதிகளின் பெயர்களைத் தனித்தனியாகத் துண்டுக்கடிதங்களில் எழுதிவைத் திருக்கிறது. முப்பத்தாறு புருஷர்களுடைய பெயர் களை ஒரு பையிலும், மற்றொரு பையில் இருபத்து நாலு ஸ்திரீகளுடைய பெயர்களையும், மூன்றாவது பையில், பொறுக்கின விஷயங்களாகப் பன்னி ரண்டு விஷயங்களின் பெயர்களையும் குறிப்பிட்ட

கடிதங்கள் இருக்கின்றன. முதலில் இந்தப் பை யையே நன்ருகக் குலுக்கிவிட்டு அதிலிருந்து ஒரு கடிதத்தை என்னுடைய சிறு பெண் பொறுக்கி எடுத்து வாசிப்பாள். (அந்தச் சிறுமி அங்ஙனமே செய்து, 'காதலும் கதைகளும்' என்று படித்தாள்.)

"சரி. இப்பொழுது இந்தப் பெரிய பையி லிருந்து ஒரு பெயரை எடுப்பாள். (அவள் அவ்விதம் ஒரு கடிதத்தை எடுத்து, விதிவசாத், என்னுடைய பெயரைப் படித்தாள்.)

"வெகு சந்தோஷம். இப்பொழுது, ஸ்ரீ வேங்கடரமண ஐயரை, அன்பு கூர்ந்து, 'காதலும் கதைகளும்' என்கிற விஷயத்தைக் குறித்துப் பிர சங்கம் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். கணக்காக ஐந்து நிமிஷம் பேசினல் போதும். இவ்விதம், எதிர்பாராமல், திடீரென்று ஒரு விஷ யத்தைக் குறித்து உபந்நியாசம் செய்யும்பொழுது, நம்முடைய நண்பரின் அபூர்வ சக்திகள் நன்கு சோபிப்பதை நாம் காணப் போகிருேம். (கரகோ ஷம்) எழுத்தாளர்களுக்கு இதைக் காட்டிலும் உயர்ந்த ஆனந்தம் என்ன கிடைக்கக்கூடும்? (மீண்டும் கரகோஷம்) (என்னை நோக்கி) தயவு செய்து உடனே ஆரம்பிக்க வேண்டும். சரியாக ஐந்து நிமிஷமே உண்டு."

இவ்விதம் பேசிவிட்டு, அவர் உட்கார்ந்து கொண்டார். அவருக்கு என்ன? மேற்சொன்ன சிறு பேச்சைக்கூட அவர் வீட்டிலே தயார் செய்து

பத்துத் தடவை உருப் போட்டுக்கொண்டுதான் வந்திருப்பார். அப்படிப்பட்டவர் தாம் ஸ்வஸ்தமாய் உட்கார்ந்துகொண்டு, ஒரு பெரிய விஷயத்தைக் குறித்த பிரசங்கத்தில், என்னை முன்னறிவிக்கையில்லாமல், மாட்டிவிட்டார்.

ஆனால் இதற்கு அஞ்சுகிறவனா நான்? உலகத்திலுள்ள எந்தச் சங்கதியைப் பற்றியும் ஓர் ஆழ்ந்த அபிப்பிராயம் இல்லாதவனா? அல்லது மனசில் உள்ளதை உடனே வெளிப்படுத்தத் தெரியாதா, பயமா? ஆண் அல்லது, பெண் என்று சொல்ல வேண்டியிருந்தால் ஆண் அல்லது பெண் என்று சொல்லுவது என்னுடைய வழக்கமேயொழிய, சிலரைப்போல், ஆடுஉ, மகடூஉ என்று சொல்லிவிட்டு, நீங்கள் அகராதியில் அர்த்தத்தைத் தேடிப் பிடிப்பதற்குள், தப்பித்து ஓட எண்ணுகிறவனல்ல. ஆகையால் இரண்டே விநாடியில் தொண்டையைச் சீர்படுத்திக்கொண்டு, (பின்வரப் போவதைச் சிறிதேனும் அறியாமல்) பிரசங்கத்தைத் தொடங்கினேன்.

நான்: நண்பர்களே, வெகு காலத்திற்குமுன் ஜீவித்திருந்த ஒரு சிறந்தஞானி சொல்லியிருக்கிறார்: கப்பலில் பிரயாணம் தொடங்குமுன், தெய்வத்திற்கு வேண்டிக்கொள். யுத்தத்திற்குப் போகுமுன், இரண்டு தெய்வங்களுக்கு வேண்டிக்கொள். விவாகம் செய்துகொள்வதற்கு முன், மூன்று தெய்வங்களுக்கு வேண்டிக்கொள் என்று.

ஆனால் எந்த மூன்று தெய்வங்களுக்கு என்று அவர் விவரித்துச் சொல்லவில்லை.—

கோனஷ்டை: வீரன், இருளன், காட்டேறி.

நான்: (அவரைச் சட்டை செய்யாமல்) “இந்த ஸ்திதியில், தகுந்த தெய்வங்களுக்குப் பிரார்த்தனையுமில்லாமல், தகுந்த தெய்வங்களின் உதவியுமில்லாமற் போவதால்தான், நாம் அனுபவத்தில் அறிய வரும் கல்யாணங்கள் ஒன்றிலாவது காதலைக் காண முடியவில்லை.

“ஆனால், இதற்குப் பரிகாரமாகவே—என்று எனக்குத் தோன்றுகிறது—ஆசிரியர்கள் எல்லோரும் ஒற்றுப் பேசிக்கொண்டாற்போல் ஒவ்வொரு கதையிலும் காதல் சம்பவத்தை நடத்திவைக்கிறார்கள். கதைகளை விட்டால் காதலைக் காண முடியாது என்பது நிற்க, காதல் இல்லாத கதைகளைப் புஸ்தகங்களில் காண முடியவில்லை.

“இதில் என்ன நியாயம் இருக்கிறது? வாழ்க்கையில் காதல் ஒன்றே பிரதானமா? வடை, பாயசம் சேராமல் விருந்து போஜனமே கிடையாதா? நாட்டில் மாம்பழம் இல்லையா, பாதம் ஹல்வா இல்லையா என்று நான் உங்களை வணக்கமாய்க் கேட்கிறேன். எல்லாக் கதைகளும் ஒரு கல்யாணத்தில் முடிவதற்குப் பதிலாக, எந்தக் கதையிலாவது, ஆரம்பத்திலே ஒரு விவாகம் நடக்கப் போவதாக நாம் பயமுறுத்தப்பட்டு, முடிவில் காதலர்கள் சாமர்த்தியமாகக் கல்யாணத்திலிருந்

தும் காதலிலிருந்தும் தப்பித்துக்கொண்டு போய், தனித்தனியே செளக்கியமாய் வாழ்ந்தார்கள் என்று நாம் படிக்கமாட்டோமா என்று ஏங்கு கிறேன்.

"தவிர, கதைகளில், காதல் ஜனிக்கும் வேக மும் வளரும் வேகமுந்தான் என்ன? இருவர், சென்ட்ரல் ஸ்டேஷனில், வண்டியில் ஏறின பின்பே, முதல் தரம் சந்திப்பதாக வாசிக்கிறோம். ரேணுகுண்டா ஸ்டேஷனில் அவர்கள் கைகோத்த வண்ணம் இறங்கி, அங்குள்ள விற்பனைசாலையில், பழம் பாக்கு வெற்றிலைக்கு வேண்டிய சாமான்களை வாங்குகிறார்கள். சில சமயம், அப்படியே திருச்சா னூருக்கோ திருப்பதிக்கோ போய்விடுகிறார்கள்.

"ஆனால், அவ்வளவு தூரந்தான் போவா னேன்? இருக்கும் ஊரிலே இரண்டு தடவை சந்திப் பதே போதும். அதே பெண்ணின் தகப்பன், வீட் டில் பை பையாகப் பணத்தைச் சேர்த்து வைத்து, ஊர் ஊராக வரனைத் தேடித் திரிந்துத் திண்டாடிக் கையைப் பிசைந்துகொண்டிருக்கையில், சிறுமி என்ன செய்கிறாள்? பண்டைக்காலத்துச் சம்பிரதா யப் பிரகாரம் பிள்ளை பரதேசம் போவதற்குப் பதி லாக அந்தக் கட்டழகி பீச்சுக்கோ ஸினிமாவுக்கோ போகிறாள். அங்கே மூன்று முறுவலிப்புகளையும் பத்துப் புன்னகைகளையும் தெளித்துவிட்டு, சரி யான ரமணனை மயக்கி, கழுத்தில் கயிற்றைக் கட்டி வீட்டிற்குக் கொண்டுவந்துவிடுகிறாள்.

"நாம் இங்கே அறுபது பேர்கள் இருக்கிறோமே, எவருடைய அநுபவத்திலாவது இம்மாதிரி நேர்ந்த துண்டா? அது போகட்டும்; 'கண்டதும் காதல்' என்று வெகு சுலபமாகச் சொல்லிவிடுகிறார்களே, அந்த ஒப்பற்ற காணிக்கைக்குத் தகுதியான ஒரு ஸ்திரீயைக் கண்டதாவது உண்டா? அந்தக் காதல் வெள்ளம், கதைகளுக்கு வெளியிலே ஒரு வயலுக் கும் பாயாதோ?

"மற்றொரு ஞானி, ஒரு பெரிய விதுஷி, சொல்லியிருக்கிறாள் — அதை எவரும் ஒப்புக் கொள்ளுவர் — ஸ்திரீகள் எல்லோரும் பதினேழாம் வயதில்தான் பிறக்க வேண்டும், முப்பதாம் வயதில் இறக்க வேண்டும் என்று."

கோனஷ்டை: இறக்காத போனாலோ?

நான்: "தாமே இறக்காத போனால், தூங்கும் பொழுது, மற்றவர்கள் க்ளோரபார்ம் கொடுத்து விட வேண்டும். அவ்வளவுதானே? நம்முடைய ஆசிரியர்கள் அந்த விதுஷியைக் காட்டிலும் கண்டிப்பாய் இருக்கிறார்கள். வெவ்வேறு கதா நாயகிகளின் சாமர்த்தியமும் இதர குணங்களும் பலவிதமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லோ ருக்குமே, வயது பதினேழுக்கு மேல் இருபதுக் குள்ளேதான் இருந்து தீரவேண்டும் போலும்! நாயகர்களின் வயது சஞ்சாரம் இருபதிலிருந்து இருபத்தைந்து வரைதான்.

"இதில் என்ன நியாயம், என்ன உண்மை இருக்கிறது ? எனக்குப் பாருங்கள், முப்பது வயது ஆய்விட்டது—"

கோனஷ்டை: அப்படி ஆனது எத்தனை வருஷங்களுக்கு முன்போ ?

நான்: ஐயா, நான் வள்ளிசாகச் சொன்னேன். ஒரு வீட்டின் விலையை விசாரித்தால், ரூபாய், அணா, பைசா, எல்லாமா சொல்லுகிறார்கள் ? ஸ்தூலமாக, இத்தனை ஆயிரம் ரூபாய் என்று சொல்லுகிற மாதிரியில்தான் ஜனங்கள் வயதைச் சொல்லுகிறதைப் பார்த்திருக்கிறேன். ஜாதக ரீதியாகப் பேசவேண்டுமென்றால், எனக்கு இன்னும் நாலைந்து வருஷங்களைக் கூட்டிக்கொள்ளுங்களேன், ஆக்ஷேபமில்லை. எப்படியோ, எனக்கு முப்பது வயது ஆய்விட்டது என்பது வாஸ்தவந்தானே ? நான் வாதிக்கப்போனது என்னவென்றால், ஆசிரியர்களின் சம்பிரதாயப்படி, என்னைப் போல் முப்பத்தைந்து முப்பத்தாறு வயது நிரம்பினவர்களுக்கு, ஒரு காதல் விவாகம் சித்திக்க இடமே கிடையாது ! எலியைப் பிடிப்பதற்கு எலிப் பொறி. மனிதனைப் பிடிப்பதற்குக் கல்யாணம். இந்த மானிடப் பொறியில் அகப்பட்டுக்கொள்ள இஷ்டமும் எனக்கு இல்லை, அகப்பட்டுக்கொள்ளப் போவதுமில்லை. ஆனல் அது வேறு விஷயம். நானே இஷ்டப்பட்டு, ஒரு ஸ்திரீயும் இஷ்டப்பட்டா

லும், ஆசிரியர்கள் சம்மதியார்கள்போல இருக்கிறதே!

இதற்குள், மார்க்கண்டேயர், "ஐந்து நிமிஷம் கெடு தீர்ந்துவிட்டது" என்றார். நான் விட்டுக் கொடுத்துவிடவில்லை. "தொடரும்" என்று ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டே உட்கார்ந்தேன் (நீடித்த சிரிப்பும் கரகோஷமும்.)

அதன் மேல், மார்க்கண்டேயரின் சொற்படி, பாக்கி இருந்த பையிலிருந்து அவருடைய பெண் ஒரு கடிதத்தை எடுத்து, 'ஸ்ரீமதி அமிர்தவல்லி அம்மாள்' என்கிற பெயரை வாசித்தாள்.

மார்க்கண்டேயர், "ஸ்ரீ வேங்கடரமண ஐயர் இதுவரை பேசினதற்குத் தக்க பதிலை, தயவு செய்து அளிக்கும்படி, ஸ்ரீமதி அமிர்தவல்லி அம்மாளைப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

அப்பொழுது வேறொரு மேஜையில் உட்கார்ந்திருந்த ஒரு மாது (நேற்றைக்கு முன் நான் அவளைக் கண்டதில்லை, கண்டிருந்தால் இவ்வளவு அழகாக இருப்பவளை மறந்திருக்க மாட்டேன்) எழுந்து, மதுரமான குரலில் பேசினாள்.

அமிர்தவல்லி அம்மாள்: ஸ்ரீ வேங்கடரமண ஐயருடன் வாதாடுவதற்குத் தக்க சக்தியும் எனக்கு இல்லை, தைரியமும் இல்லை. தவிர, அவருடைய அபிப்பிராயங்களை அநேகமாக நான் ஆமோதிக்கிறேன். விவாக விஷயத்தில் அவர் தெரிவித்த

வெறுப்பை, ஸ்திரீகள் சார்பிலே, நான் முற்றும் புகழ்கிறேன்.

கோனஷ்டை: அப்படி யென்றால் என்ன அர்த்தம்? இரண்டு அர்த்தமாகிறதே!

அமிர்தவல்லி அம்மாள்: "ஆனால் எங்களிருவருடைய காரணங்களில் சுவல்ப பேதம் இருக்கலாம்.

"எல்லா ரஸங்களையும் அறிந்த பர்த்ருஹரி என்ன சொல்லுகிறார்? 'நான் ஸ்திரீயாகப் பிறக்காமல் புருஷனாகப் பிறந்ததைக் குறித்து, தினம் சந்தோஷப்படுகிறேன். ஒரு ஸ்திரீயாக இருந்தால், போயும் போயும், ஒரு புருஷனை அல்லவா, நான் விவாகம் செய்யவேண்டி யிருக்கும்!" என்று. இந்தச் சங்கடத்தை உத்தேசித்துத்தான், எங்களில் சிலருக்கு விவாகத்தில் இஷ்டமில்லை."

நான்: இது அக்கிரமம். பர்த்ருஹரி அவ்விதம் சொல்லவில்லை. இந்த அம்மாள் தாமாகக் கட்டி உண்டாக்குகிறார்கள்.--

கோனஷ்டை: இந்த மாதிரியில் யாராவது கல்பனைகள் செய்து பேசுவதானால், இன்று முழுவதும் உட்கார்ந்து கேட்க மற்ற எல்லோருக்கும் சம்மதம்.

அமிர்தவல்லி அம்மாள்: "ஸ்ரீ வேங்கடரமண ஐயர் முதலில் எடுத்துச் சொன்ன ஞானியின் வசனத்தை நான் படித்திருக்கிறேன். ஆனால் நான் படித்த

பாடத்தில் இன்னும் கொஞ்சம் விவரமாக எழுதி யிருந்தது.

“புருஷர்களும் ஸ்திரீகளும் கப்பல் பிரயாணம் செய்யக் கூடும். ஆகையால், கப்பல் ஏறு முன் தெய்வத்தை வேண்டிக் கொள் என்று சொன்ன புத்திமதி இரு ஜாதியார்க்குமே. புருஷர்கள் மாத் திரமே யுத்தத்திற்குப் போவார்களாகையால், இரண்டாவது புத்திமதி அவர்களுக்கு மாத்திரம் உபதேசித்தது. அதே மாதிரி, ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமாய், அவர் ஒரு போதனை அளிக்க வேண்டுமல்லவா? அவ்விதம் கொடுத்த உபதேசந் தான், ‘விவாகத்திற்கு முன்பு மூன்று தெய்வங் களுக்கு வேண்டிக்கொள்’ என்பது. ஆனால் இவ் விஷயத்தில், ஸ்திரீகளுக்கு ஏற்படும் கொடிய அவசி யத்திற்குத் தகுந்த உதவியளிக்கும் சக்தியுள்ள தெய்வங்கள் எவர் என்று அந்த ஞானிக்கே அகப் படாததனால்தான் பெயர்களைக் குறிப்பிடவில்லை. (கரகோஷம்.) (மார்க்கண்டேயரை நோக்கி) எனக்கு வீதம் விதித்த காலத்தில் இன்னும் பாக்கி இருக்கிறதா?”

மார்க்கண்டேயர்: தாராளமாக இருக்கிறது.

அமிர்தவல்லி அம்மாள்: “அதிகம் வேண்டாம். ஒரே விஷயத்தில் பலத்த சந்தேகம் இருக்கிறது. அதைச் சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுகிறேன். சந்தேகத்தை ஸ்ரீ வேங்கடரமண ஐயர் கிருபை கூர்ந்து நிவர்த்தித்தால் போதும்.

"அது என்னவென்றால், க்ளோரபார்ம் எங்கே கிடைக்கும்? அதை ஒருத்தி தனக்குத் தானே கொடுத்துக்கொள்ள முடியுமா? எதற்காகக் கேட்கிறேன் என்றால், அவர் இப்பொழுது சொல்லி விட்டார்; ஒவ்வொரு ஸ்திரீயும் முப்பதாம் வயதில் பரலோகத்திற்குப் புறப்பட வேண்டுமென்றும், அவளுக்கு வழி தெரியாதபோனால், வீட்டிலிருப்பவர் அவளுக்கு க்ளோரபார்ம் கொடுத்தாவது காரி யத்தைச் சாதிக்கச் செய்யவேண்டுமென்றும். இந்த வேதவாக்கை ஒரு ஸ்திரீயும் மீறி நடக்கப் போவ தில்லை. ஆனால் வேண்டிய உதவியைச் செய்யக்கூடிய வர் வீட்டில் இல்லாத போனால் நாங்கள் என்ன செய்கிறது? அதற்காகத்தான் இப்பொழுதே கேட்டுக்கொள்ளுகிறேன் — ஒருத்தி தனக்குத் தானே க்ளோரபார்ம் கொடுத்துக் கொள்ள முடி யுமா? முடியுமானால் அந்தக் கல்பம் எங்கே கிடைக் கும்? இந்தக் கவலை என்னை இப்பொழுதே சூழ்ந்து விட்டது." (பலத்த கரகோஷமும் சிரிப்பும்.)

இவ்விதம் முடித்து, அந்த அம்மாள் உட்கார்ந் ததும், நான் எழுந்து பதில் சொல்வதற்கு முன், கொனஷ்டை எழுந்து எவரும் அவரைப் பேசக் கூப்பிடாமல், தாமே ஒரு பிரசங்கத்தைத் தொடங்கிவிட்டார்.

கோனஷ்டை : "சபையோர்களே, நான் சுருக்க மாய்ச் சொல்லப் போவது இரண்டே விஷயம். முதலில், ஸ்ரீமதி அமிர்தவல்லி அம்மாளுக்கும்,

ஸ்ரீ வேங்கடரமண ஐயருக்கும், அவர்களுடைய அதியானந்தப் பேச்சுக்களைக் கேட்டுக் களித்த நம்முடைய மனப்பூர்ணமான வந்தனத்தை, ஸ்ரீ மார்க்கண்டேயருடைய வேண்டுகோளின்படி, உங்களுக்குப் பிரதிநிதியாய் நான் செலுத்துகிறேன்.

"இரண்டாவது விஷயம்: அதே சம்பந்தமாக, உங்களுடைய வந்தனத்தை நானும் அபேக்ஷிக்கிறேன். அவசரக்காரர்கள், 'உனக்கு எதற்காக வந்தனம்?' என்று கேட்கலாம். அதைத்தான் சொல்லப் போகிறேன். இந்தப் பெரிய பையிலுள்ள முப்பத்தாறு கடிதத் துண்டுகளுள் ஒவ்வொன்றிலும் ஸ்ரீ வேங்கடரமண ஐயருடைய பெயரொன்றையே நான் எழுதியிராத போனால் அவருடைய பெயரே பொறுக்கப்படுவதற்கும், அவருடைய பேச்சை நீங்கள் இன்று கேட்கவும் என்ன ஹேஷ்யம் இருந்திருக்கும்? (கரகோஷமும் சிரிப்பும்) இதே மாதிரிதான் மற்ற இரண்டு பைகளிலும் நான் முன் யோசனையாகக் காரியம் செய்ய வேண்டியிருந்தது. (கரகோஷம்.) ஸ்ரீ மார்க்கண்டேயர், பாவம், இதொன்றும் அறியார். எல்லாம் தனக்குத்தானே சரியாக நடந்துவிடும் என்று நம்புகிறவர் அவர். ஆகையால், பொறுப்பை நான் வகித்து, இவ்விதம் உங்களுடைய விநோதத்திற்கும் ஆனந்தத்திற்கும் ஏற்பாடு செய்தேன். அதன் மூலம் நான் சம்பாதித்திருக்கும் உங்களுடைய வந்தனத்தை விநயத்துடன் பெற்றுக் கொள்ளுகிறேன்."

இவ்விதம் அவர் முடித்தவுடன், மிக்க ஆரவாரத்துடன் சபையோர் கலைந்து, அவரவர் இஷ்டப்படி, இரண்டு பேர்களாகவும் மூன்று பேர்களாகவும் கூடி, நடைபெற்ற பிரசங்கங்களைக் குறித்துத் தர்க்கித்துச் சில்லறைச் சம்பாஷணையைத் தொடங்கினார்கள். நான் நேராக ஸ்ரீ அமிர்தவல்லி அம்மாளிடம் சென்று, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன்.

நான்: நாம் இனி அறிமுகமாக்கப்பட்டவர்களில் சேர்ந்தவர்கள் தாமே? ஆகையால் இவ்விதம் நேரே பேசத் துணிகிறேன். உங்களுடைய உபந்நியாசம் வெகு ரஸமாக இருந்தது. ஆனால் பர்த்ருஹரியின் பெயரை இழுத்திருக்கலாமா? மாடம் டெஸ்டஎல் என்கிற பிரெஞ்சு மாது அல்லவா சொன்னது, 'நான் புருஷனாகப் பிறக்கவில்லை என்று எனக்குச் சந்தோஷம்; ஏனென்றால், அப்பொழுது ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ள வேண்டியிருக்கும்' என்று?

அமிர்தவல்லிஅம்மாள் பதில் பேசாமல் சிரித்தாள். ஆனால் கண்களால், "அப்படியே இருக்கட்டுமே! அதனால் என்ன? என் இஷ்டப்படி நான் மாற்றிக்கொண்டேன்" என்கிற அர்த்தத்தைத் தெரியப்படுத்திவிட்டாள். சிரிக்கும் பொழுது அவளுடைய கன்னத்தில் ஒரு குழி விழுந்தது. அதன் அழகை நான் ரஸித்து முடிப்பதற்குள், அவள் பேச்சில் முந்திக்கொண்டாள்.

அவள்: உங்களுடைய உபந்நியாசம் மாதிரியே இருக்குமோ, உங்களுடைய கதைகளும்? விறுவிறுவென்று ஏதாவது வந்துகொண்டே இருந்ததே?

நான்: (ஆவலுடன்) நீங்கள் அதைக் கவனித்தீர்களா? ரொம்ப ஸந்தோஷம். அப்படி இருக்க வேண்டுமென்றுதான் என்னுடைய கொள்கை. சிலர் பேசினாலும், எழுதினாலும், தரையில் கொஞ்சம் தண்ணீரைச் சிந்தினமாதிரியே இருக்கும். அந்த ஜலம், இங்கே போகவா, அங்கே போகவா என்று தயங்கிவிட்டு, முடிவில் எங்கேயும் போகாமல், ஊற்றின இடத்திலேயே ஊறிப் போய்விடும். இம்மாதிரி தத்தளிப்பும் தயக்கமும் எனக்குப் பிடிப்பதில்லை. இன்னொரு விஷயம் பாருங்கள், என்னுடைய கதைகளிலே—

அச்சமயத்தில், அருகில் போன கொனஷ்டை என் காதில் ஏதோ ரகசியம் சொல்லப் போகிற மாதிரி நெருங்கி, 'ஏய், குடுகுடுப்பாண்டி!' என்று சற்றுத் தெளிவாகவே முணுமுணுத்துவிட்டுப் போனான்.

அவள் (சிரித்துக்கொண்டு) அதென்ன, உங்களுடைய சிநேகிதர் இப்படி உங்களைப் பரிகாசம் செய்கிறார்!

நான்: பரிகாசம் எங்கே செய்தார்?

அவள்: பின்னே என்ன? நீங்கள் குடுகுடுப்பாண்டி மாதிரி வாய் ஓயாமல் பேசுகிறீர்களா,

என்ன ? எப்பொழுதாவது மூச்சு வாங்கத்தானே செய்கிறீர்கள் !

நான் : பார்த்தீர்களா ! இப்பொழுது நீங்கள் என்னைப் பரிகாசம் செய்கிறீர்கள். அது எனக்குப் புரியாதென்று நினைக்க வேண்டாம். ஆனால் குடு குடுப்பாண்டி மாதிரி என்றால் நான் ரொம்பச் சுறு சுறுப்பாக இருக்கிறேனென்றுதானே அர்த்தம் ?

அவள் : இல்லை. அந்த அர்த்தம் கொடுக்க வேண்டுமென்றால் குடுக்கைக் கறுப்பு மாதிரி என்று சொல்லியிருப்பார். உங்கள் சிநேகிதரையே கேட்டுப் பாருங்களேன்.

நான் : நான் ஒன்றும் அவனைக் கேட்கப் போவதில்லை. கேட்டால், இதுதான் சமயமென்று "ஆமாம், நீ ஒரு குடுக்கைக் கறுப்புத்தான்" என்று சொல்லிவிட்டு, நான் கறுப்பாயிருக்கிறேன் என்று இன்னும் நாலு வசவைக் கூடச் சேர்த்துவிடுவான்.

அவள் : நன்றா யிருக்கிறது ! உங்களை யார் கறுப்பு என்று எண்ணுவார்கள் ? விரோதிகள் கூட உங்களை மாநிறம் என்றுதானே சொல்லுவார்கள் ? உங்களுக்கு வேண்டியவர்களும், உங்களுடைய பேச்சை ஒரு தரம் ரஸித்தவர்களுமோ—அது இருக்கட்டும். இன்றைக்கு உங்கள் வாயால் வந்திராத போனால், உங்களுக்கு இன்னும் விவாகம் ஆக வில்லை என்று நான் நம்பவே மாட்டேன். பெண்ணைப் பெற்றவர்கள் எப்படி உங்களை வெறுமே இருக்க விட்டிருக்கிறார்கள் ?

நான் : அப்படிக் கேட்பதானல், நீங்கள் மாத்திரம் ஏன் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை ?

அவள் : என்னுடைய விஷயமே வேறு. இதற்குச் சரியான உபமானமாகாது. நீங்கள் வாஸ்தவத்தைச் சொல்லுங்கள், நீங்கள் எப்பொழுதாவது விவாகத்தைக் கோரி, பெண் வீட்டுக்காரர்கள் மாட்டோம் என்று சொன்னதுண்டா ?

நான் : அப்படி நேர்ந்ததில்லை. ஆனல் சில தடவைகளில் பெண்ணுக்கு இஷ்டம்போல் தோன்றியும் நான் மேலே தொடராமல் விட்டிருக்கிறேன்.

அவள் : பார்த்தீர்களா ! அப்படித்தான் நான் ஊகித்தேன். ஆனல் நீங்கள் செய்தது நியாயமா ? ஸ்திரீகளுக்கு ஒரு வரமோ, ஒரு சாபமோ, சொல்ல முடியாது—ஆனல் இம்மாதிரி விஷயங்களில் புருஷர்களைக் காட்டிலும் அவர்களுக்குத்தான் மனேபாவங்களின் சுறுசுறுப்பு அதிகம். இருந்தாலும் உலக சம்பிரதாயப்படி, விவாகப் பேச்சைப் புருஷர்கள் தாம் துவக்க வேண்டியது. ஆகையால் நீங்கள் ஒரு ஸ்திரீயின் மனசைச் சஞ்சலப்படுத்திவிட்டு, பிறகு பேச்சை முறித்துவிடுவது, ஒரு பாவமென்றே சொல்வேன்—என் மேல் கோபித்துக் கொள்ளக் கூடாது—.

இவ்விதம் சம்பாஷணை ஸ்வாரஸ்யமாய் வளர்ந்து வரும் சமயத்தில், 'பார்ட்டி' முடிந்துவிட்

டதாக எல்லோரும் வீட்டிற்குக் கிளம்பவே, நானும், அசம்மதமாகவே, எழுந்திருக்க வேண்டியிருந்தது.

நான்: இனி நான் உங்களை எப்பொழுது பார்க்கலாம்?

அவள்: பார்க்க நேரிடுகிறதோ, இல்லையோ, ஒரு தீர்மானம் செய்திருக்கிறேன். நான் திரும்பி ஊர் போய்ச் சேர்ந்தவுடன், ஒன்றுவிடாமல் உங்களுடைய கதைகளெல்லாம் வாங்கிப் படிக்கப் போகிறேன்.

நான்: நீங்கள் விலை கொடுத்து வாங்க வேண்டாம். நானே அனுப்புகிறேன். தயவு செய்து அங்கீகரிக்க வேண்டும். பட்டணத்தில் எங்கே தங்கியிருக்கிறீர்கள்? அதை மாத்திரம் சொல்லுங்கள்.

அவள்: திருவல்லிக்கேணியில், –தெருவில், –நம்பர் வீட்டில் என்னுடைய சிறு தாயாருடன் இருக்கிறேன். நாளைச் சாயங்காலம் ஊருக்குப் புறப்படுகிறேன்.

இத்துடன் நான் அவளை விட்டுப் பிரிய வேண்டியிருந்தது. நேற்றிரவு நான் தூங்கவேயில்லை என்றால் அது வாஸ்தவமாயிராது. ஆனால் பெரும்பாலும் விழித்திருந்து சிந்தனையில் கழித்துவிட்டு, இன்று காலையில் ஒரு முடிவுக்கு வந்தேன்.

அவளுக்கு இன்னும் விவாகமாகவில்லை என்பதை நான் சாதுரியமாய்க் கேட்டு நிச்சயப்படுத்திக்

கொண்ட உடனே, என் மனசில் ஓர் எண்ணம் உதித்தது. நான் ஏன் அவளை விவாகம் செய்து கொள்ளக்கூடாது?

படிப்பிலும் புத்தியிலும் அவள் எனக்குத் தாழ்ந்தவளல்ல. அழகோ, அபரிமிதம். 'கண்டதும் காதல்' என்றால் அறியாத்தனத்தினால் சிலர் இகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் அவளைக் காண நேரிடும் ஒரு புருஷன் உடனே காதலில் அகப்பட்டுக்கொள்ளாமல், எப்படித் தப்பித்துக்கொள்ள முடியுமென்று எனக்குத் தெரியவில்லை.

அவளுக்கு இப்பொழுது வயது சுமார் இருபத்துநாலு இருபத்தைந்து இருக்கலாம். தம்பதிகளுக்கிடையில், பத்துப் பன்னிரண்டு வருஷ வித்தியாசம் இருப்பதுதான் சிலாக்கியம். தனித் தனியாகப் பார்த்தாலும் எங்களுக்கு வயது அதிகமாய்விடவில்லை. ஸ்திரீகளும் புருஷர்களும் என்ன, ஸப்போட்டாப் பழங்களா, முழுக்கப் பழுத்தவைகளைக் காட்டிலும் முக்கால் பழுத்தவைகள்தாம் ருசி அதிகமென்று சொல்ல? ஆகையால் எங்கள் இருவருக்குமே, இப்போது தான் சரியான காலம், விவாக ஏற்பாடு செய்ய.

ஒரு விஷயந்தான் பாக்கி. அவள் ஹிருதயத்தின் நோக்கம் எப்படி இருக்குமோ? நேற்று நான் பிரசங்கத்தில் பேசினதை ஆமோதிப்பதாகவே ஒரு முகவுரையைச் சொல்லிவிட்டு, பிறகு ஒவ்வொரு

விஷயத்திற்கும், பளீர், பளீர் என்று பதில் கொடுத்திருக்கிறாள். தெய்வத்திற்கு வேண்டிக்கொள்வதைப் பற்றி நான் பேசினேனே, நான் படித்ததெல்லாம், அந்த மாதிரி ஒரு சிறு பழமொழியைத் தான். அதைச் சற்று விரிவாக்கி, யாரோ ஒரு ஞானியின் வசனமென்று கௌரதைப்படுத்திச் சொன்னேன். உடனே, அதற்காக எழுதப்பட்ட ஒரு நீள வியாக்கியானத்தைத் தான் படித்திருப்பதாக இட்டுக்கட்டி விட்டாள். ஆனால் இதெல்லாம் அவளுடைய புத்தி கூர்மையையும் ஹாஸ்யச் சுவையையுந்தான் வெளிப்படுத்துகின்றன. இந்தக் குணங்கள் இல்லாமல், வெறுமனே ஒரு காப்பேஜ் மாதிரி உருட்டி விட்ட இடத்தில் அப்படியே கிடக்கிற பார்யையை என்னால் அரை நாழிகைகூடச் சகிக்க முடியாது.

என்னுடன் அவள் தனித்துச் செய்த சம்பாஷணையில் ஒவ்வொரு வார்த்தையையும் திரும்ப நினைவு மூட்டிப் பார்த்தால், தன்னை அறியாமலே அவள் என்னிடம் அநுகூலமாகவாவது இருக்கிறாள் என்றே காட்டுகிறது. ஒருவேளை, வெறும் அநுகூலத்திற்கு மேலாகவே இருக்கலாம், அவளுடைய மனநிலை. ஆனால் அதைக் காட்ட மாட்டாள். ஸ்திரீ அல்லவா? அவள் சொன்ன மாதிரி, இந்த விஷயங்களில் முதற் பேச்சு, புருஷனிடத்திலிருந்து தான் வரவேண்டும்.

ஆனால் என்னுடைய ஆசை ஒன்றையே நம்பி, நான் ஏமாந்து போகக் கூடாது. நான் என்ன

முட்டாளா? அவசரப்பட்டும் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. சாமர்த்தியமாய் நடந்து கொள்ள வேண்டும்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் நேரில் போகாமல் ஒரு கடிதத்தை எழுதிவிடுகிறேன். அப்படிச் செய்தால், வார்த்தைகளைப் பொறுக்கி உபயோகிப்பது சௌகரியம். அவள் இஷ்டப்பட்டால் அதிலிருந்தே என்னுடைய காதலை ஊகிக்க இடம் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல், அவளுடைய மனசு இன்னும் தயாராயில்லை என்றால், அதற்கும் பொருந்தும்படி, வெறும் சிநேக பாவத்தையே தொனிக்கிற மாதிரியும் இருக்க வேண்டும், அதனுடைய வசனம்.

இம்மாதிரி எல்லாம் ஆலோசித்து, என் கடிதத்தில் ஒவ்வொரு வாக்கியத்தையும் இரண்டு மூன்று தடவை திருத்தி, கடைசியில், இவ்விதம் தயார் செய்து, ஆள்வசம் கொடுத்தனுப்பினேன்:

“எனக்கு மாத்திரம் வயது முப்பத்தேழு ஆகியிராத போனால், நேற்று நான் கண்ட ஒரு ஸ்திரீ ரத்தினத்தை இப்போதே விவாகத்திற்குப் பிரார்த்திப்பேன். ஆனால் எனக்கு வயது அதிகமாய்விட்டது என்று ஸ்திரீகள் எண்ணுவார்களோ, என்னவோ? இந்த விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயத்தில்தான் எனக்கு நம்பிக்கை. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?”

அதற்கு உடனே அவளுடைய பதில் கிடைத்தது:

"எனக்கு மாத்திரம் ஏற்கனவே கல்யாணம் ஆகியிராத போனால், உங்கள் கடிதத்தை நம்பி, நீங்கள் சொன்ன அந்த ஞானியின் உபதேசப்படி, மூன்று தெய்வங்களிடம் போய் வேண்டிக்கொள்வதற்கு நான் இப்பொழுதே புறப்பட்டிருப்பேன். ஆனால் என் அகத்துக்காரர் ரொம்பக் கோபிஷ்டர். எது சொன்னாலும் நாலு ஆக்ஷேபங்களைக் கொண்டு வருகிற சுபாவம். நான் உங்களைக் கல்யாணம் செய்துகொள்வதாகச் சொன்னால், கட்டாயம், பிரமாதமாய் ஆக்ஷேபிப்பார் என்றே எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"

கேட்டீர்களா, இந்த ஸாஹஸத்தை! கல்யாணம் ஆய்விட்டதாம்; எடுத்ததற்கெல்லாம் சண்டை பிடிக்கிற ஒரு குண்டன் புள்ளியான அகத்துக்காரர் ஜீவனோடு இருக்கிறாராம். இந்த அவஸ்தையில் அவள் இன்னொரு கல்யாணம் செய்து கொள்வதைக் குறித்து, எனக்கு என்ன தோன்றுகிறது என்று நான் இப்பொழுது அவளுக்குச் சொல்லி ஆகவேண்டுமாம்! என்ன நெஞ்சழுத்தம்! என்ன கபடம்! முதலிலிருந்தே, நான், என் பேச்சு, என் கடிதம், எல்லாம் அவளுக்குப் பரிகாசமாயிருந்திருக்கின்றன. என்னுடைய பிரசங்கத்தில், ஸ்திரீகளையும் காதலையும் கண்டித்து இரண்

டோர் உண்மைகளை வெளியிட்டேனென்று தானே அவளுக்கு என்மேல் இவ்வளவு ஆத்திரம்! உள்ளுக்குள்ளே அந்த ஆத்திரம், வெளியிலே பாசாங்கு! நான் மாநிறந்தான் என்று ஒப்புக் கொள்வதுகூட தனக்குத் தாங்காதது போல் அத்தனை பிரியமாகப் பேசுவது, தனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று நான் நினைக்கும்படியாக இரட்டை அர்த்தமாகச் சொல்லி வைக்கிறது, படிப்படியாக என்னை மலைமேல் கூட்டிக்கொண்டு போகிறது, எல்லாம் எதற்காக? அங்கிருந்து என்னைத் தொப்பென்று கீழே விழும்படி தள்ளுவதற்காகத்தானே! என்னை என்னவோ ஒரு முட்டாள், ஒரு படித்த முட்டாள் என்றுதானே எண்ணிவிட்டாள்! ஆனால் ஸ்திரீகளைப்பற்றி நான் படித்திருப்பது முழுவதும் வாஸ்தவமென்று இதிலிருந்தே நன்றாய்த் தெரிகிறதே!

"'கண்டதும் காதலு'க்கா மருந்து வேண்டும்? அவளை ஒரு தடவை கண்டதோடு கண்களை இறுக்கி மூடிவிட்டுப் பிறகெல்லாம் உன்னுடைய கல்பனையையே நம்பித் திரியாமல், கண்களை நன்றாய் விழித்துக்கொண்டு, அவளை இன்னும் நாலைந்து தடவை காணுவதே போதுமான வைத்தியம்."

"'பார்யா ரூபவதீ சத்ரு:' என்று பழைய வசனம். ஏனென்றால் தன்னுடைய அழகை அவள் ஒவ்வொரு தடவை நினைத்துக் கொள்ளுகிற போதும், புருஷனைத் திருணமாக எண்ணித் தூக்கி

எறிந்தே பேசுவாள். எந்த ஸ்திரீயும் தன்னுடைய அழகை, தினம் சராசரி, இருபத்துநாலு தடவை நினைத்துக்கொள்ளுவாள்.''

''ஒரு ஸ்திரீயிடம் வாக்குக் கொடுப்பதற்கு முன், ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக ஆலோசித்துக்கொள். அப்படி ஆலோசித்த பிறகும், உன்னுடைய மனசுக்குள்ளேயே பேசிக்கொள்.''

நாசமாய்ப் போக! இந்தக் கல்வி யெல்லாம் சற்று முன்பே ஞாபகத்திற்கு வராமல் எங்கே போயிருந்தது? இப்போது வந்து எனக்கு என்ன பிரயோசனம்? மரத்தின் நிழல்மாதிரி, பிறருக்குத் தான் உபயோகம். அப்படியாவது நன்மை செய்யட்டுமென்றுதான், இந்தச் சம்பவத்தை நடந்தது நடந்தபடியே, உடனே எழுதிவிட்டேன். அவளுடைய சுபாவத்தையும் என்னுடைய சுபாவத்தையும் உலகத்தார் அறியட்டும். அவர்களே தீர்ப்புச் சொல்லட்டும். எனக்குச் சம்மதம். ஆனால் எவர் என்ன சொன்னாலும் சரி, 'கண்டதும் காதல்' என்பதை மாத்திரம் இனி என் ஜன்மாயுசுக்கு நான் நம்பப் போவதில்லை. அது சுத்த மோசம்.

குறிப்பு: இது இந்த வாரத்து 'மலய மாருத'த்தில் வெளிவந்துவிடும். என்னுடைய கதைகளை எல்லாம் வாசிக்கப் போவதாக அவள் சொன்னாளல்லவா? முதல் முதலில் இதையே படிக்கட்டும்!